# தமிழரசு

அக்டோபர் 2005



# தேசியப் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தலை உறுதியுடன் தடுக்கவேண்டும்

சென்னை-600 008
நூலகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



நக்சல்களால் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தொடர்ந்து கண்காணிக்கவும், ஆபத்தைத் தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கவும், இந்த மாநில முதல்வர்களின் நிலைக்குழுக் கமிட்டி கூடியுள்ளதை வரவேற்கிறேன். இந்தக் கமிட்டியில் என்னையும் சேர்த்துக் கொள்ளுமாறு நான் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட மத்திய உள்துறை அமைச்சருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நக்சலைட் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் மெத்தனப் போக்குக் கூடாது என்பதை, மாநில முதல்வர்களைக் கொண்ட இந்த நிலைக் குழு கமிட்டியின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த ஆபத்தை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும். பிரச்சினைக்குரிய பகுதிகளில் சமூகப் பொருளாதார மேம்பாட்டை முடுக்கி விட்டு அதே நேரத்தில், அப்பகுதிகளில் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் இரட்டை அம்ச அணுகுமுறையின் மூலம் நக்சல்களால் ஏற்படும் பிரச்சினையை, குறிப்பாக கர்நாடகம் மற்றும் ஆந்திரப்பிரதேச எல்லைகள் அருகே உள்ள பகுதிகளில், கட்டுக்குள் வைத்து இருப்பதில் தமிழ்நாட்டில் நாங்கள் வெற்றி பெற்று இருக்கிறோம்.

நக்சல் தீவிரவாதிகள் தமிழகப் பகுதியில் ஊடுருவ முடியாமல் விழிப்புடன் கண்காணித்து அவர்களது நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளி எறியும்படி தமிழகக் காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளோம்.



இதனால் நக்சல்கள் தமிழ்நாட்டில் கால் பதிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், அந்த எல்லைப்புற மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் ஊக்கமும், நம்பிக்கையும் அளிக்கும் வகையில் சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரட்டை அம்சத் திட்டம் என்னால் நடைமுறைப் படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுவதால் நக்சல்களால் ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுப்பதுடன் பிரச்சினையைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் தமிழக அரசுக்கு சாத்தியமானது.

வெடிமருந்துப் பொருட்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல், நக்சல் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மக்கள் யுத்தக் குழு, கடந்த 10.9.2004 இல் தடை செய்யப்பட்டது. மேலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை (மாவோயிஸ்ட்) 12.7.2005 இல் எனது அரசு தடை செய்தது. இவ்விரு கட்சிகளையும் 1908ஆம் ஆண்டு கிரிமினல் (திருத்த) சட்டத்தின்படி தடை செய்துள்ளோம். இது குறித்து 22.7.2005 அன்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) பிரிவை 1967 கிரிமினல் நடவடிக்கை (தடுப்பு) சட்டத்தின் 35ஆம் பிரிவின் படி தடை செய்யுமாறு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளோம். இதை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நக்சல் குழுக்கள் ஒன்றினையும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், கடந்த 2002ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் நடந்த ஒரு என்கவுண்ட்டரில் நக்சல் தலைவர் கொல்லப்பட்டு, அந்தக் குழுவைச் சேர்ந்த 28 பேர் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர், இதுவரை வேறு எந்த நடவடிக்கையும், வேறு எந்தக் குழுவினராலும் மேற்கொள்ளப்படவில்லை. சமீப காலத்தில் காவல்துறையினருக்கும், தடை செய்யப்பட்ட குழுவினருக்கும் நேரடி மோதல் எதுவும் ஏற்படவில்லை. மேலும், குண்டுவெடிப்பு மற்றும் அதன் வெளிப்பாடுகள் எதுவும் இல்லை. கடந்த 3 ஆண்டுகளில் எந்தவிதத் தீவிரவாதச் செயலும் நடைபெறவில்லை.

தமிழ்நாட்டில் அடர்ந்த காட்டுப்பகுதி நிறைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை நக்சல்வாத குழுக்கள் குறி வைத்துள்ளனர். ஆந்திர மற்றும் கர்நாடக எல்லைப் பகுதிகள் அமைந்துள்ள கிருஷ்ணகிரியிலிருந்து நக்சல்கள் தங்கள் வேலையைத் தொடங்க உள்ளதாகத் தெரிய வருகிறது. இருந்தபோதிலும் எங்களது இரட்டை அம்ச அணுகுமுறையால் இந்தப் பகுதியில் எந்தப் பெரும் அசம்பாவிதமும் நடக்காமல் தடுப்பதில் நாங்கள் வெற்றிபெற்றுள்ளோம்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, தமிழ்நாட்டில் தனியாக கியூ பிராஞ்ச் போலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் அந்தந்த காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் நக்சலைட்டுகள் தனிப்பிரிவு செயல்பட்டு வருகிறது. நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்கள் தொடர்ச்சியாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்பதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

கூட்டு அதிரடிப்படை நடவடிக்கைகள் குறித்த பிரச்சினையை நான் கவனத்தில் கொண்டுள்ளேன். இதுபோன்ற இரண்டு படைகள் அமைக்கப் போவதாக நான் அறிகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இது ஆரம்ப நிலையில் உள்ள பிரச்சினையாகும். எனவே, எங்களைப் பொறுத்தவரை இப்போதைக்குத் தகவல் பரிமாறிக் கொள்வதே போதுமானது.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை எதிர்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையையே நக்சலைட்டுகள் பிரச்சினையைச் சமாளிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்தச் சிறப்பு அதிரடிப்படை, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை எதிர்க்க மேற்கொண்ட நடவடிக்கையின் போது அப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியினரின் நம்பிக்கையைப் பெறுவதில் மிகுந்த அனுபவத்துடன் செயல்பட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளனர். மேலும், கண்ணிவெடிகள், நவீன வெடிகுண்டுகள் போன்ற நக்சலைட்டுகளால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களைத் திறமையுடன் சமாளிக்க இந்த அதிரடிப்படையினர் பயிற்சி பெற்றுள்ளனர். தமிழ்நாடு கமாண்டோ பள்ளி இத்தகையப் பணியில் திறமை வாய்ந்தது.

இந்தக் குறிப்பிட்ட மாவட்டங்களின் பாதுகாப்பிற்குப் பெருமளவில் செலவினம் ஏற்படுகிறது. இது மத்திய



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
புரட்டாசி – ஐப்பசி
மலர்: 37 இதழ்: 4
அக்டோபர் 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ தேசியப் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தலை உறுதியுடன் தடுக்க வேண்டும் (மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட நிலைக் குழுவின் முதல் கூட்டத்தில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை) ..... 2
★ வன உயிரின வாரம் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் வாழ்த்துச் செய்தி ..... 6
★ ஸ்ரீபெரும்புதூரில் மின்னணு தொழிற்சாலை (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம்) ..... 7
★ தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தியடிகளின் 137–ஆவது பிறந்த நாள் விழா ..... 9
★ கதர்த்துணிகளை வாங்கி நெசவாளர்களுக்கு உதவ வேண்டுகோள் ..... 13
★ நிதி நிலைமை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 28.9.2005 அன்று சட்டமன்றப் பேரவையில் அளித்த விளக்கம் ..... 14
★ சென்னைக்கு பசுமைத் தோற்றத்தை அளிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு பூங்காக்கள் ..... 17
★ வனத்துறை களப் பணியாளர்களுக்கு பல்வேறு திட்டங்கள் ..... 22
★ இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணி (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ..... 25
★ முதல் துணை மதிப்பீடுகள் 2005–2006 ..... 31
★ புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் மேலும் 122 கோடி ரூபாய் செலவில் 210 புதிய தொழிற்சாலைகள் ..... 33
★ மேனிலைக் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் ..... 36
★ தஞ்சாவூர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை ..... 37
★ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டட வளாகம் ..... 45
★ சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்க கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ..... 49
★ தனியார் பட்டுக் கைத்தறி நெசவாளர்களுக்கு ஊதிய உயர்வு ..... 57
★ ஈரோடு மாவட்டம் – தீரன் சின்னமலை அவர்களின் 250ஆவது பிறந்த ஆண்டு மற்றும் 200ஆவது நினைவு நாள் விழா ..... 61
★ சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் ..... 65
★ கோவை மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ..... 71
★ கன்னியாகுமரி மாவட்டம் நொய்யாறு இடதுகரை கால்வாய்த் திட்டம் ..... 73
★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்கு வேளாண் நிலம் வாங்கி வழங்கும் திட்டம் ..... 75
★ விருதுநகர் – தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.68 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ..... 79

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : பேரறிஞர் அண்ணா அவர்களின் 97ஆவது பிறந்த தின விழா
**இரண்டாம் பக்க அட்டை** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பூங்காக்கள்
**நான்காம் பக்க அட்டை** : மகாத்மா காந்தியடிகளின் 137ஆவது பிறந்த தின விழா

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏதும் அசம்பாவிதம் நிகழ்ந்தால் மட்டுமே அதற்கான செலவும் தரப்படும் என்ற நிலை இருக்கக்கூடாது. பிரச்சினைகளைச் சமாளிக்க மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைக்கும், பாதுகாப்புத் தொடர்பான செலவினம் என்று கருதி வழங்கப்பட வேண்டும்.

இதுவரை, நக்சலைட்டுகள் பிரச்சினை என்பது கிராமப்புறப் பகுதிகளைச் சுற்றியே இருந்தது. இவர்கள் நகர்ப்புறங்களிலும் தங்கள் கைவரிசையைக் காட்டலாம் என்ற பிரச்சினையை மறுப்பதற்கில்லை. இது தொடர்பாகவும் தமிழகக் காவல் படையை விழிப்புணர்வுடன் இருக்க நான் உத்தரவிட்டுள்ளேன். ஏழ்மை, கடன் சுமை, வேலை இல்லாத் திண்டாட்டம், வளர்ச்சியின்மை மற்றும் சுரண்டல் போன்றவை இணைந்து நக்சல் தீவிரவாதிகள் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கும். இதற்குத் தீர்வு காண இந்தப் பகுதிகளின் முன்னேற்றத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற யுகாந்தர் அவர்களின் பேச்சை நான் ஏற்றுக் கொள்கிறேன். சுரண்டல் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமானால், தற்போது உள்ள சட்டங்கள் உறுதியுடன் செயல்படுத்தப்பட வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் அநியாய வட்டி போன்றவற்றைக் கட்டுப்படுத்தி கூட்டுறவுக் கடன் வழங்குதல் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் அமைப்பது போன்றவற்றைச் செயல்படுத்தி வருகிறோம்.

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் சிறப்பு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். இந்தத் திட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. நக்சல் தீவிரவாதிகளின் ஆபத்தைத் தடுப்பதுடன் மாவட்ட நிருவாகம் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் துணை இருக்கவும், காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

நிருவாகம் மற்றும் இளைஞர்களை இணைக்க விளையாட்டு மற்றும் இளைஞர் நல நடவடிக்கைகள் பெரிதும் உதவும். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, கையுந்துப்பந்து (Volley Ball) மற்றும் வலை போன்றவற்றை வழங்கியுள்ளோம். மேலும், படிப்பதற்கான கட்டடங்கள், நூலகங்கள், நடமாடும் நூலகங்கள் மற்றும் உள்விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை 100 குழுவினருக்கு வழங்கியுள்ளோம். இப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் போன்ற திட்டத்தையும் நான் தொடங்கி உள்ளேன்.

கடந்த ஏப்ரல் 2005 அன்று உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு மாநாட்டில் பேசும்போது, பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களிலிருந்து இராணுவம், துணை இராணுவம் மற்றும் காவல்துறைக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது குறித்து நான் கூறியிருந்தேன். இதுபோன்ற நடவடிக்கைகள் கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பற்றிய உத்தரவாதம் அளிப்பதுடன் வேறு வழிகளை நாடுவதிலிருந்து திசை திருப்பும்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் நக்சல்களால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகளை மேம்படுத்த 2004–2005ஆம் ஆண்டு ரூ.7 கோடி ஒதுக்கியுள்ளேன். மேலும், இப்பகுதிகளில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள ரூ.9 கோடி ஒதுக்கியுள்ளேன். நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட 55 மாவட்டங்களுக்கு என்று மத்திய அரசு தனியாக நிதியுதவி அளிக்கிறது. இதே போன்று, தமிழ்நாட்டிற்கும் ஒதுக்க வேண்டும். நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வளர்ச்சி நிதி கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் தருமபுரியும், கிருஷ்ணகிரி மாவட்டமும், சேர்க்கப்பட்டுள்ளனவா – என இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த இரு மாவட்டங்களையும் முதல்கட்ட நிலையிலேயே சேர்ந்துக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ரிசர்வ் பட்டாலியன் போன்ற ஒன்றை உருவாக்கத் திட்டமிருப்பதாக நான் அறிகிறேன். இது போன்ற பட்டாலியன்களை அமைப்பதில் மாநில அரசுகளுக்குப் போதுமான ஆதரவு அளிக்கவேண்டும் என நான் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்தேன். இது பரிசீலனையில் இருப்பதாக நான் அறிகிறேன். இதில் விரைந்து முடிவெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் இரண்டு பட்டாலியன்கள் அமைத்துள்ளோம். இந்த ஆண்டு, மேலும் இரண்டு பட்டாலியன் அமைக்க அனுமதி அளித்துள்ளேன். இந்தத் திட்டம் மேம்படுத்தப்பட்டால், மேலும் இரண்டு பட்டாலியன்கள் அமைப்பது குறித்து ஆலோசிப்பேன்.

மாறுபட்ட பாதுகாப்பு சூழ்நிலையில் கடந்த 31.8.2005இல் நடந்த தேசிய ஒருங்கிணைப்புக் கவுன்சிலின் 13–ஆவது கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தபடி, பொடா சட்டம் வாபஸ் பெறப்பட்டால் மாநில அரசுகளின்



## மகாத்மா காந்தி பதக்கம்



தமிழகத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக, தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் "மகாத்மா காந்தி பதக்கம்" இவ்வாண்டு (2005) தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று தமிழக காவல்துறை அதிகாரிகளின் பெயர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

காந்தி ஜெயந்தி அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட, மகாத்மா காந்தி பதக்கம் பெறுவோர் விவரம் வருமாறு :

1) திரு. என்.பழனிச்சாமி
காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்
திட்டமிடப்பட்ட குற்றங்கள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு
கோயம்புத்தூர்

2) திரு.எம்.சந்திரசேகரன்
காவல் ஆய்வாளர்
சேலம் மாநகர்

3) திரு.எம்.முத்துக்குமார்
சார் ஆய்வாளர்
ஆண்டிபட்டி காவல் நிலையம்
தேனி மாவட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த மூன்று காவல்துறை அதிகாரிகளுக்கும், வரும் குடியரசு நாளன்று (26.1.2006) மகாத்மா காந்தி பதக்கங்களை வழங்கி கௌரவிப்பார்கள். இந்தப் பதக்கத்துடன் ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் ரொக்கப் பரிசும் அப்போது வழங்கப்படும். ★

அதிகாரம் குறைக்கப்பட்டு நக்சல் தீவிரவாத இயக்கங்கள் பெருக வழிவகுத்துள்ளது. நமது நாட்டின் ஒருமைப்பாட்டையும், எல்லையையும் பாதுகாக்க பொடா போன்ற ஒரு சிறப்புச் சட்டம் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதை நீக்கியதன் மூலம் தீவிரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் தடுப்பதற்கான வலுவை நமது சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏஜென்சிகள் இழந்து விட்டன.

தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளால் பெரிய பிரச்சினை எதுவும் இல்லை என்ற போதிலும் எச்சரிக்கையாகச் செயல்பட்டு வருகிறோம். மற்ற மாநிலங்களிலிருந்து நக்சலைட்டுகள் இங்கு வந்துவிடக்கூடாது என்ற விழிப்புணர்வுடனும் இருக்கிறோம். மற்ற மாநிலங்களில் நக்சலைட்டுகள் பெருகி வருவது அதிர்ச்சி அளிக்கிறது.

இங்கு கூடியுள்ள முதலமைச்சர்களுக்கு நக்சலைட்டுகளை ஒடுக்குவதில் உறுதியான நிலையை எடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். அரைகுறை நடவடிக்கைகள் பயன் தராது என்றும் சொல்லிக் கொள்கிறேன். நமது தேசியப் பாதுகாப்பிற்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலையும் நாம் உறுதியுடன் தடுக்க வேண்டும். தேசிய ஒருமைப்பாடும், முன்னேற்றமும் அதில் அடங்கியுள்ளது.

நக்சலைட்டுகளைத் தடுப்பதில் நான் தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ள இரட்டை அம்ச அணுகுமுறை பயனுள்ளதாக இருக்கும் என நாம் நம்புகிறேன். மற்ற மாநிலங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக தனியாக சிறப்பு ஐ.ஜி. (உளவுப்பிரிவு) ஒருவரை நியமித்திருக்கிறோம்.

புதுடில்லியில், 19–9–2005 அன்று நடைபெற்ற
**மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட நிலைக்குழுவின் முதல் கூட்டத்தில்,**
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# வன உயிரின வாரம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வாழ்த்துச் செய்தி



"அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துங்கள். படைத்தவனைப் படைக்கப்பட்ட உயிர்களினுள் காணுங்கள்'' என்ற தாரக மந்திரத்தைத் தரணிக்குக் கூறிய நம் தேசத் தந்தை அண்ணல் மகாத்மா காந்தியடிகள் தோன்றிய நாளாம் அக்டோபர் திங்கள் 2–ஆம் நாளிலிருந்து 1 வார காலம் "வன உயிரின வாரம்''–ஆக இந்தியா முழுவதும் சிறப்பாக அனுசரிக்கப்படுகிறது.

"காக்கை குருவி எங்கள் சாதி – நீர்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்''

– எனப் பாடினான் பாரதி.

பல்வேறு உயிரினங்கள் சமச்சீரான நிலையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக வாழ்ந்து "இயற்கைச் சமன் நிலையைக்'' காத்து வருகின்றன. இந்தப் பேருண்மையை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

எனது தலைமையிலான அரசு உயிரினங்களைக் காக்கும் உன்னத முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. எனது அரசால் நடத்தப்படுகின்ற யானைகளுக்கான நலவாழ்வு முகாம்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

"உணவுச் சங்கிலி'' ( Food Chain) என்ற அற்புத நிகழ்வின் மூலம் தாவரங்களும், விலங்குகளும் ஒன்றையொன்று சார்ந்து மனித வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றன. எனவே, இயற்கைச் சூழலை நாளைய தலைமுறையினருக்காகப் பேணிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் இன்றைய தலைமுறையினருக்கு உள்ளது.

இயற்கைச் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் சீரிய பணியில் ஈடுபட்டு வரும் எனது அரசின் முயற்சிகளுக்கு என் அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வன உயிரின வார விழா சிறப்பாய் நடந்தேறிட, என்னுடைய இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.







# ஸ்ரீபெரும்புதூரில் மின்னணு தொழிற்சாலை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம்**

அமெரிக்க நிறுவனமான பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் பெரிய பெரிய நிறுவனங்களுக்கு மின்னணு பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்கிறது. பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் சார்பில் பிளக்ஸ்ட்ரானிக்ஸ் (ஆசியா) நிறுவன நிருவாக இயக்குநர் மற்றும் தலைவர் பீட்டர் டானும், தமிழக அரசு சார்பில் தொழில்துறைச் செயலாளர் ரமேஷ்ராம் மிஸ்ராவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்தியாவிலேயே தமிழகம் உற்பத்தித் துறையில் முதன்மை மாநிலமாக விளங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பல்வேறு புதிய கொள்கை முடிவுகளை எடுத்து அறிவித்தார்கள்.

அதாவது, 2002ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவித்தார்கள்.

2005ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த சேவைக்கான கொள்கை ஒன்றையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு தொழில்துறை, தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை, துறை மற்றும் ஹார்ட்வேர் (வன்பொருள்) உற்பத்திக்குப் புத்துணர்வு அளிக்கும் வகையில் இந்தத் தொழில் கொள்கைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முயற்சி காரணமாக "நோக்கியா" செல்போன் தொழிற்சாலை தனது 10–ஆவது தொழிற்சாலையை, சென்னைஅருகே ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கிறது. இந்தியாவிலேயே இதுபோன்று வன்பொருள் உற்பத்தித் துறையில் சென்னை முன்னணி இடத்தைப் பிடித்து வருகிறது.

இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாக அமைக்க பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் (உலகில் 500 தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றாகும்) சென்னை தவிர, கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் எல்லாம் தங்களது தொழிற்சாலை அமைக்க இடங்களைப் பார்த்தது.

தமிழகத்தில் உள்ள நிலைமைகளை எல்லாம் பார்த்து பிறகு சென்னைதான் தொழிற்சாலை அமைக்கச் சிறந்த இடம் என பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் முடிவு செய்தது.

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 430 கோடி ரூபாய் முதலீட்டில் (100 மில்லியன் அமெரிக்க டாலர்) பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் தனது தொழிற்சாலையை உருவாக்குகிறது. இது ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமாகும்.

பிளக்ஸ்ட்ரானிக்ஸ் (ஆசியா) நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் மற்றும் தலைவர் பீட்டர் டான் தலைமையில் வந்த குழுவினரை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிருவாகம் சென்னையில் தனது தொழிற்சாலையை அமைப்பது, மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார்கள்.

நோக்கியா செல்போன் நிறுவனத்தைத் தொடர்ந்து, சென்னையில் பல புதிய தொழிற்சாலைகளைத் துவங்க ஏராளமான தொழில் முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்த வண்ணம் இருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். இங்கு குறைந்த செலவில் அனைத்து வசதிகளும் கிடைப்பதால், பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் உலக அளவில் பெரிய நிறுவனமாக இங்கு உயரும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

தமிழகம் இன்று தொழில் முதலீட்டாளர்கள் தேர்வு செய்யும் மாநிலமாகத் திகழ்கிறது. தொழில் முதலீடு செய்ய, தமிழகம் சிறந்த மாநிலம் என பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, வெளிநாட்டு முதலீடுகள் அதிக அளவில் இங்கு வருவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு நன்றாக உள்ளது. அமைதியான மாநிலம். தமிழ்நாட்டில், சிறந்த வல்லுநர்கள், என்ஜினியர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், தொழிலாளிகள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளும் உள்ளன.

இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் இருந்தால் தமிழகம் உயர்ந்த நிலைக்கு வரும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

"தமிழக அரசு சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம் 2005" ஒன்றை இயற்றியது. தொழில்கள் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏராளமாக வருவதற்காக பல்வேறு வசதிகள் அளித்து இந்தச் சட்டம் இயற்றப்பட்டது என்றும் பிளக்ஸ்ட்ரானிக்ஸ் குழுவினரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகத்தில் பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனத்துக்குச் சலுகை விலையில் நிலம் வழங்கப்படும். எனவே, மின்னணு பொருட்களை விநியோகம் செய்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள், இந்தச் சிறப்பு பொருளாதார மண்டலத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இந்த இடம் பெரிய அளவில் மின்னணு வன்பொருள் உற்பத்தி மையமாகத் திகழும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் மேலும், மேலும் வளர தமிழக அரசு அனைத்து ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் தொழில்நுட்ப வல்லுநர்கள் அதிக அளவில் இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியை பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனத் தலைவர் பீட்டர் டான் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இந்த நிறுவனத்தை ஆரம்பிக்க தமிழக அரசு அளிக்கும் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். பிளக்ஸ்ட்ரானிக்ஸ் (ஆசியா) நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் பீட்டர் டான், மூத்த துணைத் தலைவர்கள் மணி மாரிமுத்து, விஜயன் சின்னசாமி, பொது மேலாளர் குருராஜ் மற்றும் மூத்த பொது மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக அரசு சார்பில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. என். நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

★ ★ ★



# தமிழ்நாடு அரசின் சார்பில்
# மகாத்மா காந்தியடிகளின்
# 137ஆவது பிறந்தநாள் விழா



மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 137ஆவது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசின் சார்பில், 2.10.2005 அன்று, மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 137ஆவது பிறந்த நாள் விழாவின் முதல் நிகழ்வாக, மெரினா கடற்கரையில் அமைந்திருக்கும் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

**காந்தியடிகள் சிலைக்கு மாலையணிவிப்பு**

2.10.2005 அன்று, காலை 8.00 மணியளவில், சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. கா. காளிமுத்து அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். முன்னதாக, காலை 7 மணியிலிருந்து சர்வோதய சங்கம் சார்பாக, தேசிய எழுச்சிப் பாடல்களின் பஜன் நிகழ்ச்சி நடைபெற்றது.

**சைக்கிள் பேரணி**

காலை 8.15 மணிக்கு காந்தி சிலை அருகிலிருந்து, தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, உலக அமைதி

ஆகியவற்றை வலியுறுத்தும் சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்தார். பெருந்திரளான கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்ற இந்த சைக்கிள் பேரணி, மாநகரின் முக்கிய சாலைகள் வழியாகச் சென்று, காந்தி மண்டபத்தில் நிறைவடைந்தது.

### பஜன் மற்றும் கலை நிகழ்ச்சி

காந்தி சிலை அருகிலும் காந்தி மண்டபத்திலும் நூற்பு வேள்வி வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து காந்தி மண்டப வளாகத்தில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை பஜனைப் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சென்னை மற்றும் இந்திராநகர் இந்து சீனியர் செகண்டரி பள்ளி, என்.கே.டி. நேஷனல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சரோஜினிதேவி பஜன் மண்டலி, லேடி வெலிங்டன் மேனிலைப்பள்ளி, பிரம்ம குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயா ஆகியவற்றைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். மேலும், தென்னக பண்பாட்டு மையம் சார்பில், ஒயிலாட்டம், கரகாட்டம், மயிலாட்டம் போன்ற பல்வேறு கிராமிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### கண்காட்சி

காந்தி மண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், பல்வேறு அரசுத் துறைகள், பிற நிறுவனங்கள் பங்கேற்று, அமைக்கப்பட்டிருந்த கண்காட்சித் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் முன்னிலை வகித்தார். கண்காட்சியினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் திறந்து வைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் வகையில் அரியப் புகைப் படங்கள், அரசுத் திட்டங்கள் குறித்த விளக்கப்படங்கள் போன்றவற்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த செய்தி-மக்கள் தொடர்புத்துறை அரங்கினையும், மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வரலாற்றுச் சிறப்புக்களை வெளிக் கொணரும் வகையில் அரியப் புகைப்படங்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்ற விவரங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த இந்திய கள விளம்பரத்துறை கண்காட்சி அரங்கினையும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.




இந்தக் கண்காட்சி 2.10.2005 முதல் 4.10.2005 வரை 3 நாட்களுக்கு பொதுமக்கள் கண்டு களித்துப் பயன்பெறும் வகையில் சிறப்பாக நடைபெற்றன.

ஏராளமான பள்ளி – கல்லூரி மாணவ, மாணவிகள் பொது மக்கள் கண்காட்சிகளைக் கண்டு பயன் அடைந்தனர்.

### காந்தியடிகள் பிறந்த நாள் விழா மாலை நிகழ்ச்சி

2.10.2005 அன்று, மாலை 5.00 மணியளவில் காந்தி மண்டப வளாகத்தில், மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 137ஆவது பிறந்த நாள் விழா, வெகு சிறப்பாகத் தொடங்கியது.



### மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் உரை

விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தமது வரவேற்புரையில், "வெள்ளையர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நமது இந்தியத் திருநாட்டை, அறவழிப் போராட்டங்களின் மூலம், விடுதலைப் பெறச் செய்த மாமனிதர்தான் மகாத்மா காந்தியடிகள்.

நமது இந்தியத் திருநாட்டின் இதயம், கிராமங்களில் தான் உள்ளது என்று மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்கள். கிராமங்களை முன்னேற்றினால்தான் நாடு முன்னேறும் என்பது அந்தப் பெருந்தகையின் உயரிய கருத்து. அத்தகைய சிறப்புக்குரிய அண்ணலின் கனவை நனவாக்கும் உன்னத அரசுதான் நமது தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாகும். காந்தியடிகளின் வாக்குக்கு ஏற்ப கிராமங்களை முன்னேற்ற 'நமது கிராமம்' என்னும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்கள். முழுச்சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கும் கிராமங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் ரூபாய் பரிசை வழங்கி வருகிறார்கள்.

இத்தகைய உதவிகளால் உயர்வடைந்த 12 கிராம ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் இந்த ஆண்டு மத்திய அரசின் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினைப் பெற்று, தமிழ்நாட்டுக்குப் பெருமையைச் சேர்த்துள்ளது.

கிராமங்களில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு நிறைவேற்றி வருகிறது.

நமது நாடு இன்று உள்ள சிறப்பான நிலைக்குக் காரணமான விடுதலைப் போராட்டத் தியாகிகளை நினைவு கூர்ந்தும், மகாத்மா காந்தியடிகளைப் போன்ற மாமனிதர்களின் சிந்தனைகளை, வளரும் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லவும் இத்தகைய சிறப்பான விழாக்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு நடத்தி வருகிறது.

"நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மாத்திரமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை. நம்மை வெறுப்பவர்களிடம் அன்பு கொள்ளுவது ஒன்றே அகிம்சை'' என்று காந்தியடிகள் கூறுகிறார். இந்த உயரிய மனித உள்ளம் கொண்ட அண்ணலை "வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்" என்று போற்றிப் புகழ்ந்து பாடினார் மகாகவி பாரதியார்." என்று குறிப்பிட்டார்.

### மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் உரை

விழாவுக்குத் தலைமையேற்ற மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், அவர்கள் தமது தலைமையுரையில், "நமது இந்திய நாட்டில் மட்டுமல்லாமல், உலக நாடுகள் பலவற்றிலும் புகழ்பெற்ற ஒரே ஒரு இந்தியத் தலைவர் உண்டென்றால், அவர் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் அவர்கள்தான். ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடும் தலைவர், மக்களை வழிநடத்தும் ஒரு தலைவர், எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாக வாழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடின்றி, தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து, நாணயத்தோடும், நேர்மையோடும், ஒழுக்கத்தோடும் வாழ்ந்து வழிகாட்டியதோடு, இன்றைக்கு நம் முன், படமாக மட்டுமல்லாமல், ஒரு பாடமாகவும் விளங்கக் கூடியவர் மகாத்மா காந்தியடிகள்.

விடுதலைபெற்ற இந்தியா, எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்ற நாடாகத் திகழவேண்டும்; மக்களுக்கு எல்லாவித வசதிகளும் செய்து தரவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்கள். காந்தியடிகளின் விருப்பத்தை நிறைவேற்றும்விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும், எல்லாவித அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். 'தீண்டாமை' என்னும் கொடிய நோயை, 'கல்வி' என்னும் மருந்தைக் கொண்டே அகற்றமுடியும். அத்தகைய சிறப்புவாய்ந்த கல்விக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, அளவற்ற ஆக்கத்தையும், இடைவிடாத ஊக்கத்தையும் அளித்து வருகிறது. 'அனைவருக்கும் கல்வி' இயக்கத்தை திறம்படச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

ஜாதி, மத வேறுபாடில்லாமல், எல்லாப் பிரிவு மக்களையும் அன்போடு அரவணைத்துக் காத்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ–மாணவிகளுக்கும் இலவசப் பாடநூல்களை வழங்கி, மகாத்மா காந்தியடிகள் காண விரும்பிய புதிய உலகைப் படைத்துவருகிறார்கள்.

மேனிலைக் கல்வி பயிலும் அனைத்து மாணவ–மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, கடந்த நான்காண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்படுத்தி, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாக, வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.



மகாத்மா காந்தியடிகள் விரும்பிய கிராமப்புற மேம்பாடு, விவசாயிகளின் நலன், கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தும் புதிய திட்டங்கள் ஆகிய அத்தனை அம்சங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி, தமிழ்நாட்டைப் பேணிப்பாதுகாக்கும் உயர்ந்த இலட்சியம் கொண்ட அரசாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு விளங்கிவருகிறது." என்று தெரிவித்தார்.

நிறைவாக, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் 29 பேர்களுக்குப் பரிசுகள் வழங்கி, விழாப் பேருரை ஆற்றினார்.

**மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரை**

மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில், "நாட்டின் விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த காந்தியடிகளின் பிறந்த நாள், இன்றைய தினம் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாக்கள் காந்தியடிகள் போதித்த நாட்டுப்பற்று, மத நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் அமைந்துள்ளன. இதுபோன்ற விழாக்களில் பங்குபெறுவதோடு நின்றுவிடாமல், நாட்டிற்காக இளைஞர்கள் தங்களைத் தியாகம் செய்ய முன்வர வேண்டும். இந்நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். காந்தியடிகள் அமைதிப் புரட்சியின் மூலம் நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார். மக்கள், சமூக பொருளாதார ரீதியாக முன்னேறுவதே அவர்கள் குறிக்கோளாக இருந்தது" என்று குறிப்பிட்டு மகாத்மா காந்தியடிகளின் தியாகத்தைப் போற்றிப் புகழ்ந்தார்.

விழாவினைத் தொடர்ந்து நடைபெற்ற மாலை நிகழ்ச்சியில், மயிலாப்பூர் சில்ரன் கார்டன் மகளிர் மேனிலைப் பள்ளி, இராஜா அண்ணாமலைபுரம் இராணி மெய்யம்மை மகளிர் மேனிலைப் பள்ளி, மயிலாப்பூர் லேடி சிவசாமி அய்யர் மகளிர் மேனிலைப் பள்ளி, இராயப்பேட்டை சி.எஸ்.ஐ. மோனகன் மகளிர் மேனிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி வெலிங்டன் சீமாட்டி மகளிர் மேனிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளின் மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளும், இராணி மேரிக் கல்லூரி, எத்திராஜ் கல்லூரி, எம்ஓபி வைஷ்ணவா கல்லூரி மாணவியர்களின் தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு பற்றிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தென் மண்டல கலாச்சார இயக்ககம் சார்பில், செல்வி சைலஜா குழுவினரின் பரத நாட்டியம், தஞ்சாவூர் வெங்கடசாமி நாட்டார் கல்லூரி மாணவ, மாணவியர் வழங்கிய ஒயிலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் ஆகிய நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிறைவாக, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் டாக்டர் வெ. வரப்பிரசாதராவ், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார். நிகழ்ச்சியின் முடிவில், செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் செய்திப்படம் திரையிடப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் செய்திப்படத்தினைக் கண்டு இன்புற்றுச் சென்றனர்.

✱





# கதர்த் துணிகளை வாங்கி நெசவாளர்களுக்கு உதவ வேண்டுகோள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 29.9.2005

கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டில் ஊரகத் தொழில்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கதர் உற்பத்தித் திட்டம் ஊரகத் தொழில்களில் ஒரு சிறப்பு இடத்தை வகிக்கிறது. இந்தியத் திருநாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது, மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான ஆடையை நாமே நெய்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், கை ராட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'கதர்', அண்ணல் காந்தியடிகள் அவர்களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை, எளிய மக்களின் வாழ்வு வளம் பெற, அவர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கடந்த ஆண்டில் கதர் ஆடைகளை வாங்கிப் பயன்படுத்திய தமிழக மக்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டும், கதர் பட்டு ரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும், ஏனைய கதர் ரகங்களுக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்கப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் ஈடுபட்டுச் சிறந்தோங்கும் இத்தருணத்தில், கதர் உற்பத்தியில் அதிக அளவில் ஈடுபட்டிருக்கும் கிராமப்புறப் பெண்களை மேலும் மேம்படுத்திட, தமிழக மக்களாகிய நீங்கள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டும் அதிக அளவில் கதர்த் துணி வகைகளை வாங்கி, கிராமப்புற ஏழை, எளிய பெண்கள் மற்றும் நெசவாளர்களை ஆதரித்து உதவிடுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ❖



# நிதி நிலைமை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.9.2005 அன்று சட்டமன்றப் பேரவையில் அளித்த விளக்கம்

**2001**–ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற போது தமிழகத்தின் நிதிநிலை அதல பாதாளத்தில் இருந்தது என்பது மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. நிதி நிலையைச் சீர்செய்து மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டு செல்ல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்ட போது, எதிர்க்கட்சியினர், மக்களுக்கு இதனால் இன்னல்கள் ஏற்படும் என்று பெரும் கூக்குரல் இட்டனர். அரசின் நிதிநிலை சீரழிந்ததற்கு, சென்ற தி.மு.க. ஆட்சியே முற்றிலும் காரணமாகும். எனது அரசு இந்நிலையைச் சீர் செய்ய முயன்ற போது, இவர்கள் திடீரென்று தங்களை ஏழைகளின் பாதுகாவலர்களாகக் காட்டிக் கொண்டு, என்னுடைய அரசு மக்கள் நலனுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டினர். அச்சமயம், அரசின் நிதிநிலை குறித்து கிஞ்சித்தும் கவலையின்றி, அரசின் நிதிநிலை எவ்வாறாக இருந்தாலும் அரசின் திட்டங்களிலும், கொள்கைகளிலும் எவ்வித மாற்றமும் கூடாது என்ற ஒரு பொறுப்பற்ற வாதத்தை முன் வைத்தனர். அதாவது, நிதித் திறனை மீறி நிதிச் சுமை ஏற்படுத்தும் வகையில் அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு, பொறுப்புகளை எங்களிடம் தள்ளிவிட்டு அரசின் நிதி நிலையை அதல பாதாளத்திற்குத் தள்ளி விட்டது முந்தைய தி.மு.க. அரசு.

எனது அரசு, அரசின் நிதி நிலையைச் சற்றும் கருத்தில் கொள்ளாது பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து வருகின்றது என்ற வினோதமான நிலைப்பாட்டை இவர்கள் தற்போது எடுத்து வருகின்றனர். மக்கள் பயன்பெறும் வகையில் இத்தகையத் திட்டங்கள் அறிவிக்கப்படக்கூடாது என இவர்கள் வாதிட முற்படுகிறார்கள். அரசின் நிதி நிலையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், இவை செயல்படுத்தப் படமாட்டாது என்றும் ஒரு அவதூறுப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். தங்களது ஆட்சிக் காலத்தில் நிதி நிலையைச் சீரழித்தவர்கள், தற்போது அரசின் நிதி நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று, புதிய ஞானோதயம் ஏற்பட்டதைப் போன்று உபதேசம் செய்து வருகின்றனர். மேலும், அறிவித்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும், அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அரசின் நிதி நிலை சீர் கெடும் அபாயம் ஏற்படும் என்றும் வாதங்களை எழுப்பியுள்ளனர். இவ்வாறு, நிதிக் கட்டுப்பாடு தேவையற்றது என்றும், அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொள்ளாது கட்டுப்பாடின்றி அனைத்து வகையான செலவினங்களும் தொடர வேண்டும் என்றும் கூக்குரல் எழுப்பிய அதே நபர்கள், இன்று மக்கள் நலன் கருதி நான் அறிவித்துள்ள புதிய திட்டங்களினால் பெருகி வரும் எனது அரசின் செல்வாக்கை எவ்வாறேனும் கட்டுப்படுத்த வழி தேடி அலைகின்றனர்.

இவ்வாண்டு எனது அரசு அறிமுகப்படுத்திய, நன்கு வடிவமைக்கப்பட்ட புதிய திட்டங்கள் மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களே என்பதால் இவர்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். தங்களுடைய உண்மையற்ற வாதம் வெளிப்பட்டு விட்டதே என்ற பயத்தால் சாத்தான் வேதம் ஓதுவது போல் இவர்கள் தற்போது நிதி நிலையில் சிக்கனம் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த மோசமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, இந்நிலையைச் சீர்செய்ய சில கசப்பான மருந்துகள் சில காலம் உட்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது என்று நான் குறிப்பிட்ட போது, இதே தலைவர்கள் அரசின் நிதிநிலை சீர்கெட்டுப் போனதை ஒப்புக்கொள்ள அறவே மறுத்தனர். இத்தருணத்தில் மையத் திட்டக் குழுவால் அண்மையில் தயாரிக்கப்பட்டு 'தமிழ்நாடு வளர்ச்சி அறிக்கை' என்னும் தலைப்பில் வெளியிடப்படவுள்ள ஆய்வு அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"Considerable increase in revenue deficit especially after 1995-96 is one of the major structural problems in the Tamil Nadu budget and this leads to a large fiscal deficit and interest burden".

அதாவது, "1995–1996ஆம் ஆண்டிற்குப் பிறகு வருவாய்ப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான உயர்வு, தமிழ்நாட்டின் வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பெரும் அமைப்பு ரீதியான பிரச்சினையாகும். இது பெரும் நிதிப் பற்றாக்குறைக்கும், வட்டிப் பளுவுக்கும் வழிவகுக்கிறது."

கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசின் நிதிநிலை அந்த அளவிற்குச் சீர்கெடவில்லை என்று திரு. கருணாநிதி எப்போதுமே வாதிட முயன்று வந்துள்ளார். தி.மு.க. அங்கம் வகிக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தற்போதைய மைய அரசில் உள்ள மையத் திட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு வளர்ச்சி அறிக்கை, தமிழக அரசின் நிதி மேலாண்மை, முந்தைய தி.மு.க. ஆட்சியால் எவ்வாறு மோசமாகக் கையாளப்பட்டது என்பதற்கு மிகப் பெரும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதே அறிக்கை, எனது அரசு நிதிநிலையைச் சீர்செய்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து பாராட்டியுள்ளது.

"for the initial two years of projections (2003-2004 and 2004-2005), the revenue receipts exceed the projected values by more than Rs.400 crores. Although the revenue expenditures slightly exceed the projected levels, both revenue deficit and fiscal deficit are considerably less than the projection levels in these two years (despite the presence drought situation in the State)."

அதாவது, "2003–2004, 2004–2005 ஆகிய முதல் இரண்டு ஆண்டுகளைப் பொறுத்த வரையில், வருவாய் வரவுகள், மதிப்பீடுகளை விட 400 கோடி ரூபாய் அதிகமாக உள்ளது. இவ்விரு ஆண்டுகளில் மதிப்பீடுகளை விட வருவாய் செலவினம் சற்றே கூடுதலாக இருந்தாலும், வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் மதிப்பீடுகளை விட கணிசமான அளவிற்குக் குறைவாக உள்ளன (மாநிலத்தில் தற்போது வறட்சி நிலை இருந்த போதிலும்)" – என்று நீங்கள் ஆட்சி செய்கின்ற மத்திய அரசுத் திட்டக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறாக, மாநிலத்தின் நிதி நிலையைச் சீரழித்து, அரசால் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைத் தொடர முடியாத நிலையை, கடந்த தி.மு.க. அரசு ஏற்படுத்தியது என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனது அரசு, இதனை ஒரு மாபெரும் சவாலாக எதிர்கொண்டு, நிதி நிலையைச் சீரமைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு, அதில் வெற்றியும் பெற்றுள்ளது. நிதி நிலையைச் சீர்செய்த பின்னர் தான், ஏழை, எளியோருக்குப் பயன் அளிக்கும் வகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலும். இதைத் தான் நாங்கள் செய்தோம். செய்துள்ளோம். எப்பொழுதுமே ஏழை, எளியவர்களுக்காகப் பாடுபட்டு வரும் எனது அரசு, அவர்களுக்கு உண்மையான பயன் கிட்டுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிதி நிலை கட்டுப்பாட்டைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, மக்கள் நலனுக்காகத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது போன்று பாசாங்கு செய்து, பின்னர் எந்தத் திட்டத்தையும் தொடர இயலாத ஒரு நிலையை உருவாக்கிய முந்தைய தி.மு.க. அரசு போலன்றி, எப்போதும் போதிய நிதிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தே எனது அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எல்லா விளக்கங்களையும் ஏற்கெனவே கூறிவிட்டோம். இப்போது அறிவித்துள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் தேவையான நிதி இருக்கும், கிடைக்கும், செலவு செய்யப்படும்.

* * *

# சி.பா.ஆதித்தனார் வாழ்ந்த இல்லம் நினைவிடம்





'தினத்தந்தி' தமிழ் நாளிதழின் நிறுவனரும், முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் பேரவைத் தலைவருமான திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களின் 101–ஆவது பிறந்த நாளான 27.9.2005 அன்று, அண்ணாரைக் கௌரவிக்கும் வகையில் அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லம், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ளது. இந்த இல்லத்தில் அரசு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அரசுக்கு வரப் பெற்றுள்ளது. இதனை நிறைவேற்றுவது தமிழ் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற சிறந்த பணி என்ற அடிப்படையில் எனது அரசு, இந்தக் கோரிக்கையை ஏற்று அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடம் ஆக்க முடிவெடுத்துள்ளது.

இந்த நினைவிடத்தில், இலக்கமுறை நூல்கம் (Digital Library) ஒன்று அமைக்க சில அமைப்புகள் முன் வந்துள்ளன. இதனையும் ஏற்று, இந்த நினைவிடத்தில் இலக்கமுறை நூலகம் (Digital Library) ஒன்று உருவாக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.





# சென்னைக்கு பசுமைத்தோற்றத்தை அளிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு பூங்காக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.9.2005 அன்று சென்னை மாநகரில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளையும், எழிலார்ந்த அமைப்புகளாக சுற்றுச்சூழலை மேம்படுத்தி பசுமைத் தோற்றத்தை சென்னைக்கு அளிக்கின்ற வகையில் உருவாக்கப் பட்டுள்ள பல்வேறு பூங்காக்களையும், அந்தந்தப் பகுதிகளை பார்வையிட்டு திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்ற கட்டுமான மேம்பாட்டுப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

புதியதாக அமைக்கப்பட்ட, சென்னை புளியந்தோப்பு மற்றும் நுங்கம்பாக்கம் ஹாடோஸ் சாலைப் பூங்காக்கள், புதுப்பிக்கப்பட்ட ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை நேரு பூங்கா, நுங்கம்பாக்கம் சுதந்திர தினப் பூங்கா ஆகிய பூங்காக்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திறந்து வைத்தார்கள். மேலும், சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையில் 5.01 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலையினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்கள்.

இதுவன்றி, சென்னை மெரினா கடற்கரையில் உருவாக்கப் பட்டுள்ள ஸ்கேட்டிங் சறுக்கு விளையாட்டு மைதானம், செயற்கை நீர்வீழ்ச்சி மற்றும் நேப்பியர் பாலம் அருகே உருவாக்கப்பட்டுள்ள



அழகுமிகு பூங்கா ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.9.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை நகரில் சாலை மேம்பாடு, போக்குவரத்து மேம்பாடு, குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி மேம்பாடு, மின்சார வசதி மற்றும் கால்வாய் மேம்பாடு உள்ளிட்ட அனைத்து கட்டுமான வசதிகளையும் உருவாக்க 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் "சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்" 2003ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், சென்னை கட்டமைப்பு வசதிகள் நிறைந்த நகரமாக விளங்குவது மட்டுமில்லாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த அழகுமிகு நகரமாகவும் திகழ வேண்டும் என்ற எண்ணத்தில் 'என்றென்றும் சென்னை' (Chennai Forever) என்னும் திட்டம், சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், சென்னை நகரில் உள்ள அனைத்துச் சாலைகளையும் தரம் மிகுந்த சாலைகளாக ஆக்குதல், பசுமையுடன் கூடிய மையத் தடுப்புச்சுவர் மற்றும் அழகிய நடைபாதைகளை அமைத்தல், பராமரிப்பு இல்லாத சாலையோரப் பூங்காக்கள் மற்றும் கவனிக்கப்படாமல் சிதிலம் அடைந்த பல பெரிய பூங்காக்களைப் புதுப்பித்தல், சாலைத் தீவுகளை நல்ல முறையில் பராமரித்தல், துப்புரவு மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றைச் சிறப்பாகப் பராமரித்தல், குப்பைகளை அகற்றுதல், நீர் வழிகள் மற்றும் சாலைப் போக்குவரத்து மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டதுடன், சென்னை மாநகரம் சுற்றுச்சூழலில் தரம் மிகுந்த பசுமையான சிறந்த வசிப்பிடமாக மாற்றப்பட பல்வேறு கட்டமைப்புப் பணிகளும், நகரை அழகூட்டும் பணிகளும் கடந்த 4 ஆண்டுகளாகச் செயல்படுத்தப் பட்டுள்ளன. சென்னை நகரில் சர்வதேச தரத்தில் சாலைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. மிகச் சிறிய சாலைகளும் கவனத்துடன் செப்பனிடப்பட்டுள்ளன. மேலும், நகரில் 227 கி.மீ. நீளமுள்ள நடைபாதைகள் புதிதாக அமைக்கப்



பட்டதுடன், 137கி.மீ. நீளமுள்ள நடைபாதைகளைப் பழுதுபார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு சாலைகள் அமைத்தல் மற்றும் நடைபாதைகள் அமைத்து, மேம்படுத்தல் ஆகிய பணிகள் மொத்தம் 431 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மேலும், சென்னை நகரின் பல்வேறு பகுதிகளிலும் 17 கோடி ரூபாய் செலவில் புதிய பூங்காக்கள், சாலையோரப் பூங்காக்கள் மற்றும் சாலை சந்திப்புத் தீவுகள் ஏற்படுத்தப்பட்டு சென்னை நகரமே புதுப்பொலிவுடன் பசுமைமிகு நகரமாகத் திகழ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெரினா கடற்கரையில் 2 கோடி ரூபாய் செலவில் பூங்காக்கள், ஸ்கேட்டிங் ரிங் எனப்படும் சறுக்கு விளையாட்டு மைதானம், சாலைகள் மற்றும் செயற்கை நீர்வீழ்ச்சி முதலானவை அமைக்கப்பட்டு, சென்னை நகரில் திறந்தவெளியாகவும், குப்பை கொட்டும் இடங்களாகவும் இருந்த பல பகுதிகள் தற்போது அழகு மிளிரும் பூங்காக்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

நெடுங்காலமாக சென்னை நகரில் நிலவி வந்த குடிநீர்த் தட்டுப்பாட்டை அகற்ற பல எதிர்ப்புக்களுக்கிடையே, 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீராணம் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் பயனாக, சென்னை நகர மக்கள் கடந்த ஓர் ஆண்டு காலமாகக் கடுமையான கோடைக் காலத்தில்கூட தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் பெற்று வருகின்றனர். சென்னை நகரில் குடிநீர் வசதியை மேம்படுத்த கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

2002 நவம்பர் திங்களில் தொடர் மழையால் சென்னையின் பல்வேறு பகுதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரிடையாகப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், எதிர்காலத்தில் மழை வெள்ளத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் கால்வாய்கள் மற்றும் மழைநீர்க் கால்வாய்களில்



உடனடியாகத் தூர்வாரவும், மழைநீரால் அடிக்கடி பாதிக்கப்படும் சத்தியமூர்த்தி நகர், தண்டையார்பேட்டை, மணலி சாலை போன்ற பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். அதுமட்டுமல்லாமல் நகரில் தேவையான எண்ணிக்கையில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டும் எனவும், சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்காத வண்ணம் உடனடியாக அவற்றை அகற்றத் தேவையான திறன் கொண்ட மோட்டார் பம்புகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

அதன்படி, மழைக் காலத்தில் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய பகுதியான சத்திய மூர்த்தி நகர் பிரதானச் சாலையில் 1.37 கி.மீ. நீளத்திற்கு 5.01 கோடி ரூபாய் மதிப்பில் தற்போது சிமெண்ட் சாலை போடப் பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற சென்னைக் குடிநீர் வாரியத்தின் லாரிகள் பெருமளவில் சென்று வருகின்ற காரணத்தினால் வெகுவாகப் பாதிக்கப் பட்டு பழுதடைந்துள்ள சாலைகளை தக்க முறையில் சீரமைத்து மேம்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, எம்.ஜி.ஆர். சாலை, வள்ளுவர் கோட்டம் சாலை, திருமலை சாலை, கே.கே.நகர் பகுதியில் ஆர்.கே. சண்முகம் சாலை, டாக்டர் ராமசாமி சாலை, ராஜமன்னார் சாலை, அடையாறு பகுதியில் ஸ்ரீராம நகர் பிரதானச் சாலை, கீழ்ப்பாக்கம் பகுதியில் நியூ ஆவடி சாலை ஆகிய இடங்களில் 2.433 கி.மீ. நீளத்திற்கு 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அதேபோன்று வடசென்னைப் பகுதியில் முத்தமிழ் நகர் 5ஆவது பிரதான சாலை, வைத்தியநாதன் சாலை, மணலி சாலை மற்றும் கணேசபுரம் சுந்தரம் தெருவில் 1.794 கிலோ மீட்டர் நீளத்திற்கு 6 கோடியே17 இலட்சம் ரூபாய் செலவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

நகரிலுள்ள 16 கால்வாய்களும் மாநகராட்சியால் 3 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன. குறிப்பாக, மாம்பலம் கால்வாய் 30 ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாகத் தூர்வாரப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அடையாறு, கூவம், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் பக்கிங்காம் கால்வாய் ஆகியவைகளும் 15 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டுள்ளன.

நகரின் பல்வேறு பகுதிகளிலும் 88 கி.மீ. நீளத்திற்குப் புதிதாகவும், புதுப்பித்தும் மழைநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமில்லாமல், நகரில் சாலையில் சுற்றித்திரியும் கால்நடைகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பொது இடங்களில் இருந்த ஆக்கிரமிப்புகளும் பெருமளவில் அகற்றப்பட்டுள்ளன. நகரெங்கும் பழைய பொதுக் கழிப்பிடங்கள் மேம்படுத்தப்படும். புதுக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பொதுச் சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீட்டுக்கு வீடு குப்பை சேகரிக்கும் பணி சிறப்பான முறையில் மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு சென்னை நகரம் குப்பையில்லா நகரமாக மாறி வருகிறது.





நகரில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சாலையோரங்களில் உள்ள பூங்கா செடிகளுக்கு வீடுகளில் குளியலறை மற்றும் சமையலறையில் பயன்படுத்திய நீரை சுத்திகரிப்பு செய்து பயன்படுத்த சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், கழிவுநீரில் மழைநீர் கலப்பதை தடுப்பதற்கும், கழிவுநீர் அகற்றும் பணியை மேம்படுத்தவும் சென்னை குடிநீர் வாரியம் 547 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளது. கழிவுநீரை விரைவாக அகற்றுவதற்காக இரண்டு புதிய நீரேற்று நிலையங்கள் அமைத்து அவை அதிக திறனுடன் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், நகரை அழகான, பசுமையான நகரமாக்கும் வகையிலும் இதுவரை சென்னை நகரின் சரித்திரத்தில் இல்லாத அளவில் பல்வேறு பணிகள் பல்வேறு துறைகளால் மிகக் குறுகிய காலத்தில் இன்று மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்களும் இன்று சென்னை நகரம் முன்பு எப்போதும் இல்லாத அளவில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் பெற்று பசுமையான – அழகான நகரமாக மாறிவருவதை கண்டு வியந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் செயல்திறனைப் பாராட்டுகின்றனர்.

இவ்வகையில், எழிலார்ந்த அமைப்புகளாக, சுற்றுச்சூழலை மேம்படுத்தி பசுமைத் தோற்றத்தை சென்னைக்கு அளிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு பூங்காக்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.9.2005 அன்று, பூங்காக்கள் அமைந்துள்ள இப்பகுதிகளுக்கு நேரில் சென்று திறந்து வைத்தார்கள்.

சென்னை, புளியந்தோப்பு பகுதியில் 24 இலட்சம் ரூபாய் செலவிலும், நுங்கம்பாக்கம் பகுதி ஹாடோஸ் சாலையில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், புதியதாக அமைக்கப்பட்ட பூங்காக்களையும், ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் 40 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட நேரு பூங்காவினையும், நுங்கம்பாக்கம் பகுதியில் 26 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட சுதந்திர தினப் பூங்காவினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், சத்தியமூர்த்தி நகர் பிரதானச் சாலையில் 1.37 கி.மீ. நீளத்திற்கு 5.01 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலையையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.9.2005 அன்று அர்ப்பணித்தார்கள்.

இதுவன்றி, சென்னை மெரினா கடற்கரையில் 5.65 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள ஸ்கேட்டிங் சறுக்கு விளையாட்டு மைதானம், 19.47 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள செயற்கை நீர்வீழ்ச்சி மற்றும் நேப்பியர் பாலம் அருகே 47.75 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள அழகுமிகு பூங்கா ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.9.2005 அன்று திறந்து வைத்தார்கள்.



மேலும், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். குறிப்பாக, புளியந்தோப்புப் பகுதியில் குழாய்கள் மூலம் குடிநீர் வருவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆய்வு செய்தார்கள். அப்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள், வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தி சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள். தொடர்ந்து, மூர்த்திங்கர் தெரு, ரவீஸ்வரர் கோயில் திருக்குளம், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடன் சீரமைக்கும் பணி நடைபெற்று வருவதைப் பார்வையிட்டார்கள்.

பல்வேறு பூங்காக்களைத் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன், அப்பூங்காக்கள் அமைந்துள்ள பகுதியிலும் மற்றும் அதனைச் சுற்றியும் வசித்து வரும் பெண்கள் நேரில் உரையாடினார்கள். இதுவரை தாங்கள் கண்டிராத வகையில் மிக்க அழகோடும், புதுமைச் சிறப்போடும் பூங்காக்களை உருவாக்கித் தந்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, அவர்கள் தங்களது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள். இந்தப் பூங்காக்கள் அனைத்தும் தொடர்ந்து நல்ல முறையில் பராமரிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தம்மோடு கலந்துரையாடிய பெண்களுக்கு உறுதி அளித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுவரும் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் 'என்றென்றும் சென்னை' திட்டம் முழுமை பெறும்போது சென்னை நகரம் மேலும் எழிலும், பசுமையும் மற்றும் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட உலகின் தலைசிறந்த ஒரு மாநகரமாக – மாபெரும் நகரமாகத் திகழும் என்பது உறுதி. ★



முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களது 114–ஆவது பிறந்த நாளையொட்டி, 29–9–2005 அன்று, சென்னை, தங்கசாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# வனத்துறை களப் பணியாளர்களுக்கு பல்வேறு திட்டங்கள்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 27.9.2005



சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் முக்கியமான முயற்சியாக தமிழகத்திலுள்ள வனப் பகுதிகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் எனது அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இந்திய வன அளவைத் துறையின் வன நிலை அறிக்கை 2003–ன்படி, 2001–ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையோடு ஒப்பிடும் போது நமது மாநிலத்தின் மொத்த வனப் பரப்பு 1,161 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது. இது நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருந்தபோதிலும், தற்போது தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 17.58 விழுக்காடு ஆக உள்ள வன நிலங்களின் பங்கை மேலும் உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில், ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி (Japan Bank of International Co-operation) உதவியுடன், 567.42 கோடி ரூபாய் செலவில், 1,775 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் (நிலை–2) திட்டத்தினை 2005–2006ஆம் ஆண்டு முதல் 2012–2013ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் செயல்படுத்த இறுதி ஒப்பந்தம் 31.3.2005 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2005–2006ஆம் ஆண்டில் பணிகளை மேற்கொள்ள 44.87 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதிகளில் மேலும் அடர்த்தியான காடுகள் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நான் துவக்கத்திலேயே குறிப்பிட்டது போல், வனப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு நம்மிடம் உள்ளது. இவ்வாறு வனப் பகுதிகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதும், புதிய வனப் பகுதிகளை உருவாக்குவதும், நமது வருங்காலச் சந்ததியினருக்கு நாம் வ்ழங்குகின்ற மதிப்பிட முடியாத சொத்துக்கள் ஆகும். எனவே, வனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பு களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. இதன்படி, 2001ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி 2005 வரை ஏறத்தாழ 3,000 ஏக்கர் பரப்பளவிலான வன நிலங்கள் ஆக்கிரமிப்புதாரர் களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, 5 தேசியப் பூங்காக்கள் (National Parks), 8 வன உயிரினச் சரணாலயங்கள் (Wild Life Sanctuaries) மற்றும் 2 உயிர்ச் சூழல் காப்பகங்கள் (Biosphere Reserves) ஆகியவை தமிழகத்தின் வன உயிரினப் பாதுகாப்புப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இவற்றுடன் காப்புக் காடுகளுக்கு வெளியே பறவைகளின் புகலிடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 12 பறவைகள் சரணாலயங்களும் (Bird Sanctuaries) அமைக்கப்பட்டுள்ளன. தாவர மற்றும் வன உயிரினப் பாதுகாப்பினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் உயிர்ச்சூழல் காப்பகங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து சிறந்த முறையில் பராமரிக்க எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த சிறப்பான நடவடிக்கைகளின் வாயிலாக, தமிழக வனங்களில் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, 2002ஆம் ஆண்டில் 3,052 என்ற அளவில் இருந்த யானைகளின் எண்ணிக்கை, மே 2005–இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தற்போது 4,015 ஆக உயர்ந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், நாடெங்கும் வனங்களில் உள்ள புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது என்று தேசிய அளவில் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டத்தில், தமிழகத்தில் வனங்களில் உள்ள புலிகளின் எண்ணிக்கை குறையவில்லை என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழக வனங்களில் உள்ள புலிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறைகள் சிறந்தவை என்று, தேசிய அளவில் அமைக்கப்பட்ட சிறப்புப் பணி பிரிவு, Tiger Task Force - பாராட்டுத் தெரிவித்துள்ளது.

வனங்களைப் பாதுகாப்பதிலும், வன உயிரினங்களுக்கு ஏற்ற உயிர்ச்சூழலை ஏற்படுத்துவதிலும் நாம் சிறந்த வெற்றியைக் கண்டுள்ளோம். வனப் பகுதிகளை ஒட்டி உள்ள கிராம வாழ் மக்களையும் இந்த இயக்கத்தில் ஈடுபாட்டுடன் பயன்படுத்துவதில் நாம் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். இது, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. வன உயரினங்களை வேட்டையாடுவதைத் தடுப்பதில் பழங்குடியினரை முழுமையாக ஈடுபடுத்தும் முயற்சி தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனை இதர மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு பல்வேறு கூட்டங்களில் அறிவுரை வழங்கியுள்ளது.

வனப் பகுதிகள் மற்றும் வனங்களில் வாழும் உயிரினங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அதிமுக்கியமான பணியாகும். இப்பணியில் எவ்விதத் தொய்வும் ஏற்படாமல் நாம் கண்காணிக்க வேண்டும். இந்த மாபெரும் பணியில் ஈடுபடும் யானை துணைப் பாகன்கள் (Cavady), யானைப் பாகன்கள் (Mahout), வனத் தோட்டக்காரர்கள் (Mali), வனக் காவலர்கள் (Forest Watchers), வனக் காப்பாளர்கள் (Forest Guards), வனவர்கள் (Foresters), வனச் சரகர்கள் (Forest Rangers) ஆகியோர் ஊக்கத்தோடும், உத்வேகத்தோடும், மிகுந்த துணிவோடும் செயல்பட வேண்டும்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, காட்டுக் கொள்ளையன் வீரப்பனைப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டையில் அதிரடிப் படையினருடன் இணைந்து பணிபுரிந்த வனப் பணியாளர்கள் 59 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வெகுமதியும், 43 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும், 46 பேருக்கு ஒரு படி பதவி உயர்வும் நான் வழங்கினேன்.

காட்டுப் பகுதிகளில் உயிரைத் துச்சமாக மதித்து, பல்வேறு ஆபத்துகளை எதிர்கொண்டு, இடையூறுகளை வெற்றி கண்டு கடுமையாகப் பணியாற்றுகின்ற வனக் களப் பணியாளர்களின் பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு, அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்கான திட்டம் வகுக்கப்படும் என்றும், அவர்களுக்கு ஊர்தி மற்றும் செல்லிடத் தொலைபேசி போன்ற நவீன கருவிகள் வழங்கப்படும் என்றும் இந்த அவையில் 23.9.2005 அன்று நான் உறுதி அளித்தேன். இதற்கான ஆக்கப்பூர்வமான திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இதனை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

### வனத்துறை களப் பணியாளர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள்

காவல் துறையினருக்கு மலிவு விலையில் ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது போலவே, வனத்துறையின் களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு மாதத்திற்கு

- ★ 20 கிலோ அரிசி 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.
- ★ 2 கிலோ சர்க்கரை 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.
- ★ 2 கிலோ கோதுமை 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.
- ★ 1 கிலோ பாமாயில் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.
- ★ 4 கிலோ துவரம் பருப்பு, கிலோ ஒன்றிற்கு 10 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும்.
- ★ 4 கிலோ உளுத்தம் பருப்பு, கிலோ ஒன்றிற்கு 10 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும்.
- ★ 3 கிலோ ரவா/மைதா, கிலோ ஒன்றிற்கு 3 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும்.

## அண்ணல் காந்தியடிகளின் அமுதமொழிகள்



* நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மாத்திரமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை. நம்மை வெறுப்பவர்களிடம் அன்பு கொள்ளுவது ஒன்றே அகிம்சை.

* சமூக அநீதி எங்கே நடப்பதாக இருந்தாலும் சரி, அதை எதிர்க்காத யாரும், தீவிரமாக அகிம்சையை அனுசரிப்பவராக இருக்க முடியாது.

* என்னுடைய அகிம்சைக் கொள்கை, மிகத் தீவிரமான செயல்சக்தி. கோழைத்தனத்திற்கோ, பலவீனத்திற்கோ அதில் இடமே இல்லை. பலாத்காரமுள்ள ஒருவர் என்றாவது ஒருநாள் அகிம்சைவாதியாகக்கூடும் என்ற நம்பிக்கைக்காவது இடமுண்டு. ஆனால், கோழை அகிம்சைவாதியாகலாம் என்ற நம்பிக்கைக்கே இடமில்லை.

* அகிம்சையின் அவதாரம் பெண். அளவில்லாத அன்பு என்பதே அகிம்சையின் பொருள். அத்துடன் எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளுவதும், அதனுடைய விசேஷமாகும். மனிதனை ஈன்றெடுக்கும் அன்னையாகிய பெண்ணைத் தவிர வேறு யாருக்கு இந்தச் சக்தி அவ்வளவு அதிகமாக இருக்கிறது?

* உருவங்கள் பல, ஆன்மா ஒன்றே. முக்கியமாக இந்த ஒருமைப்பாட்டை அறிந்து கொள்வதே, எல்லா மதங்களுடைய இறுதி இலட்சியமும் ஆகும்.

இதன்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு மாதமும் மொத்தம் 440.90 ரூபாய் மதிப்புள்ள இந்த உணவுப் பொருட்களுக்கென 162.25 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதனால் 5,705 வனக்களப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். இதற்காக ஆண்டு ஒன்றிற்கு எனது அரசு ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவு செய்யும்.

### வனச் சரகர்களுக்கு ஜீப் வாகனங்கள்

வனப் பாதுகாப்புப் பணி சரகர்கள் (Territorial Forest Rangers) 225 பேர்களுக்கு ஜீப் வாகனங்கள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நடப்பு ஆண்டிலேயே இந்த வாகனங்கள் அனைத்தும் வழங்கப்படும். இவ்வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்ற வனக்காப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள். இவ்வகையில், இவ்வாகனங்களை வாங்கிட 10.13 கோடி ரூபாயும், அந்த வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும், எரிபொருளுக்காகவும் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கான சம்பளச் செலவின வகையிலும் ஆண்டுதோறும் 2.9 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 13.03 கோடி ரூபாயை இதற்கென எனது அரசு செலவு செய்யும்.

### வனச் சரகர்களுக்கு செல்லிடத் தொலைபேசி (Cell Phone)

வனத் துறையின் வனச் சரகர்கள், வன மேம்பாட்டுப் பணிகளை முனைப்புடன் மேற்கொள்ளவும், வனப் பகுதிகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பணியில் மிக விரைவாகவும், எளிதாகவும் தொடர்பு கொண்டு செயலாற்றவும் ஏதுவாக 626 வனச் சரகர்களுக்கும் தலா ஒரு செல்லிடத் தொலைபேசி வழங்கப்படும். இதற்கென தொடரா்ச் செலவினமாக 21.91 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினமாக ஆண்டொன்றிற்கு 37.56 இலட்சம் ரூபாயும் எனது அரசு செலவிடும்.

### வனச் சரகர்களுக்கு இரட்டை தொலை நோக்காடிகள் (Binoculars)

வனச் சரணாலயங்களில் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளும் வனச் சரகர்களின் பணியை மேம்படுத்தும் வகையில் 9 இலட்சம் ரூபாய் செலவில் 60 இரட்டை தொலை நோக்காடிகள் (Binoculars) வழங்கப்படும்.

வனப் பகுதிகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வனக் களப் பணியாளர்கள் மேலும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணியாற்றிட அவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் 14.82 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டங்களை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் விலை மதிப்பற்ற நமது வன வளங்களைக் காப்பதில் வனக் களப் பணியாளர்கள் மேலும் அதிக ஈடுபாடு கொண்டு கடமையாற்றுவார்கள் என்பது உறுதி. *



# இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**சி**ங்கப்பூரில் உள்ள அசண்டாஸ் நிறுவனமும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் (டிட்கோ) இணைந்து உருவாக்கியுள்ள பன்னாட்டுத் தொழில்நுட்பப் பூங்காவைத் திறந்து வைப்பதில் நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

இந்தப் பன்னாட்டுத் தொழில்நுட்பப் பூங்கா, உண்மையிலேயே உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பப் பூங்கா சென்னைப் பெருநகரின் மற்றொரு அடையாளச் சின்னமாகும்.

இந்தப் பன்னாட்டுத் தொழில்நுட்பப் பூங்கா தவிர 40 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் ஒரு கோடியே 17 மில்லியன் சதுர அடி பரப்பில் உருவாகியுள்ளன. இதன் மூலம், சென்னை நகரம் எப்படி தகவல் தொழில்நுட்பத் துறையில் பெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது தெரிய வரும்.



சிறுசேரியில் உருவாக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 68 தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ளன. அங்கு முழுவதுமாக நிறுவனங்கள் வந்துவிட்டன. எனவே, இப்போது 2ஆவது கட்டமாக சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா II–ஐ அமைத்து வருகிறோம். அதே போன்று, சோழிங்கநல்லூரில் அறிவுசார் தொழில் நகரியம் அமைத்து வருகிறோம். சென்னை மாநகரம் தொழில்நுட்பத் துறையில் வேகமாக விரிவடைந்து வருகிறது.

இங்கு உருவாக்கப்பட்டுள்ள பன்னாட்டுத் தொழில்நுட்பப் பூங்கா அரசு அமைத்து வரும் தொழில்நுட்ப விரைவுப் பாதையை (IT Express Way) ஒட்டி அமைந்துள்ளது.

இந்த விரைவுப் பாதை சென்னை நகரை இணைப்பதாக இருக்கும். எதிர்கால போக்குவரத்தை எல்லாம் கவனத்தில் கொண்டு இந்த விரைவுப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த விரைவுப் பாதை தவிர, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதாவது, ஒரு நாளைக்கு 20 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யும் திறன் அளவுக்கு குழாய் அமைக்கப்படுகிறது.

மேலும், அந்தப் பகுதி வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகிறோம். பக்கிங்காம் கால்வாய் ஓரம் இரயில் பாதை அமைக்க வாய்ப்பு உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுடன், அசண்டாஸ் என்கிற 'சிங்கப்பூர்' நிறுவனம் இந்தத் தொழில்நுட்பப் பூங்கா உருவாக முழு முயற்சி எடுத்துக்கொண்டதற்காகவும் சிங்கப்பூர் அரசின் கல்வி

அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இந்தியாவில் தொழில் முதலீடு செய்துள்ள முதல் 10 நாடுகளில் சிங்கப்பூரும் இடம் பெற்றுள்ளது. சிங்கப்பூருக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையே நீண்டகால நல்லுறவு உள்ளது. இந்த உறவு தனித்தன்மையானது. தன்னிகரில்லாதது. இங்கு, தகவல் தொழில்நுட்பத்தில் சிங்கப்பூர் பங்கெடுத்து அந்த உறவை மேலும் புதுப்பித்திருக்கிறது. சிங்கப்பூர் மற்றும் சென்னையில் உள்ள வல்லுநர்கள் மிகவும் சுறுசுறுப்புடன் செயல்படுகிறார்கள்.

சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சிங்கப்பூரைச் சேர்ந்த 'கிம் டா ஹோல்டிங்ஸ்' என்ற நிறுவனம் 6,000 வீடுகளைக் கட்டி வருகிறது. தமிழ்நாட்டில் இதுபோன்று புதிய முதலீடுகளை சிங்கப்பூரைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் செய்து வருகிறார்கள். இந்த முதலீடு இன்னும் பெரிய அளவில் தொடரும்.

ஒருங்கிணைந்த பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம் இந்தியாவுக்கும், சிங்கப்பூருக்கும் இடையே இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1–ஆம் தேதி ஏற்பட்டது. இது தொழில் முதலீட்டுக்கு மேலும் வசதியாக இருந்தது.

ஆசியாவில் இன்று நிலவும் தகவல் தொழில்நுட்பச் சந்தையில் முதல் 3 இடங்களில் இந்தியாவும் அதன் மாநிலங்களும் ஒன்றாகத் திகழ்கிறது. கணினி மென்பொருள் ஏற்றுமதி 2004–2005ஆம் ஆண்டில் ரூ.77,300 கோடியாக உள்ளது. இது 33 சதவிகித வளர்ச்சியாகும். மெக்கன்சி அறிக்கையின்படி, 2008ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து கணினி மென்பொருள் ஏற்றுமதி 57 மில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும் என்றும், 40 இலட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடும் போட்டி நிலவியபோதிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியா வழிகாட்டியாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மென்பொருள் ஏற்றுமதி செய்வதில் தமிழகம் முன்னணிக்குச் சென்று கொண்டிருக்கிறது. 2000–2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து மென்பொருள் ஏற்றுமதி ரூ.3,115 கோடியாக இருந்தது. இது 2004–2005ஆம் ஆண்டில் மூன்று மடங்காக உயர்ந்தது. அதாவது, 10,703 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி ஆகியுள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி இது ஒரு மகிழ்ச்சியைத் தந்தாலும், இன்னும் விரைவாக வளர்ச்சி இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவேன்.

தகவல் தொழில்நுட்பத் துறை தமிழகத்தின் பொருளாதாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்று தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் இந்தியாவின் கிழக்கு வாயிலாகத் திகழ்கிறது. அதுமட்டுமின்றி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவையில் தமிழகம் மிகவும் வலிமை வாய்ந்ததாக உலக அளவில் சிறந்ததாக உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில், 210 பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளன.

உலக வங்கியின் கிளை சென்னையில் அமைந்துள்ளது. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் மையமாகவும் சென்னை நகரம் திகழ்கிறது. ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி, சிட்டி பாங்க், ஏ.பி.என்.அம்ரோ வங்கி போன்றவை இங்கு இயங்குகின்றன.

சராசரியாக இங்கு ஒவ்வொரு மூன்று நாளுக்கும் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வந்த வண்ணம் உள்ளன. இத்தகைய வளர்ச்சிக்கு 2002ஆம் ஆண்டு நான் தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை வெளியிட்டதே காரணமாக – அடித்தளமாக இருந்தது. இந்த ஆண்டு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைக்கான கொள்கை ஒன்றையும் நான் வெளியிட்டேன்.

மின்னணு நிருவாகத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மின்னணு நிருவாகத்தில் தகவல் தொழில்நுட்பம் தான் முக்கியக் கருவியாக உள்ளது. எல்லாத் தடைகளையும் கடந்து செல்ல விநாயகருக்கு எலி (மவுஸ்) வாகனமாக இருந்தது. அதுபோல மின்னணு நிருவாகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் 'மவுஸ்' முக்கியமாக உள்ளது.

தொழில் முதலீட்டாளர்களுக்கு தமிழகம், தேர்ந்தெடுக்கும் சிறந்த இடமாக உருவாகியுள்ளது. பல்வேறு ஆய்வு அறிக்கைகளும் தமிழ்நாடுதான் தொழில் முதலீடு செய்ய உகந்த மாநிலமாக விளங்குகிறது என்று கூறுகின்றன. எனவே, வெளிநாட்டு முதலீடுகள் பெரிய அளவில் இங்கு வருவதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடும் ஒன்றாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நம்பிக்கை வைத்து தொழில் துவங்க வாருங்கள் என்று இந்த நேரத்தில் நான் அழைப்பு விடுக்கிறேன். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்துத் துறையிலும் முதன்மை மாநிலமாக்க திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறேன்.

அதில் நீங்களும் பங்கு கொள்ள வேண்டும். இங்கு அனைத்து வாய்ப்புகளும், வசதிகளும் உள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,
பன்னாட்டுத் தொழில்நுட்பப் பூங்காவின்
முதல் பகுதியினைத் திறந்துவைத்து
14–9–2005 அன்று ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.



# போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நிலுவைத்தொகை வழங்கும் பணியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொடர்ந்து உயர்த்தப்பட்ட டீசல் விலை உயர்வு போன்ற கடுமையான இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ள போதும், போக்குவரத்துத் தொழிலாளர்கள் நலன் பேணப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் மாபெரும் ஊதிய உயர்வுகளையும், இதரச் சலுகைகளையும், 30.8.2005 அன்று வெளியிட்டார்கள். இதனை அனைத்துப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களும் முழு மனதுடனும், மிக்க மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொண்டனர்.

இதன்படி, ஒப்பந்தம் ஏற்பட்ட இடைப்பட்ட காலத்திற்கு சிறப்புத் தொகையாக மொத்தம் 26.75 கோடி ரூபாய் செலவில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் மொத்தம் 2,400 ரூபாய் வழங்கவும், 31.8.2003 நாளைய நிலவரப்படி இருந்த 515 மாறுபடும் அகவிலைப் புள்ளிகளை இணைத்தும், அன்றைய அடிப்படைச் சம்பளத்தில் 9 சதவிகிதம் உயர்வு அளித்தும் புதிய ஊதிய விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கவும் வகை செய்யப்பட்டது. இதன்படி, சென்னை மாநகரில் பணிபுரியும் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் 686 ரூபாயும், அதிகபட்சம் 1,420 ரூபாயும், மாவட்டத் தலைநகரங்களில் பணிபுரிவோர் குறைந்தபட்சமாக 640 ரூபாயும், அதிகபட்சமாக 1,293 ரூபாயும், இதர இடங்களில் பணிபுரிவோர் குறைந்தபட்சம் 600 ரூபாயும், அதிகபட்சமாக 1,220 ரூபாயும் ஊதிய உயர்வு பெற்றிட வழி வகுக்கப்பட்டது. இதன்படி, ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 140 கோடி ரூபாய் செலவில் இந்த ஊதிய உயர்வுகளையும், சலுகைகளையும் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, 31.8.2005 அன்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 14 தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், போக்குவரத்துக் கழகங்களும் முழு மனதுடன் இந்தப் புதிய ஊதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை ஏற்படுத்தினார்கள்.

இந்தப் புதிய ஒப்பந்தத்தின்படி, இடைக்கால நிவாரணமாக மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை ரூபாய் 6,000 நீங்கலாக, குறைந்தபட்ச நிலுவைத் தொகையாக 12,936 ரூபாயும், அதிகபட்ச நிலுவைத் தொகையாக 29,155 ரூபாயும் வழங்கப்படுகிறது. அதேபோல், இதர போக்குவரத்துக் கழகங்களில் குறைந்தபட்ச நிலுவைத் தொகையாக 10,904 ரூபாயும், அதிகபட்ச நிலுவைத் தொகையாக 28,778 ரூபாயும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தப் புதிய ஒப்பந்தத்தின் பலனாகக் கிடைக்கும் நிலுவைத் தொகையை மாநகர் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 5 பேர்களுக்கும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் 5 பேர்களுக்கும் நேரில் வழங்கி போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எம்.ராஜு, பி. ராஜேந்திரன், எஸ். பழனி, கே. சம்பத், வி. பாண்டுரங்கன், மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எஸ். ராஜேந்திரன், கே. முனுசாமி, எஸ்.ஜெகன், ஆர். அப்பாத்துரை, டி. பன்னீர் செல்வம் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நிலுவைத் தொகையை வழங்கி தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழகம் முழுவதும் உள்ள போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 31.8.2005 வரையிலான நிலுவைத் தொகை மொத்தம் 216 கோடி ரூபாயாகும். இந்தத் தொகையை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களையும் சேர்ந்த 1,11,475 தொழிலாளர்கள் பெறுவார்கள். இந்தத் தொகை அடுத்த மூன்று நாட்களுக்குள் முழுவதுமாகப் பட்டுவாடா செய்து முடிக்கப்படும்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. சித. மெய்யப்பன் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. கே. சந்திரசேகரன் ஆகியோர் உடனிருந்தனர். ◆



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 134–ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு 5–9–2005 அன்று,மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# 7.25 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.645 கோடி கடன் நிவாரணத் தொகுப்புதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 16.9.2005

அடுத்தடுத்து மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியால் ஒட்டுமொத்தப் பண்ணைத் துறையும் பாதிக்கப்பட்ட நிலையில், உற்ற நேரத்தில் விவசாயிகளுக்கு உதவிக் கரம் நீட்டி, அவர்களைப் பாதுகாத்திட பல்வேறு தொடர்ச்சியான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். விவசாயிகளிடையே நம்பிக்கை உணர்வையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காக, பல கடன் நிவாரணத் தொகுப்பு உதவிகளை என்னுடைய அரசு வழங்கியது.

2001ஆம் ஆண்டில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், உடனடியாக, 30.6.2000 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக இருந்த அனைத்துப் பயிர்க் கடன்கள் மீதான வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டேன். இதற்காக, நான் 310.51 கோடி ரூபாய் அனுமதித்தேன். இதனைத் தொடர்ந்து, சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து பெற்ற பயிர்க்கடன் மீதான வட்டி 61.05 கோடி ரூபாய், 2002–2003ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. இதே போன்று, அனைத்து விவசாயிகளும் பெற்றிருந்த குறுகிய காலக் கடன்கள் மீதான 62 கோடி ரூபாய் அளவுக்கான வட்டியும் 2003–2004ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. முந்தைய அரசால் செலுத்தப்படாமல் விடுபட்டிருந்த கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் வட்டி ஊக்குவிப்புத் திட்டம் வகையிலான 34.24 கோடி ரூபாயையும் என்னுடைய அரசு ஈடுசெய்தது.

இந்தப் பருவத்தில் எல்லா நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிகின்றன. தென்மேற்குப் பருவ மழையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இந்த ஆண்டு தங்களுக்கு ஒரு அமோக விளைச்சல் ஆண்டாக இருக்குமென்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே காணப்படுகிறது. என்னுடைய அரசு அளித்து வரும் உதவியின் பயனாக, இந்த ஆண்டு விளைச்சல், சாதனை அளவை எட்டும் என்ற உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், எதிர்காலத்திலும் தங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் கூடுதல் கடன் நிவாரணத் தொகுப்பு உதவி வழங்குவது குறித்து எனது அரசு பரிசீலிக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள் நம்பிக்கையோடு முன்னேறிச் செல்ல ஏதுவாக அவர்களுக்குப் போதிய கடன் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று நான் எப்போதுமே உறுதிபடக் கூறி வந்துள்ளேன். 2005 ஜூன் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், தமிழக விவசாயிகளின் சார்பாக இந்தக் கோரிக்கையை நான் வைத்தேன். மிக அண்மையில் கூட, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், கூட்டுறவு நிறுவனங்கள் மறு சீரமைக்கப் படுவதோடு, விவசாயிகளுக்கும் பொருளார்ந்த கடன் நிவாரணத் தொகுப்புதவி வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும் என்று எனது அரசு வலியுறுத்தியது. துரதிருஷ்டவசமாக, அத்தகைய நிவாரண உதவி எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதுகாறும் வறட்சியால் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்து கொள்ளும் ஆர்வத்தோடு விவசாயிகள் சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்ற இப்பருவத்தில், அவர்களுக்குப் பொருளார்ந்த கடன் நிவாரணத் தொகுப்புதவி வழங்க வேண்டியது அவசியம் ஆகிறது. இதனால், அவர்கள் நம்பிக்கையோடு விவசாயப் பணிகளை மேற்கொள்ள இயலும். மேலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி உதவிகள் வழங்கி, அவற்றுக்குப் புத்துணர்வூட்ட வேண்டியதும் அவசியம் ஆகிறது.

இந்த அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து குறுகிய காலப் பயிர்க் கடன் பெற்றுள்ள தமிழக விவசாயிகளின் பயனுக்காக, புதிய விரிவான கடன் நிவாரணத் தொகுப்புதவி ஒன்றை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அத்தகைய கடன் பெற்றுள்ள அனைத்து விவசாயிகளுக்கும், பெரிய அளவில் நிவாரணம் வழங்குவதற்காக, என்னுடைய அரசு இந்தக் கடன் நிவாரணத் தொகுப்புதவியை அளிக்க முன்வந்துள்ளது. தொடர்ந்து நிலவிய வறட்சியை முன்னிட்டு, என்னுடைய அரசு கொண்டு வந்த 31.3.2004 அன்றைய நிலவரப்படியான கடன் தவணையைத் திருத்தி அமைக்கும் வசதியால், விவசாயிகள் பெரும் அளவில் பயன் அடைந்துள்ளனர். 31.3.2004 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக இருந்த அசல் மற்றும் வட்டித் தவணைகளை விவசாயிகள் இரண்டு ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டியதில்லை; அதற்குப் பிறகு 31–3–2004 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக இருந்த அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகையை 2006–2007ஆம் ஆண்டில் இருந்து தொடங்கி, மூன்று ஆண்டுத் தவணைகளில் செலுத்த வேண்டும் என்று வகை செய்கிற கடன் தவணைத் திருத்தியமைப்பு சலுகையைப் பெரும்பாலான விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். 31.3.2004 அன்றைய நிலவரப்படியான திரண்ட வட்டி மட்டும் 402 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திரண்ட வட்டிச் சுமையில் இருந்து விவசாயிகளுக்கு ஒரே தடவையில் நிவாரணம் அளிக்க வேண்டுமென நான் முடிவு செய்துள்ளேன். இதன்படி, 31.3.2004 அன்றைய நிலவரப்படியான திரண்ட வட்டி 402 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டுள்ளேன். விவசாயிகளுக்குப் பெரிய அளவிலானதொரு கடன் நிவாரணமாக இது அமையும். 31.3.2004 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக இருந்த அசல் தொகைக்கு 30.6.2006 வரை சேர்ந்து வரும் வட்டியையும் தள்ளுபடி செய்வதென நான் முடிவு செய்துள்ளேன். இதனால், விவசாயிகள் 31.3.2004–க்குப் பிந்தைய கால அளவில் 243 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதல் நிவாரணம் பெறுவர். இவ்வாறாக, இந்தக் கடன் நிவாரணத் தொகுப்பு உதவியால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் மொத்த நிவாரணம் 645 கோடி ரூபாய் ஆகும். பெரிய அளவிலான இந்தக் கடன் நிவாரண நடவடிக்கையால், 7.25 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவர் என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தொகையை கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு அரசு ஈடுசெய்யும். இத்தொகையை அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து சம தவணைகளில் வழங்கும். போதிய நிதியின்மையால் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் கடன் வழங்கு பணிகள் பாதிக்கப்படாமல் இருப்பது இதனால் உறுதி செய்யப்படும்.

முன் எப்போதும் இல்லாத அளவிலான இந்த மாபெரும் தொகுப்புதவியை தமிழக விவசாயிகள் மகிழ்வோடு வரவேற்று, நடப்பு வேளாண்மைப் பருவத்தில் புதிய நம்பிக்கையோடும், உத்வேகத்தோடும் பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று நான் திடமாக நம்புகிறேன்.

□ □ □



# முதல் துணை மதிப்பீடுகள் 2005 - 2006

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. **சி. பொன்னையன்** அவர்கள்,
2005–2006ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை,
சட்டமன்றப் பேரவை முன் வைத்து,
2005–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23ஆம் நாளன்று ஆற்றிய உரை.



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2005–2006ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை, இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1919.25 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 1374.62 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 544.63 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2005ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2005–2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்பு களுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களைச் சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடுசெய்யப்படும்.

3. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் அனைத்துப் பள்ளிகளிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் ஏனைய வகுப்பினைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் ரூபாய் 80 கோடி செலவில், இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இச்செலவுத் தொகையானது 'மானியக் கோரிக்கை எண். 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை', 'மானியக் கோரிக்கை எண்.9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை' மற்றும் 'மானியக் கோரிக்கை எண்.41 –

பள்ளிக் கல்வித் துறை' என்பவற்றின் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித் திருப்பதைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவித் தொகையாக ரூ.200 கோடி கூடுதலாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண்.12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கரும்பாலைகளுக்கு கரும்பை வழங்கும் விவசாயிகளுக்கு ஆதாயம் தரத்தக்க விலை கிடைக்கச் செய்யும் நோக்குடன், கரும்பிற்கு, மெட்ரிக் டன் ஒன்றுக்கு, மாநில அரசின் பரிந்துரை விலையை ரூபாய் 1,014/– ஆக நிர்ணயம் செய்யவும், 9 சதவிகிதம் என்ற சராசரி சர்க்கரை கட்டுமானத்தைவிட அதிகமாக இருக்கும் ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கும், மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூபாய் 8.80/– ஊக்கத் தொகை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக ரூபாய் 75.27 கோடி 'மானியக் கோரிக்கை எண். 26 – தொழில் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

6. ரூபாய் 400.80கோடி மொத்தச் செலவில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசு, மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், ரூபாய் 75 கோடி மானியம் அனுமதித்துள்ளது. இத்தொகை,'மானியக் கோரிக்கை எண்.33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதை உறுதி செய்வதற்காக, 'மானியக் கோரிக்கை எண்.35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 250 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

8. ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்துவதற்கு அரசு, கூடுதலாக ரூபாய் 400 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண்.40 – ஊரக வளர்ச்சித் துறை' என்பதன் கீழ் ரூபாய் 115 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு, முதற்கண் ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண்.41 – பள்ளிக் கல்வித் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 23.52 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் பயனுக்காக சிறு தேயிலை பயிரிடுவோர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு, ரூபாய் 28 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 20 கோடி வழங்கப்பட்டுள்ளது. 'மானியக் கோரிக்கை எண்.42 – சிறு தொழில்கள் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ஒட்டுமொத்தத் தொகை ரூபாய் 28 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகை விலையிலான பேருந்துப் பயணச் சீட்டுகளை வழங்குவதற்காக மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு கூடுதல் உதவித் தொகையாக ரூபாய் 108 கோடி, 'மானியக் கோரிக்கை எண்.46 – போக்குவரத்துத் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன், தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு கல்வி நிதியுதவி, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், உறுப்பினர்கள் இறந்துபோகும் நேர்வில் நிவாரணம் அளித்தல் மற்றும் அவர்களின் ஈமச் சடங்குகளுக்கான செலவுகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு நிதிஉதவி அளிக்கப்படும். உரிய மானியக் கோரிக்கைகளில் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 100 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம். ❖



# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் மேலும் 122 கோடி ரூபாய் செலவில் 210 புதிய தொழிற்சாலைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு




"புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கண்காட்சி மற்றும் கருத்தரங்குத் தொடக்க விழா" – "கிண்டி தொழிற்பேட்டை ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட அடிக்கல் நாட்டு விழா" ஆகிய இரட்டை விழாக்களில் கலந்து கொண்டு, உங்கள் முன் உரையாற்றுகின்ற வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் இரட்டை மகிழ்ச்சி அடைகிறேன்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்

என்பார்கள். இது, உழவுத் தொழிலே ஒரு பெருந் தொழிலாக இருந்த காலத்தில் உருவாகி உலவிய வாசகம்.

இப்போது, நாம் இன்னும் ஒரு வாசகத்தையும் அதனுடன் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

தொழில் உயரப் பொருள் உயரும்!
பொருள் உயர வளம் உயரும்!
வளம் உயர வாழ்வுயரும்!

என்பது தான் இன்று நாம் மேலும் முழக்கம் இட வேண்டிய வாசகம் ஆகும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!' என்றார் பாரதியார். நாம் இதற்கு ஒரு படி மேலே சென்று, உழவையும், தொழிலையும் இணைத்து வேளாண்சார் தொழில்களை உருவாக்கி இருக்கிறோம்.

நகர்ப்புறங்களுக்கு இணையாக ஊரகப் பகுதிகள் வளர்ச்சி அடைய வேண்டும்; ஊரகப் பகுதி மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பது எனது எண்ணம். ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த சிறுதொழில்கள் தொடங்கப்பட வேண்டும்; அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களின் மதிப்பு கூட்டப்பட வேண்டும்; ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

இந்த இலட்சியத்தை அடைய 2002ஆம் ஆண்டு நான் உருவாக்கிய உன்னதத் திட்டம் தான் – புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் குறைந்தது ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் குறைந்தபட்சம்



(5)

ஒரு வேளாண்சார் தொழிற்சாலையேனும் அமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எனது அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் 15 இலட்சம் ரூபாய் வரையிலான முதலீட்டு மானியம்; மூன்று ஆண்டுகளுக்கு மின்கட்டண மானியம்; மின்னாக்கி மானியம்; 50 சதவிகிதத்திற்கு மேல் பெண்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் தொழிலகங்களுக்கு 5 சதவிகிதம் கூடுதல் முதலீட்டு மானியம் என்று பல்வேறு மானியங்களை எனது அரசு வழங்கி வருகிறது. மேலும், சிறு தொழில் தொடங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்தல்; நிபுணர்களின் ஆலோசனை முதலானவற்றுக்காக ஆகும் செலவினத் தொகையை ஈடுசெய்ய ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

இவ்வாறு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தொழில்கள் தொடங்கிடத் தொழில் முனைவோருக்கு எனது அரசு எல்லா வகையிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதால், இத்திட்டத்தின் கீழ், இதுவரை 189.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 290 தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன என்பதையும், இந்தத் தொழில் நிறுவனங்களில் ஊரகப் பகுதிகளைச் சார்ந்த 10,867 பேர்களுக்கு ஆண்டு முழுவதற்குமான நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது என்பதையும், மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் 35 தொழில் நிறுவனங்களை முழுக்க முழுக்கப் பெண்களே நிர்வகித்து நடத்தி வருகிறார்கள் என்பதையும், வேலைவாய்ப்புப் பெற்றுள்ளோரில் 7,470 பேர் மகளிர் என்பதையும், மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 210 தொழிலகங்கள் விரைவில் தொடங்கிடும் வகையில் செயலாக்க நிலையில் உள்ளன என்பதையும், 122.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட உள்ளன என்பதையும், மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 177 தகுதியுடைய விண்ணப்பங்கள் நிதி நிறுவனங்களிடம் கடன் பெற வேண்டி நிலுவையில் உள்ளன. அவற்றிற்கான கடன் தொகையை உடன் வழங்குமாறு இந்தத் தருணத்தில் நான் நிதி நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், என்னென்ன வகையான வேளாண் பயிர்களையும், பொருட்களையும், கடல் வாழ் உயிரினங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன; அதன்மூலம் எத்தகையதோர் வெற்றியை தொழில் முனைவோர் பெற்றுள்ளனர் என்பதை அறியும் போது, உண்மையிலேயே அது நமக்குப் பிரமிப்பை ஏற்படுத்துகிறது. பிரமிப்பை ஊட்டுகிறது. தென்னை, பழங்கள், காய்கறிகள், பல்வகை உணவுப் பொருட்கள், தானிய வகைகள், மூலிகைச் செடிகள் போன்ற வேளாண் பயிர்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், கடற் பகுதிகளில் இறால், நண்டு, சிப்பி வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் போன்ற தொழில்களும்; மலைப் பகுதிகளில் மூலிகைப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் தயாரிப்பு, காளான் வளர்ப்பு, கொய் மலர்கள் வளர்ப்பு போன்ற தொழில்களும் தொடங்கப்பட்டுள்ளன.

வேளாண் விளைபொருட்களில் பயனற்றவை என்று கழித்துக் கட்டப்படுகின்ற பொருட்களை அடிப்படையாகக் கொண்டும் புதிய தொழில் தொடங்கலாம்; அதன் மூலம் கணிசமாக இலாபம் ஈட்டலாம் என்று புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டு இருக்கிறது. தென்னை நார் பிரிக்கும் போது அந்த நார்த் துகள்கள் கீழே கொட்டும். இந்த நார்த் துகள்கள் இதுவரை எதற்குமே பயன்பட்டது இல்லை. ஆனால், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தென்னை நார்த் துகள்களைச் சுத்தப்படுத்திக் கட்டிகளாக மாற்றி ஏற்றுமதி செய்யும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. 2004–2005ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புடைய தென்னை நார்த் துகள் கட்டிகள், அதாவது Coir pith blocks ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பதை அறியும் போது நமது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

இரயில் பாதையின் இருமருங்கும் புதர் போல மண்டிக் கிடக்கும் சோற்றுக் கற்றாழைச் செடியை நாம் அறிவோம். யாருக்கும் பயனற்று வீணில் வளர்ந்து கிடப்பதாக மக்கள் எண்ணிக்கொண்டிருந்த சோற்றுக் கற்றாழையில் இருந்து எடுக்கப்படும் கூழ்மருந்துமற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பதற்கு அடிப்படை மூலப் பொருளாக அமைவதை அறிந்து இத்திட்டத்தின் கீழ், சோற்றுக் கற்றாழைக் கூழ் தயாரிக்கும் தொழிலகங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் இன்று பிரமிக்கத்தக்க அளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள், கண்ணாடித் தொழிற்சாலைகள், துணிநூல் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழிற்சாலைகள் எனப் பெருந் தொழிற்சாலைகளோடு, சிறுதொழில்களும், குறுந்தொழில்களும் பல்கிப் பெருகி உள்ளன. இதற்கெல்லாம் அடிப்படை, எனது அரசு எடுத்த பல்வேறு கொள்கை முடிவுகள் தான் என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் சிறுதொழில்களுக்குக் காலங்காலமாகக் கொடுக்கப்பட்டு வந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமை, முந்தைய ஆட்சியில், அதாவது 1997ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது. இதனால், சிறுதொழில்களின் வளர்ச்சி பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. எனது அரசு பொறுப்பேற்றதும், தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்கு விலை மற்றும் கொள்முதலில் முன்னுரிமையை மீண்டும் வழங்கும் வகையில், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் திருத்தப்பட்டது. சிறு தொழில்களுக்கு வருடாந்தர மின் பயனீட்டு அளவு வைப்புத் தொகை உயர்த்துவதற்கு வெளியிடப்பட்ட ஆணையையும் எனது அரசு ரத்து செய்தது. சிறு தொழிலகங்கள் அமைக்க மேற்கொள்ள வேண்டிய முதற்கட்ட நடவடிக்கையான, தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்களை எவ்விதச் சிரமமும் [illegible] இணையதளம் வழியாகவே பெறும் முறையை 2002ஆம் ஆண்டில் நான் அறிமுகப்படுத்தினேன். இதன்படி, இவ்வாண்டு ஜூலைத் திங்கள் வரை 84,853 தொழில் முனைவோர் இணையதளம் வாயிலாகத் தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவிப்பதில் அகமிக மகிழ்கிறேன். சொந்த இடம், வாடகை இடம் அல்லது குத்தகை என தாங்கள் சிறு தொழில் நடத்துகின்ற இடம் எதுவாக இருந்தாலும், அங்கு 10 குதிரை சக்தித் திறனுக்கு மிகாமல் மின் இணைப்பு பெற்று நடத்துகின்ற சிறுதொழிலுக்குச் சிறப்புச் சலுகை அளித்து, அவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு 500 யூனிட்டுகள் வரை யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 80 காசு என்றும்; அதற்கு மேல் 1500 யூனிட்டுகள் வரை யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 70 காசு என்றும்; சலுகை மின் கட்டணம் வசூலிக்க ஆணையிட்டுள்ளேன். சிறு தொழில் முனைவோர் தங்களது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கும் சிறப்பாக ஏற்றுமதி செய்து தங்களது சந்தை வாய்ப்பை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் ஏற்றுமதி வழிகாட்டி மையம் அமைக்கப்பட்டுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**கிண்டி தொழிற்பேட்டை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் திட்டம்**

கிண்டியில் அமைந்துள்ள தொழிற்பேட்டை இந்தியாவிலேயே முதலாவதாக அமைக்கப்பட்டது என்ற பெருமை கொண்டது. 1956ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிண்டி தொழிற்பேட்டை, 400 ஏக்கர் பரப்பளவில் சிறியதும் பெரியதுமான 710 தொழிற்கூடங்களைத் தன்னகத்தே கொண்டு, 50,000 பேர்களுக்கு மேலாக வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இந்தத் தொழிற்பேட்டையில், சாலைகள், மின் விளக்குகள், மழை நீர் வடிகால்கள், பாலங்கள், கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் ஆகியவை கடந்த 50 ஆண்டு காலமாகச் சரியான பராமரிப்பு இன்றி மிகவும் பழுதுபட்டுக் கிடக்கின்றன. இந்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை முற்றிலுமாக மேம்படுத்தி, கிண்டி தொழிற்பேட்டைக்கு ஒரு புதிய பொலிவு ஏற்படுத்த வேண்டும்; அதற்கு ஒரு புத்துருவை வழங்க வேண்டும் என்று நான் மிகவும் விரும்பினேன். எனது இந்த எண்ணத்தைச் செயல்படுத்தும் வகையில், 10.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் தனியாருடன் இணைந்து கிண்டி தொழிற்பேட்டையில் செயல்படுத்த உள்ள ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த எனது அரசு அளிக்கும் 2 கோடி ரூபாய்; மைய அரசு வழங்கும் 2 கோடி ரூபாய்; இத்தொழிற்பேட்டையில் தொழிலகங்கள் அமைத்துள்ள தனியார் பங்களிப்பாக 2.70 கோடி ரூபாய்; சென்னை மாநகராட்சியின் பராமரிப்பு பங்களிப்பாக 1.20 கோடி ரூபாய் மற்றும் மீதமுள்ள தொகைக்கு வங்கிக் கடன் உதவி என்று மொத்தம் 10.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிண்டி தொழிற்பேட்டை அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கைத் துவக்கி வைத்துள்ள இந்த இனிய நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய வாசகம் ஒன்று எனது நினைவுக்கு வருகிறது.

"Only the industries built on the foundation of a strong agricultural economy will have true vitality and strength. Let us not forget that agriculture itself is an industry" என்றார் அண்ணா.

அதாவது –

"வலிமையான வேளாண்மைப் பொருளாதாரத்தின் மீது அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் தான் உயிர்த் துடிப்பும் வலிமையும் கொண்டவையாக இருக்கும். வேளாண்மையே ஒரு தொழில் தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

வேளாண் தொழிலை வளர்க்கவும், வேளாண்சார் தொழில்களை ஏற்படுத்தவும் எனது அரசு, எடுத்துவரும் நடவடிக்கைகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய தத்துவத்தின் செயலாக்கங்கள் என்பதை மகிழ்ச்சியுடன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் முனைவோர், திறன்மிகு முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு ஒரு வார்த்தை; தொடங்குகின்ற தொழிலை முழு நம்பிக்கையோடும், உறுதியோடும் தொடங்குங்கள்!

'அசைக்க முடியாத பொறுமையுடன் தொழில் செய்தால் அது உன்னத வெற்றியைப் பெறும்' என்னும் மகாகவி பாரதியாரின் மந்திரச் சொற்களை உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

எனது அரசின் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; முன்னேறுங்கள்; நாட்டின் பொருளாதார முன்னேற்றப் பணிகளில், குறிப்பாகக் கிராமப் பொருளாதார முன்னேற்றப் பணிகளில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுதொழில் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி! சிறுதொழில் வளர்ச்சியே ஊரக சமூகப் பொருளாதார வளர்ச்சி! சிறுதொழில் வளர்ச்சியே வேலைவாய்ப்புகளை உருவாக்கும் உன்னத வழி! எனத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

13.9.2005 அன்று, சென்னை நந்தம்பாக்கம்,
சென்னை வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற
புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டக்
கண்காட்சித் திறப்பு விழா மற்றும் கிண்டி
தொழிற்பேட்டை ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு
மேம்பாட்டுத் திட்ட அடிக்கல் நாட்டுவிழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

## மேனிலைக் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மேனிலைக் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக 2001–2002ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து, 2004–2005ஆம் ஆண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவசமாக மிதி வண்டிகள் வழங்கிடும் திட்டத்தை 28.1.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுவதைப் போல தங்களுக்கும் கல்வி கற்பதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பள்ளிகளுக்குச் சென்று வர இலவச மிதிவண்டிகள் வழங்க வேண்டும் என்ற மாணவர்களின் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை நீட்டித்து உத்தரவிட்டார்கள். மேலும், அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இப்பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகள் ஆகியவற்றில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பயிலும் சமுதாயத்தின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேனிலைக் கல்வி பயிலும் மாணவிகளுக்கு வழங்கப்படுவதைப் போலவே, மாணவர்களுக்கும் இலவச மிதி வண்டிகள் வழங்கிடும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தை 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகளை நேரில் வழங்கித் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.மா. வேலுசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சொ.கருப்பசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் திரு. ந. நாராயணன்,இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. அ. நாகராஜன்,இ.ஆ.ப., பள்ளிகல்வித் துறைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் திரு. கே.தீனபந்து,இ.ஆ.ப., மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைச்சிறப்பு ஆணையர் திரு. மா. தேவராஜ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் திரு. ஏ.தசரதன்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர் (பொறுப்பு) திரு. ஜெ.மா. பாலமுருகன்,இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖





# மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றித் தருவதை எனது அரசு தலையாய கடமையாகக் கொண்டுள்ளது

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

என் அன்புக்குரிய தஞ்சைத் தரணியின் தங்கம் நிகர் மக்களாகிய உங்களைக் காணவும், உங்களுடன் ஒரு சில கருத்துகளைப் பரிமாறவும்; நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைக்கவும்; புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும்; நலத் திட்ட உதவிகளை நலிந்தோர்க்கு வழங்கவும்; இன்று கிடைத்திருக்கும் இந்த இனிய வாய்ப்பு குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மண் செழிக்கவும், மாநிலம் எங்கும் பொன் கொழிக்கவும், காண்பவர்கள் கண் களிக்கவும், காவிரி பொங்கிப் பூரித்துப் பாய்கின்ற புனித வேளையில் நான் தஞ்சைக்கு வந்திருக்கிறேன்.

காவிரியில் மழை வெள்ளம்! உங்கள் கண்களிலோ மகிழ்ச்சி வெள்ளம்! இந்த இரண்டு வெள்ளங்களையும் கண்டு மகிழ்கிறது உங்கள் அன்புச் சகோதரியின் உள்ளம்!

இந்த மகிழ்ச்சி வெள்ளம் நெஞ்சில் அலைமோத தஞ்சை மாவட்ட மக்கள் பயனடையும் வகையில், 74 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 2,434 பணிகளைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு வீடுகள், சாலைகள், பாலங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம நிருவாக அலுவலர் கட்டடங்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பல்நோக்குக் கட்டடங்கள்; பள்ளிக் கட்டடங்கள், பொது விநியோகக் கடைக் கட்டடங்கள், தானியக் கிடங்குகள், குடிநீர்த் திட்டப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள் முதலானவற்றைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில், 197 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட உள்ள 4,622 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் உள்ளம் மிக மகிழ்கிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கான புதிய கட்டடங்கள்; நகரப் பேருந்து நிலையம், தொகுப்பு வீடுகள், பாலங்கள், சாலைகள், அங்கன்வாடிக் கட்டடங்கள், மாணவ – மாணவியர் விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், குடிநீர்த் திட்டப் பணிகள், மின் மாற்றிகள், மீன் குட்டைகள் அமைத்தல் போன்றவற்றிற்கு அடிக்கல் நாட்டியதில் நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

'பெருமழை பொழிந்தால்தான் காவிரி நீர் தமிழகத்திற்கு' என்னும் நிலை கர்நாடகத்தால் பல்லாண்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளது.

இயற்கை அன்னையின் கருணையால் காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நல்ல முறையில் மழை பெய்ததன்



விளைவாக, கர்நாடக அரசு. தனது அணைகளில் முழுமையாகத் தண்ணீரைத் தேக்கிக் கொண்டு, அதற்கு மேல் கிடைத்த உபரி நீரை 'வெகு தாராள மனதுடன்' தமிழகத்திற்கு அனுப்பியுள்ளது.

காவிரியில் இன்று தண்ணீர் இருகரை தொட்டு நிறைவாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதன் கிளை நதிகள், உப நதிகள் தொடங்கி நெடு வயல்களை அடைகின்ற வாய்க்கால்கள் வரை தண்ணீர் நிறைவாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிறைவு உறுதிப்படுத்தப்பட்ட நிறைவா என்றால் – இல்லை.

பெருமழை பெய்யாத காலங்களிலும், தஞ்சைத் தரணியில் இன்றுள்ள நிறைவு இருக்க வேண்டும்; காவிரியில் நமக்குள்ள சட்டப்படியான உரிமையை நிலைநிறுத்தி நமக்குரிய நியாயமான பங்கைப் பெறுவதை உறுதி செய்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெருமுயற்சியால் ஏற்படுத்தப்பட்ட, காவிரி நடுவர் மன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பு அமல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, எனது முந்தைய ஆட்சிக் காலத்திலும் சரி, இப்போதைய ஆட்சியிலும் சரி தொய்வில்லாத நடவடிக்கைகளை நான் மேற்கொண்டு வருகிறேன். காவிரியில் நமக்கு உரிய பங்கை விடுவிக்க கர்நாடக முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்தல்; காவிரியில் நமது உரிமையை நிலைநாட்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தொடர்ந்து கடிதங்கள்; நேரில் சந்தித்து முறையீடுகள்; காவிரி நதிநீர் ஆணையத்தின் மூலம் தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெரு முயற்சிகள்; தமிழகத்திற்கு உரிய நீதி வழங்க உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல் என அனைத்து நடவடிக்கைகளையும் நான் தொடர்ந்து எடுத்து வருகிறேன்.

இவ்வாறு, காவிரியில் தமிழகத்திற்குள்ள சட்டப்படியான **உரிமையை** நிலைநாட்ட உங்கள் அன்புச் சகோதரியின் அரசு என்னென்ன வாய்ப்புகள் உள்ளனவோ அத்தனை வாய்ப்புகளையும் பயன்படுத்தி; என்னென்ன வழிமுறைகள் உள்ளனவோ அத்தனை வழி முறைகளையும் கடைப்பிடித்து; நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆனால், காவிரி நீரில் நமக்குரிய நியாயமான பங்கைப் பெறுவதற்கு நான் என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதனைக் குறை கூறுவதைத் தவிர ஆக்கப்பூர்வமாக எந்தச் செயலையும் ஆற்றுகின்ற திறன் அற்றவர்கள், தாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது காவிரியில் எவ்வளவு தண்ணீர் வந்தது என்று வக்கணையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கர்நாடகம் தேக்கி வைக்க முடியாமல் திறந்து விட்ட தண்ணீரை ஏதோ தான் பெருமுயற்சி செய்து போராடிப் பெற்றதைப் போல புள்ளி விவரம் கொடுத்துப் பூரித்துப் புளகாங்கிதம் அடைகிறாரே – இதன் உண்மை நிலவரம் மக்களுக்குத் தெரியாதா என்ன ?

உண்மையில், காவிரிப் பிரச்சினை இப்படித் தீராத பிரச்சினை ஆவதற்கு அடிப்படைக் காரணமே திரு. கருணாநிதி தானே ? காவிரி தொடர்பாக, உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கை 1972ஆம் ஆண்டில் அவர் முதலமைச்சராக இருந்த போது வாபஸ் பெறாமல் இருந்திருந்தால் காவிரிப் பிரச்சினை இந்த அளவுக்குத்



தீராப் பிரச்சினை ஆகியிருக்காதே! அதன்பின், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பயனால் தானே 18 ஆண்டுகளுக்குப் பின்னர், 1990 இல் காவிரி நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனவே, மத்தியில் ஆட்சி அதிகாரம் இருந்தும் தமிழகத்திற்கு உரிய காவிரி நீர்க் கிடைத்திட எந்த ஒரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல் வீணே குறை கூறிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இப்படிப் பயனற்ற வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருக்கும் நீங்கள் மக்களின் வெறுப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறீர்கள்.

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்"



– என்ற குறளுக்குப் பொருளாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் விலங்குகளுக்கிடையே ஒரு போட்டி. செயற்கரிய செயல் செய்பவர் யார் என்பதில் போட்டி.

மூன்று மாத கால அவகாசம் தரப்பட்டது. அதற்குள் எல்லா விலங்குகளும் ஏதாவது சிறப்பு மிக்க செயலை செய்து முடித்திருக்க வேண்டும். அந்தச் செயல்களில் எது செயற்கரிய செயல் என்பதை எல்லா விலங்குகளும் கூடி முடிவு செய்யும். எந்த விலங்கு அப்படிச் செயற்கரிய செயலைச் செய்து முடித்திருக்கிறதோ அந்த விலங்குக்கு, சாதனையாளர் விருது வழங்கப்படும். இதுதான் விலங்குகளின் தீர்மானம்! உடனே எல்லா விலங்குகளும் தீவிரமாகப் போட்டியில் இறங்கின.

அந்தக் காட்டில் ஒரு கரடி இருந்தது. அது மோசமான கரடி. அடுத்தவர் எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அதற்குப் பிடிக்காது. எல்லோரையும் மட்டம் தட்டிப் பேசும் அந்தக் கரடியை யாருக்கும் பிடிக்காது. இருந்தாலும், அந்தக் காட்டிலே அது வயதிலே மூத்த பிராணி என்பதால் கரடியின் குதர்க்க புத்தியை யாரும் அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை.

இதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அகம்பாவத்தில் அந்தக் கரடி அலைந்து திரிந்தது. அந்தக் கரடி மற்ற விலங்குகள் என்ன செய்து வருகின்றன என்று போய்ப் பார்த்துவிட்டு அவற்றைக் குறை கூறிக் கொண்டே இருந்தது.

ஒரு நாள், அதன் வழியில் ஒரு எறும்பு எதிர்பட்டது. அது ஒரு விதையை முட்டி முட்டித் தள்ளிக் கொண்டு வந்தது.

"அற்ப எறும்பே, சௌக்கியமா ? அது என்ன, ஏதோ வேப்பங் கொட்டை மாதிரி இருக்கிறதே! உன்னுடைய சக்திக்கோ, நீ ஊர்ந்து கொண்டு போவதே பெரிய காரியம். இந்த இலட்சணத்தில் தள்ள முடியாமல் அந்த வேப்பங் கொட்டையைத் தள்ளிக் கொண்டு போகிறாயே, அதைக் கொண்டு போய் என்ன செய்யப் போகிறாய் ? உனக்கெல்லாம் ஏன் இந்த வீண் ஆசை ?" என்று எறும்பைப் பார்த்து அலட்சியமாய்ப் பேசியது கரடி.

எறும்பு பதில் ஏதும் கூறவில்லை; தன் பாதையிலே மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.



மூன்று மாதம் முடிந்தது. விருதுக்கு உரியவர் யார் என்று தேர்ந்தெடுக்கும் நாளும் வந்தது.

ஒவ்வொரு இடத்திலும் ஏதாவது சிறப்பான செயல் செய்யப்பட்டிருந்தது. எல்லாமே சாதனைகள்தான்! கடைசியாக எறும்பின் இடத்திற்கு விலங்குகள் வந்த போது அவற்றுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம்! ஏனென்றால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அங்கே வேப்பங் கன்றுகள் முளைத்திருந்தன. இது எவ்வாறு சாத்தியம் ஆயிற்று என்று மற்ற விலங்குகள் எறும்பை வினவின.

"நான் காட்டிலே தேடித் தேடி வேப்பங் கொட்டைகளை ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து இங்கே மண்ணில் புதைத்து வைத்தேன். மழை வந்தது. மண்ணில் புதைத்து வைத்திருந்த வேப்பங் கொட்டைகளில் இருந்து சின்னஞ்சிறு செடிகள் வெளி வந்தன. நாளடைவில் செடிகள் பெரிதாகி இப்போது எங்கு பார்த்தாலும் பசுமையாக உள்ளது" என்று எறும்பு சொன்னது.

எல்லா விலங்குகளுக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி. "இந்தச் செடிகள் எல்லாம் மரம் ஆகும். பெரிய சோலை உருவாகும். நம் காடு, மிகப் பெரிய காடாக ஆகி விடும். இதுதான் பெரிய செயல்; சிறந்த செயல்! இந்த எறும்பு தன்னுடைய உழைப்பால், உள்ளத்தின் உறுதியால் இந்தச் சாதனையைப் படைத்துள்ளது. எனவே, இந்த எறும்புக்குத் தான் சாதனையாளர் விருது தரப்பட வேண்டும்" என்று ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றின.

அந்த நேரம் பார்த்து அந்தக் கரடி அங்கே வந்தது!

"இது எல்லாம் என்ன பெரிய சாதனை? இதோ பாருங்கள் என்னுடைய சாதனையை!" என்று கூறிக் கொண்டே, கரடி அங்கே இருந்த ஒரு உயரமான மரத்தை வேகமாக அசைத்தது. இப்படி அசைத்து அசைத்தே மரத்தை வேரோடு வீழ்த்தி விட்டது.

"இப்போது சொல்லுங்கள்! எது பெரிய சாதனை? என்னுடைய சாதனையா? இந்த எறும்பின் சாதனையா?" என்று உரக்கக் கத்தியது கரடி.

வெறுப்பில் முகத்தைத் திருப்பிக் கொண்டன விலங்குகள்; பின் –

"அழிக்கும் சக்தி பெரிதல்ல; ஆக்கும் சக்தி தான் பெரிது. அதனால் எறும்பின் சாதனை தான் விருதுக்குரியது" என்று ஒருமித்த குரலில் கூறின.

அது காட்டுக் கரடி! அதைப் போல் நாட்டுக் கரடிகளும் இங்கே இருக்கத்தான் செய்கின்றன.

அந்தக் கரடி மனிதர்கள் செய்யும் கொடுமைகளை எல்லாம் முறியடிப்பதற்குக் கோடிக்கணக்கான மக்கள் எனக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை மனநிறைவோடு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறந்த மருத்துவக் கல்வியை வழங்கி, சிறப்பான மருத்துவர்களை உருவாக்கினால்தான் அரசு மருத்துவ மனைகளில் சீரிய மருத்துவ வசதிகளை அளிக்க முடியும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், மருத்துவக் கல்லூரிகளுக்கு உரிய வசதிகளை



வழங்குவதற்கு எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

வேலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட 214.22 கோடி ரூபாயும்; இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் மற்றும் அறை கலன்கள் வாங்க 49.44 கோடி ரூபாயும் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது 678 படுக்கைகள் உள்ளன. இதனை விரிவு செய்து கூடுதலாக 300 படுக்கைகள் அமைக்கும் வகையில், 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டடம் கட்ட நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 4.89 கோடி ரூபாய் செலவில் மத்திய ஆய்வகத்துடன் கூடிய புற நோயாளிகள் பிரிவு; 1.12 கோடி ரூபாய் செலவில் செவிலியர் விடுதி; 5.76 கோடி ரூபாய் செலவில் மாணவ – மாணவியர் விடுதிகள், வகுப்பறைகள் மற்றும் தேர்வு அரங்கம் ஆகியவை கட்டவும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், 9.22 கோடி ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்கவும். நூலகம் அமைத்திடவும், தேவையான அனைத்து அறைகலன்கள் வாங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களின் தேவைகள் என்ன என்று அறிந்து அவற்றை நிறைவேற்றித் தருவதை எனது அரசு தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்ட மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் சில புதிய திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள், தாங்கள் விரும்புகின்ற இடங்களுக்கு எளிதில் சென்று வர ஏதுவாகப் புதிய பேருந்து வசதிகளும், கூடுதல் பேருந்து நடைகளும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இக்கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில்;

ஒரத்தநாட்டிலிருந்து தஞ்சாவூருக்கு மருங்குளம் மற்றும் வல்லம் வழியாக ஒரு பேருந்து–

ஒரத்தநாட்டிலிருந்து மன்னார்குடிக்கு வடுவூர் மற்றும் புல்லவராயன் குடிகாடு வழியாக ஒரு பேருந்து –

திருவையாற்றில் இருந்து ஐயம்பேட்டைக்கு திருவேடக்குடி மற்றும் ஆலங்குடி வழியாக ஒரு பேருந்து –

ஒரத்தநாட்டிலிருந்து நீடாமங்கலத்திற்கு வடுவூர் வழியாக ஒரு பேருந்து –

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ஒரத்தநாட்டிற்கு, மேல உளூர், பருத்தியப்பர் கோயில், தும்பத்திக் கோட்டை மற்றும் கண்ணந்தங்குடி மேற்கு ஆகிய ஊர்களின் வழியாக ஒரு பேருந்து –

– எனப் புதிய வழித் தடங்களில் பேருந்துகள் இன்று முதல் இயக்கப்படும்.

மேலும், தஞ்சாவூரிலிருந்து திருவோணத்திற்கு, ஒரத்தநாடு வழியாக கூடுதலாக ஒரு பேருந்து இன்று முதல் இயக்கப்படும்.

2. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளைப் பாதுகாப்பாக வைத்திட, கூடுதலாக கிடங்குகள் கட்டித் தர வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, கும்பகோணம் மற்றும் பிள்ளையார்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் ஒவ்வொன்றும் 2.25 கோடி ரூபாய் மதிப்பில் 10,000 டன் நெல்லைப் பாதுகாப்பாக வைக்கும் வகையில் இரண்டு புதிய கிடங்குகள் கட்டப்படும்.

3. காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடிப் பணிகளைத் தொடங்கி உள்ளனர். இத்தருணத்தில், சாகுபடிக்குத் தேவையான கடன் வசதிகள் கிடைக்கப் பெறாதோ என்ற தேவையற்ற ஓர் அச்சத்தை ஒரு சிலர் பரப்ப முயன்று வருகின்றனர். சம்பா சாகுபடிக்குத் தேவையான கடன், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதிபடத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆட்சியினர் கடைப்பிடித்த தவறான கொள்கைகளாலும்; கடுமையான வறட்சி நிலையாலும்; தமிழகத்தில் பல மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்திருந்தன. கூட்டுறவு வங்கிகளின் இந்த நலிவினை நீக்கி, விவசாயிகளுக்கு தேவையான கடன் வழங்கும் வகையில் சிறப்பான நிதி உதவியை எனது அரசு வழங்கியது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நலிவடைந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் 217 கோடி ரூபாய் நிதி உதவி அளித்து, இந்த வங்கிகளை எல்லாம் சிறப்பாகச் செயல்பட வைத்துள்ளது எனது அரசு. இத்திட்டத்தின் கீழ், மிகவும் நலிவடைந்திருந்த தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு தலா 22 கோடி ரூபாய் சிறப்பு நிதி உதவியை எனது அரசு வழங்கியது. இந்த ஆண்டும், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 12.5 கோடி ரூபாயும்; தஞ்சை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 10 கோடி ரூபாயும்; சிறப்பு மூலதன நிதி உதவியாக எனது அரசு



வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் மீது தனி அன்பும், தனி அக்கறையும் கொண்டுள்ள எனது அரசு, விவசாயிகள் இந்தச் சம்பா சாகுபடியை நல்ல முறையில் மேற்கொள்ள தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக 25 கோடி ரூபாயும்; கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக 50 கோடி ரூபாயும்; ஆக மொத்தம், 75 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் இந்தக் கடன் உதவி பெற்று நல்ல முறையில் விவசாயப் பணிகளை மேற்கொண்டு வளம் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

4. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் காப்பீட்டுக் கழகத்திற்கு மாநில அரசு தனது பங்கு நிதியைச் செலுத்தி வருகிறது. 2004–05ஆம் ஆண்டுக்கு வேளாண் காப்பீட்டுக் கழகத்திற்கு 37.64 கோடி ரூபாய் அளவுக்குப் பயிர் இழப்பீட்டுக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. பயிர் காப்பீட்டு விதிமுறைகளின்படி, மாநில அரசு 16.47 கோடி ரூபாய் வேளாண் காப்பீட்டுக் கழகத்திற்கு உடனடியாக விடுவிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் காரணமாக 35,636 விவசாயிகள் 37.64 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பீட்டுத் தொகை பெறுவார்கள் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன் அடையும் வகையில், காவிரியில் திறந்து விடப்படும் தண்ணீர், கடைமடைப் பகுதிகளுக்குச் சென்றடைந்திட ஏதுவாக, கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியில் இந்த ஆண்டு தண்ணீர் திறப்பதற்கு முன்பே சுமார் 40 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் 31 இலட்சம் ரூபாய் செலவில் வண்டல் மண் படிவங்கள் தூர்வாரப்பட்டு, தண்ணீர் தங்கு தடையின்றிச் சென்று கொண்டிருக்கிறது. தற்போது, பாசனத்திற்காக காவிரியில் விடப்படுகின்ற தண்ணீர் முறை வைக்காமல், அதாவது Turn System இல்லாமல் திறந்து விடப்படுகிறது. கடைமடைப் பகுதிகளுக்கும் எந்த இடையூறும் இன்றி தண்ணீர் சென்றடையும் வகையில், ஜனவரி மாதத்திற்குப் பின்னர் தொடர்ச்சியாகத் தூர்வாரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. ஒரத்தநாடு வட்டம், மேல் கண்ணந்தங்குடியில் உள்ள சிங்கனேரி ஏரி, விவசாயப் பெருங்குடி மக்களின் வேண்டுகோளின்படி தூர்வாரப்பட்டு 650 மீட்டர் நீளத்திற்குக் கரை உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது, 3 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஏரியின் மீதமுள்ள 550 மீட்டர் கரையும் நல்ல முறையில் பலப்படுத்தப்பட்டு ஏரியின் மதகுகள் மற்றும் வெள்ள நீர்ப் போக்கி ஆகியவை சீரமைக்கப்படும்.

7. மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே கூமுகப்புலிக்காடு கிராமத்தின் அருகே ஒரு தடுப்பணை கட்டுவதற்காக இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதன்படி, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் நிதி உதவி பெற்று தடுப்பணை கட்டுவதற்கான பணிகள், துவக்க



நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி நான் ஆணையிட்டுள்ளேன்.

8. கரம்பக்காடு, பலிந்தவயல் மற்றும் பூசாரிக்காடு ஆகிய கிராமங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள் பாசன வசதியைப் பெருக்குவதற்காக தடுப்பணைகள் கட்டிக் கொடுக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை ஏற்று, அக்னி ஆற்றின் குறுக்கே கரம்பக்காடு, பலிந்தவயல் மற்றும் பூசாரிக்காடு ஆகிய கிராமங்களில் தடுப்பணைகள் கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும்படி நான் ஆணையிட்டுள்ளேன்.

9. பட்டுக்கோட்டை வட்டம், மங்கனக்காடு கிராமம், நசுவினி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் மங்கனக்காடு அணைக்கட்டு விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நசுவினி ஆற்றின் குறுக்கே 34.76 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1987–1988இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் ஒரு சில பணிகள் முடிந்த தருவாயில்; நில ஆர்ஜிதம் சம்பந்தமான நீதிமன்ற வழக்குகளின் காரணமாக மீதமுள்ள பணிகள் முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றி இப்பணியை உடனே முடிக்கும் வகையில் நில ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லாத வகையில் இதனை மாற்றி அமைக்குமாறு உத்தரவிட்டுள்ளேன். 99 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் விரைந்து முடிக்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. அம்புலி ஆற்றின் குறுக்கே உள்ள அடைக்கத்தேவன் அணைக்கட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது எனவும்; அதனை உடனடியாக சீரமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும்; இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஏறத்தாழ 275 மீட்டர் நீளமுள்ள இந்த அணைக்கட்டின் பழுது நீக்கப்பட்டு 2.5 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இதே போன்று பழுதடைந்த நிலையில் உள்ள அணைக்கட்டு, மதகு போன்றவற்றைச் சீர் செய்திட மொத்தம் 20 கோடி ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். 2003–04ஆம் ஆண்டில் 34 கோடி ரூபாய் செலவில் பல அணைக்கட்டுகள், மதகுகள் மற்றும் ரெகுலேட்டர்கள் சீர் செய்யப்பட்டன என்பதையும் இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

11. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 108.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1349 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 72 கோடி ரூபாய் செலவில், மேலும் 609 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 42 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 10.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மாவட்ட மக்கள் விடுத்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையில், மேலும் சில பணிகளை மேற்கொள்ள நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரிய கோட்டைக்காடு முதல் வெள்ளக்காடு வரை உள்ள 2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை –

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காடுவெட்டி விடுதி முதல் வீராலிப்பட்டி வரை உள்ள 2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை –

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ராகவாம்பாள்புரம் முதல் அரசம்பட்டு வரை உள்ள 4 கிலோ மீட்டர் நீளச் சாலை –

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சின்ன புலிக்காடு முதல் பனையக்காடு வரை உள்ள 2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை –

திருவோணம் ஒன்றியத்தில் உள்ள தெற்குக் கோட்டை முதல் அக்கரை வட்டம் வரை உள்ள 2 கிலோ மீட்டர் சாலை –

ஆகிய சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப் படுவதுடன், மகாராஜாசமுத்திரத்தில் புதிய பாலம் ஒன்றும் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வல்லம் – ஒரத்தநாடு சாலையில் வேதபுரி வாய்க்காலுக்கு குறுக்கே 24 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பாலம் ஒன்று அமைக்கப்படும்.

13. திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் 1.3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒக்கநாடு மேலையூரில் இருந்து சமையன்குடிகாடு வரை 10 கிலோ மீட்டர் சாலை மேம்படுத்தப்படுவதுடன் கண்ணன் நதியின் குறுக்கே 30 மீட்டர் நீளமுள்ள புதிய பாலம் ஒன்றும் கட்டப்படும்.

14. புதுக்கோட்டை – வல்லம் சாலையில் அமைந்துள்ள 11.4 கிலோ மீட்டர் நீளமுள்ள மருங்குளம் முதல் தென்னமநாடு சாலை 2.73 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேலைக் கண்ணந்தாங்குடி அணுகு சாலை 10 இலட்சம் ரூபாய் செலவில் சீர்செய்யப்படும்.

இப்பணிகள் அனைத்தும் மூன்று மாத காலத்தில் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15. எண்ணற்றக் கோயில்களின் இருப்பிடமாய்த் திகழ்வது தஞ்சாவூர் மாவட்டம். புனிதத் தன்மையும், கலை நுட்பமும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க இக்கோயில்களைக் காண வருகை தருகின்ற பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தித் தந்துள்ளது.

தஞ்சாவூரைச் சுற்றி நவக்கிரகங்கள் அமைந்துள்ள திருத்தலங்களுக்குச் சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் சென்று தரிசிக்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் செயல்படுத்தப்படும் நவக்கிரக சுற்றுலா மூலமும், தனியாகவும் ஏராளமானோர் இந்தத் திருத்தலங்களுக்கு வருகை தருவதால் இத் திருத்தலங்களில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் எனது அரசால் மேம்படுத்தப்பட்டது. இந்தச் சிறப்புச் சுற்றுலா மேற்கொள்ளப்படும் நவக்கிரகத் திருத்தலங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்திட, தற்போது நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும், இந்த மேம்பாட்டுப் பணிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா வழிகளிலும், எல்லாத் துறைகளிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதல் நிலையை அடைய முற்போக்குத் திட்டங்களை வகுத்து, அவற்றை முனைப்போடு செயல்படுத்தி வரும் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு உங்கள் துணைதான் உற்றத் துணையாக விளங்குகிறது.

"எண்ணங்கள் மக்களை ஒன்று சேர்க்கின்றன, ஆனால், இலட்சியங்கள் மட்டுமே அவர்களை இணைத்து வைத்திருக்கும்" என்றார் ஒரு மேல்நாட்டுச் சிந்தனையாளர்.

"Ideas bring people together, but ideals hold them together" என்பது அந்தச் சிந்தனையாளரின் வாசகம்.

மக்கள் ஆட்சித் தத்துவத்தின் மகத்துவமே இது தான்! இலட்சியங்களால் மக்களை இணைக்கும் இந்த இணையற்ற ஜனநாயகப் பணியை நான் நிகழ்த்தி வருகிறேன்.

இந்த அரியப் பணிக்கு உங்கள் அன்பும், ஆதரவும் எனக்கு என்றும் உண்டு என்பதை நானறிவேன்.

இந்த அரியப் பணிகளின் கனிகள் உங்களுக்காகவே என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, நமது இலட்சியக் கூட்டணி என்றென்றும் வெல்லும்.

எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவிலே, இன்றைய தினம் மொத்தம் 14,116 பயனாளிகளுக்கு 5 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் நானே என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும்,நேரம் போதாது என்பதால் 15 பயனாளிகளுக்கு மட்டும் உரிய உதவிகளை இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும், இப்போதே இங்கேயே உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தாங்கள் செய்கின்ற தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.வீரசண்முகமணி அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**9.9.2005 அன்று நடைபெற்ற**
**தஞ்சாவூர் மாவட்ட அரசு விழாவில்,**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
**ஆற்றிய உரை**



# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டட வளாகம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.9.2005 அன்று சென்னை நந்தனம் அண்ணா சாலையில் 8.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டட வளாகத்தினைத் திறந்து வைத்தார்கள்.



இந்த வளாகத்தின் முதல் இரண்டு தளங்களை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் – TUFIDCO – நிறுவனமும், மூன்று மற்றும் நான்காம் தளங்களை தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமும் (TN POWERFIN) சொந்தமாகப் பெற்று தங்களது அலுவலகங்களை அமைத்துள்ளன. இந்த அலுவலகங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.9.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை நந்தனம் அண்ணா சாலையில், இயற்கைப் பேரிடர்களின் போது நிலைத்து நிற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, மழை நீர் சேகரிப்பு அமைப்புகள், பூங்காக்கள், தானியங்கி மின் தூக்கிகள், தரைத் தளத்தில் வாகனம் நிறுத்த வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகளுடன், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால், மொத்தம் 27,212 சதுர அடி பரப்புடைய 4 தளங்களைக் கொண்ட புதிய அலுவலகக் கட்டட வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த அலுவலகக் கட்டட வளாகத்தில் 13.9.2005 அன்று நடைபெற்ற இனிய விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

கட்டடத்தின் முதல் இரண்டு தளங்களை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் - TUFIDCO – நிறுவனம், தனது அலுவலகத்தை அமைத்துக் கொள்ள சொந்தமாகப் பெற்றுள்ளது. ஆழ்வார்பேட்டை, டி.டி.கே. சாலையில் போதிய இடவசதியோ, அடிப்படை வசதிகளோ இல்லாமல் சுமார் 6,125 சதுர அடி பரப்பில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக அலுவலகம், இந்தப் புதிய கட்டடத்தின் முதல் மற்றும் இரண்டாம் தளத்தில், மொத்தம் 13,606 சதுர அடி பரப்பில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.9.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி, மின் பகிர்மானம் மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்கு கடன் உதவி செய்து வரும் தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TN POWER FIN) இந்தப் புதிய கட்டடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில்



தனது அலுவலகத்தை அமைத்துக் கொள்ள சொந்தமாகப் பெற்றுள்ளது. ஆழ்வார்பேட்டை டி.டி.கே.



சாலையில் சுமார் 5,000 சதுர அடி பரப்பில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன அலுவலகம் இந்தப் புதிய கட்டடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் தளத்தில் மொத்தம் 13,606 சதுர அடி பரப்பில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.9.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் செயல்பாடுகளை விளக்கும் குறுந்தகட்டினை (Compact Disc) வெளியிட்டார்கள். இந்த குறுந்தகட்டின் முதல் பிரதியினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. நா. பாலகங்கா, எரிசக்தித் துறைச் செயலாளர் திரு. ஆர். சத்பதீ, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. என். முருகன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. சி.வி. சங்கர், இ.ஆ.ப., மற்றும் குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண் இயக்குநர் திரு.அம்புஜ்சர்மா, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *



# தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து நிதியுதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், திருநெல்வேலி மாநகர் ஆயுதப்படைப் பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். ராஜன் அவர்களின் மருத்துவச் செலவு மற்றும் செயற்கைக் கால் பொருத்திக் கொள்வதற்கு, தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து 2,85,654 ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டக் காவல் துறையில் மாநகர் ஆயுதப்படைப் பிரிவு முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். ராஜன் அவர்கள், விபத்தினால் பாதிக்கப்பட்டு பாளையங் கோட்டை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பெற்றதாகவும், கால் ஊனமடைந்ததால் மாற்றாக செயற்கைக் கால் பொருத்துவதற்கு போதிய பண வசதியற்ற காரணத்தால் செயற்கைக்கால் பொருத்திக் கொள்ள இயலாத நிலையில் இருப்பதாகவும் இதற்கு தனக்கு நிதி உதவி செய்யுமாறும் கோரிக்கை வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் நேரில் மனு அளித்திருந்தார்.

இவரது கோரிக்கையினைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது மருத்துவச் சிகிச்சைக்காக, பாளையங்கோட்டை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றதற்கான செலவுத் தொகை 65,804 ரூபாயும், அவருக்கு செயற்கைக்கால் வாங்கிப் பொருத்தவும் அறுவைச் சிகிச்சைக்காகவும் 2,19,850 ரூபாயும் உட்பட, மொத்தம் 2,85,654 ரூபாயை தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து அனுமதித்து ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், திருநெல்வேலி மாநகர் ஆயுதப்படைப் பிரிவு முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். ராஜன் அவர்களுக்கு, தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து 2,85,654 ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட காவலர் திரு. ஆர். ராஜன், தனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்.

□ □ □

# விடுதலைப் போராட்ட வீரருக்கு ஓய்வூதியம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரரான திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கிட ஆணையிட்டு, அதற்கான ஆணையினை 15.9.2005 அன்று, தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அத்திபட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. வி. ராதாகிருஷ்ணன் என்பவர், சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தனக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தார்.

இந்த மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது தியாகத்தைப் போற்றி, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, இவருக்கு ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவரது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரரான திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்களது தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கிட ஆணையிட்டு அதற்கான ஆணையினை அவரிடம், 15.9.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

இந்த ஆணையினைப் பெற்றுக் கொண்ட திருவள்ளூர் அத்திப்பட்டு திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள், தனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். ❖



# சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்க கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம்



சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்துக்கு சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஐ.வி.ஆர்.சி.எல். நிறுவனத்துக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முன்னிலையில் 13.9.2005 அன்று செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரிய நிருவாக இயக்குநர் தங்கவேலுவும், ஐ.வி.ஆர்.சி.எல். நிறுவன துணைத் தலைவரும், நிருவாக இயக்குநருமான இ.சுதீர் ரெட்டியும் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியம் மீஞ்சூரில் 60 ஏக்கர் நிலத்தை அந்த நிறுவனத்திடம் வழங்கும். அந்த இடத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் ஆலை நிறுவப்படும். இதன் மூலம் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல்நீர் குடிநீராக்கப்படும்.

ஐதராபாத்தைச் சேர்ந்த ஐ.வி.ஆர்.சி.எல். உள்கட்டமைப்பு மற்றும் திட்டங்கள் நிறுவனம், திட்டச் செயல்பாட்டுக்கு ஸ்பெயின் நாட்டில் உள்ள பெஃப்சா கன்ஸ்ட்ரக்‌ஷன் டெக்னாலஜி அம்பியென்டேல் என்ற

நிறுவனத்திடம் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெற்று இதை நிறைவேற்றும்.

இந்த நிறுவனம், தமக்கு வேண்டிய சட்டரீதியான அனுமதி பெற்று நிதி நடவடிக்கையைச் செயல்படுத்தி 15 மாதங்களுக்குள் திட்டத்தை நிறைவேற்ற உள்ளது.

இதன்மூலம் தயாராகும் குடிநீரை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் 25 ஆண்டுகளுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் வாங்க உள்ளது. மீஞ்சூரில் உள்ள தயாரிப்பு இடத்தில், பாதாளத் தொட்டியில் இந்தத் தண்ணீர் விடப்பட்டு, அங்கிருந்து மெட்ரோ வாட்டர் நிருவாகத்தினரால் நீர் பெறப்பட்டு செங்குன்றம் ஏரியில் கொண்டு வந்து, பின்னர் நகரத்தில் பல பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும். ஐ.வி.ஆர்.சி.எல். நிறுவனத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் இ. சுதீர்ரெட்டி, ஸ்பெயின் பெஃப்சா நிறுவனத்தைச் சேர்ந்த சர்வதேச இயக்குநர் ஜோகின் பெர்னாண்டஸ் ஆகியோர் விரைந்து அனைத்து ஏற்பாடுகளையும் முடித்து ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்திற்குள் குடிநீர் வழங்க உள்ளதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் உறுதி அளித்தார்கள். இந்த வாய்ப்பு வழங்கியமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, அந்நிறுவனத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர். சென்னை நகர மக்களின் நலனுக்காக இந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டிய அந்த நிறுவனத்துக்கு நன்றி கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒப்பந்தப்படி திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் செயல்படுத்திடவும், வெற்றிகரமாகத் திட்டம் நடைபெறவும் அறிவுரை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

ஐ.வி.ஆர்.சி.எல். சார்பில் (ஒப்பந்தம் மற்றும் தொழில் வளர்ச்சி) அதன் தலைவர் ராமச்சந்திரன், நிதி இயக்குநர் பலராமரெட்டி, சர்வதேச இயக்குநர் ஜாகுவான் பெர்னாண்டஸ், பெஃப்சா சி.டி.ஏ., ஸ்பெயின் மூத்த துணைப் பொது மேலாளர் (திட்டம்) வெங்கட சுப்பிரமணியம் ஆகியோரும், தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் ஷீலா பிரியா, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

❖ ❖ ❖



தந்தை பெரியார் அவர்களின் 127–ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு 17–9–2005 அன்று, மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் திரு.கா.காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.





# கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு 75 கோடி ரூபாய் அளவுக்கான தொகுப்புதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை 16–9–2005

விவசாயிகளின் உரிமைகளைக் காத்திடவும், அவர்களது நலன் மற்றும் மேம்பாட்டைப் பேணவும் நான் எப்போதுமே மிக உயரிய முன்னுரிமை அளித்து வருகிறேன். கடந்த காலத்தில், அடுத்தடுத்து, தொடர்ச்சியாக ஏற்பட்ட மூன்று வறட்சிகளால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது, அவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான பல்வேறு தொடர்ச்சியான நடவடிக்கைகளை என்னுடைய அரசு மேற்கொண்டது. தமிழகத்தில், வேளாண்மையை நவீனமயமாக்குவதற்காக, பயிர்களை பல்திறப் படுத்துதல், நீர் ஆதாரங்களின் திறம்பட்ட பயன்பாடு, தொழில்நுட்பங்களை விரைந்து பயனுக்குக் கொண்டு வருதல், புதிய வேளாண் நடைமுறைகள், துல்லிய பண்ணைச் சாகுபடி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு புதிய கொள்கைத் திட்டம் ஒன்றையும் நான் வகுத்துள்ளேன். நீர்த்தேக்கங்களுக்கு ஏராளமாக நீர் வரப்பெற்று தென்மேற்குப் பருவ மழையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதால், இந்த ஆண்டில், விளைச்சல் மிக அமோகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே காணப்படுகிறது. ஆகவே, பண்ணைத் துறையின் வளர்ச்சி வாய்ப்புகள் மிகவும் ஊக்கம் அளிப்பதாக உள்ளன. இந்த ஆண்டில் கண்ட நல்ல முன்னேற்றத்தை அடித்தளமாகக் கொண்டு பண்ணைத் துறை மேலும் நீடித்த வளர்ச்சி காண்பதை உறுதிப்படுத்துவதில் என்னுடைய அரசு தற்போது கவனம் செலுத்தி வருகிறது.

தொடர்ச்சியான வறட்சியினால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானபோது, அவர்களுக்கு நிதி ஆதரவும், உணவுப் பாதுகாப்பும் அளிக்கப்படுவதையும், அவர்களது கடன் சுமையை சமாளிப்பதன் மூலம் அவர்களிடையே ஒரு நம்பிக்கை உணர்வு ஏற்படுத்தப்படுவதையும் நான் உறுதி செய்தேன். பாதகமான சூழ்நிலைகளிலும், அரும்பாடுபட்டு கடுமையாக உழைத்த தமிழக விவசாயிகளுக்கு, அதற்கேற்ற பயன்களை வழங்கி, அவர்களது சுய மரியாதையையும், தன் மதிப்பையும் உயர்த்த நான் விரும்புகிறேன். கடுமையாகப் பாடுபட்டு, பல்வேறுபட்ட பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அவர்களது உழைப்புக்கு ஏற்ற ஆதாய விலைகள் கிடைக்கச் செய்தால் தான் இது சாத்தியம் ஆகும். மிளகாய், கொப்பரைத் தேங்காய் போன்ற பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, ஆதாய விலைகள் கிடைக்கச் செய்ய என்னுடைய அரசு இந்த ஆண்டு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களது வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால், அவர்கள் சாகுபடி செய்யும் கரும்புக்கு நல்ல விலை கிடைக்க வகை செய்யப்பட வேண்டும் என்று என்னிடம் முறையிட்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு, மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தில் சர்க்கரைத்



தொழில் மிகவும் நலிவுற்றிருந்தது. 31.3.2001 அன்றைய நிலவரப்படி, இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் திரண்ட இழப்பு 811 கோடி ரூபாயாக இருந்தது. கரும்புக்கான ஏற்பளிக்கப்பட்ட விலையைக் கூட சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு வழங்க முடியவில்லை. 31.5.2001 அன்றைய நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு விலையில் 350 கோடி ரூபாய் நிலுவையாக இருந்தது. சர்க்கரை ஆலைகள் கடும் இழப்பைச் சந்தித்து, அதன் விளைவாக விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்ததால், இப்பிரச்சினை மிகக் கடுமையானதாக இருந்தது. சர்க்கரைத் தொழிலை சீரமைத்து அதன் மூலம் விவசாயிகளுக்கு அவர்கள் விளைவிக்கும் கரும்புக்கு நல்ல விலை கிடைப்பதையும் அத்தொகை அவர்களுக்கு உடனுக்குடன் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய என்னுடைய அரசு தொடர்ச்சியான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்வாறாக, சர்க்கரைத் தொழிலை சீரமைக்க மிகக் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய அரசு மிகத் துணிச்சலாகச் செயல்பட்டு, சர்க்கரைத் தொழிலை சீரமைக்கும் இந்த குறிப்பிடத் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டது. என்னுடைய அரசு மேற்கொண்ட முயற்சியின் பயனாகத்தான் விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகள் முழுமையாக கொடுக்கப்பட்டன. சிக்கலான நேரத்தில், சர்க்கரை ஆலைக்குப் போதிய நிதி கிடைப்பதற்கு வேண்டிய சிறப்பு நடவடிக்கைகளை என்னுடைய அரசு எடுத்ததன் மூலமாகத்தான் இது சாத்தியமாயிற்று. இவ்வாறாக, கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாத்தது என்னுடைய அரசு தான். அனைத்து சர்க்கரை ஆலைகளும், தாம் வாங்கும் கரும்புக்குரிய விலையை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வழங்குகின்ற மகிழ்ச்சியான நிலையை இன்று நாம் எட்டியுள்ளோம். தாம் வழங்கும் கரும்புக்கு 15 நாட்களுக்குள் பணம் கிடைத்து விடும் என்ற முழு நம்பிக்கை தற்போது விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

'எத்தனால்' உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தல், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக சர்க்கரைத் தொழிலை மறு சீரமைப்பதில் நான் தனி கவனம் செலுத்தினேன். சர்க்கரை ஆலைகள் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்தும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான், விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு நல்ல விலை பெற இயலும். சர்க்கரைத் தொழிலை இவ்வாறு மறு சீரமைத்திட ஊக்கம் அளிக்க என்னுடைய அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஐந்து சர்க்கரை ஆலைகளில் 'எத்தனால்' உற்பத்தி செய்திட என்னுடைய அரசு ஊக்கம் அளித்து வருகிறது. இதன் மூலம், சர்க்கரை ஆலைகள் திறம்பட்ட முறையில் தம்மை மறு சீரமைத்துக் கொண்டு, அதன் வாயிலாக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். இவ்வாறாகத்தான், சர்க்கரை ஆலைகள், விவசாயிகள் ஆகிய இரு தரப்பாருக்கும் ஒரு வெற்றிச் சூழ்நிலையை உருவாக்க முடியும். அதைத்தான் என்னுடைய அரசு சாதித்துள்ளது.

என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது மொத்தம் உள்ள 19 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுள், ஒரே ஒரு ஆலை மட்டுமே ஓரளவு ஆதாயம் ஈட்டி வந்தது. கடுமையான வறட்சி, பாதகமான சந்தை நிலைமைகள் ஆகியவற்றையும் மீறி என்னுடைய அரசு, ஆதாயத்தில் இயங்கக்கூடிய சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கையை 9 ஆக உயர்த்தியுள்ளது. தமிழக கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின்



வரலாற்றிலேயே முதல் முறையாக 2004–2005 ஆம் ஆண்டில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை, அதாவது கள்ளக்குறிச்சி II ஆலை, அனைத்திந்திய அளவில் மிகச் சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான விருதினைப் பெற்றது.

சந்தை நிலைமை மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கான வாய்ப்பு வளங்களில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து விவசாயிகளுக்கு ஆதாயமான விலைகள் கிடைப்பதற்கு வழி வகுக்கக்கூடிய முன் நோக்குக் கொள்கை ஒன்றை வகுப்பது தற்போது சாத்தியமாகியுள்ளது. ஒருபுறம், நாம் சர்க்கரை ஆலைகள் நவீனமயமாகி, வளம் பெறக்கூடியவையாக மாறுவதை உறுதிப்படுத்த வேண்டும்; மறுபுறம், விவசாயிகளுக்கும் ஆதாய விலை கிடைக்க வேண்டும். சர்க்கரை ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டு, மறு சீரமைக்கப்படுவதற்கான வழியை என்னுடைய அரசு காட்டியுள்ளது. மேம்பட்டுள்ள சந்தை நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, புதிய மாநில அரசு பரிந்துரை விலை (State Advised Prise) நிர்ணய கொள்கை ஒன்றைச் செயல்படுத்துவதென நான் முடிவு செய்துள்ளேன்.

2005–2006 அரவைப் பருவத்திற்கு, சராசரி 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு சட்டப்படிக்கான விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு 795 ரூபாய் என மத்திய அரசு அறிவித்துள்ளது. விவசாயிகள் இந்த விலை அறவே போதாது என தெரிவித்துள்ளனர். மத்திய அரசு அறிவித்துள்ள சட்டப்படிக்கான விலை ஆதாயமானதாக இல்லாதது மிகவும் துரதிருஷ்ட வசமானது ஆகும். கரும்பு விலை உள்ளபடியே ஆதாயகரமானதாக இருக்கின்ற வகையில், கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கை ஆகும். கரும்புச் சாகுபடியைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் தங்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரும்புக்கான அரசு பரிந்துரை விலை ஒன்றை மாநில அரசு அறிவிப்பது, முறையானதுதான் என்றும், அதனை சர்க்கரை ஆலைகள் பின்பற்ற வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைக் கருத்தில் கொண்டு புதிய அரசு பரிந்துரை விலைக் கொள்கை ஒன்றை வகுப்பதென எனது அரசு முடிவு செய்துள்ளது. கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கும் கரும்புக்கு இந்தப் பரிந்துரை விலை வரையறையாக அமையலாம் என்றும், உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. 2005–2006 அரவைப் பருவத்திற்கு சராசரி 9 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு, சட்டப்படிக்கான விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு 795 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ள போதிலும், தமிழ்நாட்டில், சராசரி 9 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் கொண்டு கரும்புக்கு, அரசு பரிந்துரை விலையாக மெட்ரிக் டன் ஒன்று;க்கு, 1014 ரூபாய் என்று நிர்ணயிப்பது என எனது அரசு இன்று முடிவு செய்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும். தாங்கள் வழங்கும் கரும்புக்கு ஆதாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற தமிழக விவசாயிகளின் நீண்ட கால கனவை என்னுடைய அரசு இன்று நனவாக்கியுள்ளது. சராசரி சர்க்கரை கட்டுமான அளவு 9 சதவிகிதத்திற்குக் குறைவாக இருந்தாலும், சர்க்கரை ஆலைகள், கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 1014 ரூபாய் வழங்க வேண்டும் என்றும் என்னுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பை விளைவிக்கும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவது எனவும் என்னுடைய அரசு முடிவு செய்துள்ளது. 9 சதவிகித சராசரி சர்க்கரைக் கட்டுமானத்திற்கு மேற்படும் ஒவ்வொரு சதவிகிதத்திற்கும் மெட்ரிக் டன் ஒன்றுக்கு 88 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும். இந்தப் புதிய கொள்கையினால் விவசாயிகளுக்கு ஆதாயமான விலை கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அவர்கள் இக்கொள்கையைப் பெரிதும் வரவேற்பார்கள். தமிழக விவசாயிகளுக்கு அவர்களது கடுமையான உழைப்புக்கும், முயற்சிக்கும் ஏற்ற போதிய வருவாய் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளும் இந்த அரசு பரிந்துரை விலை ஏற்பாட்டை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றன.

சர்க்கரை ஆலைகள் முழுமையாக மறு சீரமைக்கப்பட இன்னும் சிறிது காலம் ஆகும் என்றாலும், தற்போது வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கையின்படி, விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்கச் செய்வது என என்னுடைய அரசு உறுதி பூண்டுள்ளது. தமிழக கரும்பு விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் உந்தப்பட்டு என்னுடைய அரசு இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளது. என்னுடைய அரசு அறிவித்துள்ள இந்த ஆதாய விலையை வழங்குவதற்கு ஏதுவாக, ஒரு சில கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு உதவி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த சர்க்கரை ஆலைகள், மறு சீரமைக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு ஆதாய விலை வழங்கும் வகையிலான கடப்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ள சிறிது காலம் ஆகும். நான் அறிவித்துள்ள இந்தப் புதிய கொள்கையில் வரையறுக்கப்பட்டுள்ள ஆதாய விலையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்குகிற வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு 133.87 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். ஒரு சில சர்க்கரை ஆலைகள் இச்செலவில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் உள்ளன. அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் இந்தப் புதிய கொள்கையை பின்பற்ற ஏதுவாக, அவற்றுக்கு என்னுடைய அரசு தேவையான உதவியை வழங்கும். மொத்தம் 75 கோடி ரூபாய் அளவுக்கான உதவித் தொகுப்பினை என்னுடைய அரசு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கும். ★



## விபத்தில் உயிரிழந்த வருவாய் கோட்டாட்சியர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிதியுதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பழநி வருவாய் கோட்டாட்சியராகப் பணிபுரிந்து வந்த திரு.எஸ். நாராயணமூர்த்தி மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் ஒரே நேரத்தில் வாகன விபத்தில் மரணமடைந்ததால், நிராதரவாக நிற்கும் அவரது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை அவரது மகன் செல்வன் கணேஷிடம், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், நேரில் வழங்கினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், பழநி வருவாய் கோட்டாட்சியராகப் பணிபுரிந்த திரு. எஸ். நாராயண மூர்த்தி தனது மனைவி மற்றும் மகளுடன் 26.8.2005 அன்று, காரில் பழநி நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது விபத்துக் குள்ளாகி அவரது மனைவி தீவிர சிகிச்சைக்காக பழநி அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பலனின்றி மரணமடைந்தனர். திரு. நாராயண மூர்த்தியின் உடல்நிலையும் மிக மோசமான நிலையில் ஒட்டன்சத்திரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பலனின்றி அன்றே மருத்துவமனையில் மரணமடைந்தார். உடன் பயணம் செய்த இவரது மகள் சித்ராதேவி இடது கை மற்றும் காலில் படுகாயம் அடைந்து தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பெற்று வருகிறார்.

பழநி வருவாய் கோட்டாட்சியராகப் பணிபுரிந்த திரு. எஸ். நாராயணமூர்த்தி மற்றும் அவரது மனைவி இருவரும் ஒரே நேரத்தில் விபத்தில் மரணமடைந்ததால் நிராதரவாகி நிற்கும் அவரது குடும்பச் சூழ்நிலையையும், அநாதரவாகி விட்ட அவரது மகள் மற்றும் மகன் ஆகியோரின் நிலையினையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1 இலட்சம் வழங்க ஆணையிட்டார்கள்.

இந்த உதவித் தொகைக்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 15.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மறைந்த திரு. நாராயணமூர்த்தி அவர்களின் மகன் செல்வன் கணேஷிடம் நேரில் வழங்கி ஆறுதல் கூறினார்கள். நிதி உதவி பெற்றுக் கொண்ட திரு. கணேஷ், கண்ணீர் மல்க தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். ❖



## சுனாமியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு காப்பீட்டுத்தொகை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 26.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் பாதிப்புக்குள்ளான கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் 680 பேர்களுக்கு பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடாக, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், மொத்தம் ஒரு கோடியே 18 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் காப்பீட்டுத் தொகையை வழங்கினார்கள்.



26.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில், கடலோர கிராமங்களைச் சேர்ந்த வேளாண் விளைநிலங்களும், அங்கு பயிரிடப்பட்டிருந்த பயிர்களும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாயின.

இவ்வாறு, சுனாமியின் காரணமாகப் பொங்கி வந்த கடல் நீரால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் அடைந்த இழப்பை ஈடுசெய்யும் வகையில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்துள்ள விவசாயிகளுக்கு, இழப்பீட்டுத் தொகை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நடவடிக்கை மேற்கொண்டு, சுனாமி பாதித்த வேளாண் விளை நிலங்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கிட, ஏற்கெனவே உள்ள நடைமுறையிலிருந்து விலக்கு அளித்து, சிறப்பு இனமாக தனி நபர் அடிப்படையில் அவர்களது பயிர் இழப்பிற்குத் தகுந்த காப்பீட்டுத் தொகை வழங்கிட மாண்மிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வாறு விலக்கு அளித்து காப்பீட்டுத் தொகை வழங்கப்படுவது நாட்டிலேயே இதுவே முதன்முறையாகும்.

இதன்படி, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், காப்பீடு செய்துள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நெல் பயிரிட்ட 124 விவசாயிகளுக்கு இழப்பீடாக 27.99 இலட்சம் ரூபாயும், நிலக்கடலை பயிரிட்ட 57 விவசாயிகளுக்கு இழப்பீடாக 13.71 இலட்சம் ரூபாயும், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த நெல் பயிரிட்ட 499 விவசாயிகளுக்கு 74.40 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் ஒரு கோடியே 16 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 8.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சுனாமி பாதிப்புக்குள்ளான கடலூர் மாவட்ட நெல் விவசாயிகள் திருமதி. கே. ரேணுகா, திரு. ஆர். பாலுசாமி, நிலக்கடலை விவசாயிகள் திரு. ஏ. மதிவாணன், திருமதி. ஜி. கலா, திருமதி கே. பூரணம், திரு. எஸ். குணசேகரன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட நெல் விவசாயிகள் திருமதி. என். பூபதி, திருமதி. என். மீனாட்சி சுந்தரி, திருமதி. பி. அலமேலு மங்கை, திரு. எம். செல்வம், திருமதி. எஸ். பிரேமா, திரு. எஸ். ராஜேந்திரன், திரு. எஸ். ராஜேந்திரன், திரு. ஜி. கலியபெருமாள், திரு. டி. ராஜசேகர் ஆகிய 15 பேர்களுக்கு அவர்கள் பயிரிட்ட நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு, மொத்தம் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 943 ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கி சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத்துறை செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவன மண்டல மேலாளர் திரு. அன்பரசு ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖



# பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி கைத்தறி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, கைத்தறி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால், கைத்தறி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகளின் விலையில் மொத்தம் 30 சதவிகிதம் தள்ளுபடி கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கைத்தறி நெசவாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டு பல்வேறு நலத் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி



வருகிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் விற்கப்படும் கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால், கைத்தறி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகளின் விலையில் 30 சதவிகிதம் தள்ளுபடி கிடைக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2005 முதல் 31.1.2006 முடிய இந்தச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறிவித்துள்ள இந்தச் சிறப்புத் தள்ளுபடியால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கைத்தறி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகள் விற்பனை பெருமளவில் பெருகும். இதனால், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்க வழிவகை ஏற்படும்.

இந்தச் சிறப்புத் தள்ளுபடியால் நெசவாளர்கள் பயன் அடைவதோடு, பொதுமக்களும் பயன் அடைவார்கள்.

❖ ❖ ❖





# தனியார் பட்டுக் கைத்தறி நெசவாளர்களுக்கு ஊதிய உயர்வு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை 3.10.2005**

உலகத்தின் உயர்ந்த தொழில்களில் ஒன்று நெசவுத் தொழில் மனித குலத்தின் மானம் காக்க ஆடை நெய்து தருகின்ற காரணத்தால், 'செய்யும் தொழிலில் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்று புகழப்படுகிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் கைத்தறி நெசவுத் தொழில், ஏறத்தாழ 4.29 இலட்சம் கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை நல்கி வருகிறது. இத்தகு மேன்மைமிகு தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்று கணிசமான வருவாய் ஈட்டவும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை எனதுஅரசு செயல்படுத்தி வருகிறது. இதுவன்றி, ஆயுள் காப்பீடு, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், நெசவாளர் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை, தறிக் கூடத்துடன் கூடிய வீட்டு வசதி போன்ற பல்வேறு நலத்திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழும் இடங்களில் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். 'பட்டு' என்றாலே காஞ்சிபுரம் என்று காஞ்சிபுரம் பட்டு உலக அளவில் பிரசித்திப் பெற்று விளங்குகிறது. இங்கு ஏறத்தாழ 30,000 பட்டுக் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராகி அரசின் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களின் பயன்களைப் பெற்று வருகின்றனர். இதுவன்றி, 60,000 பட்டுக் கைத்தறி நெசவாளர்கள் 300 தனியார் பட்டுச் சேலை உற்பத்தியாளர்களின் கீழ் நெசவுத் தொழில் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வப்போது அரசு வழங்கும் ஆணைகளின் அடிப்படையில், கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள் நியாயமான ஊதியம் மற்றும் காலந்தோறும் ஊதிய உயர்வு ஆகியவற்றை முறையாகப் பெற்று வருகின்றனர்.

ஆனால், காஞ்சிபுரம் பகுதியில் தனியார் அமைப்பில் உள்ள நெசவாளர்களுக்கு, கடந்த 1995ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்தவித ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை. அண்மையில், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சட்டமன்ற இடைதேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்க நான் சென்ற நேரத்தில், அப்பகுதி வாழ் தனியார் கைத்தறி நெசவாளர்கள், 1995ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்திலேயே இன்றளவும் தாங்கள் ஊதியம் பெற்று வருவதாகவும், இதன் காரணமாக தாங்கள் வாழ்க்கை நடத்த மிகவும் அல்லல்படுவதாகவும் என்னிடம் தெரிவித்து, தங்களது ஊதிய விகிதத்தை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை விடுத்தனர். அப்போது, தனியார் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு, ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையை என்னுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து ஆவன செய்யும் என்று நான் உறுதி அளித்தேன்.

தனியார் கைத்தறி நெசவாளர்களின் இந்த நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பட உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். அதன்பேரில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், நெசவாளர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தனியார் பட்டுச் சேலை உற்பத்தியாளர்கள் ஆகியோரை அழைத்து, இவ்வாண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, எனது ஆணையின் பேரில், அண்மையில், தமிழக அரசின் கைத்தறி மற்றும் துணித்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை, 29.09.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தெற்கு ஆஸ்திரேலியாவுக்கான தலைவர் மைக்ரான் தலைமையில், 6 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

**தொழில் துறை அமைச்சர், அரசுக் கைத்தறித் துறைச் செயலாளர், கைத்தறித் துறை இயக்குநர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் முன்னிலையில், நெசவாளர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தனியார் பட்டுச் சேலை உற்பத்தியாளர் பிரதிநிதிகள் ஆகிய இரு தரப்பினருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில், தற்போது காஞ்சிபுரம் தனியார் பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதத்தை 30 சதவிகிதம் உயர்த்தி வழங்குவது என ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதன் அடிப்படையில், தொழில் துறை தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12 (3)–ன் கீழ் ஓர் ஒப்பந்தம் இருதரப்பினராலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது.**



காஞ்சிபுரம் தனியார் பட்டுக் கைத்தறி நெசவாளர்களுக்கு 30 சதவிகித ஊதிய உயர்வு உடனடியாக வழங்கப்பட இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படக் கூடிய ஊதிய உயர்வு, காஞ்சிபுரத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து ரக பட்டுச் சேலைகளுக்கும் அமல் செய்யப்படும். 16.5 மீட்டர் நீளமுள்ள ஒரு பாவுக்கு, 'சாதா ஒன் சைடு' சேலை நெய்கின்ற நெசவாளர், இதுவரை பெற்று வந்த 902.24 ரூபாய் ஊதியம், 30 சதவிகிதம் உயர்த்தப்பட்டு, இனி 1172.91 ரூபாயாக வழங்கப்படும். இதே ரக 'டபுள் சைடு' சேலைக்கான ஊதியம் பாவுக்கு 1107.73 ரூபாயிலிருந்து 1440.04 ரூபாயாக உயரும். முகூர்த்த சேலை ஜக்கார்டு ரகத்திற்கான ஊதியம், 1806.55 ரூபாயிலிருந்து 2348.51 ரூபாயாக உயரும். இது போலவே, அனைத்துப் பட்டு ரகங்களுக்கும் 30 சதவிகித ஊதிய உயர்வு வழங்கப்படும். இந்த ஒப்பந்தத்தின் பயனாக காஞ்சிபுரம் பகுதியில் தனியார் அமைப்பில் உள்ள சுமார் 60,000 பட்டு கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ❖



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு விடுதிகளில் கூடுதல் இடங்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
4.10.2005

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கென 963 கல்லூரி மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சார்ந்த கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கருத்தூன்றி தரமுடன் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன், அனைத்து விடுதிகளிலும் போதிய இடவசதி மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

2001–ஆம் ஆண்டில் நான் பொறுப்பேற்ற போது, 202 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மற்ற விடுதிகள் இடவசதியும், அடிப்படை வசதிகளும் அற்ற தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி இவ்விடுதிகள் அனைத்தும் போதிய இடவசதியோடும், தேவையான அடிப்படை வசதிகளோடும் கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்று நான் ஆணையிட்டதின் பேரில், 2001 – 2002 முதல் 2004 – 2005 முடிய 345 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள், 103.95 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டன. மேலும், மீதமுள்ள 416 விடுதிகளுக்கும், தக்க இடவசதியோடும் அனைத்து அடிப்படை வசதிகளோடும் , 131.04 கோடி ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்ட 15.7.2005 அன்று நான் உத்தரவிட்டேன். இதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சார்ந்த பள்ளி விடுதிகளில் தங்கிப் படிப்பதற்காக, மாணவ, மாணவியரிடமிருந்து அதிக அளவில் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இவ்வாறு விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு, 2005–2006ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளில் 1,500 இடங்களும், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர் விடுதிகளில் 1,000 இடங்களும் ஆக மொத்தம் 2,500 இடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சார்ந்த பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் நல்ல முறையில் கல்வி கற்று வாழ்வில் உயர்வடைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரத்ததான தினச் செய்தி



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் தேதியை இரத்ததான தினமாக நாம் அனுசரிக்கிறோம். தானத்தில் சிறந்தது இரத்த தானம் என்று உலகெங்கும் போற்றப்படுகிறது.

தீ விபத்து மற்றும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் தரமான இரத்தம் கிடைப்பது, அவர்களின் உயிரைக் காப்பதில் அத்தியாவசியமாகிறது. செயற்கையாக இரத்தத்தை உருவாக்க முடியாது என்பதால், இரத்த தானத்தின் முக்கியத்துவம் மென்மேலும் அதிகரிக்கிறது.

தமிழ்நாட்டில் தன்னார்வ இரத்த தானம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது என்பதனை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு (Tamil Nadu Aids Control Society) மற்றும் தமிழ்நாடு குருதிப் பரிமாற்றக் குழுமம் (State Blood Transfusion Council) மூலம் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டிலிருந்து தமிழகத்தில் பிரசவத்தின் போது ஏற்படும் உயிரிழப்பை வெகுவாகக் குறைக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட மகப்பேறு மருத்துவ மனைகளிலும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான தீவிர நோய்த் தடுப்பு மையங்களிலும் உள்ள இரத்த வங்கிகளுக்கு உறைய வைத்த இரத்தக் கூறான பிளாஸ்மாவை (Plasma) சேமிப்பதற்காக கூடுதலாகக் குளிர்ப்பதன வசதிகள் செய்து கொடுக்க எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தானம் செய்யப்படும் இரத்தத்தின் தரத்தையும், அளவையும் அதிகரிக்கவும், தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிக்கவும் எனது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்குத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு இரத்த வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் இரத்த வங்கிகள் உறுதுணையாக இருக்கின்றன.

இக்கட்டான சூழ்நிலைகளில், உயிர் ஆதாரமான இரத்தத்தை மனிதர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது இன்றியமையாதது ஆகிறது. எனவே,

**இரத்த தானம் செய்வாம்!**

**அரிய உயிரைக் காப்போம்!**

– என்று கூறி தமிழகத்தின் எல்லாக் குடிமக்களும் தங்களை இந்த மகத்தான சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* * *



ஈரோடு மாவட்டம்

# தீரன் சின்னமலை அவர்களின் 250ஆவது பிறந்த ஆண்டு மற்றும் 200 ஆவது நினைவு நாள் விழா



இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சுதந்திரப் போராட்ட வீரர்களில் போற்றத்தக்கவர் தீரன் சின்னமலை அவர்கள். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து மனம் தளராது போராடிய தென்னாட்டுப் பெரும் வீரன் தீரன் சின்னமலை. ஆங்கில ஆட்சி வேரூன்றிய காலத்திலேயே அதனை எதிர்த்துப் போராடிய புலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் போன்ற மாவீரர்கள் வரிசையில் தீரன் சின்னமலை சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். அவ்வாறு வீரம் நிறைந்த மாவீரனுக்கு அரசின் சார்பில் விழா நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டதன்பேரில் 3.8.2005 அன்று 200–ஆவது நினைவு நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

தீரன் சின்னமலையின் 250ஆவது பிறந்த ஆண்டு மற்றும் 200–ஆவது நினைவு நாள் விழா ஈரோடு மாவட்டம் அரச்சலூர், ஒடாநிலையில், 3.8.2005 அன்று நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவில், தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் உரையாற்றும் போது, “நேதாஜி, மகாத்மா காந்தி, நேரு, பட்டேல், போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய முதல் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை. இந்த தமிழ் மண்ணிற்காக சுதந்திரத் தியாக வேட்கை கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்று திரட்டி அவர் போராடினார். அவ்வாறு சிறப்புப் பெற்ற தீரன் சின்னமலைக்கு இந்திய அளவில் விழா நடக்க வேண்டும். அதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடத்திக் காட்டுவார்கள். தீரன் சின்னமலை ஒரு சமுதாயத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் சமுதாய ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர். தீரன் சின்னமலையின் பெருமைகளை இதற்குமுன் ஆட்சி செய்தவர்கள் மக்கள் முன் எடுத்துச் சொல்ல மறந்து விட்டார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது வீரத்தையும், புகழையும் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார்கள். தீரன் சின்னமலைக்கு முதன் முதலாக சென்னையில் சிலை வைத்தது இந்த அரசு. அவர் வாழ்ந்து



போரிட்ட இடமான ஓடாநிலையில் மணிமண்டபம், சமுதாயக்கூடம் போன்றவைகள் தற்போது அமைந்துள்ளன. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தீரன் சின்னமலை பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது. அதன்பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் அவரது பெயரில் மாவட்டம் உருவாக்கப் பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பொறுத்தவரையில் சிறப்பு மிக்கவர்களைச் சிறப்பிப்பது தான் அவரது சிறப்பான குணம். அந்த வகையில் கொங்கு இன மக்கள் பெருமைப்படும் வகையில் தீரன் சின்னமலைக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு விழா நடத்தப்பட்டு வருகிறது. கொங்கு நாட்டிலே பிறந்து பெருமைச் சேர்த்த ஔவையார், குமணவள்ளல் வல்வில் ஓரி, பேகன் போன்ற வள்ளல் பெருமக்கள் வரிசையில் தீரன் சின்னமலைக்கும் முக்கியப் பங்கு உண்டு. தமிழ் மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு சுதந்திரத் தியாக வேட்கையில் அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றுதிரட்டி அவர் போராடினார். மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்தவர் தீரன் சின்னமலை. மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் மன்றாடியார் பரம்பரையைச் சார்ந்தவர்தான் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். சின்னமலை ஒரே இனத்திற்கு சொந்தக்காரர் இல்லை. ஆங்கிலேயருக்கு எதிராக அவர் போராடியபோது அனைத்து இன மக்களையும் தன்னுடன் வைத்திருந்தார். அவர் சமூக ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். மற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் சரித்திரம், பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. தீரன் சின்னமலை சரித்திரம், பாடப்புத்தகங்களில் இடம் பெறும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வலியுறுத்தப்படும். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில், சீர்மிகு ஆட்சி நடத்தி வரும் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ்நாட்டின் உரிமைக்காக, போராடி வருபவர் தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். அவர்கள் வழியில் நாமும் பயணம் செய்வோம் என்று உறுதி ஏற்போம்" எனப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்த மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி. இராமசாமி அவர்கள் உரையாற்றும் போது, "தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் விழா எடுக்க வேண்டும் என உத்தரவிட்டதன் மூலம் கடந்த மூன்றாண்டுகளாக அவரது நினைவு நாள் விழா நடைபெற்று வருகிறது. கடந்த 2003ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் 9 அமைச்சர் பெருமக்களை அனுப்பி வைத்து மாபெரும் விழா நடத்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அப்போது நடந்த விழாவில் தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் மணிமண்டபம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை



வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் எந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் இல்லாத வகையில் 7.35 ஏக்கர் நிலம் வாங்க ரூ.19.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து மணிமண்டபம் அமைக்க ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கொங்கு இன மக்களின் எண்ணத்தை நிறைவேற்றி தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். இப்பகுதியில் உள்ள மக்களின் வசதிக்காக ரூ.26 இலட்சம் செலவில் சமுதாயக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு பணிகள் மேற்கொண்டதன் மூலம் இந்த ஓடாநிலை விரைவில் சுற்றுலாத்தலமாகக் காட்சியளிக்கும். நாட்டின் விடுதலைக்காக எத்தனையோ தலைவர்கள் வாழ்ந்து மறைந்தாலும், தீரன் சின்னமலை தனி இடத்தில்



வைத்துப் போற்றப்படுபவர். அத்தகையச் சிறப்புமிக்க தியாக வீரனுக்கு தொடர்ந்து விழா எடுத்திட உத்தரவு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, இந்தக் கொங்கு இன மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீரன் சின்னமலை பற்றிய புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்த மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் உரையாற்றும் போது, "தீரன் சின்னமலை 250ஆவது பிறந்த ஆண்டு மற்றும் 200ஆவது நினைவு நாள் விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னையிலிருந்து அமைச்சர் பெருமக்களை அந்த மாவீரன் வாழ்ந்த பகுதிக்கு அனுப்பி வைத்து விழா எடுக்கச் செய்திருக்கிறார்கள் என்றால் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் மீது எத்தகைய அன்பும் பாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை அனைவரும் உணர்ந்திட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடும்போது மக்களிடம் செல்லுங்கள், மக்களோடு மக்களாக ஒருங்கிணைந்து வாழுங்கள். மக்களிடமிருந்து படிப்பினை பெறுங்கள், மக்களுடன் இணைந்து திட்டமிடுங்கள் என்று குறிப்பிட்டார். அத்தகைய எண்ணத்திற்கேற்ப தகுதி மிகுந்த தமிழகத்தின் முதலமைச்சராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திகழ்கின்றார்கள். தீரன் சின்னமலை ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து தளராது போராடிய தென்னாட்டுப் பெரும் வீரன் என்றால் அது மிகையாகாது. தீர்த்தகிரி என்ற பெயர் கொண்ட அந்த மாவீரன் கொங்கு நாட்டில் பிறந்து, கொள்கை உறுதியோடும், இலட்சிய தாகத்தோடும் போராடி தீரன் சின்னமலை என்று பெயர் பெற்று வரலாற்றில் இடம் பெற்றார். நாடு போற்றும் நிலைப் பெற்றார். மக்கள் நெஞ்சில் வாழும் புகழ் பெற்றார். தீரன் சின்னமலையின்

வீரத்தையும், அவரது மதிநுட்பத்தையும் தெரிந்து கொண்ட ஆங்கிலேயர்கள் இனி தீரன் சின்னமலையை போரிட்டு வெல்ல முடியாது என்று உணர்ந்தனர். அதற்காக சூழ்ச்சி செய்து கைக்கூலி பெற்ற சின்னமலையின் சமையல்காரன் தந்த குறிப்பில் எதிரிகள் தீரன் சின்னமலையைச் சுற்றி வளைத்தனர். மண்ணில் இன்பங்களை வேண்டி சுதந்திரத்தின் மாண்பினை இழப்போமா என்று எண்ணிய அந்த மாவீரன் காட்டிக் கொடுத்தவனின் கயமைத்தனத்தால் மாய்ந்தார். ஆனால் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார். இதேபோன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கப்பலோட்டிய தமிழனுக்கு நெல்லைச் சீமையிலே ரூ.75 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைத்து பெருமை சேர்த்தார்கள். திருப்பூர் குமரனின் நினைவுகளை நின்று நிலைபெற வழிவகுத்தார்கள். பெருந்தலைவர் காமராஜருக்குப் பெரும்புகழ் சேர்க்க அவரது நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்தினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி இரட்டைமலை சீனிவாசனார் அவர்களுக்கு ரூ.19.5 இலட்சம் செலவில் சென்னையில் மணி மண்டபமும், வீரன் சுந்தரலிங்கனாருக்கு தூத்துக் குடியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் மணிமண்டபமும், தென்னகத்து நேதாஜியாக வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் மதுரை திருநகர் இல்லத்தை ரூ.22.59 இலட்சம் செலவில் நினைவு இல்லமாக மாற்றவும் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக உழைத்த தியாகிகளின் நினைவு மக்கள் நெஞ்சில் என்றென்றும் நிலை பெற்று வாழ இத்தகைய சிறப்புமிக்கத் திட்டங்களை நிறைவேற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழி நடப்போம்" எனக் குறிப்பிட்டார்.

அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் உரையாற்றும் போது, "கொங்கு மண்டலத்திலிருந்து வெள்ளையர்களை வெளியேற்ற வித்திட்ட தீரன் சின்னமலையின் பெயரை உலகுக்கு தெரியவைத்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். மதம், இனம் மறந்து அனைத்து சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் ஒய்வூதியம் வழங்கி வருகிறார்கள். 1991 முதல் 1996 வரை ஆட்சியில் இருந்தபோது தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் விழா எடுத்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். ஆனால் அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் தீரன் சின்னமலையின் புகழுக்கும், பெருமைக்கும் எவ்விதத்திலும் பாடுபடவில்லை. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நாட்டிற்கு உழைத்த தியாகிகள், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பெருமையும் புகழும் சேர்த்து வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது'' என்று குறிப்பிட்டார்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப. வரவேற்றார். இவ்விழாவில்,தமிழ்நாடு சிமெண்ட் கழகத் தலைவர் திரு. கே. பழனிசாமி, சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. சிந்து ரவிச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, திரு. பி. சிதம்பரம், திரு. கே.சி. கருப்பண்ணன், திருமதி. செல்வி முருகேசன் மற்றும் தீரன் சின்னமலை விழாக்குழு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. ஆடிட்டர் மு. பாலசுப்பிரமணியன், திரு. பெஸ்ட் ராமசாமி, திரு. ஆர்.தேவராஜ், திரு. ச. பாலகிருஷ்ணன், திரு.சி.மோகன் தேவ சேனாதிபதி,திரு. எம். கொற்றவேல், திரு. கே. ஜெயராமன் உட்பட குழு உறுப்பினர்கள், வாரிசுதாரர்கள் கலந்து கொண்டனர். விழா முடிவில், ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திருமதி. இரா. கஜலட்சுமி நன்றி கூறினார்.

தியாகங்களை பல பேர் செய்திருக்கலாம். ஆனால் செய்த தியாகத்தை மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற வீரர்கள் வாழ்க்கை வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்வது அரசின் கடமையாகும். அதன் அடிப்படையில் தான் தீரன் சின்னமலை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது வீரத்தையும் அவரைப் பெற்றிருந்த இம்மாவட்ட மக்களின் எண்ண உணர்வுகளை மதிக்கின்ற வகையில் விழா எடுத்து சிறப்புச் செய்த தமிழக அரசிற்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கும் இம்மாவட்ட மக்கள் குறிப்பாக, கொங்கு இன மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
ஈரோடு.

* * *



# சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள்



**2004** ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழக கடற்கரைப் பகுதிகளைத் தாக்கிய சுனாமி ஆட்கொல்லிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமும், மறுவாழ்வும் அளிப்பதற்கு என்னுடைய அரசு மேற்கொண்ட அசாதாரண முயற்சிகளை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். என்னுடைய அரசு மிகக் கவனமாகத் திட்டமிட்டு மேற்கொண்ட நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள், உலக அளவில் பாராட்டுதல்களைப் பெற்றன. என்னுடைய அரசின், சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட அசாத்திய முயற்சிகளால் தான் இது சாத்தியமாயிற்று என்பதை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மும்பையைத் தாக்கிய பேரிடரையும், அமெரிக்காவின் நியு ஆர்லியன்ஸ் பகுதியைத் தாக்கிய 'காத்ரீனா' சூறாவளியையும் தொடர்ந்து உருவான நிலைமையுடன், சுனாமியின் தாக்குதலுக்குப் பிறகு இங்கு இருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இது எளிதில் புலனாகும். இதுபோன்று ஒரு பேரிடர் தாக்கும் போது, உடனடியாகச் செயல்பட்டு நடவடிக்கை எடுப்பதும், பரந்துபட்ட அளவில் நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதுமே மிக முக்கியம். சுனாமிப் பேரழிவின் போது என்னுடைய அரசு உடனடியாகச் செயல்பட்டு மின்னல் வேகத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டதுதான் என்னுடைய அரசுக்கு உலகளாவிய பாராட்டுக் கிடைத்ததற்கு முக்கியக் காரணம் ஆகும்.

நான் முன்னரே இந்த அவையில் குறிப்பிட்டதைப் போல, நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. முதல் இரண்டு கட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டன. நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகளான மூன்றாம் கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. என்னுடைய அரசு பின்பற்றவிருக்கின்ற வீட்டுவசதிக் கொள்கைக் குறித்து நான் சென்ற கூட்டத் தொடரில் இம்மான்றத்தில் அறிவித்தேன். இது முழுக்க முழுக்க தன்னார்வ அடிப்படையிலானது என்பதால் இது அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. இதற்கு நல்ல ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது. வீட்டுவசதி மற்றும் கிராம நிர்மாணத் திட்டத்திற்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு, தற்போது பெரிய அளவில் வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனோடு கூடவே, புதிய குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் அதி வேகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், 45,892 புதிய வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதோடு, 7,411 வீடுகள், அவற்றின் உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் வசித்து வரும் சிலரது வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும் கூட, அவர்களுக்காக மேலும் 43,314 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அந்த இடத்தை விட்டு வெளியேறி வேறு இடங்களில் குடியேற அவர்கள் காட்டும் விருப்பத்தைப் பொறுத்தே இது செயல்படுத்தப்படும். இவ்வாறாக, மீண்டும் வீடுகள் கட்டித் தருவது மற்றும் மறுவாழ்வு தொடர்பான மாபெரும் பிரச்சினையை நாங்கள் வெற்றிகரமாகச் சமாளித்துள்ளோம். இந்த முயற்சியில் அரசு சாரா அமைப்புகளின் முழு ஆதரவையும் நாங்கள் பெற்றுள்ளோம்.

சுனாமி துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு, உள்ளபடியே, என்னுடைய அரசின் குறிப்பிடத் தகுந்ததொரு சாதனையாகும். தற்போது மீண்டும் முழுமையான இயல்பு நிலை திரும்பியுள்ளது.



இதுவரை, தமிழக அரசால் 19,323 பழுதடைந்த படகுகள் சீரமைக்கப்பட்டுள்ளன; 16,581 புதிய படகுகள் வழங்கப்பட்டுள்ளன. 38,144 மீனவர்களுக்குப் புதிய மீன் பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2,750 மோட்டார் இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இவ்வகையில், 141.23 கோடி ரூபாய் தமிழக அரசால் செலவிடப்பட்டுள்ளது.

இது தவிர, அரசு சாரா மற்றும் இதர நிறுவனங்கள் மூலமாக 3,875 மீனவர்களுக்கு புதிய படகுகளும், பழுதடைந்த படகுகள் சீரமைத்தும் வழங்கப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை அமைவதை உறுதிப்படுத்த, நீண்ட கால அடிப்படையிலான மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள, தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக, உலக வங்கியிடமிருந்தும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்தும் நாங்கள் கூடுதல் உதவியைப் பெற்றுள்ளோம். இந்தப் புதிய திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படும்.

இந்த நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகளில் தமிழக அரசுக்கு ஆதரவளிக்க, பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் மிகுந்த ஆர்வத்துடன் முன் வந்துள்ளன. உலக வங்கி, 423 மில்லியன் டாலர் அதாவது 1,852.74 கோடி ரூபாய் அளவிலான ஆதரவுத் தொகுப்புதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியும் 143.75 மில்லியன் டாலர் அதாவது 629.63 கோடி ரூபாய் அளவிலான ஆதரவுத் தொகுப்புதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டமும் (UNDP) இதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை நல்கி வருகிறது. இவ்வாறாக, பெரிய அளவிலானதொரு மறுவாழ்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், பாதிக்கப்பட்ட அனைவருடைய வாழ்க்கை பெரிதும் மேம்படுத்தப்படுவதுடன், அப்பகுதி முழுவதிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், வீட்டு வசதிகளும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு சமுதாயச் சொத்துகள் உருவாக்கப்படும். சுருக்கமாக சொல்வதானால், மக்கள் அனைவரும் மன நிறைவு கொள்கின்ற விதத்தில், பாதிக்கப்பட்ட பகுதி முழுவதும் ஒரு புதுப்பொலிவு பெறும். இந்த மறுவாழ்வுத் திட்டத்தினை விரைவிலேயே செயல்படுத்திட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக என்னுடைய அரசு இதுவரை 1,120.88 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. அதில், இதுவரை 859 கோடி ரூபாயை எனது அரசு விடுவித்துள்ளது. ஆனால், மத்திய அரசு, இதுவரை, 625.70 கோடி ரூபாய் மட்டுமே மாநில அரசுக்கு விடுவித்துள்ளது. இவ்வாறு, நிதி முழுவதுமாக வழங்கப்படாமல் இருக்கும் போது, விடுவிக்கப்பட்ட தொகைக்கான செலவு விவரங்களைத் தமிழக அரசு அளிக்க வேண்டுமென பொறுப்பற்ற முறையில் இங்கே பிரச்சினை எழுப்புவது, கேள்வி கேட்பது எனக்கு மிகுந்த வியப்பையும், வேதனையும் அளிக்கிறது. என்னுடைய தலைமையிலான தமிழக அரசு அரிய சாதனை படைத்திருக்க, அதில் குறை கண்டுபிடிக்க முற்படும் இத்தகையப் போக்கு மக்களிடையே எடுபடாது. எனது அரசு செய்துள்ள நல்ல பணிகள் பற்றி மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, வீண் அவதூறுகளைக் கூறி மக்களை ஏமாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
28.9.2005 அன்று சட்டமன்றப் பேரவையில்
அளித்த விளக்கம்





# தமிழ்நாடு முதலமைச்சர் XI அணிக்கு வெற்றிக்கோப்பை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் • நேரில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.10.2005 அன்று, தலைமைச் செயலகத்தில், நல்லெண்ண அடிப்படையில் 29.9.2005 அன்று, சென்னை, சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் XI மற்றும் தெற்கு ஆஸ்திரேலிய தலைமை அமைச்சர் XI ஆகிய இரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் காட்சிப் போட்டியில், வெற்றி வாகை சூடிய தமிழ்நாடு முதலமைச்சர் XI அணியின் தலைவர், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திரு. கே. ஸ்ரீகாந்த் அவர்களிடம் வெற்றிக் கோப்பையினை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, தெற்கு ஆஸ்திரேலிய தலைமை அமைச்சர் திரு.மைக் ரான் (The South Australian Premier Mr.Mike Rann) அவர்கள், 29.9.2005 அன்று, சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசியபோது, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றின் வியாபாரம், வர்த்தகத் தொடர்பு மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம் தொடர்பாக கலந்துரையாடினார். அன்றைய தினம், சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கத்தில் தெற்கு ஆஸ்திரேலிய தலைமை அமைச்சர் XI மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் XI ஆகிய இரு அணிகளுக்கு இடையே நல்லெண்ண அடிப்படையிலான கிரிக்கெட் காட்சிப் போட்டி நடைபெற்றது.

இந்த கிரிக்கெட் காட்சிப் போட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் XI அணியின் சார்பில் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திரு.கே. ஸ்ரீகாந்த் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்களும், தெற்கு ஆஸ்திரேலிய தலைமை அமைச்சர் XI அணியின் சார்பில் தெற்கு ஆஸ்திரேலியா தலைமை அமைச்சர் திரு.மைக் ரான் மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் தலைவர் திரு.டேரன் லேமென் (Mr.Darren Lehmann) மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இந்தப் போட்டியில், தமிழ்நாடு முதலமைச்சர் XI அணி 20 ஒவர்களில் 129 ரன்கள் எடுத்து வெற்றி வாகை சூடியது. பின்னர் விளையாடிய தெற்கு ஆஸ்திரேலிய மாகாண தலைமை அமைச்சர் XI அணி 20 ஒவர்களில் 109 ரன்கள் மட்டுமே எடுத்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் XI அணிக்கான வெற்றிக் கோப்பையை, அணியின் தலைவர் திரு.கே. ஸ்ரீகாந்த் அவர்களிடம் 6.10.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் XI அணியைச் சார்ந்த மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விளையாட்டு வீரர் திரு.எல். சிவராமகிருஷ்ணன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு.ஆர்.ராஜகோபால், இந்து பத்திரிகையின் தலைமை ஆசிரியர் திரு.என்.ராம், தொழிலதிபர் திரு.என்.சந்தானம், திரு.பாஸ்கர் நியோகி, திரு.விஜயராகவன், திரு.சங்கர் ராவ், திரு.ரோஹித், திரு.தபாரக் பெய்க், திரு.யு.பிரபாகர் ராவ், திரு.காசி விசுவநாதன் ஆகியோர் உடன் இருந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் தனது மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

□ □ □

# 110 காவல் ஆய்வாளர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பன்மடங்கு அதிகரித்துள்ள காவல் துறையின் பணிச் சுமையை எதிர்கொள்ளவும், காவல் திறனை மேம்படுத்தவும், குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் புதிய உட்கோட்டங்களுக்காக காவல் துறையில் 100 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று, 15.3.2005 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தவாறு, இப்பணியிடங்கள் உருவாக்கப் பட்டு, பணி முதிர்வு அடிப்படையிலும், பதவி உயர்வுக்கான நடைமுறை விதிகளை அனுசரித்தும், 110 காவல் ஆய்வாளர்களுக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005–2006ஆம் ஆண்டுக்கான காவல் துறை மற்றும் தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து 15.3.2005 அன்று பேசியபோது, காவல் துறையினரின் பணிச் சுமை பன்மடங்கு அதிகரித்துள்ளதைக் கவனத்திற் கொண்டு அதனை எதிர்கொள்ளவும், காவல் திறனை மேம்படுத்தவும், குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் புதிய உட்கோட்டங்களுக்காக காவல் துறையில் 100 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு, 'க்யு' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, காவல் பயிற்சிக் கல்லூரி, மாவட்டங்களில் செயல்படும் குற்றத் தடுப்புப் பிரிவுகள் மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறைகள் ஆகியவற்றில், கூடுதலாக 60 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவன்றி, காவல் பணி சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் தமிழகம் முழுவதும் புதிதாக 40 புதிய உட்கோட்டங்களை ஏற்படுத்தி அவற்றுக்கென 40 காவல் துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

28.9.2005 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில், இதுகுறித்துப் பேசப்பட்டு 100 காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு இதுகாறும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூடுதலாக 100 துணைக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கான அரசாணைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டன என்றும், இவ்வகையில் பதவி உயர்வு பெறுகின்ற காவல் ஆய்வாளர்களின் பட்டியல் காவல் துறைத் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது என்றும் பதிலளித்தார்கள். மேலும், இந்தப் பட்டியல் அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், தொடர்ந்து முறையான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்கள்.

இதன் அடிப்படையிலும், காலியிடங்களைக் கருத்தில் கொண்டும், பணி முதிர்வு மற்றும் பதவி உயர்வுக்கான நடைமுறை விதிகளை அனுசரித்து தற்போது 110 காவல் ஆய்வாளர்களுக்கு காவல் துணைக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாறு பதவி உயர்வு பெற்றவர்கள் பணியாற்ற வேண்டிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுப் பணி நியமன உத்தரவுகள் அரசால் வழங்கப்படும்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை சுட்டுக் கொன்றது, சட்டம் ஒழுங்கை சிறப்புறப் பராமரிப்பது, குற்றங்களைத் தடுத்து, குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தருவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் தமிழகக் காவல் துறை தனித்தன்மையுடன் இந்தியாவிலேயே முதன்மையானது என்ற பெருமையை ஈட்டி வருகிறது. தற்போது, ஒரே சமயத்தில் 110 காவல் துறை ஆய்வாளர்களுக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கி உள்ள ஆணைகளால், காவல் துறையின் செயல்பாடுகள் மேலும் மேம்பாடு அடைவதுடன், பதவி உயர்வால் காவல் துறையினர் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் மக்கள் பணியில் முனைப்புடன் செயலாற்றுவார்கள் என்பது உறுதி.

★



# கரும்புக்கான அரசின் பரிந்துரை விலை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
**26.9.2005 அன்று சட்டப் பேரவையில்**
**அளித்த விளக்கம்**



விவசாயிகள் நலன் மற்றும் மேம்பாட்டைப் பேணிக் காத்திட என்னுடைய அரசு எப்போதுமே மிக உயரிய முன்னுரிமையை அளித்து வருகிறது. விவசாயப் பணியில் ஈடுபட்டு, கடுமையாகப் பாடுபட்டு வரும் விவசாயிகளுக்கு, அவர்களது உழைப்புக்கு ஏற்ற ஆதாயமான விலைகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது எனது அரசின் எண்ணம் ஆகும். இதனை நிறைவேற்றும் வகையில், பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைப்பதை உறுதி செய்திட முனைப்பான நடவடிக்கைகள் பலவற்றை எனது அரசு எடுத்து வந்துள்ளது. இதே அடிப்படையில்தான், கரும்புச் சாகுபடி செய்யும் விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்யும் கரும்புக்கு ஆதாயமான விலை பெற்றிடும் வகையில், மாநில அரசின் பரிந்துரை விலையை (State Advised Price) 16.9.2005 அன்று நான் அறிவித்தேன்.

சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கும் கரும்புக்கு, ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கிடைக்க வேண்டும் என்பது கரும்பு விவசாயிகளின் நீண்ட நாள் கனவாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில், 2004 ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்றம், கரும்பு விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக அளித்த தீர்ப்பின் அடிப்படையில், கரும்புக்கு குறைந்த பட்ச விலையாக டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் என்றும், சராசரி 9 சதவிகித பிழி திறனுக்கு மேற்படும் ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கும் ஊக்கத் தொகையாக 8.80 ரூபாய் வீதம் கூடுதலாக வழங்கப்படும் என்றும் எனது அரசு தனது பரிந்துரை விலையாக நிர்ணயித்தது. மத்திய அரசு, சராசரி 9 சதவிகித பிழி திறன் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு 795 ரூபாய் மட்டுமே நிர்ணயித்துள்ள போதிலும், தமிழக கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 1,014 ரூபாய் என்ற உயர் அளவில் எனது அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து சர்க்கரைத் தொழிலைச் சீரமைக்க மிகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. "எத்தனால்" உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட உபபொருட்களை(Value added by-products) உற்பத்திச் செய்தல், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக சர்க்கரைத் தொழிலை சீரமைப்பதில் எனது அரசு தனிக் கவனம் செலுத்தியது. இதன்படி, சர்க்கரை ஆலைகள் தங்களது செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதால், கரும்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள பரிந்துரை விலை வழங்கும் நிலையை எட்டியுள்ளது.

சர்க்கரை ஆலைகளின் திறம்பட்ட செயல் திறன் மற்றும் கரும்பு விவசாயிகளுக்கான ஆதாய விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நடப்பு அரவைப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் கரும்பின் விலை நிர்ணயம் செய்தல் குறித்து, கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலை நிருவாகத்தினருடன் எனது அரசு ஒன்றரை மாத காலம் ஆலோசனை நடத்தியது. 'எத்தனால்' உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு அரசு வழங்கியுள்ள அனுமதி, இணை

மின் உற்பத்தி (Co-generation of power) செய்வதற்கான அனுமதி, சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சர்க்கரை ஆலைகளால் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கரும்புக்கான ஆதாய விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எனது அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 1,014 ரூபாய் என்ற விலையை பரிந்துரை செய்தது. கரும்பு விவசாயிகள் அனைவரும் இந்தப் பரிந்துரை விலையால் மகிழ்ச்சி வெள்ளத்தில் இருக்கும் இத்தருணத்தில் இதனைக் கண்டு பொறுக்க முடியாத எதிர்க்கட்சிகள், அதிலும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. முதலில் தங்கள் ஆட்சிக் காலத்திலேயே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்கியது என்ற உண்மைக்கு மாறான வாதத்தை வைத்தது. அது உண்மை அல்ல என்பதை ஆணித்தரமாக சட்டமன்றப் பேரவையில் நான் எடுத்துக் கூறிய பின், தற்போது தனியார் சர்க்கரை ஆலைகள் அரசால் அறிவிக்கப்பட்ட பரிந்துரை விலையை வழங்குவதை எவ்வாறு உறுதி செய்ய முடியும் என்ற ஒரு குதர்க்கவாதத்தை எழுப்புகின்றனர்.

இந்தத் தேவையற்ற வாதத்தை வைப்பவர்களிடம் நான் ஒரே ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். நீங்கள் தயவு செய்து உச்ச நீதிமன்றத்தின் ஆணையைத் தெளிவாகப் படித்துப் பார்த்தும், புரிந்து கொண்டும், அதன் பிறகு பேச வேண்டும். உச்ச நீதிமன்றம் தனது 5.5.2004ஆம் நாளிட்ட ஆணையில் கூறியிருப்பது இதுதான்.

"Although the State Advised Price has no sanction of law, the action of the State Government in notifying the State Advised Price and advising the sugar factories to comply with the same is not per se illegal. The State Advised Price can serve as the framework within which the agreément as to price can be reached between the cane growers and the sugar producers. Therefore, the orders issued by the State Government / Cane Commissioner communicating the fixation of State Advised Price need not be set aside.

There is no legal taboo against the State. Government machinery playing a role in evolving an agreement between the cane growers and the sugar producers as to the price, without adopting any coercive methods.

Once the occupier of sugar factory reaches an agreement with the cane grower - may be on the persuasion of the state authorities, to pay the price equivalent to State Advised Price either by executing a formal agreement in this behalf or otherwise, the occupier of the factory is bound to pay such price and in case of default it can be recovered by the State authorities by coercive process laid down in the Statute."

அதாவது "மாநில அரசு பரிந்துரை விலைக்கு சட்ட அதிகாரம் இல்லை என்றாலும் கூட, மாநில அரசு தனது பரிந்துரை விலையை அறிவித்து, அதனைப் பின்பற்றுமாறு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறும் செயல் சட்ட விரோதமானது ஆகாது. அரசு பரிந்துரை விலை, கரும்புச் சாகுபடியாளர்களுக்கும், சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கும் இடையே, விலைத் தொடர்பாக ஓர் உடன்படிக்கை ஏற்படுவதற்கான வரைத்திட்டமாகப் பயன்படலாம். ஆகவே, அரசு பரிந்துரை விலையை நிர்ணயம் செய்து மாநில அரசு அல்லது சர்க்கரை ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளை நீக்கறவு செய்ய வேண்டியதில்லை.

வலுக்கட்டாய முறை எதையும் பின்பற்றாமல், கரும்புச் சாகுபடியாளர்களுக்கும், சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கும் இடையே விலைத் தொடர்பாக, உடன்படிக்கை ஏற்பட அரசு இயந்திரம் ஒரு கருவியாக இருப்பதற்குச் சட்டத் தடை எதுவும் இல்லை.

சர்க்கரை ஆலை அனுபோகதாரர் ஒருவர், முறைப்படியான உடன்படிக்கையின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ, அரசு பரிந்துரை விலைக்குச் சமமான விலையை அளிப்பது தொடர்பாக – இது அரசு அதிகாரிகள் அறிவுறுத்தி, இணங்க வைப்பதன் பேரில் கூட இருக்கலாம் – கரும்புச் சாகுபடியாளர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்வாரேயானால், அந்த அனுபோகதாரர், அந்த விலையைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆவார். அவ்வாறு அவர் கொடுக்கத் தவறினால், மாநில அரசு அதிகாரிகள், சட்டத்தில் வகைச் செய்யப்பட்டுள்ள கட்டாய நடவடிக்கைகள் மூலம் அத்தொகையை வசூலிக்கவும்" – என உச்சநீதிமன்ற ஆணையில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

எனது அரசால் அறிவிக்கப்பட்ட பரிந்துரை விலையை வழங்குவது மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய உரியத் தொகையை குறித்த காலத்தில் வழங்குவது, ஆகியவை தொடர்பான வழிமுறைகளை வகுக்க தனியார் சர்க்கரை ஆலை நிருவாகிகளுடன் 6.10.2005 அன்று அமைச்சர்கள் நிலையில் கூட்டம் ஒன்று கூட்டப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✶



# கோவை மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள்

உடுமலை ஊராட்சி ஒன்றியம், போடிபட்டி ஊராட்சியில், மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு மற்றும் அன்னை தெரசா சுயஉதவிக் குழு ஆகிய குழுவினர் ஸ்டெபிலைசர் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தயாரிப்பில் உருவாகும் மின்னனு தானியங்கி வோல்டேஜ் ஸ்டெபிலைசருக்கு "ஐ கேர்" என பெயரிடப்பட்டுள்ளது.

இக்குழுவினர்களுக்கு மின்னனு தானியங்கி வோல்டேஜ் ஸ்டெபிலைசர் தயாரிப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு அவ்வப்பொழுது தகுந்த தொழில்நுட்பங்களைப் பற்றிய விவரங்கள் அளிக்கப்படுகிறது. இதன் பயனாக இக்குழுவினர்களுக்குப் பொருளாதாரக் கடனாக தலா ரூ.2 இலட்சம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கேபினெட் அச்சு செய்வதற்கு ரூ.3 இலட்சத்து 28 ஆயிரமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு கட்டமைப்புப் பணிகள் ஏற்படுத்தி உற்பத்தியை ஊக்கப்படுத்தியதன் பயனாக நாளொன்றுக்கு ரூ.50 வீதம் மாதந்தோறும் நபர் ஒருவருக்கு ரூ.1,500 கிடைக்கிறது.

மேலும், இக்குழுவினர் தயாரித்து உருவாகும் 'ஐ கேர்' மின்னனு தானியங்கி வோல்டேஜ் ஸ்டெபிலைசரை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக, மாவட்டத்தில் உள்ள அனைத்து மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லரை வியாபாரிகளை அழைத்து, இக்குழுவினரின் தயாரிப்பான 'ஐ கேர்' ஸ்டெபிலைசரைப் பற்றிய விவரங்களை தெரிவித்ததன் பேரில் மொத்த கொள்முதல் கிடைக்கப் பெற்றுள்ளனர். மேலும், மின்னனு தானியங்கி வோல்டேஜ் ஸ்டெபிலைசர் தயாரிக்கும் பிரபல நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களின் பெயர்களை இம்மகளிர் சுயஉதவிக் குழுவினரால் தயாரிக்கப்படும் ஸ்டெபிலைசர்களில் பொருத்தினால் மொத்த கொள்முதல் செய்வதாகவும் உறுதியளித்துள்ளனர்.

## மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சாதனை

கோவை மாவட்டம், உடுமலை ஊராட்சி ஒன்றியம், பெரியகோட்டை ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மையைத் திறம்படச் செயல்படுத்தி இயற்கை உரம் தயாரிப்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சாதனைபடைத்து வருகின்றனர்.

அம்பேத்கர் மகளிர் சுயஉதவிக் குழு, செண்பக மலர் மகளிர் சுய உதவிக் குழு, செவ்வந்தி மலர் மகளிர் சுய உதவிக் குழு ஆகிய மூன்று மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இக்குழுவில் 37 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவினர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயலாக்க விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மேலும், கர்நாடக மாநிலம் மைசூர் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தை, இக்குழு நேரில் சென்று பார்வையிட்டு வந்தது. இக்குழுவினர்களுக்கு இயற்கை உரம் தயாரிப்பு தொடர்பான முறையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை 29.9.2005 அன்று, தலைமைச் செயலகத்தில் சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டின் கான்சுல் ஜெனரல் யோஷியாகி கோடாகி (Yoshiaki Kodaki, Consul General of Japan in Chennai) மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.



கடந்த 30 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை நகராட்சிப் பகுதிகளில் கொட்டப்பட்டு வரும் குப்பைகளையும், ஊராட்சிப் பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம சேகரிக்கப்படும் குப்பைகளையும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாகத் தரம் பிரிக்கப்பட்டு அக்குப்பைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் வழங்கப்பட்ட சல்லடைகளைக் கொண்டு சலித்து இ.எம். தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவினரால் தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நற்சான்றிதழ் வழங்கியுள்ளது.

மேலும், இக்குழுவினர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.3 இலட்சம் பொருளாதாரக் கடன் உதவியும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மின்மோட்டார் வைத்து குப்பைகளைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் கட்டடம் ரூ.6 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவினரால் தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை இம்மகளிர் சுயஉதவிக் குழுக்களே நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை போன்ற மலைப் பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் டன் ஒன்றுக்கு ரூ.400 வீதம் வழங்கப்படுகிறது. மின் கட்டணம், பராமரிப்புச் செலவு நீங்கலாக தனி நபர் ஒவ்வொருவரும் தலா ரூ.800 வீதம் வருவாய் ஈட்டுகின்றனர்.

**செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கோயம்புத்தூர்.**

* * *



# கன்னியாகுமரி மாவட்டம் நெய்யாறு இடது கரை கால்வாய்த் திட்டம்

**கே**ரள மாநிலத்தினைச் சேர்ந்த, திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள நெடுமன்காடு மற்றும் நெய்யாட்டின்காரா வட்ட விவசாயிகள் மற்றும் தமிழ்நாட்டினைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவன்கோடு வட்ட விவசாயிகள் ஆகியோரின் பாசனத் தேவைக்காக, நெய்யாறு பாசனத் திட்டம் முன்னாள் திருவாங்கூர்–கொச்சி மாநிலத்தால் தயாரிக்கப் பட்டது.



திட்டத்தின் முதல் கட்டமாக, கல் அணை மற்றும் வலது கரைக் கால்வாய் ஆகியவை கட்டி முடிக்கப் பட்டன. திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, இடது கரைக் கால்வாய் கட்டுமானப் பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம், 1965ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்தப் பாசனப் பரப்பு 38,000 ஏக்கர் ஆகும். இதில், 28,800 ஏக்கர் கேரளாவிலும், 9,200 ஏக்கர் தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளன. எனினும், தமிழ்நாட்டில் இதுவரையில் 6,150 ஏக்கர் மட்டுமே பயனடைந்து வருகிறது.

1956–ஆம் ஆண்டு மாநிலங்களைத் திருத்தியமைக்கும் சட்டத்தின் விளைவாக, கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவன்கோடு வட்டத்தில் இந்த இடது கரைக் கால்வாய் ஆயக்கட்டுகள் அமைந்துள்ளன. இடது கரைக் கால்வாய் மூலம் பாசனவசதி பெறும் கேரள மற்றும் தமிழகத்தின் விளவங்கோடு வட்ட நிலங்களுக்கு, நெய்யாறு அணையிலிருந்து தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு விடுவிக்கப்படும் நீர் இப்பகுதிகளில் அமைந்துள்ள நிலங்களின் விகிதாச்சாரப்படி அதாவது, 4,020 எக்டேர் : 3,725 எக்டேர் என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இடதுபுறக் கால்வாய் மூலம் தமிழகத்தின் விளவங்கோடு வட்டத்திற்கு அளிக்கப்படும் தண்ணீரின் அளவு, ஆயக்கட்டு விகிதப் படி 3,725/7,745 ஆக இருக்கும். அதாவது விடுவிக்கப்படும் மொத்த நீரில் தமிழகத்தில் உள்ள விளவங்கோடு பகுதிக்கான பங்கு 48 சதவிகிதம் ஆகும்.

இத்திட்டம் முடிக்கப்பட்ட போதிலும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங் களுக்கிடையே நீர்ப் பகிர்வு மற்றும் தொகை பகிர்வுக்கான ஒப்பந்தம் ஏதும் இல்லை. 1968 இல் கேரள அரசு ஒழுங்குமுறை விதிகளை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்தது. எனினும், தமிழ்நாடு அரசு, கேரள அரசு கணக்கிட்டுத் தெரிவித்த முதலீட்டுத் தொகையில், தமிழக அரசின் பங்குத் தொகையான 54.14 இலட்சம் ரூபாய் செலுத்த ஒப்புக்கொண்டபோது, நெய்யாறு இரண்டாவது கட்டப் பணிகளுக்கான செலவினைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் நீர்ப் பங்கீடு செய்வதற்கான விதிகளை ஏற்படுத்துதல் குறித்து முறையான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழ்நாடு கருத்து தெரிவித்தது. இதற்கிணங்க, தமிழ்நாடு அரசு 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு மற்றும் நீரை தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்கான ஒரு வரைவு ஒப்பந்தத்தைத்

தயாரித்து, கேரள அரசின் இசைவைக் கோரியது. இந்த ஒப்பந்தத்தில் முதலீட்டுத் தொகையைப் பங்கிட்டு கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டதைப் போலவே, பராமரிப்புச் செலவினைப் பங்கீடு செய்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு 9,200 ஏக்கராக இருந்தபோதிலும், பாசனத்திற்காக 150 கன அடி நீரை தமிழக எல்லையில் அனுப்புவதற்கு கேரள அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன்படி, நெய்யாறு திட்டத்திற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கிடையில், தமிழ்நாடு–கேரள அரசுகளின் பாசன அமைச்சர்களிடையே திருவனந்தபுரத்தில், 13.2.2003 அன்று நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையின் போது நெய்யாறு திட்டம் பற்றியும் பேசப்பட்டது. தமிழ்நாடு அனுப்பியுள்ள வரைவு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து, அவ்வரசின் முடிவு தமிழ்நாட்டிற்குத் தெரிவிக்கப்படும் என்று, கேரள அரசின் நீர் ஆதாரத்துறை அமைச்சர் அச்சமயம் தெரிவித்தார். ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக கேரள அரசுடன் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப் பட்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி மத்திய அரசையும் தமிழ்நாடு அரசு அணுகியது. கேரளா மற்றும் தமிழ்நாடு அதிகாரிகளிடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய நீர் வளக் குழுமத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்காததினால், மத்திய நீர் ஆதார அமைச்சகம் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை என்றும், 13.2.2003 அன்று, அமைச்சர்கள் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைச் சுட்டிக்காட்டி, மேற்கொண்டு பேச்சுவார்த்தையின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனவும், அதற்கு மத்திய நீர் வள குழுமம் முழு ஒத்துழைப்பை நல்கும் எனவும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தனது 30.5.2003ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தது.

கேரள அரசிடமிருந்து பதில் வரப் பெறாத நிலையில், 5.7.2005 அன்று, தமிழக அரசின் தலைமைச் செயலரிடமிருந்து கேரள அரசின் தலைமைச் செயலருக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டது. இக்கடிதத்தில், பிப்ரவரி 2004 முதல் தமிழ்நாட்டின் பாசனப் பகுதிக்குத் தேவையான நீர் அளிக்கப் படவில்லை என்பது விவரமாக எடுத்துரைக்கப்பட்டு, கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து நெய்யாறு கால்வாய் மூலம் கன்னியாகுமரி மாவட்டம் விளவன்கோடு தாலுக்கா பகுதியில் இந்த ஆண்டாவது அதாவது, 2005ஆம் ஆண்டு பாசனம் செய்ய ஏதுவாக நீரை வழங்கும்படியும் மற்றும் தமிழ்நாட்டின் வரைவு ஒப்பந்தத்திற்கு இசைவு அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 21.7.2005 அன்று கேரள அரசின் பாசனம் மற்றும் சட்டமன்ற விவகாரத்துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், நெய்யாறு அணையிலிருந்து நெய்யாறு கிளைக் கால்வாய் வழியாக நீர் விடுவிக்கப் படாததினால், கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவன்கோடு பகுதியில் விவசாயம் மிகவும் பாதிப்படைந்துள்ளது என்றும், அப்பகுதி விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்திற்கு நெய்யாறு ஆற்று நீரையே முற்றிலும் நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர் என்பதால், இந்த ஆண்டாவது, அதாவது 2005ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவன்கோடு பகுதி விவசாயிகள் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரை விடுவிக்க கேரள அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

16.8.2005 அன்று, தமிழக பொதுப்பணித் துறைச் செயலரிடமிருந்து கேரள அரசின் நீர் ஆதாரத் துறை முதன்மைச் செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் நீரை விடுவிக்கவும் மற்றும் தமிழ்நாடு அனுப்பிய வரைவு ஒப்பந்தத்திற்கு கேரள அரசின் இசைவைத் தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கேரள அரசு, தனது 31.8.2005ஆம் நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாட்டின் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், கேரள அரசின் இறுதி முடிவு விரைவில் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவன்கோடு வட்டப் பகுதியிலுள்ள பாசன நிலங்களுக்கு நெய்யாறு அணையிலிருந்து நீரை விடுவிக்க கேரள அரசை இணங்கச் செய்யவும் மற்றும் இதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
28.9.2005 அன்று சட்டமன்றப் பேரவையில்
அளித்த விளக்கம்





# ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்கு வேளாண் நிலம் வாங்கி வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், 2004–2005ஆம் ஆண்டு புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டம், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்கு வேளாண் நிலம் வாங்கி வழங்கும் திட்டம். எந்தவொரு திட்டமும் சாதனை அடைய வேண்டுமாயின் அவ்வகுப்பில் உள்ள பெண்களின் பொருளாதாரம் மற்றும் உரிமையினை உயர்த்தாமல் அச்சமூகத்தின் நலம் மற்றும் முன்னேற்றம் ஏற்படுத்த இயலாது. இக்கருத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், இந்த திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெற முடியும். நிலமற்ற விவசாயி, குறுவிவசாயி மற்றும் சிறுவிவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மகளிர்கள் பயன்பெற முடியும். இதற்கு ஆண்டு வருமானம் கிராமமாக இருப்பின் ரூ.18,460க்குள்ளும், நகர்ப்புறமாக இருப்பின் ரூ.28,536க்குள்ளும் இருக்க வேண்டும். 18 வயதிற்கு மேல் 55 வயதுக்குட்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறலாம். நிலமற்ற விவசாயிகளுக்கு முன்னுரிமை. மகளிர் சுயஉதவிக் குழுக்களும் விண்ணப்பிக்கலாம். சுயஉதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு முன்னுரிமை. தனி நபர்களும் விண்ணப்பிக்கலாம்.

## நிலம் வாங்குதல்

இந்தத் திட்டத்தின் மூலம், 2.50 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கிக் கொள்ளலாம். நிலம் வாங்கிக் கொள்ள ரூ.1 இலட்சம் வழங்கப்படும். இதில் 50 சதவிகிதம் மானியமாக ரூ.50,000, 50 சதவிகிதம் வங்கிக் கடன் ரூ.50,000 வழங்கப்படும். நிலம் வாங்கிக்கொள்ள அரசு நிர்ணயித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றப்படும்.

வாங்கப்படும் நிலத்தினைப் பத்திரப்பதிவு செய்வதற்காக உண்டாகும் மொத்தச் செலவினத்தில் ஸ்டாம்ப் டியூட்டி மற்றும் பத்திரப் பதிவு செய்தலில் 75 சதவிகிதம் மானியமாகவும் 25 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

## நில அபிவிருத்தி

வாங்கப்படும் நிலத்தினை அபிவிருத்தி செய்தல், நிலத்தைச் சமன்படுத்துதல், கரைகள் அமைத்தல் போன்ற பராமரிப்புப் பணிகளைச் செய்து கொள்ளலாம்.

வாங்கப்படும் நிலத்துக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள், ஆழ்துளைக் கிணறு அமைத்தல், புதிய கிணறு வெட்டுதல், பழைய கிணற்றைப் புதுப்பித்தல் போன்ற வசதிகள் மேற்கொள்ளலாம்.

நீர்ப்பாசன வசதியுடன் மின்மோட்டார் வாங்க வழிவகை உள்ளது.

மின்சார மோட்டார் பொருத்திடத் தேவையான மின்சார வசதி முன்னுரிமை அடிப்படையில் மின்சாரத் துறையிலிருந்து பெற்று தரப்படும். இதற்கான முன்வைப்புத் தொகை (டெபாசிட்) ரூ.10,000 மானியமாக தாட்கோ மூலம் வழங்கப்படும்.

நீர்ப்பாசனத்திற்குத் தேவையான பைப் லைன் விரிவாக்கமும் செய்து கொள்ளலாம்.

மேலும், நிலத்திலிருந்து விளைச்சல் பெற்று வருமானம் பெற்றிடும் முன், வங்கிக்கடன் செலுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை, 29-9-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், தென்னிந்தியாவின் பிரிட்டிஷ் தூதரகத்தின் துணை தூதர் திரு.மைக் கானர் (Thiru Mike Connor, British Deputy High Commissioner in South India) அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

கூடுதல் வருமானம் பெற்றிட கறவை மாடுகள், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற திட்டங்களும் சேர்த்து வழங்கப்படும். நில அபிவிருத்தித் திட்டங்களுக்கு நபார்டு வங்கியின் வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றப்படும். நில அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.1 இலட்சம் அலகுத் தொகையாகும். இதில் 50 சதவிகிதம் மானியம் ரூ.50,000, வங்கிக் கடன் 50 சதவிகிதம் ரூ.50,000 வழங்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம், 114 ஆதிதிராவிட மகளிரும் 1 பழங்குடியின மகளிரும் ஆகமொத்தம் 115 மகளிர் பயன்பெற்று உள்ளார்கள். 249.26 ஏக்கர் நிலம் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூபாய் ஒரு கோடியே 74 இலட்சத்து 12 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதில், ரூ.85.45 இலட்சம் மானியமும், ரூ.88.67 இலட்சம் வங்கிக் கடனும் அடங்கும்.



இத்திட்டத்தில், தமிழ்நாடு அளவில் திருவண்ணாமலை மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சத்யபிரத சாஹூ,இ.ஆ.ப., அவர்கள், இந்த திட்டத்தினைச் செயல்படுத்திட வங்கியாளர் கூட்டத்தில் தக்க அறிவுரைகள் வழங்கி, விண்ணப்பங்களை மகளிரிடம் உரிய ஆவணங்களுடன் பெற்று, குறித்த நேரத்தில் செயல்படுத்திட முயற்சிகள் மேற்கொண்டார்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை.**



# நிலத்தடி நீரை எடுக்க யாரும் அனுமதிக்கப்படவில்லை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 28.9.2005 அன்று, சட்டமன்றப்பேரவையில் அளித்த விளக்கம்



திருநெல்வேலி மாவட்டத்தில், கங்கைகொண்டான் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில் வளர்ச்சி மையத்தில், ஏற்படுத்தப்பட்டு வரும் கோகோ கோலா குளிர்பான நிறுவனத்திற்குத் தண்ணீர் வழங்குவது குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு சந்தேகங்களைத் தெரிவித்தார். எனவே, இது குறித்த உண்மை நிலையை இந்த அவைக்கும், அதன் மூலமாக தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் என்ற இடத்தில் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை அமைத்திட மத்திய அரசால் 4.5.1992 இல் அங்கீகாரம் வழங்கப்பட்டது. சுமார் 31.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட உத்தேசிக்கப்பட்ட இந்தத் தொழில் வளர்ச்சி மையத்தின் மதிப்பீட்டுத் தொகை 39.68 கோடி ரூபாயாக மாற்றி சிப்காட் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்தத் தொழில் மையம் அமைத்திட சுமார் 2,300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை, 2017.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் இதுவரை 52.79 ஏக்கர் நிலம் எட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதுவரை மூன்று நிறுவனங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. மற்ற ஐந்து நிறுவனங்கள் கட்டுமானப் பணி நிலையில் உள்ளன.

இந்த மையத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுமார் 4.04 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் காலன் லிட்டர் (45.4 இலட்சம் லிட்டர்) வரை தண்ணீர் வழங்க தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, இம்மையத்தில் 5 இலட்சம் கொள்ளவுள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி அமைத்து வழங்க திட்டம் செயல்படுத்தப்பட்டு, 4.6.2004 இல் சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மையத்தில் தொழிற்சாலை அமைக்க சவுத் இந்தியா பாட்டிலிங் கம்பெனி (பி) லிமிடெட் என்ற நிறுவனம், அமெரிக்க நிறுவனமான கோகோ கோலா கம்பெனியின் இந்தியக் கிளை நிறுவனமான இந்துஸ்தான் கோகோ கோலா கம்பெனிக்காக, கோகோ கோலா குளிர்பானம் தயாரிப்பதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டு சிப்காட்டை அணுகியது. சுமார் 30.89 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் உற்பத்தி நிலையம் அமைக்க 21.10.2004 அன்று, சிப்காட் நிறுவனத்தால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சவுத் இந்தியா பாட்டிலிங் கம்பெனி மைய அரசின் Secretariat for Industrial Assis-tance-யிடம் தொழில் தொடங்குவதற்கான அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518







மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 6.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் அமைந்துள்ள இன்வெஸ்கோ பிரைவேட் கேபிடல் நிறுவனத்தின் நிருவாகப் பங்குதாரரும், தலைமைச் செயல் அலுவலருமான பரக் சக்சேனா சந்தித்துப் பேசினார்.

சேகரிப்புத் தொட்டியில் பெறப்படும். நகராட்சிப் பகுதியில் புதிதாக 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இரண்டும், 3 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 4 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நகராட்சி வளாகத்தில் அமைக்கப்படவுள்ள நீர் சேகரிப்புத் தொட்டியிலிருந்து தற்போது உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றி மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

அருப்புக்கோட்டை நகராட்சிக்கு அருகில் உள்ள நீர் சேகரிப்புத் தொட்டியிலிருந்து காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு சிறப்பு சிற்றூராட்சிகளுக்குக் குழாய்கள் பதிக்கப்பட்டு, காரியாபட்டி சிறப்பு சிற்றூராட்சியில் 30 ஆயிரம் கொள்ளளவு கொண்ட 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், மல்லாங்கிணறு சிறப்பு சிற்றூராட்சியில் 30 ஆயிரம் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டு, இத்தொட்டிகளுக்குத் தண்ணீர் ஏற்றி பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், குழாய்களும் பதிக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, விருதுநகர் நகராட்சிக்கு 42,57,000 இலட்சம் லிட்டர், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு 54,45,000 இலட்சம் லிட்டர், மல்லாங்கிணறு ஊராட்சிக்கு 6,60,000 இலட்சம் லிட்டர் மற்றும் காரியாபட்டிக்கு 10,78,000 லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலமாக விருதுநகரில் 81,000 மக்களும், அருப்புக்கோட்டை நகராட்சியில் 95,000 மக்களும், மல்லாங்கிணறு ஊராட்சியில் 13,500 மக்களும், காரியாபட்டி ஊராட்சியில் 16,000 மக்களும் பயன்பெறுவர். மேலும், இத்திட்டத்தின் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் 67 ஊரகக் குடியிருப்புகளும் , தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 239 கடலோரக் குடியிருப்புகளில் வசித்து வரும் 2,50,000 மக்களும் பயன்பெறுவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் நிறைவுபெறும்பொழுது, அருப்புக்கோட்டை, விருதுநகர் நகராட்சிகளில் பல ஆண்டு காலமாக நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறை நீங்கி, இப்பகுதி மக்களுக்கு சிறப்பான முறையில் குடிநீர் கிடைத்திடும்.

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர் மாவட்டம்.

* * *









# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
ஐப்பசி – கார்த்திகை
மலர்: 37 இதழ்: 5
நவம்பர் 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ முழு வீச்சில் வெள்ள நிவாரணப் பணி ........ 2
★ தமிழக வெள்ள நிவாரணப் பணிக்கு ரூ.1,120 கோடி வழங்க வேண்டும் ........ 6
★ மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத் தொகுப்புதவி ........ 8
★ சென்னை மக்களுக்கு தினந்தோறும் குழாய் மூலம் தண்ணீர் ........ 10
★ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளைத் தூர் வாரிப் புனரமைக்க நடவடிக்கை ........ 13
★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு
5 சதவிகித ஊதிய உயர்வு ........ 15
★ 5 ஆண்டுகளில் சுற்றுலாத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கி இருக்கிறோம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ........ 17
★ மனித வளத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது ........ 22
★ ரூ.1,925 கோடியில், மூன்றாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ........ 25
★ சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2,000 தற்காலிகக் குடியிருப்புகள் ........ 27
★ பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும்
நிலுவைத்தொகை வழங்கும் பணி ........ 29
★ தமிழ்நாட்டிற்கு 20 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய நன்மைகளை
தமிழக அரசு 4 ஆண்டுகளில் செய்திருக்கிறது
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ........ 33
★ உழவர் பாதுகாப்புத் திட்டம் – விவசாயத் தொழிலாளர்களும், சிறு–குறு விவசாயிகளும் பயன்பெறும்
புதிய சமூகப்பாதுகாப்புத் திட்டம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ........ 37
★ தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடுகள் குறித்த சிறு புத்தகம் ........ 47
★ ஓய்வுபெற்ற மின் வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குச் சிறப்புச் சலுகை ........ 52
★ அணைகள் – கால்வாய்கள் – ஏரி – குளங்கள் ரூ.53 கோடியில் சீரமைப்பு ........ 53
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அமைதி விருது ........ 54
★ ரூ.53.38 கோடியில் மஞ்சள் மற்றும் நெல் வணிக வளாகங்கள் ........ 58
★ சென்னையில் ரூ.525 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகள் ........ 60
★ குடிசைப் பகுதியில் வசித்துவரும் 3,240 குடும்பங்களுக்குக் கிரையப் பத்திரம் ........ 62
★ கூட்டுறவு, பொதுத்துறைப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் ........ 63
★ அன்னதானத் திட்டம் மேலும் 9 திருக்கோயில்களுக்கு விரிவாக்கம் ........ 67
★ 100 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் ........ 69
★ புதுக்கோட்டை மாவட்ட மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களுக்கு அரசின் உதவிகள் ........ 73
★ நூறு சதவிகித விளைச்சலைக் கொடுக்கும்
"தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டம்" ........ 75
★ திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் இயக்கும் மினி பேருந்து ........ 79

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : மாநில உழவர் மாநாடு
**இரண்டாம் பக்க அட்டை** : பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 98ஆவது பிறந்தநாள் விழா
**நான்காம் பக்க அட்டை** : தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பவள விழா

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# முழு வீச்சில் வெள்ள நிவாரணப் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (28.10.2005)

**மா**நிலத்தில் நிலவும் வெள்ள நிலைமை குறித்து, குறிப்பாக கடந்த 2 நாட்களாகப் பெய்த அடை மழையை அடுத்து, சென்னையிலும், அதனை ஒட்டிய மாவட்டங்களிலும் நிலவுகின்ற சூழ்நிலைகளை 28–10–2005 அன்று, தலைமைச் செயலகத்தில் நான் ஆய்வு செய்தேன். சென்னை மாநகரில் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளை நேற்று நான் பார்வையிட்டு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறும், பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் இதர வசதிகளைச் செய்து கொடுக்குமாறும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கும் இதர துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டேன்.

சென்னைக்குத் தென்கிழக்கே மையம் கொண்டிருந்த வலுவான காற்றழுத்தத் தாழ்வு நிலை, வடக்கு நோக்கி நகர்ந்துவிட்டதால், சென்னைக்கு ஏற்பட இருந்த புயல் அபாயம் நீங்கிவிட்டபோதிலும், முற்றிலுமாக இயல்பு நிலை திரும்புகிற வரை தொடர்ந்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் உத்தர விட்டுள்ளேன். சென்னை மாநகராட்சி, கடந்த 24 மணி நேரத்தில் சாலைகளில் விழுந்து கிடந்த 169 மரங்களை அப்புறப்படுத்தியுள்ளது. முக்கியமான பெருவழிகளில் போக்குவரத்து மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. குப்பைகளை அகற்றுதல் மற்றும் சாலைகளில் விழுந்து கிடக்கும் மரங்களை அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அடுத்த 24 மணி நேரத்திற்குள் முடிந்துவிடும்.



வெள்ள நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து வழி நடத்துமாறு நான் பணித்திருந்த அமைச்சர்கள், தாழ்வானப் பகுதிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், உணவு மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல், சாலைத் தடைகளை அகற்றுதல், தாழ்வானப் பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை இறைத்து வெளியேற்றுதல், நீர் வழிகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை நீக்கிச் சீர்செய்தல், மின்சாரம் மீளவும் வழங்கப்படுதல் முதலானப் பணிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர். சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு உதவுவதற்காக நேற்று அனுப்பப்பட்ட 10 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும், நிவாரணப் பணிகளில் முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறார்கள். கொட்டும் அடை மழையினால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகரை ஒட்டிய திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த நகராட்சிப் பகுதிகளிலும், சிறப்பு ஊராட்சிப் பகுதிகளிலும் இதேபோன்று நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் 60 நிவாரண மையங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12 நிவாரண மையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

நேற்று நான் உத்தரவிட்டபடி, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுப் பாதுகாப்பை உறுதி செய்த பிறகு மின்சார விநியோகத்தை மீண்டும் தொடங்கியுள்ளது. மின்சாரம் பாய்ந்து மரண விபத்துகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக நேற்று மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்த 230 எண்ணிக்கையிலான 11 கே.வி. கம்பி வழித் தடங்களுள், 135 கம்பி வழித் தடங்களில், தற்போது மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக, சென்னை மாநகரில் மொத்தமுள்ள 808 கம்பி வழித் தடங்களுள், 713 கம்பி வழித் தடங்களில் தற்போது மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எஞ்சிய கம்பி வழித் தடங்களிலும் மீண்டும் மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று (28–10–2005) மாலைக்குள், சென்னை மாநகரின் பெரும்பாலான பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும்.

தாழ்வான மற்றும் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டு, சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ள 143 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நிவாரண மையங்களில் சுமார் 6 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிவாரண மையங்களில் தங்க



வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் தங்களது சொந்த வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். தேவையான அனைவருக்கும் உணவுப் பொட்டலங்களைத் தொடர்ந்து வழங்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

எவ்விதத் தடங்கலும் இன்றி, சென்னை மாநகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கலைத் தொடர்ந்து பராமரிக்குமாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். குடிநீர் மாசு படாமல் இருக்கத் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் குடிநீரை நன்கு கொதிக்கவைத்துக் குடிக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொற்று நோய்களையும், நீர் மூலமாகப் பரவும் நோய்களையும் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென நான் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ள, நடமாடும் மருத்துவக் குழுக்கள் மாநகரின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டு, தேவையானவர்களுக்கு மருத்துவ உதவி அளித்து வருகின்றன. பெரிய மருத்துவமனைகளும், புதிதாக வரும் நோயாளிகளை அனுமதித்து சிகிச்சை அளிப்பதற்கு ஆயத்தமாக உள்ளன.

சென்னை மாநகரின் பால் தேவையில் 50 சதவிகிதத்தை நிறைவு செய்து வந்த அம்பத்தூர் பால் பண்ணை, மழை நீர் தேங்கியதன் காரணமாக மூடப்பட்டுள்ள போதிலும், அதிகபட்ச அளவில் பால் வழங்குவதற்கான சிறப்பு முயற்சிகளை 'ஆவின்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அம்பத்தூர் பால் பண்ணை மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள இழப்பை சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம் பால் பண்ணையில் இருந்து கூடுதலாகப் பாலைத் தருவித்து ஈடு செய்வதற்காக, பால் வழங்கு வழித் தடங்களை மாற்றி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் பயனாக, இன்று காலையில் வழக்கம் போல பால் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. இன்று காலை 7 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக பிற்பகலில் வழங்கப்படுகின்ற 80,000 லிட்டர் பால் இன்று முழுமையாக வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

நேற்று, பெரிய அளவில் வெள்ளம் சூழ்ந்ததாலும், சாலைத் தடைகள் ஏற்பட்டதாலும், ஓரளவுக்குப் பாதிக்கப்பட்ட பேருந்துகள் பின்னர் சீர்செய்யப்பட்டு, மீண்டும் கணிசமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சாதாரண நாட்களில், நாள் ஒன்றுக்கு சராசரியாக 2,200 பேருந்துகளை இயக்கி வரும் சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகம், தற்போது 1805 பேருந்துகளை இயக்கி வருகிறது. இது, நேற்று பிற்பகலில் இருந்ததை விட சுமார் 400 பேருந்துகள் அதிகம் ஆகும். சென்னை சென்ட்ரல் நிலையம்



மட்டுமல்லாது, பேசின்பாலம், வியாசர்பாடி, திருவொற்றியூர், வில்லிவாக்கம் முதலான ரயில் நிலையங்களில் வந்து இறங்கும் பயணிகளுக்கும் வேண்டிய பேருந்து வசதிகளைச் செய்து தருமாறு பெருநகரப் போக்குவரத்துக் கழகம் அறிவுறுத்தப் பட்டுள்ளது. நேற்று, எங்கும் செல்ல முடியாமல் இந்த ரயில் நிலையங்களில் சிக்கித் தவித்த ஏராளமான பயணிகள் சிறப்புப் பேருந்துகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

வடசென்னையில், புளியந்தோப்பு, செம்பியம், பி அண்டு சி மில் மற்றும் வியாசர்பாடி, தென் சென்னையில், மடிப்பாக்கம், வேளச்சேரி போன்ற பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வருவாய், காவல்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்களோடு இணைந்து பொதுமக்களை வெள்ளப் பகுதிகளில் இருந்து மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மடிப்பாக்கத்தில் கடலோரக் காவல் படையினரும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். ராணுவத்தினரும் உதவிக்கு அழைக்கப்பட்டு அவர்கள் புளியந்தோப்புப் பகுதியில் மீட்புப் பணிகளிலும், உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வந்து சேரும் நீரின் அளவு இன்று காலை வினாடிக்கு 57,000 கனஅடியாகக் குறைந்துள்ளதாலும், காவேரி டெல்டா மாவட்டங்களில் மழை குறைந்துள்ளதாலும், நிலைமை கணிசமாகச் சீரடைந்துள்ளது. நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. போக்குவரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வர உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தேவையான இடங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

பயிர்களுக்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களையும், அவற்றை விரைந்து நிரந்தரமாக சீரமைப்பதற்கு ஆகக்கூடிய செலவுகளையும் விரிவாக மதிப்பீடு செய்யுமாறு நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் மத்திய அரசின் உதவி வேண்டி, விரிவான கோரிக்கை மனு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

**27–10–2005** அன்று, திடீரென பெருமழை பொழிந்து, சென்னையில் அந்த மழையின் அளவு மிகப் பேரளவாக இருந்தபோதிலும், இயல்பு நிலையை விரைந்து ஏற்படுத்திட நிர்வாகம், உடனடியாகவும், திறமையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்வரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகள் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. மிகக் குறுகிய காலத்தில் முழுமையான இயல்பு நிலைமையை மீண்டும் ஏற்படுத்திட அனைத்து நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ★



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 27.10.2005 அன்று, சென்னை மாநகரில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றபோது, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் குளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்பினைப் பார்வையிட்டார்கள்.

# தமிழக வெள்ள நிவாரணப் பணிக்கு ரூ.1,120 கோடி வழங்க வேண்டும்

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம் (3.11.2005)**



தமிழ்நாட்டில் பெரும் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு சேதங்களை மதிப்பிட மத்தியக் குழு ஒன்றை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

அக்டோபர் மாதத்தில் கடந்த 15 நாட்களில் தமிழ்நாட்டில் பரவலாக பலத்த மழை பெய்ததையும், அந்த மழை வெள்ளத்தில் பல மாவட்டங்கள் பாதிக்கப் பட்டதையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

காவிரி ஆற்றில் உள்ள மேட்டூர் அணைக்கு மிக அதிக அளவாக அக்டோபர் மாதம் 24ஆம் தேதி 2.24 இலட்சம் கன அடி நீர் வந்தது.

1961ஆம் ஆண்டுக்குப் பின் இந்த அளவுக்கு அதிகமாக மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வந்தது இதுதான் முதல் தடவை. இப்படி மிக அதிக அளவு தண்ணீர் வந்தபோது ஏற்கெனவே நீர் நிறைந்த நிலையில் உள்ள மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட நீராலும், ஏற்கெனவே பெய்த அதிகப்படியான மழை நீராலும் காவிரி டெல்டா மாவட்டத்தின் பகுதிகள் மூழ்க ஆரம்பித்தன.

டெல்டா மாவட்டங்களில் இப்படியொரு நிலை ஏற்பட்ட அதே நேரத்தில், சென்னை நகரில் 26.10.2005 அன்று காலை 8.30 மணி முதல் 27.10.2005 அன்று காலை 8.30 மணி வரை இதுவரை எப்போதும் பெய்யாத அளவுக்கு மிக அதிகமாக 27 செ.மீ. அளவுக்கு மழை பெய்தது.

27.10.2005 அன்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடைசி 5 மணி நேரத்தில் மட்டும் 21 செ.மீ. மழை பதிவானது. சென்னை நகரில் பெய்த மழையால்





வெள்ளக் காடாகி விட்ட சென்னை நகரத்தில் மீண்டும் 28.10.2005 அன்று 18.7 செ.மீ. மழை பெய்தது.

எனது அறிவுரையின்படி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தாழ்வானப் பகுதிகளிலிருந்தும் மழை நீர் தேங்கி நின்ற பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு உணவு, குடிநீர் போன்ற அத்தியாவசிய உதவிகள் யாவும் குறைவின்றி வழங்கப்பட்டன.

அனைத்து அமைச்சர்களையும், 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் அனுப்பி, வெள்ள மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ளச் செய்தேன்.

அனைத்து அரசு நிருவாகமும் முடுக்கி விடப்பட்டு போர்க்கால அடிப்படையிலான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

27.10.2005 அன்று, சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நானே நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டேன். சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து தமிழ்நாடு மீண்டு வரும் இந்தச் சூழ்நிலையில் கடுமையான வெள்ளத்தாலும், மழையாலும் கடந்த 15 நாட்களாக தமிழக மக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

வீடுகள் மட்டுமல்ல, சாலைகள், பாலங்கள், நீர்ப் பாசன அமைப்புகள், விவசாயப் பயிர்கள் போன்றவற்றுக்கும் மிகப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற் கொண்டு வரும் எனது அரசு ரூ.130 கோடியை ஒதுக்கி, சாலைகளைச் செப்பனிடவும், நீர்ப் பாசன அமைப்புகள் மற்றும் கட்டடங்களைப் பழுது பார்க்கவும் வழி செய்யப் பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து செய்ய மத்திய அரசின் நிதியுதவி தேவைப்படுகிறது. ஏனென்றால், தமிழக அரசின் இடர்பாடுக் கால நிதி ஏற்கெனவே செலவிடப்பட்டு விட்டதால், தேசிய இயற்கை இடர்பாடுக் கால அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்க வேண்டும். அதன் மூலம்தான் ஏற்பட்ட பாதிப்புகளைச் சமாளித்து நிவாரணப் பணிகளை செய்து தர இயலும்.

இயற்கைச் சீற்றத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுவிட்டப் பாதிப்புகளை ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டை தமிழக அரசு தயாரித்துள்ளது.

அதன் அடிப்படையில் விவரமான கோரிக்கை மனுவினை இத்துடன் இணைத்துள்ளேன். அதிலே தமிழக அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகள் குறித்தும், தேவைப்படும் மத்திய அரசின் உதவிகள் குறித்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ரூ.1,120 கோடி ரூபாய் தமிழகத்துக்கு இடர்பாடுக் கால அவசர நிதியிலிருந்து ஒதுக்க வேண்டும்.

மத்திய அரசின் அதிகாரிகள் குழு ஒன்றை தமிழகத்துக்கு உடனடியாக அனுப்பி ஆய்வு செய்து நிவாரணப் பணிகளுக்காகக் கேட்கப்பட்ட நிதியை வழங்க வேண்டுகிறேன்.

* * *

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத் தொகுப்புதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 6.11.2005

**26**.10.2005 மற்றும் 27.10.2005 ஆகிய நாட்களில் சென்னை நகரில் முன் எப்போதும் இல்லாத அளவு பெய்த கடும் மழையின் காரணமாக, சென்னை நகரில் தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த மக்கள் பாதிக்கப்பட்டனர். நான் உடனடியாகப் பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டேன். உடனடி



நிவாரண நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மிகத் துரிதமாக எடுத்ததன் பயனாக இயல்பு நிலை விரைவிலேயே திரும்பியது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகுப்பு உதவி ஒன்றை வழங்கி, நான் 30.10.2005 அன்று ஆணையிட்டேன். மாவட்டங்களில் குடிசை முழுவதுமாகச் சேதமடைந்த அல்லது பகுதி சேதமடைந்த குடும்பங்கள் அனைத்துக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், மழை வெள்ளம் ஏற்பட்டப் பகுதிகளில் கட்டட அமைப்புகளைக் கருத்தில் கொண்டு, சிறப்பு நிவாரண உதவியாக, குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 2,000 ரூபாய் ரொக்கம், 10 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 சேலை மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் நிவாரண உதவிகள் வழங்கப்படும் முறையை எளிமைப் படுத்தும் வகையில், பாதிக்கப்பட்ட மக்கள் சாதாரணமாகத் தாங்கள், பொது விநியோகப் பொருட்களைப் பெற்று வரும் நியாய விலைக் கடைகளிலேயே டோக்கன்களை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப் பட்டது. இவ்வாறு பெறப்பட்ட டோக்கன்களை இதற்கென திறக்கப் பட்ட நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்படும் மையங்களில் கொடுத்து நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டது.

சென்னை மாநகரில் இவ்வாறு நியாய விலைக் கடைகளில் டோக்கன் வழங்கும் முறை 3.11.2005 முதல் துவக்கப்பட்டது. தேவையான அளவுக்கு நிவாரண உதவி வழங்கும் மையங்கள் திறக்கப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டு வருகிறது. எந்தெந்தப் பகுதி மக்கள் எந்தெந்த இடங்களில் இருந்து நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டிருந்த அறிவிக்கையின் அடிப்படையில், இந்த மையங்களில் எவ்விதப் பிரச்சினைக்கும் இடமின்றி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வந்தன. இந்த எளிமைப்படுத்தப்பட்ட முறைப்படி இதுவரை 70,000 குடும்பங்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டு, நிவாரணத் தொகுப்பு உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 6.11.2005 அன்று அதிகாலை சுமார் 4.30 மணியளவில் உடனடியாக விரைந்து நிவாரணப் பொருட்கள் வழங்கும் மையத்திற்குச் சென்று நிவாரணப்



பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வதந்தியை சில விஷமிகள் வேண்டும் என்றே பரப்பினர். நிவாரண உதவி வழங்கும் மையம் காலை 9 மணிக்குத் தான் திறக்கப்படும் என்றாலும், இந்த வதந்தியை நம்பி 6.11.2005 அன்று, அதிகாலை 4.30 மணியளவில் வியாசர்பாடி பகுதியைச் சேர்ந்த சுமார் 3000 நபர்கள் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும் மையம் ஒன்று அமைந்துள்ள வியாசர்பாடி அம்பேத்கர் அரசுக் கல்லூரி முன் திரண்டனர். அக்கல்லூரியின் முன் பக்க வாயிலில் காவல் கட்டுப்பாட்டை மீறி உடைத்து உள்ளே சென்ற போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில், 6 பேர் இறந்துவிட்டனர் என்பதை அறிந்து நான் மிக்க துயருற்றேன். இந்த நிகழ்வில், மேலும் 4 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பதை அறிந்து நான் வருத்தமடைந்தேன். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொருவருக்கும் 15,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒரு குடும்பம் கூட விடுபடாமல் நிவாரணத் தொகுப்பு உதவி நிச்சயமாக வழங்கப்படும். எனவே, நிவாரணத் தொகுப்பு உதவி உடனடியாகப் பெற வேண்டும் என்ற ஆவலில் யாரும் சாலை மறியல் போன்ற விரும்பத்தகாத எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எந்தவித வீண் வதந்திகளையும் நம்ப வேண்டாம் என்றும் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் விரைந்து நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டு விடும் என்பதையும் நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ❑

## சில முக்கிய கண்டுபிடிப்புகள்



*1. அம்மைநோய்த் தடுப்பு வாக்ஸின் – 1954– ஜான் எண்டர்ஸ் – அமெரிக்கா.*
*2. கூட்டல் இயந்திரம் – 1642– பாஸ்கல் – பிரான்ஸ்.*
*3. இருதய அறுவை சிகிச்சை – 1953 – வால்டன் லிட்ஹெல் – அமெரிக்கா.*
*4. குளிர் சாதனம் (ஏ/சி) – 1911 – கேரியர் – அமெரிக்கா.*
*5. சிமெண்ட் – 1845 – ஆஸ்டின் – இங்கிலாந்து.*
*6. தொலைபேசி – 1876 – கிரகாம்பெல் – அமெரிக்கா.*
*7. பவுண்டன் பேனா – 1884 – பிராண்டன் பெர்கர் – சுவிஸ்*
*8. ஹெலிகாப்டர் – 1907 – கோர்ன்ஸ் – பிரான்ஸ்*
*9. தையல் இயந்திரம் – 1846 – ஹோவி – அமெரிக்கா*
*10. தட்டச்சு இயந்திரம் – 1868 – ஹோல்ஸ் – அமெரிக்கா*
*11. தொலைக்காட்சி – 1926 – பெய்ர்ட் – இங்கிலாந்து*
*12. தந்தி – 1837 – வீட்ஸ்டோன் – இங்கிலாந்து*
*13. திரைப்படம் – 1895 – லூமியர் சகோதரர்கள் – பிரான்ஸ்*
*14. கணினி – 1823 – பாபேஜ் – இங்கிலாந்து*
*15. வானொலி – 1895 – மார்கோனி – இத்தாலி*





# சென்னை மக்களுக்கு தினந்தோறும் குழாய் மூலம் தண்ணீர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 31.10.2005



**செ**ன்னை மாநகரில் நீண்ட காலமாக நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, நான் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளை சென்னை மாநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் என்றென்றும் நினைவில் கொள்வர். சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் பல்லாண்டு காலமாகத் தீர்வு காண முடியாமல் இருந்து வந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கலுக்கு வகை செய்ய என்னுடைய அரசு அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2002–ஆம் ஆண்டிலிருந்து சென்னையையும், அதனை ஒட்டியுள்ள பகுதிகளையும் கடுமையாக வாட்டி வந்த தண்ணீர்ப் பஞ்சத்தை மக்கள் நினைவு கூர்வர். 2002ஆம் ஆண்டில், வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, 18.1.2003 அன்று முதல் ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வழங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, நான், 2003 பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். புதிய வீராணம் திட்டம் தோல்வியில்தான் முடியும், அதனால் ஒரு பயனும் விளையப் போவதில்லை, இதனால் பொதுமக்கள் பணம்தான் விரயமாகும் என்ற கடுமையான விமர்சனக் கணைகள், குறிப்பாக, அரசியல் கட்சிகளின் விமர்சனங்கள் என்னைச் சுற்றி வளைத்துத் தாக்கின. சென்னை மாநகரைக் காப்பாற்ற வேண்டுமானால், என்னுடைய அரசு எப்படியாவது சென்னை மாநகருக்குக் கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வந்தே ஆக வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். ஆகவே, அந்தக் கடுமையான விமர்சனங்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு நான் இத்திட்டத்தைத் துணிச்சலுடன் தொடர்ந்து செயல்படுத்தினேன்.

அதற்குப் பிறகு, 2003ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, சென்னை மாநகரம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, மிகக் கடுமையான தண்ணீர்ப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது 2003ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலேயே தெரிய வந்தது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கி வரும் ஏரிகளின் நீர்மட்டம், 2003 டிசம்பரில், கடந்த 54 ஆண்டுகளில் முன் எப்போதுமே இல்லாத அளவிற்குக் குறைந்தது. அதன் விளைவாக, 2003 டிசம்பரிலேயே குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவது நின்று போய்விட்டது. சென்னையைப் போன்ற ஒரு மிகப் பெரிய பெருநகரில் குழாய் மூலம் அறவே தண்ணீர் வழங்கப்படாத நிலையை மக்கள் சற்று நிதானித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்குக் காரணம் முந்தைய தி.மு.க. ஆட்சி பின்பற்றிய குறுகிய நோக்கிலான கொள்கையே என்பது நமக்கு வெளிப்படையாகவே தெரியும். 1995ஆம் ஆண்டில், உலக வங்கியிடமிருந்து நிதி உதவிப் பெற்று புதிய வீராணம் திட்டத்தை மேற்கொள்ள நான் எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் பின்னர் கிடப்பில் போட்டு விட்டனர். மேலும், அந்த ஆட்சி சென்னை மாநகரின் நீண்டகாலக் குடிநீர்த் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேறு எந்த முதலீடுகளையோ, திட்டங்களையோ மேற்கொள்ளவில்லை.



வரலாறு காணாத இந்த நெருக்கடியைச் சந்தித்த எனது அரசு, போர்க்கால அடிப்படையில், லாரிகள் மூலம் தெருக்களில் தண்ணீர் வழங்கும் அசாதாரண நடவடிக்கையை மேற்கொண்டது. மிகக் குறைந்த அளவிலேயே இருந்த தண்ணீரைச் சேமித்து, அதனை சென்னை மாநகர மக்களுக்கு வழங்குவதற்காக மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு, அத்திட்டத்தைத் துல்லியமாகச் செயல்படுத்த வேண்டியிருந்தது. அனைத்து ஆதாரங்களையும் திரட்டி, ஒவ்வொரு வீட்டிற்கும் அடிப்படையான குடிநீரை வழங்கும் அசாதாரணத் திட்டத்தை என்னுடைய அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியது.

தண்ணீரின் இருப்பு மேலும் குறைந்ததால், மிகத் திறமையுடன் செயல்படுத்தப்பட்டு வந்த இந்தத் திட்டத்திற்கும் 2004ஆம் ஆண்டு கோடையில் சோதனை ஏற்பட்டது. தண்ணீர் இல்லாததன் காரணமாக சென்னை மாநகர மக்கள் நகரை விட்டே வெளியேற வேண்டுமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டது. இது முன்னெப்போதும் கண்டிராத மிகப் பெரிய நெருக்கடி ஆகும். இது தீர்வே இல்லாத, வரலாறு காணாத ஒரு நெருக்கடி என்பது மட்டுமல்ல, இது சென்னை மாநகரையே நாசப்படுத்தியிருக்கக் கூடிய ஒரு பேரிடராகும். அதன் பேரில்தான், அசாதாரண முயற்சிகள் எடுத்து புதிய வீராணம் திட்டத்தின் மூலமாகச் சென்னைக்குக் குறைந்த அளவிலாவது தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். தீர்க்க தரிசனத்துடனும், தொலைநோக்குடனும், புதிய வீராணம் திட்டத்தை எப்படியும் செயல்படுத்துவது என 2003ஆம் ஆண்டு பிப்ரவரியில் நான் எடுத்த முடிவுதான், 2004ஆம் ஆண்டு ஜூன் திங்களில் புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் பெறப்பட்டு, சென்னை மாநகரைக் காப்பாற்ற உதவியது. இவ்வாறாக என்னுடைய அரசு மேற்கொண்ட அசாதாரண முயற்சிதான், மக்கள், மாநகரை விட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலையிலிருந்தும், சொல்லொணாத் துயரிலிருந்தும் காப்பாற்றியது. என்னுடைய அரசின் ஈடு இணையற்ற இந்த நடவடிக்கையை உள்ளபடியே, சென்னை மாநகரக் குடிமக்கள் ஒவ்வொருவரும் பாராட்டுவர் என்று நான் திடமாக நம்புகிறேன்.

அதன் பிறகு, 13.10.2004 அன்றிலிருந்து புதிய வீராணம் திட்டம், சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் என்ற முழு அளவில் தண்ணீர் வழங்கத் தொடங்கியது. புதிய வீராணம் திட்டம் பற்றி எழுப்பப்பட்ட அனைத்து ஐயப்பாடுகளும், அள்ளிவீசப்பட்ட அவதூறுகளும், தவிடுபொடியாயின. 13.10.2004 அன்றிலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் என்ற முழு அளவில் தண்ணீர் வரப்பெற்றதால் தான், சென்னை மாநகரில், மீண்டும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய் மூலம் தண்ணீர் வழங்குவது சாத்தியமாயிற்று. என்னுடைய அரசின் இந்தக் குறிப்பிடத்தக்க சாதனையைச் சென்னை மாநகர மக்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டியுள்ளனர். புதிய வீராணம் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றியதன் மூலம், 2004 ஜூன் திங்களில் மாநகரை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய தவிர்க்க முடியாத நிலையிருந்து சென்னை மக்களைக் காப்பாற்ற முடிந்ததோடு மட்டுமின்றி, 2004ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் மீண்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய் மூலம் தண்ணீர் வழங்கக்கூடிய மகிழ்ச்சிகரமான நிலைமையும் உருவானது. இன்று வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தொடர்ந்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் தண்ணீர் இருப்பு நிலைமை குறித்து இன்று நான் ஆய்வு செய்தேன். செங்குன்றம், பூண்டி, சோழவரம் ஏரி ஆகியவற்றில், அவற்றின் முழுக் கொள்ளளவான 7,412 மில்லியன் கன அடியில் சுமார் 50 சதவிகித அளவுக்குத் தண்ணீர் உள்ளது. 2005ஆம் ஆண்டு நவம்பரில் மேற்கொண்டும் தண்ணீர் வருவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. இதுவரை, கிருஷ்ணா நதியிலிருந்து நமக்கு, 802 மில்லியன் கனஅடி தண்ணீர் வந்துள்ளது. சோமசீலா, கண்டலேறு ஆகிய இரண்டு நீர்த் தேக்கங்களிலும் தண்ணீர் இருப்பு நன்றாக இருப்பதாலும் அது மேலும் அதிகரித்து வருவதாலும், கண்டலேறு–பூண்டி கால்வாய் வழியாக வருகின்ற தண்ணீரின் அளவு நிச்சயமாகக் கணிசமான அளவுக்கு மேலும் அதிகரிக்கும். தண்ணீர் இருப்பு நிலவரம் நன்றாக இருப்பதால், மேலும் பல மாதங்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வரும். ஆரணியாறு–கொசத்தலையாறு வடிநிலப் பகுதிகளில் உள்ள கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் வளம் செறிவடைந்துள்ளது. ஆகவே, அவற்றிலிருந்தும் நாம் தண்ணீர் பெற்றுக் கொள்ள முடியும். மேட்டூர் நீர்த்தேக்கம் நிரம்பி வழிகிறது. இதனால், புதிய வீராணம் திட்டத்தின் மூலம் கோடைக் காலம் முழுவதும் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் தொடர்ந்து கிடைப்பது உறுதியாகியுள்ளது.

என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற போது நிலவிய மிக மோசமான நம்பிக்கையற்ற நிலைமை மாறி, இன்று, சென்னை மாநகரம் நம்பிக்கையோடு எதிர்காலத்தை எதிர்நோக்கக் கூடிய நிலைமை

உருவெடுத்துள்ளது. இவ்வாறு குடிநீர் வழங்கலை உறுதிப்படுத்தியதன் வாயிலாக, என்னுடைய அரசு, சென்னை மாநகருக்கு, இந்தப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சென்னை மாநகரின் நீண்ட காலத் தேவையை நிறைவு செய்வதற்காக, நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறனளவு கொண்ட கடல் நீரைக் குடிநீராக மாற்றும் ஆலை அமைக்கப்படுவதை நான் உறுதிப்படுத்தியுள்ளேன். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது. இத்திட்டம், விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த எழுச்சியான மனநிலையில்தான் சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியைச் சார்ந்த மக்கள் தீபாவளி மற்றும் ரமலான் பண்டிகைகளைக் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பண்டிகை நேரத்தில், சென்னை மாநகர மக்களுக்குச் சிறப்புப் பரிசு ஒன்றை வழங்க நான் விரும்புகிறேன். நாளை (1.11.2005) முதல் அதாவது, தீபாவளித் திருநாள் முதல் சென்னை மாநகரில், தினந்தோறும் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்படும் என்பதே அந்தப் பரிசாகும்.

மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நம்பிக்கையற்ற ஒரு நிலையிலிருந்து மீண்டு, என்னுடைய அரசால் இன்றைக்குச் சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் தினந்தோறும் தண்ணீர் வழங்கக்கூடிய உறுதியான நிலை ஏற்பட்டிருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. புதிய வீராணம் திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டதால்தான் இது சாத்தியமாயிற்று. கிருஷ்ணா நதியில் இருந்து சென்னைக்குக் கிடைக்கும் தண்ணீரும், தொடர்ந்து குழாய் மூலம் தினந்தோறும் தண்ணீர் வழங்க உதவியாக இருக்கும். குழாய் மூலம் தினந்தோறும் தண்ணீர் வழங்கும் இந்த நடவடிக்கையால், இதுவரை குறைந்த அளவே தண்ணீர் பெற்று வந்த தெருக்களிலும் தண்ணீர் விநியோகம் சீரடையும். என்னுடைய அரசு மிகக் குறுகிய காலத்தில் சென்னை மாநகர மக்களின் வாழ்வில், இந்த வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விழாக் காலத்தில், சென்னை மாநகர மக்கள், இந்த மகிழ்ச்சிகரமான மாற்றத்தை உளமார வரவேற்பார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ❖



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# தீபாவளி

**வாழ்த்துச் செய்தி**

தீபாவளித் திருநாளில் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது தித்திக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒளியாய் இருப்பது தெய்வம். தீப வெளிச்சத்தில் தெய்வத்தைக் காண்பதும், கண்டு தொழுவதும் தொன்று தொட்டு வருகின்ற மரபு. தீபாவளி என்றால் தீப வரிசை என்று பொருள். இந்தத் தீபாவளித் திருநாளில், எங்கும் ஒளி பெருகட்டும்; இருள் அகலட்டும்!

வேற்றுமையை மறந்து, ஒற்றுமையாய் இருந்து, மனமகிழ்வுடன் தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் இந்த இனிய வேளையில் மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த தீபாவளி வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.



# இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளைத் தூர்வாரிப் புனரமைக்க நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **6.11.2005**



தமிழகத்தில் உள்ள ஏரிகளை முழுமையான அளவில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், அனைத்து ஏரிகளிலும் சிறந்த முறையில் நீரைத் தேக்கிடவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திடவும், தமிழகம் முழுவதும் உள்ள ஏரிகளைத் தூர்வாரி, வரத்துக் கால்வாய்களை ஆழப்படுத்தி, ஏரிகளைச் சீர் அமைத்திட எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் தான், வேலூர் முதலான 10 மாவட்டங்களில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 44.82 கோடி ரூபாய் மதிப்பில், 14 நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தவும் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 540 முறை சாரா சிறுபாசன ஏரிகளை (Non-System (Rainfed) Minor Irrigation Tanks), 130.52 கோடி ரூபாய் மதிப்பில், மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி நிதி உதவியுடன், தூர் வாரி, புனரமைத்து, மேம்படுத்தவும் நான் ஆணையிட்டேன். இப்பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 100 ஏக்கருக்கு மேலான பரப்புள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கின்ற 502 ஏரிகள் பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஏரிகள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த ஏரிகள் அனைத்தையும் தூர்வாரி, அதன் கட்டுமானங்களைப் புதுப்பித்து, இந்த ஏரிகளுக்கான வரத்துக் கால்வாய்களை (Supply Channels) ஆழப்படுத்தி, மேம்பாடு செய்திட 2003ஆம் ஆண்டிலேயே எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எல்லா ஏரிகளையும், வரத்துக் கால்வாய்களையும், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Water Resources Management Project) கீழ், தூர்வாரி, புனரமைத்து, மேம்படுத்திட திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக (Phase-I) 121 ஏரிகள் மற்றும் கால்வாய்கள் 24.36 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்திட, 27.5.2003 அன்று நான் ஆணையிட்டேன். இதனால் 32,548 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசனவசதி பெற்றுள்ளன.



இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏரிகளும், கால்வாய்களும் தூர்வாரி, புனரமைத்து, மேம்பாடு செய்யப்பட்டதன் பயனாக, கடந்த ஆண்டில் மழை நீர் வீணாக கடலில் சென்று கலப்பது மிகவும் குறைந்து விட்டது எனவும், ஏரிகள் மற்றும் குளங்கள் ஆழப்படுத்தப்பட்டதால் மழைக் காலங்களில் வெள்ள நீரால் உடைப்பு ஏற்படுவதில்லை எனவும், அனைத்து ஏரிகளிலும் தண்ணீர் முழுமையாகத் தேக்கப்பட்டு, பயன்பெறப்பட்டது எனவும், இந்த ஏரிகளின் பாசனப் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் உற்பத்தித் திறன் (Productivity) சராசரி உற்பத்தித் திறனை (Average Productivity) விட அதிகமாக உள்ளது எனவும், மேலும், ஒரு போகமே சரியாக விளையாமல் இருந்த நிலங்கள் சிலவற்றில் இரு போகம் பயிர் செய்யுமளவிற்கு பாசனவசதியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும், இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றிலேயே முதல் முறையாக ‘கலரி’ ஏரியிலிருந்து 2ஆவது முறையாகப் பாசனத்திற்காகத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டத்தின் கீழ், இரண்டாம் கட்டமாக (Phase-II) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மேலும் 97 ஏரிகளையும், அவற்றின் வரத்துக் கால்வாய்களையும், 22.56 கோடி ரூபாய் மதிப்பில் மாநில நிதி உதவியுடன் தூர்வாரி, புனரமைத்து, மேம்படுத்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, ஆர்.எஸ். மங்கலம், பரமக்குடி, நயினார்கோவில், இராமநாதபுரம், போகலூர், திருப்புல்லாணி, முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஆகிய வட்டாரங்களில் உள்ள 30,269 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசனவசதி பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள் சிறந்த முறையில் பயனடையும் வகையில், நான் அறிவித்துள்ள இந்தப் பணியினைச் சிறப்பான முறையில், விரைவில் செய்து முடிக்குமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். ✶



# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு 5 சதவிகித ஊதிய உயர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 22–10–2005



தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக்கழகங்கள், மின்சார வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களையும், பணியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மொத்தம் 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையை இந்த ஆண்டு வழங்கிட நான் ஆணையிட்டு, அவர்களுக்கு போனஸ் வழங்கும் பணியை 20–10–2005 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் நான் தொடங்கி வைத்தேன். இவ்வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் 13,720 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் 6.87 கோடி ரூபாய் போனஸ் மற்றும் கருணைத் தொகையை இவ்வாண்டு பெறுகின்றனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணியாற்றி வருகின்ற சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்கள் தங்களுக்கு வழங்கப் படுகின்ற கூலித் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர். அடித்தட்டு மக்களாகிய இந்தச் சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களும் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை நான் வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் உணவுப் பொருள்களைக் கையாளுவதற்கு, சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்கள் தற்போது பெற்று வருகின்ற கையாளுதல் கூலித் தொகையை (Handling charges) 5 சதவிகிதம் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த உயர்வு உடனடியாக அமலுக்கு வரும். இதனால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 65 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

பணிக்காலத்தில் இறக்கும் சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் வகையில், வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் கீழ், இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு 65,000 ரூபாய் நிதி உதவி அளிக்கும் தொழிலாளர் சேமிப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டத்தை (Employees Deposit Linked Insurance Scheme) உடனடியாகச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளேன். இதன் அடிப்படையில், இதுவரை பணியில் இருக்கும்போது காலமான 117 சுமை தூக்கும்

கூலித் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு, தலா 65,000 ரூபாய் வீதம், மொத்தம் 76.05 இலட்சம் ரூபாயை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.



மேலும், இறந்து போன இந்த 117 சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில், பணிக்கொடை (Gratuity) வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி, மொத்தம் 5.26 இலட்சம் ரூபாய் இவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களுக்கு, அவர்களது பணி மூப்பின் அடிப்படையில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதாவது 10 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்குப் பச்சை அட்டையும் (Green Card), ஒரு ஆண்டிற்கு மேல் பணி புரிந்த்வர்களுக்கு இளஞ்சிவப்பு அட்டையும் (Pink Card) வழங்கப்பட்டு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில், தற்போது 2,704 தொழிலாளர்கள் பச்சை அட்டையும், 1,536 தொழிலாளர்கள் இளஞ்சிவப்பு அட்டையும் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இளஞ்சிவப்பு அட்டை வைத்துள்ள 1,536 தொழிலாளர்களில், 1,451 தொழிலாளர்கள் 10 ஆண்டுகள் பணி முடித்துள்ளதால், அவர்களுக்குப் பச்சை நிற அட்டையும், இதுவரை அடையாள அட்டைகளைப் பெறாத 1,168 தொழிலாளர்களில் ஓர் ஆண்டுக்கு மேல் பணிபுரிந்த 1,050 தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு நிற அட்டையும் வழங்க, நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

பச்சை நிற அட்டைப் பெறுகின்ற தொழிலாளர்கள் பணி நிரந்தரம், வாராந்திர விடுமுறைக் கூலி, தேசிய விடுமுறை 3 நாட்கள் மற்றும் பண்டிகை விடுமுறை 3 நாட்களுக்கான கூலி, வருடத்திற்கு 10 நாட்கள் மருத்துவ விடுப்பு, போனஸ் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிஉதவி ஆகிய சலுகைகளைப் பெறுவார்கள். அதேபோல, இளஞ்சிவப்பு அட்டைபெறும் தொழிலாளர்கள் போனஸ் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி உதவி ஆகிய சலுகைகளைப் பெறுவார்கள். எனினும், புதிதாகத் தற்போது இளஞ்சிவப்பு அட்டை பெறும் 1,050 தொழிலாளர்கள் இந்த ஆண்டு போனஸ் தொகை பெற இயலாது என்பதால், இந்த 1,050 தொழிலாளர்களுக்கும், அடையாள அட்டை பெறாத 118 தொழிலாளர்களுக்கும், ஆகமொத்தம் 1,168 தொழிலாளர்களுக்கு தலா 750 ரூபாய் கருணைத்தொகை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இந்தப் பச்சை மற்றும் இளஞ்சிவப்பு அடையாள அட்டை வைத்து இருக்கும் அனைத்து சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களும் ஒய்வு பெற்ற பின்னர் வருங்கால வைப்பு நிதி ஆணையத்தின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் பெறத் தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு, இன்று நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களது வாழ்வு வளம் பெறும் வகையில், இன்று நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளால் அவர்கள் மேலும் ஊக்கமும், உற்சாகமும் பெற்று, ஒரு புதிய நம்பிக்கையுடன் பணி செய்வார்கள் என்பது உறுதி.

❖ ❖ ❖



# 5 ஆண்டுகளில் சுற்றுலாத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி இருக்கிறோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



இந்திய ஒட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் பொன்விழா ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கி வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1955ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த அமைப்பு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் 3,000 உறுப்பினர்கள் இருப்பதாக அறிகிறேன். மற்ற வணிக அமைப்புகள், தொழில் அமைப்புகள் இவைகளுக்கு வழிகாட்டியாக, 1955ஆம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப் பட்டதாக இங்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் துறையைச் சேர்ந்த பலர் இங்கு இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சுற்றுலா மற்றும் ஒட்டல் தொழில் வளர்ச்சிக்கு நீங்கள் பெரும்பணி ஆற்றி இருக்கிறீர்கள். இந்தப் பொன்விழா ஆண்டில் நீங்கள் ஆற்றிய தொழில் வளர்ச்சிப் பணிகளுக்காக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு துபாயில் நடைபெற்ற இந்தக் கூட்டம், இந்த ஆண்டு இங்கு நடைபெறச் செய்ததில் உங்கள் ஆர்வம் தெரிகிறது.

2001–ஆம் ஆண்டில் உங்களது ஆண்டு மாநாடு சென்னையில் நடைபெற்றபோது, உலகத்தையே உலுக்கிய உலக வர்த்தக மையக் கட்டடம் விமானம் மூலம் தாக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது.

அன்றைய சூழல் எப்படி இருந்தது என்று நம்மால் புரிந்து கொள்ள முடியும். அந்த மாநாட்டுக்கும் இந்த மாநாட்டுக்குமிடையே, கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில், தகவல் தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு வசதிகள் எல்லாவற்றுக்கும் மேலாக மனித வள மேம்பாடு ஆகியவற்றில் தமிழகம் அபரிமிதமான வளர்ச்சி பெற்றுள்ளது. அனைத்துத் துறையிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் நான் செயல்பட்டு வருகிறேன். அதில் வெற்றி கிடைத்துள்ளது. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம் தொழில் முதலீடு செய்யத் தமிழகத்தை நோக்கி வருகிறார்கள்.

நோக்கியா, பிளக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற பல நிறுவனங்கள் இன்று தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த வந்துள்ளன. அதேபோன்று, மோட்டார் வாகன உற்பத்தித் துறையில் தலைசிறந்து விளங்கும் பி.எம்.டபிள்யூ தனது உற்பத்திச் சாலையை விரைவில் சென்னையில் துவங்க உள்ளது.

இது போன்ற நிறுவனங்கள் வருவதால், பொருளாதார வளர்ச்சி சென்னையில் மட்டுமல்ல, இரண்டாம் கட்ட நகரங்களான திருச்சி, கோவை, மதுரை போன்ற நகரங்களில் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளது.

கிராமங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு கடந்த ஆண்டு டிசம்பர் 26–ஆம் தேதி தமிழகத்தில் சுனாமி பேரலை தாக்கியது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள். தமிழகத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இனி அவ்வளவுதான்; தமிழகத்தில் சுற்றுலாத்துறை முடிந்துவிட்டது, என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால், இன்று இங்கு ஓட்டல்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, பொன் விழா ஆண்டுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகம் இயல்பு நிலைக்கு வந்துவிட்டது என்பதற்கு இதைவிட வேறு சாட்சி தேவையில்லை.

சுனாமி தாக்குதலுக்குப்பின், சந்தேகத்திற்கு இடமின்றி சுற்றுலாப் பயணிகளின் வருகை பாதிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து சுற்றுலாப் பயணிகளும், வர்த்தகர்களும் பெருமளவில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

மே, ஜூன் மாதம் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை வழக்கமாகக் குறைவாக இருக்கும். ஆனால், அப்போது கூட இந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

சுனாமி வந்த போதும் ராமேஸ்வரத்தின் இரண்டு கடற்பகுதிகளும் பாதிக்கப்படவில்லை. இலங்கை, பாதுகாப்பு அரணாக இருந்தது. எனவே, ராமேஸ்வரத்தில் ஓட்டல்களைத் தொடங்கலாம்.

தற்போது, பீச் ரிசார்ட் (கடற்கரை ஓட்டல்கள்) நீர் விளையாட்டுகள் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. எனவே ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களில் பீச் ரிசார்ட் அமைக்கலாம். மதுரை விமான நிலையம் அருகிலேயே இருப்பதால் வசதியாக இருக்கும். எனவே, இங்கு பீச் ரிசார்ட் அமைக்க பெரும் வாய்ப்புகள் உள்ளன.

சுனாமி தாக்குதலால் எதிர்பாராத சில நிகழ்ச்சிகளும் நடந்தன. மாமல்லபுரத்தில் சுனாமி



தாக்குதலுக்குப் பின் புதைந்து கிடந்த ஏராளமான சரித்திரப் புராதனச் சின்னங்கள் வெளிப்பட்டன. பல நூற்றாண்டுகளாகப் புதைந்து கிடந்த இந்தப் புராதனச் சின்னங்கள் பற்றி தொல்பொருள்

உணவு வகைகள், மற்றவர்களை எளிதாகக் கவரும் ஆத்தங்குடி சலவைக்கல், செட்டிநாடு கைத்தறிச் சேலைகள், மரவேலைப்பாடுகள் போன்றவை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்களாகும்.




ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தி வருகிறார்கள். இந்தப் புராதனச் சின்னங்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

2003–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இங்கு நடந்த 64ஆவது 'ஸ்கால்' உலக மாநாட்டில் (சுற்றுலா) 7 அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தேன்.

சுற்றுலா வளர்ச்சிக்காக நான் அறிவித்த 7 அம்சத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேன்.

புதைந்து கிடக்கும் வரலாற்றுச் சின்னங்களை, வெளிக்கொண்டு வர வேண்டும் என்று சொன்னேன். இன்று மகாபலிபுரத்தில் புதைந்து கிடந்த வரலாற்றுச் சின்னங்கள் வெளிவந்துள்ளன. செட்டிநாடு, பிச்சாவரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக உருவாக்கி இருக்கிறோம்.

பழம்பெருமை வாய்ந்த அரண்மனை தோற்றம் கொண்ட மாளிகைகள், செட்டிநாட்டு

இதன் காரணமாக மதுரைக்கு கிழக்கே இருக்கும் செட்டிநாட்டுப் பகுதியைச் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்ற சுற்றுலாத்துறை அக்கறை காட்டுகிறது.

பன்னாட்டு மாநாடு, கண்காட்சிகள் நடத்தும் இடமாக சென்னை, கோவை திகழ வேண்டும் என்று கூறினேன். இன்று இங்கு இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிறது.

பக்கத்து நாடுகள், மாநிலங்களுடன் சுற்றுலாத் தொடர்பு ஏற்பட வேண்டும் என்று கூறினேன். அதன்படி இன்று ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கை மற்றும் தமிழ்நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகிறார்கள்.

சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று கூறினேன். அதனையும் செய்திருக்கிறோம்.

5 ஆண்டுகளில் சுற்றுலாத்துறைக்கு 7 மடங்கு அதிக நிதி ஒதுக்கி இருக்கிறோம்.

அதாவது 2000 – 2001ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறைக்கு 4.36 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. ஆனால் 2005 – 06ஆம் ஆண்டு 7 மடங்குக்கு மேல் அதிகரித்து, அதாவது 32.42 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துதல், தெரு விளக்குப் போடுதல், உள் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். சுற்றுலா மையங்களில் இதுபோன்று அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம்.

மாமல்லபுரத்தில் ரூ.9.32 கோடி செலவில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். ஏற்காட்டில் ரூ.4.50 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறோம். சுற்றுலா வளர்ச்சிக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம்.

தமிழகத்தில் சுவாமி விவேகானந்தா நினைவுத்தலங்களை முன் வைத்து, ஓர் சுற்றுலாத் திட்டமும், காவேரி டெல்டாப் பகுதியில் உள்ள நவக்கிரகக் கோயில்களை முன் வைத்து, நவக்கிரகச் சுற்றுலா என்கிற திட்டத்தையும் செயல்படுத்த சுற்றுலாத்துறை முனைந்துள்ளது.

மாநிலத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தீவிர வர்த்தக ரீதியிலான பிரச்சாரத் திட்டத்தை தமிழகம் துவக்கியுள்ளது. இதுகுறித்து, 'ஸ்கால்' உலக மாநாட்டின்போது, என்னுடைய செயல்திட்டத்தை எடுத்துரைத்தேன்.

இந்த மாநாட்டில்தான் 'மகிழ்வூட்டும் தமிழகம் – அனுபவித்து உணர்வீர்' என்ற பிரச்சாரத்தைத் துவக்கி வைத்தேன். 'மகிழ்வூட்டுதல்' என்னும்போது மாநிலத்தில் உள்ள சுற்றுலாத்தலங்களான பழங்காலக் கோயில்கள், நினைவுச் சின்னங்கள், கடற்கரைகள், மலைவாழ் இடங்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றன. 'அனுபவம்' என்பது நவீனயுகச் சுற்றுலாவைக் குறிக்கிறது. அதாவது சுற்றுலாப் பயணிகள் பல்வேறு இடங்களைப் பார்வையிடுவதோடு முடிந்துவிடுவதில்லை. அத்துடன் கலாச்சாரம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறை ஆகியவை குறித்த அனுபவமும் அவர்களுக்குக் கிடைக்கிறது. தமிழகத்தில் இந்த அனுபவத்தைப் பெறுவதோடு, தனிநபர் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகம் தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாகத் திகழ்கிறது. பன்னாட்டுத் தொடர்பு உள்ள விமானங்கள் வரத்து 250க்கு மேல் வருகின்றன. 28 சரக்கு விமானங்கள் வருகின்றன. உலகத்திற்கு இந்தியாவின் கிழக்கு வாயிலாகத் தமிழகம் விளங்குகிறது.

தமிழ்நாட்டில் ஆட்டோ மொபைல், கணினி மென்பொருள்துறை, ஜவுளித்துறை போன்றவை பெருகி வருகின்றன. சென்னை நகரில் மென்பொருள் உற்பத்தி பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. நோக்கியா, பிளக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களை சென்னையில் அமைக்கின்றன. எனவே, சென்னை நகரம் இந்தியாவின் கணினி வன்பொருள் (ஹார்டுவேர்) உற்பத்தியின் தலைநகரமாக விளங்கி வருகிறது.

சென்னை மாநகரம் இப்போது மோட்டார் வாகன உற்பத்தியில் கிழக்கத்திய நாடுகளின் தலைநகராகவும், தகவல் தொழில்நுட்பத் துறையின் முக்கிய கேந்திரமாகவும் விளங்குவது போன்று, ஓட்டல்கள் துறையிலும் முதலீடு செய்யும் வாய்ப்பும் அதிகரித்து வருகிறது. அதேபோன்று, கோவை மாநகரமும் மாறி வருகிறது. அது மட்டுமல்ல, சுற்றுலாத்தலங்களுக்காக தஞ்சாவூர் மற்றும் மதுரை மாநகரம் பெருமைகளைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் அதிக தொழில் முதலீடு செய்து வருவதால் ஓட்டல் தொழிலிலும் முதலீடு தேவைப்படுகிறது. எனவே, அந்தத் துறையிலும் அதிக அளவு முதலீடு செய்ய வேண்டும்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை, 28–10–2005 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில், டெல்லியில் உள்ள இந்தியாவிற்கான கொரிய குடியரசின் தூதர் திரு.சோய்ஜஅங்–II அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகள், மனித ஆற்றல், தகுந்த பாதுகாப்பு உட்பட அனைத்தும் இருப்பதால் தொழில் முதலீடு அதிகம் வந்து கொண்டே இருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல ஓட்டல் வசதியும் வேண்டும். எனவே, ஓட்டல் தொழிலில் முதலீடு செய்யுங்கள்.

இப்போது நீங்கள் சென்னை நகரைச் சுற்றிப் பாருங்கள். 'என்றென்றும் சென்னை' திட்டத்தைத் துவக்கி வைத்து இன்று அனைத்து வசதிகளும் செய்து கொடுத்துள்ளேன். சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கட்டடங்களுக்கு ஆடம்பர வரியைக் குறைக்க வேண்டும் என்று புருஷோத்தமன் கேட்டுக் கொண்டார். ஏற்கெனவே உங்களது கோரிக்கையை ஏற்று, 2002–2003ஆம் ஆண்டு ஆடம்பர வரியைக் குறைத்தேன். மேலும், இந்த வரியைக் குறைக்க எனது அரசு தீவிரமாக பரிசீலிக்கும். ஓட்டல்களுக்கு பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுவது பற்றியும் குறிப்பிட்டார்கள். தகுந்த இடங்களில் கட்டடங்கள் கட்ட சென்னைக்குப் புதிய பெரும் திட்டம் ஒன்றையும் உருவாக்கி வருகிறோம்.

இந்திய ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் பொன்விழா ஆண்டு மாநாட்டில் பங்கேற்க அழைத்தமைக்காக தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டையொட்டி தமிழகத்தில் தங்கியிருக்கும் உங்களுக்கு விழா ஏற்பாட்டுக் குழு 'அளவற்ற விருந்தோம்பலை' எல்லா வகையிலும் அள்ளி வழங்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

– சென்னையில், 15.10.2005 அன்று நடைபெற்ற இந்திய ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்கங்களின் கூட்டமைப்பு பொன்விழா ஆண்டுக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

* * *



# மனிதவளத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது

மேற்கு ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த 9 பேர் கொண்ட உயர்நிலைக் குழு, மாண்புமிகு ஆஸ்திரேலிய பிரதமர் டாக்டர் ஜியோஃப் கேலப் தலைமையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 10.10.2005 அன்று, தலைமைச் செயலகத்தில் சந்தித்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்த சிறப்பான வரவேற்புக்காக, மேற்கு ஆஸ்திரேலியக் குழுவினர் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அதோடு தமிழ்நாட்டுக்கும், ஆஸ்திரேலிய மாநிலங்களுக்கும் இடையே அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் நெருக்கமான நட்புக்காகவும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான இருவழி வர்த்தகம் 20 சதவிகிதம் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியாவில் உற்பத்தித் துறையில் எப்போதும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது. இந்தியாவின் தொழில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

வரைபடத்தில் தமிழ்நாடு மதிப்புக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது. தென் கிழக்கு ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஒரு தலையாய இடத்தைப் பெற்றுள்ள தமிழகம், உலகத்திற்கு கிழக்குப் பகுதியின் நுழைவாயிலாகவும் உள்ளது.

இதன் காரணமாக, நேரடி அன்னிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியாவின் மூன்று முக்கிய மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது.

தற்போது, தமிழகத்தில் 2,700 வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு ஏற்ற இடமாகத் தமிழகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். 100 சதவிகித வெளிநாட்டு மூலதனத்துடனோ அல்லது கூட்டாகவோ தொழில் தொடங்கவும் அவர்கள் முன் வந்துள்ளனர்.

மனித வளத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உள்ளது. இங்கு சிறந்த மனித ஆற்றல் உள்ளது. குறைந்த ஊதியத்தில் திறமை





வாய்ந்தவர்கள் இங்கு வேலைக்குக் கிடைக்கிறார்கள். ஒரு தொழிலுக்கு முக்கியத் தேவையான தொழில் அமைதி போன்றவை, அன்னிய முதலீடு தமிழகத்துக்குப் பெருமளவில் வருவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சாதகமான முதலீட்டுச் சூழல் இருப்பதால் அமைதியான வாழ்க்கை முறை ஒற்றுமை, வேலை நிறுத்தம் இல்லா தொழிலாளர்கள், தலை சிறந்த உள் கட்டமைப்பு வசதிகள் இருப்பதாகச் சில சுயேட்சையான நிறுவனங்களின் ஆய்வறிக்கை கூறுவதாக தூதுக்குழுவினரிடம் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் சக்திமிக்க தலைமை இடத்தைத் தமிழகம் பெற்றுள்ளது. மென்பொருள் ஏற்றுமதி, 2004–2005ஆம் ஆண்டில் ரூ.10,700 கோடியாக உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்கள்.

மேற்கு ஆஸ்திரேலிய நாட்டில் மிக அதிக அளவில் தாதுப் பொருட்கள் இருப்பதால், தமிழ்நாட்டுடன் இணைந்து எண்ணூரில் 'எல்.என்.ஜி' முனையத்தில் தொழில் துறைக்கான மின் உற்பத்தி செய்யவும், பூமிக்கு அடியில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி வாயு (கேஸ்) உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பிருப்பதையும் அந்தக் குழுவினரிடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தெளிவுப் படுத்தினார்கள்.

நீர்வள ஆதாரங்களைத் திறமையாக நிர்வகிக்கவும், அதன்மூலம் கிடைக்கும் பரஸ்பரப் பலன்களைப் பெற முடியும் என்பதையும் எடுத்துரைத்தார்கள்.

காற்றாலை மின் உற்பத்தி, மகளிருக்கான சுயஉதவிக் குழுக்கள் மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தல், மழை நீர் சேகரிப்புத் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் சிறப்பான திட்டங்களின் செயலாக்கங்கள் குறித்தும் தூதுக் குழுவினரிடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எடுத்துக் கூறினார்கள்.

தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதார மேம்பாடு, அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள், தமிழ்நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டுச் சிறப்பு மற்றும் வரலாறு, தங்களுக்குப் பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக மேற்கு ஆஸ்திரேலியப் பிரதமர் டாக்டர் ஜியோஃப் கேலப் தெரிவித்தார்.

தமிழக அரசுக்கும், மேற்கு ஆஸ்திரேலிய அரசுக்குமிடையே விவசாயம், கல்வி, சுற்றுலா, சுரங்கம், தாதுப் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நீர் ஆதார மேம்பாடு போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்புக்குக் கூடுதல் வாய்ப்புகள் இருப்பதாக ஆஸ்திரேலியப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, மேற்கு ஆஸ்திரேலியப் பிரதமர் அலுவலகத்தின் தலைமை அலுவலர் சீன் வால்ஷ், வர்த்தகத் துறை தலைமை அதிகாரி டாக்டர் ஜான் லேங்கூலன், எடித் கோவன் பல்கலைக்கழக உதவித் துணைவேந்தர் டாக்டர் ஜான் உட், பத்திரிகைத் துறை ஆலோசகர் கை ஹுஸ்டன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர்.விஸ்வநாதன் , மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர். ❖

# உலக இளைஞர் சதுரங்க சாம்பியன் போட்டியில் வென்ற மாணவனுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பிரான்சு நாட்டின் பெல்போர்ட் நகரில் நடைபெற்ற உலக இளைஞர் சதுரங்க சாம்பியன் போட்டியில் பங்கேற்று தங்கப்பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த செல்வன் என். ஸ்ரீநாத் அவர்களைப் பாராட்டி, சிறப்பு ஊக்கத் தொகையாக 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கி வாழ்த்தினார்கள்.

சென்னையைச் சேர்ந்த திரு. சி.எல். நாராயணன் என்பவரது மகனான செல்வன் என். ஸ்ரீநாத், ஏழாம் வகுப்புப் பயின்று வரும் மாணவர் ஆவார். சதுரங்க விளையாட்டு வீரரான செல்வன் ஸ்ரீநாத், மும்பையில் 2004 ஜனவரி மாதம் நடைபெற்ற காமன்வெல்த் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியிலும், 2004 டிசம்பர் மாதம் சிங்கப்பூரில் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான ஆசிய இளைஞர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றதோடு, 2004 ஜூலை மாதம் துபாயில் நடைபெற்ற ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் முதலிடம் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் ஆவார்.

செல்வன் ஸ்ரீநாத், 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் தேதியிலிருந்து 29ஆம் தேதி வரை பிரான்சு நாட்டின் பெல்போர்ட் நகரில் நடைபெற்ற உலக இளைஞர் சதுரங்க சாம்பியன் போட்டியில், 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர் பிரிவில் பங்கேற்று, தங்கப்பதக்கம் வென்றுள்ளார். உலகில் உள்ள 82 நாடுகளைச் சேர்ந்த 125 சதுரங்க விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற இப்போட்டியில் தன்னுடைய திறமையைத் திறம்பட வெளிப்படுத்தி, செல்வன் ஸ்ரீநாத் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். செஸ் விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பிடம் பெற்றுள்ள என். ஸ்ரீநாத் திறமையைப் பாராட்டி, இவருக்கு மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், சிறப்பு நிகழ்வாக 3 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, இதற்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தங்கப்பதக்கம் வென்ற சதுரங்க விளையாட்டு வீரர் செல்வன் ஸ்ரீநாத்திடம் 19.10.2005 அன்று, நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், செல்வன் ஸ்ரீநாத் உலக சதுரங்க அரங்கில் மென்மேலும் சிறப்பான வெற்றிகளைக் குவித்து, தமிழகத்திற்குப் பெருமை தேடித் தர வேண்டும் என்று தமது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❒ ❒ ❒






# ரூ.1925 கோடியில், மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 1,925 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினைத் (third Tamil Nadu Urban Development Project - TNUDP III) தொடங்கி வைத்தார்கள். ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டத்திற்கு, உலக வங்கி 1,350 கோடி ரூபாய் கடனுதவி அளிக்கும். மீதமுள்ள 575 கோடி ரூபாயை மாநில அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள், தங்களது நிதியிலிருந்து வழங்கி இத்திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கான வசதிகளை மேம்படுத்துவது, அதாவது நகர்ப்புற அமைப்புகளின் உள்கட்டமைப்பின் தரத்தினை உயர்த்துவதுடன் அத்திட்டங்களுக்கான பயிற்சி மற்றும் நிதி ஆதாரங்களை வலுப்படுத்துவது, மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி மற்றும் பேருந்து நிலையங்களை மேம்பாடு செய்தல் முதலியவற்றிற்காக, தமிழ்நாடு அரசால் 1,150 கோடி ரூபாய் கடன் மற்றும் மானியமாக நிதி வழங்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி, இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட, நிதி அமைப்பின் மூலமாக வழங்கப்படும்.

மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மற்றும் ஒரு முக்கியக் குறிக்கோள், சென்னை மாநகர எல்லைக்குள் சாலை கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகும். இந்நோக்கத்திற்காக சாலைகளை அகலப்படுத்து வதற்கும், சாலை மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைப்பதற்கும் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியமாக 660 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இது தவிர, இந்த மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், மின்–ஆளுமையை (e-Governance) விரிவுபடுத்தவும் நிதி வழங்கப்படும். திட்டங்களைத் தயாரிக்கவும் கண்காணிக்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கப்படும்.



4

இத்திட்டம், இம்மாநிலத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் குடிமைப் பணிகள் நிறைவேற்றுவது குறித்தான தொடர் செயல்பாட்டுத் திறனை முக்கியக் குறியீடுகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய வழிமுறை அமைப்புகளைக் கொண்டிருக்கும்.

இத்தகு உயர்ந்த குறிக்கோள்களுடன் செயல் படுத்தப்பட உள்ள 1,925 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, இந்த மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வில் மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், அரசு தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன்,இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திருமதி. எம். ஷீலா ப்ரியா,இ.ஆ.ப., சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி. ஜெயந்தி,இ.ஆ.ப., உலக வங்கியின் திட்டத் தலைவர் அபா ஜோஷி–கானி (Ms. Abha Joshi - Ghani) ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

2004ஆம் ஆண்டு நிறைவடைந்த இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நகர்ப்புற வளர்ச்சிக்கான பல முன்னோடித் திட்டங்களை, தமிழ்நாடு நல்ல முறையில் நிறைவேற்றி உலக வங்கி பாராட்டும் வகையில் வெற்றி கண்டு சாதனை படைத்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளின் வாயிலாகத் தமிழகம் அடைந்துள்ள முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து சென்று மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம், மேலும் சிறப்பான சாதனைகள் படைத்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

❑ ❑ ❑

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், வெள்ளத்தில் சிக்கிய 27 பேர் மீட்கப்பட்டனர்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மழை வெள்ளம் மற்றும் மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் உபரி தண்ணீரால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு நிலைமைகளை ஆய்வு செய்தார்கள். அப்போது வெள்ளப் பெருக்கால் ஏற்படும் பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி உத்தரவிட்டார்கள்.

மேலும், சேலம் மேட்டூர் பகுதியில் கோல்நாயக்கன்பட்டி மற்றும் ஆத்துக்காடு ஆகிய கிராமப் பகுதிகளில் காவிரி ஆற்று வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்க விமானப்படை ஹெலிகாப்டரை உடனடியாக வரவழைக்குமாறும், அவர்களை பத்திரமாக மீட்குமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, கோயம்புத்தூரை அடுத்துள்ள சூலூர் விமான படைத்தளத்தைச் சேர்ந்த இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் ஒன்று உடனடியாக வரவழைக்கப்பட்டு, அதன்மூலம் மேட்டூரை அடுத்த கோல்நாயக்கன்பட்டி மற்றும் ஆத்துக்காடு பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கித் தவித்த 27 நபர்கள் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்கள் அனைவரும் மேட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்திரமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு, உடை முதலான அனைத்து நிவாரணப் பொருள்களும் வழங்கப்பட்டன.

உடனடியாக ஹெலிகாப்டரை அனுப்பி, தங்களைக் காப்பாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வெள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டோர் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். ❑



# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2000 தற்காலிகக் குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டு, தங்களது வீடுகளை இழந்த சென்னை இராயபுரம், காசிமேடு மற்றும் திருவொற்றியூர் பகுதிவாழ் கடலோரப் பகுதி மக்களைக் குடியமர்வு செய்வதற்கென 5 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள, பாதுகாப்பான, தீப்பிடிக்காத 2,000 தற்காலிகக் குடியிருப்புகளை, 19.10.2005 அன்று திறந்து வைத்தார்கள். மேலும், தண்டையார்பேட்டைப் பகுதியில் சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதி குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய, சுமார் 20.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிரந்தரமாகக் கட்டித் தரப்படவுள்ள 1,392 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

### தற்காலிகக் குடியிருப்புகள் திறப்பு

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைக் கடந்த 26.12.2004 அன்று சற்றும் எதிர்பாராத வகையில் கடும் சீற்றத்துடன் திடீரெனத் தாக்கிய சுனாமி பேரலைகளால் சென்னைப் பகுதியிலுள்ள இராயபுரம், காசிமேடு மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் வசித்து வந்த கடலோரப் பகுதி மக்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து பெரும் துன்பத்திற்கு ஆளாயினர். இவ்வாறு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உலகமே வியக்கும் வண்ணம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு நிவாரண உதவிகளை உடனுக்குடன் வழங்கி அவர்களைத் துன்பத்திலிருந்து மீட்டார்கள். மேலும், இவர்களைப் பாதுகாப்பாகக் குடியமர்வு செய்திட எண்ணூர் பகுதி கார்கில் நகரில், தற்காலிகக் கூரை வீடுகள் அமைத்துத் தரப்பட்டன. ஆனால், இப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தால் இந்தத் தற்காலிகக் குடியிருப்புகள் பாதிக்கப்பட்ட காரணத்தால் இந்தத் தற்காலிகக் குடியிருப்புகளைப் பாதுகாப்பானதாக, தீப்பிடிக்காத வகையில் நல்ல முறையில் உருவாக்கித் தரும்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணைப்படி, எர்ணாவூர் செல்கிரிட் தொழிற்சாலைக்கு அருகே உள்ள வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலப்பரப்பில் பாதுகாப்பான, தீப்பிடிக்காத, 2,000 தற்காலிகக் குடியிருப்புகளைத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சென்னையைச் சேர்ந்த மக்கள் செயல்பாட்டு இயக்கம் (People Action Movement) மற்றும் Action-Aid நிறுவனத்தின் உதவியோடு 1,800 குடியிருப்புகளும், கருணாலயா தொண்டு நிறுவனம் மற்றும் Cord-Aid நிறுவனத்தின் உதவியோடு 200 குடியிருப்புகளும் உருவாக்கப் பட்டுள்ளன.

இந்தத் தற்காலிகக் குடியிருப்புப் பகுதியில், சாலை வசதி, மின்சாரம், குடிநீர், கழிப்பிடம், ஊட்டச்சத்து மையம் முதலான அடிப்படை வசதிகளை அரசுத் துறைகள் அமைத்துள்ளன. ஒவ்வொன்றும் 20,000 ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட வீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பான, தீப்பிடிக்காத இந்த 2,000 தற்காலிகக் குடியிருப்பு களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்தத் தற்காலிகக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ள 6 குடும்பங்களைச் சேர்ந்த பெண்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குரிய வீடுகளுக்கான சாவியை வழங்கினார்கள். மேலும் இந்தத் தற்காலிகக் குடியிருப்புகளை உருவாக்கித் தந்த தொண்டு நிறுவனங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். சென்னை தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் திரு. எஸ்.டி. இராஜேந்திரன், கருணாலயா தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு. என். பால்சுந்தர் சிங், மக்கள் செயல்பாட்டு இயக்கத்தின் இயக்குநர் திரு. இ. ஏகாம்பரம், Cord-Aid நிறுவனத்தின் ஆலோசகர் திரு. அலோசியஸ் ஜேம்ஸ், Action-Aid நிறுவனத்தின் வட்டார மேலாளர் திரு. அமர் ஜோதி ஆகியோருக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

## நிரந்தரக் குடியிருப்புகளுக்கு அடிக்கல்

மேலும், சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டுத் தங்களது வீடுகளை இழந்த குடும்பங்களை நிரந்தர இல்லங்களில் மறுகுடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கான நிரந்தரக் குடியமர்வு வசதியாக 20.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1,392 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இதன்படி, தண்டையார்பேட்டையில் இந்துஸ்தான் லீவர் நிறுவனம் இலவசமாக வழங்கியுள்ள இடத்தில் 14.40 கோடி ரூபாய் மதிப்பில், 960 அடுக்கு மாடிக் குடியிருப்புகளும், திலகர் நகர் பகுதி 2–ல், 3.24 கோடி ரூபாய் மதிப்பில் 216 குடியிருப்புகளும், திலகர் நகர் பகுதி 3–ல், 3.24 கோடி ரூபாய் மதிப்பில் 216 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1,392 குடியிருப்புகள் மொத்தம் 20.88 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ளன.

இதில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 236 சதுர அடியில், சமையலறை, குளியலறை மற்றும் பல்நோக்கு அறை ஆகியவற்றுடன், 1.50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இத்திட்டப் பகுதிகள் அனைத்தும் சாலை, மின் விளக்கு வசதி, மழை நீர் வடிகால், தெரு குடிநீர் குழாய் ஆகிய அடிப்படை வசதிகளுடன் ஓராண்டுக்குள் கட்டி முடிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. நா. பாலகங்கா, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு. லால் ராவ்னா சைலோ,இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரிய மேலாண் இயக்குநர் திரு. அம்புஜ் சர்மா,இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். சந்திரமோகன்,இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பங்கஜ் குமார்,இ.ஆ.ப., பன்சல் இ.ஆ.ப., மற்றும் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிறுவனத்தின் பிரதிநிதி திரு. ருத்ரா, ஆகியோர் பங்கேற்றனர்.

* * *



# பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் நிலுவைத் தொகை வழங்கும் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்கள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின் வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 2004–2005ஆம் ஆண்டிற்கு 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை வழங்க ஆணையிட்டவாறு, மொத்தம் 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகையை, இந்நிறுவனங்களைச் சார்ந்த 28 பேர்களுக்கு 20.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், நேரில் வழங்கி, அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

இவ்வாண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக மொத்தம் 20 சதவிகிதம் என்ற அளவில் வழங்கப்படுவதன் அடிப்படையில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர் 66.44 கோடி ரூபாயும், தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர் 44 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர் 6.87 கோடி ரூபாயும், ஆவின் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர் 1.537 கோடி ரூபாயும் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர் 7.42 இலட்சம் ரூபாயும் இவ்வாண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகையாகப் பெறுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்சொன்ன பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் 28 பேர்களுக்கு இந்த போனஸ் மற்றும் கருணைத் தொகையை நேரில் வழங்கி போனஸ் வழங்கும் பணியை, 20.10.2005 அன்று தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து,



இந்நிறுவனங்களைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போனஸ் தொகை முழுவதுமாக உடனடியாகப் பட்டுவாடா செய்து முடிக்கப்படும்.

**மின்வாரியத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கும் பணி தொடக்கம்**

தமிழ்நாடு மின் வாரியத்திற்குப் பல்வேறு காரணங்களால் கடுமையான நிதிச் சுமை ஏற்பட்டு இருப்பினும், மின் வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களையும் பணியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு அதிகபட்ச ஊதிய உயர்வு வழங்கிட முடிவெடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊதிய உயர்வு மற்றும் சலுகைகளை வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, வழங்கப்படுவதால் நிலுவைத் தொகையை ரொக்கமாக வழங்கவும் உத்தரவிட்டார்கள். தமிழகம் முழுவதும் உள்ள மின்வாரியத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு நிலுவைத் தொகை முழுவதும் ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இந்த நிதியாண்டில் மொத்தம் சுமார் 419.35 கோடி ரூபாய் கூடுதல் செலவினமும் தொடர்ந்து ஆண்டுதோறும் 163.20 கோடி ரூபாயும் செலவு ஏற்படும். மின்வாரியத் தொழிலாளர்களுக்கு இவ்வாறு ஊதிய உயர்வும், சலுகைகளும் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டவாறு, 15.10.2005 அன்று, தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களது புதிய ஊதிய ஒப்பந்தம் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பலனாக, அதிகபட்சமாக 77,749 ரூபாயும், குறைந்தபட்சமாக 22,820 ரூபாயும் நிலுவைத் தொகையாக மின்வாரிய ஊழியர்களுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தப் புதிய ஒப்பந்தத்தின் பலனாகக் கிடைக்கும் நிலுவைத் தொகையை மின் வாரியத்தின் தொழிலாளர்கள் 6 பேர்களுக்கு நேரில் வழங்கி மின்வாரியத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து, மின்வாரியத்தைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை முழுவதுமாக உடன் பட்டுவாடா செய்து முடிக்கப்படும்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. டி.ஆர். சீனிவாசன்,இ.ஆ.ப., போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு. இரா. கற்பூர சுந்தர பாண்டியன், இ.ஆ.ப., எரிசக்தித் துறைச் செயலாளர் திரு. சத்பதீ, இ.ஆ.ப., கால்நடைத் துறைச் செயலாளர் திரு. விசுவநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கே.சண்முகம், இ.ஆ.ப., பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சண்முக ராஜேஸ்வரன்,இ.ஆ.ப., ஆவின் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி.கே. பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர். ❖



# விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 7-10-2005



**த**மிழக விவசாயிகளின் நலன் கருதி, 2002-ஆம் ஆண்டு முதல் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி (Decentralised Paddy Procurement System), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் (2004-2005) எனது ஆணையின் பேரில், பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 30.9.2005 வரை மொத்தம் 9.72 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதால் விவசாயிகள் மிகவும் பயன் அடைந்துள்ளனர்.

இந்த ஆண்டு (2005) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களிலும் போதுமான அளவு தண்ணீர் இருப்பு இருப்பதால், பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் இந்த ஆண்டு நெல் உற்பத்தி மிக அதிக அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டிலும் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென எனக்கு விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டு கோளினை ஏற்று, இந்த ஆண்டும் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி, நெல் கொள்முதல் செய்ய நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி, காவிரி டெல்டா மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் (Direct Purchase Centres) மூலமாகவும், மாநிலத்தின் மற்ற மாவட்டங்களில் வட்டக் கிடங்குகள் (Taluk Godowns) மூலமாகவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும்.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலையான கிரேடு 'ஏ' ரக நெல்லுக்கு குவிண்டால் (100 கிலோ) ஒன்றுக்கு 600 ரூபாய் வீதமும், சாதாரண ரக (common variety) நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு 570 ரூபாய் வீதமும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்த நெல் கொள்முதல் 31.7.2006 வரை அமலில் இருக்கும். விவசாயப் பெருமக்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை நல்ல முறையில் விற்பனை செய்து பயன் அடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ❖

# டென்னிஸ் வீராங்கனைக்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னையைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான செல்வி சாய் ஜெயலக்ஷ்மி, உயர் அளவிலான சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் அவரது உலகத் தர நிர்ணயத்தை (World Ranking) மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக வெளிநாடுகளில் நடைபெறும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விளையாட உதவிடும் வண்ணம் ரூ.4 இலட்சம் நிதியுதவிக்கான காசோலையை வழங்கினார்கள்.

சென்னையைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை செல்வி சாய் ஜெயலக்ஷ்மி, உலகளவிலான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, பற்பல வெற்றிகள் பெற்றவர் ஆவார். டென்னிஸ் விளையாட்டில் இவர் இரட்டையர் மகளிர் பிரிவில் உலகத் தர வரிசையில் 318ஆவது இடத்திலும், ஒற்றையர் மகளிர் பிரிவில் 616ஆவது இடத்திலும் உள்ளார். ஒற்றையர் ஆட்டத்தில் நான்கு சர்வதேசப் போட்டிகளிலும், இரட்டையர் ஆட்டத்தில் 25 சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வீராங் கனையாகத் திகழுகிறார். எனினும் உயர் அளவிலான சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் தனது உலகத்தர வரிசை நிர்ணயம் இல்லாத காரணத்தால், கிராண்ட் ஸ்லாம் போன்ற போட்டிகளில் பங்கேற்க இயலாததைக் கருத்தில் கொண்டு, அத்தகைய உயர் தகுதியைப் பெறும் வகையில் வெளி நாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் பங்கேற்கத் தனக்கு நிதியுதவி வழங்கிட வேண்டும் என்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் செல்வி சாய் ஜெயலக்ஷ்மி கோரிக்கை மனு அளித்திருந்தார்.

இவரது மனுவை மிகுந்த கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், டென்னிஸ் வீராங்கனை செல்வி சாய் ஜெயலக்ஷ்மி, உயர் அளவிலான சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் உலகத் தர நிர்ணயத்தை (World Ranking) மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக வெளிநாடுகளில் நடைபெறும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விளையாட உதவிடும் வண்ணம், தமிழக அரசின் சார்பாக 4 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட ஆணையிட்டார்கள்.

இந்த ஆணைப்படி, இதற்கான காசோலையை 19.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், டென்னிஸ் வீராங்கனை செல்வி சாய் ஜெயலக்ஷ்மியிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நேரில் வழங்கி தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். வெளிநாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் மிகுந்த திறமையுடன் விளையாடி வெற்றிப் பெற்று, உலகத் தர நிர்ணயத்தை மேம்படுத்திக் கொள்ளவும், அதன் அடிப்படையில் உயர் அளவிலான சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமைத் தேடித் தரவும், தமது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

□ □ □



# தமிழ்நாட்டிற்கு 20 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய நன்மைகளை தமிழக அரசு 4 ஆண்டுகளில் செய்திருக்கிறது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



தமிழ்நாடு அரசுப் பணிகளுக்குத் தகுதியானவர்களைத் தேர்வு செய்கின்ற தனித்துவ அமைப்பான, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பவள விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் அரசு இயந்திரத்தைக் கட்டுக்கோப்புடன் உருவாக்கி, வலுப்படுத்தி, மேம்படுத்துவதில் கடந்த 75 ஆண்டு காலமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆற்றி வந்துள்ள அரும்பணி, அப்பழுக்கற்ற சேவை பாராட்டுக்குரியது.

இந்திய நாடு விடுதலை பெற்று இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டதும், மாநிலங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வாணையங்களுக்கு உரிய அரசமைப்பு அந்தஸ்து அளிக்கப்பட்டது.

இதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மாநில பொது, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தகுந்த போட்டித் தேர்வுகளையும், நேர்முகத் தேர்வுகளையும் நடத்தி, பணியாளர்களைத் தேர்வு செய்யும் பணியைச் செய்து வருகிறது. குடிமைப் பணிகள் மற்றும் பிற பொதுப் பதவிகளுக்கான நியமன முறைகள் தொடர்பாக அனைத்து ஆலோசனைகளையும் வழங்குகிறது.



5




இதுவன்றி, மாநில அரசின் கீழ்ப் பணியாற்றும் பணியாளர்களைப் பாதிக்கும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள், நியமனங்கள், பதவி உயர்வுகள், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல்கள் மற்றும் இவற்றுக்கான தகுதிகள் ஆகியவை தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்து ஆலோசனை அளிக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின்படி நாம் ஏற்றுக் கொண்டுள்ள பாராளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy), மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் சட்டங்கள் இயற்றவும், திட்டங்கள் தீட்டவும், நிரந்தர அரசு இயந்திரம் அதன் அங்கமான பணியாளர்கள் மூலம் அவற்றை நிறைவேற்றவும் வழிவகை செய்கிறது. அவ்வப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் செயலாட்சியாளர்கள் – அதாவது, Political Executives மற்றும் நிரந்தர அமைப்பாக உள்ள குடிமைப் பணி – அதாவது, Permanent Civil Service-ன் அங்கமான பணியாளர்கள் ஆகியோர் இணைந்தே சட்டங்களைச் செயல்படுத்தவும், திட்டங்களை நிறைவேற்றவும் இயலும். எனவே, குடிமைப் பணிக்காக, தகுதி வாய்ந்த, சரியான பணியாளர்களைத் தேர்வு செய்யும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் பாராளுமன்ற ஜனநாயகத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

அறிவார்ந்த அரசியல் தலைவர்கள் அன்றையப் பிரச்சினைக்கு ஆறுதல் கூறுகின்ற திட்டங்களை வகுப்பதோடு மட்டுமல்லாமல், அடுத்த தலைமுறையினரைப் பற்றிச் சிந்தித்துத் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை உருவாக்குகிறார்கள். அந்தத் திட்டங்கள் மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசியல் தலைவர்களின் மனதிலே உதிக்கும் திட்டங்களாக அமையும். அந்தத் திட்டங்களின் சாதக பாதகங்கள், அதனை நிறைவேற்றுவதற்கு ஆகும் செலவு, அதற்கான நிதி ஆதாரம், அதன் பயன்கள், எந்தக் குறிக்கோளுக்காக அத்திட்டம் செயல்படுத்தப் படுகிறதோ அதனை அடைய முடியுமா, முதலீட்டிற்கான பயன் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து எடுத்துக் கூறுவது அரசு உயர் அதிகாரிகளின் கடமையாகும். இவற்றை எல்லாம் ஆய்ந்து, அதன் பின்னர், அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கொள்கை முடிவு எடுப்பதற்கான அதிகாரம் அரசியல் செயலாட்சியர்களிடம்தான் உள்ளது. அவ்வாறான கொள்கை முடிவு எடுக்கப்பட்ட பின்னர், அந்தத் திட்டங்களை முழு மனதுடன் நிறைவேற்ற வேண்டியது அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் கடமை ஆகிறது. திட்டங்கள் உருவாக்க நிலையில் உள்ள போது, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள இடையூறுகள், திட்டத்தில் உள்ள குறைகள் ஆகியவற்றை எடுத்துக் கூற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ள அதே நேரத்தில், திட்டம் நிறைவேற்றப்பட முடிவெடுக்கப்பட்ட பின்னர், அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் முழு ஒத்துழைப்பு நல்குவது அரசுப் பணியாளர் கடமையாகும். எனவே, அரசியல் செயலாட்சியாளர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களிடையே ஒரு கூர் உணர் உறவு உள்ளது. அரசியல் செயலாட்சியாளர்களும், பணித்துறை ஆட்சியாளர்களும் – அதாவது, bureaucracy-யும் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றும்போது மக்கள் நலன் பயக்கும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. திட்டத்தின் பயன்கள் மக்களைச் சென்றடைகின்றன. இவ்வாறே, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, மக்களை முன் நிறுத்தியே திட்டங்கள் தீட்டி, அரசுப் பணியாளர் மூலம் அதன் பயன்கள் மக்களை விரைந்து சென்று அடைந்திடச் செய்கிறது என்பதை மிகுந்த மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு வணிக நிறுவனத்திலிருந்து இன்னொரு வணிக நிறுவனத்திற்கு ஒருவன் பணி ஆற்றச் சென்றான். வந்து சேர்ந்திருக்கும் ஆள் எப்படிப்பட்டவன் என்பதை அறிய, புதிய நிறுவனத்தின் மேலாளர் பழைய நிறுவனத்தின் மேலாளரிடம் பேசினார்.





"இந்த ஆள் எப்படிப்பட்டவன் ?" என்று கேட்டார்.

"கெட்டிக்காரன்" என்று பதில் சொன்னார் பழைய மேலாளர்.

"எத்தனை ஆண்டுகள் உங்கள் நிறுவனத்தில் இவன் பணி செய்தான் ?" என்று கேட்டார் புதிய நிறுவனத்தின் மேலாளர்.

"நான்கு மாதங்கள்" என்று பதில் சொன்னார் பழைய நிறுவனத்தின் மேலாளர்.

"என்ன ? 4 மாதங்களா ? நான்கு ஆண்டுகள் என்றல்லவா இவன் எங்களிடம் சொன்னான் ?" என்று கொந்தளித்தார் புது நிறுவனத்தின் மேலாளர்.

"அவன் சொல்வது உண்மை தான். ஆனால், அவன் பணி செய்த நாட்கள் நான்கு மாதங்கள்தான்" என்று நிதானமாகச் சொன்னார் பழைய நிறுவனத்தின் மேலாளர்.

எது உண்மை ? 4 மாதங்களா ? 4 ஆண்டுகளா ?

ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்க முடியும். ?

இல்லை ! இரண்டும் ஏக காலத்தில் உண்மை ! அது தான் இரண்டு மேலாளர்களும் பேசிக் கொண்டதில் கிடைத்த தகவல்.

அவன் நான்கு மாதங்கள்தான் அங்கே இருந்தான். ஆனால், நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய கணக்குப் பணிகளை நான்கே மாதங்களில் செய்து முடித்தான்.

எனவே, இரண்டும் உண்மைதானே ?

அப்படித்தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னைப் பொறுத்தவரையிலும் !

இரண்டாம் முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றுச் செயல்படுகின்ற இந்த நான்காண்டுகளில், 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நன்மைகளைத் தமிழ்நாட்டுக்கு எனது அரசு செய்திருக்கிறது என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமூகத்தில் ஒவ்வொரு துறையினருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற வேட்கையில், நான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, ஒவ்வொரு நாளும் சாதனைத் திருநாளாகவே மாறியிருக்கிறது என்பதை நியாயமான பெருமித உணர்வுடன் கூறிக்கொள்ள நான் விழைகிறேன்.

ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பதுதான் ஒரு நல்ல அரசின் இலக்கணம் என்பது எனது எண்ணமாகும். அந்த இலக்கணத்திற்கு ஏற்றவாறு அரசு இயந்திரத்தையும், அதன் அங்கமான அரசுப் பணியாளர்களையும் முழுமையாகப் பயன்படுத்தி, அரசால் வகுக்கப்படும் திட்டங்கள் சிறப்புடன் செயல்படுத்தப்படவும், அதன் பயன்கள் யாவும் மக்களுக்கு உரிய நேரத்தில்

திட்டமிடப்பட்டவாறு சென்றடையச் செய்திடவும், எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அரசுப் பணியாளர் ஒத்துழைப்புடன் இந்தப் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

உயர் பதவிகளுக்குப் பதவி உயர்வு மூலம் பணியாளர்களைத் தெரிவு செய்வதில் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பரிந்துரையை ஏற்று எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 1994–ஆம் ஆண்டில், 'துறை பதவி உயர்வுக் குழுக்கள்' அமைத்திட நான் ஆணையிட்டேன். அரசு ஊழியர்கள் பதவி உயர்வு பெறுவதில் இருந்த தேக்க நிலையை நீக்கி, தகுதி படைத்தவர்களுக்கு உடனடியாகப் பதவி உயர்வு அளித்திட இக்குழுக்கள் சிறப்பான பணிகள் செய்து வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 1994–ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு என புதிய இணைப்புக் கட்டடம் கட்ட 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் நிதி அளித்தேன். அவ்வாறு கட்டப்பட்ட இணைப்புக் கட்டடத்தில் தற்போது மேலும் இரண்டு மாடிகள், 2 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் அளித்து, அப்பணிகளுக்காக இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

புகழ்பெற்ற பொன்மொழி ஒன்று உண்டு.

ஓர் ஆண்டு காலத் திட்டமா ?
மலர்களை வளர்ப்பாய்!

பத்து ஆண்டு காலத் திட்டமா ?
மரங்களை வளர்ப்பாய்!

கால காலத்துக்கும் உள்ள திட்டமா ?
மனிதர்களை வளர்ப்பாய்!

இதுதான் அந்தப் பழமொழி.

Where the vision is one year,
Cultivate flowers.

Where the vision is ten years,
Cultivate trees.

Where the vision is eternity,
Cultivate People.

– இது அந்தப் பழமொழியின் ஆங்கில வாசகம்.

மலர்ச்செடிகளை ஓராண்டிலும், மரங்களைப் பத்தாண்டிலும் வளர்த்திடலாம். ஆனால், மனித வளர்ப்புப் பணி என்பது அப்படிக் குறுகிய காலத்தில் முடிந்து விடுகிற பணி அல்ல. என்றும், என்றென்றும் தொடரப்பட வேண்டிய பணி.

இந்தப் பழமொழியின் ஆங்கில வாசகத்தில், Cultivate என்ற வார்த்தை வருகிறது. Cultivate என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் 'பயிரிடு' என்ற பொருளும் இருக்கிறது. 'பண்படுத்து' என்ற பொருளும் இருக்கிறது.

மனிதரைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு பொருள்களுமே உண்மைதான்.

மனிதர்கள், பயிரிடப்பட வேண்டியவர்கள் மட்டும் அல்ல; பண்படுத்தப்பட வேண்டியவர்களும் கூட!

தேர்வாணையம் திறம் மிக்க மனிதர்களைத் தேர்ந்தெடுக்கத் தகுதிப்பாடுகளை நிர்ணயிக்கிறது. அதன் மூலம், தகுதி மிக்க மனிதர்கள் உருவாக உதவி செய்கிறது.

அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்ந்தெடுக்கும் பணியாளர்கள் நாளைய அரசு இயந்திரத்தை இயக்கும் அலுவலர்கள் ஆகப் போகிறவர்கள்.

அரசு இயந்திரத்தைத் திறம்பட இயக்கும் ஆற்றல் படைத்தவர்கள் கால ஓட்டத்தில் அவர்களே இயந்திரங்கள் ஆகிவிடுகின்ற அபாயமும் உள்ளது.

எனவே, தேர்வாணையம் மாபெரும் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கும் போது மனிதாபிமானம் உள்ள மாபெரும் திறமையாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது தன்னிகரற்ற பணிகளை மேலும் தொடர எனது மனம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

– சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
13.10.2005 அன்று நடைபெற்ற
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்
பவள விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு,
இணைப்புக் கட்டட விரிவாக்கத்திற்கு அடிக்கல்
நாட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை.



# உழவர் பாதுகாப்புத் திட்டம்

## விவசாயத் தொழிலாளர்களும், சிறு-குறு விவசாயிகளும் பயன்பெறும் புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தமிழகத்தின் உழவர் பெருமக்கள் தலைநகரில் பெருந்திரளாகக் கூடியிருக்கும் இந்தக் காட்சி தன்னிகரற்ற காட்சி!

கண்கள் காணும் இடம் எல்லாம் விவசாயப் பெருமக்கள்!

பார்க்கும் இடம் எல்லாம் உழவர் பெருமக்கள்!

பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் பணியில் ஈடுபடும் உழவர் பெருமக்களாகிய உங்களை எல்லாம் பார்ப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலே உலகத்தின் உன்னதத் தொழில் என்பதில் இரு வேறு கருத்துக்கு என்றுமே இடம் கிடையாது. அத்தகைய உழவுத் தொழிலை மேற்கொள்கின்ற உழவர் பெருமக்கள் என்றும் பெருமைக்குரிய உயர் பெருமக்கள் என்பதில் ஐயம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு விவசாயி என்று கூறிக் கொள்வதில் நான் எப்பொழுதுமே பெருமை கொள்கிறேன். பல்வேறு படிவங்களில், பெயர், பிறந்த நாள், முதலான விவரங்களைக் கேட்கும் போது செய்யும் தொழில் என்ன என்பதும் கேட்கப்படும். அவ்வாறு படிவங்களைப் பூர்த்தி செய்யும் போதெல்லாம் எனது தொழில் விவசாயம் என்பதைப் பெருமிதத்துடன் நான் குறிப்பிடுவேன் என்பதை இங்கு தெரிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன். சட்டமன்ற உறுப்பினராக வேண்டுமென்றாலும் கூட, என்னென்னவாக தேர்தலில் நிற்க வேண்டும் என்றாலும் கூட, அதற்காக சில படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படி, ஒவ்வொரு தேர்தலிலும் நான் போட்டியிடுவதற்கு முன்பாகப் பூர்த்தி செய்த படிவங்களில் உங்களுடைய தொழில் என்ன என்று கேட்கப்பட்ட இடத்தில், நான் ஒரு விவசாயி

என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிக் குறிப்பிட்டுத்தான் தேர்தலில் வெற்றி பெற்று, நான் சட்டமன்ற உறுப்பினராகி, இன்றைக்கு உங்களுடைய முதலமைச்சராகி இருக்கிறேன். அண்மையில், கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகம் எனக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்த பட்டமளிப்பு விழாவில், ஏற்புரையின் போது நானும் ஒரு விவசாயிதான் என்பதைப் பெருமையுடன் தெரிவித்ததையும் இங்கு நினைவு கூர விரும்புகிறேன்.

"கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி!
முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி"

– என்று இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியபடி, நீரிலே முத்தெடுக்காமல் நிலத்திலே முத்தெடுத்து ஊருக்கு உணவூட்டும் உன்னதத் தொழிலாளிதான் விவசாயி!

விவசாயி, கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி என்பதை விட, கடவுளே அவன்தான் என்று கூறிவிடலாம்.

"கவிதைகளை என்னைப் போன்ற பாமரர்களும் படைக்க முடியும்; ஆனால், ஒரு பூச்செடியை ஆண்டவனால் மட்டுமே படைக்க முடியும்" என்று வங்கக் கவிஞர் தாகூர் தனது தங்கக் கவிதையில் கூறியுள்ளார்.

பூச்செடியை ஆண்டவனால் மட்டுமே படைக்க முடியும் என்றால், ஆயிரம் பூச்செடிகளைப் படைக்கும் நீங்களும் ஆண்டவர்கள்தானே!

ஆயிரம் ஆயிரம் பூச்செடிகளை – ஆயிரம் ஆயிரம் பயிர்களை – படைக்கும் நீங்கள் ஆண்டவர்கள் அல்லவா!

தமிழக வேளாண் பெருங்குடி மக்கள் மீது நான் வைத்திருக்கும் அன்பு எத்தகைய ஆழமான அன்பு என்பதை வெறும் அலங்காரச் சொற்களால் அல்ல, அறிவுசால் திட்டங்களால், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் மெய்ப்பித்துக் காட்டி வருகிறேன் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தொடர்ச்சியான வறட்சியினால், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுச் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானபோது, ஒவ்வொரு மாதமும் 30 கிலோ இலவச அரிசி வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக எனது அரசு விளங்கியது. மேலும், வறட்சிக் காலங்களில் நிலவரித் தள்ளுபடி, பயிர் இழப்பீட்டுக்கான உதவித் தொகை முதலான பல்வேறு சலுகைகளையும் எனது அரசு வழங்கியது.

அடுத்தடுத்து, மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியால் ஒட்டு மொத்தப் பண்ணைத் துறையும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தபோது, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களைப் பாதுகாத்திடப் பல்வேறு தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

விவசாயிகள் தங்களது கடன் சுமையைச் சமாளித்து அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், வாழ்க்கை மீது ஒரு நம்பிக்கை உணர்வையும் ஏற்படுத்தும் வகையில் பல கடன் நிவாரணத் தொகுப்பு உதவிகளை வழங்கினேன்.

2001ஆம் ஆண்டில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் உடனடியாக 30.6.2000 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக இருந்த அனைத்துப் பயிர்க் கடன்கள் மீதான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டேன். இதற்காக நான் 310.51 கோடி ரூபாய் அனுமதித்தேன்.

இதனைத் தொடர்ந்து, மேலும் பல வட்டித் தள்ளுபடிச் சலுகைகளை எனது அரசு அளித்தது.

தொடர்ந்து நிலவி வந்த வறட்சியைக் கருத்தில் கொண்டு, 31.3.2004 அன்றைய நிலவரப்படி, விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன் மற்றும் வட்டித் தவணைகளை இரண்டு ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டியதில்லை என்றும், அதன் பின்னர், அதனை 2006–2007ஆம் ஆண்டில் இருந்து தொடங்கி மூன்று ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம் என்றும் கடன் தவணை திருத்தி அமைப்புச் சலுகையை எனது அரசு வழங்கியது.





**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி** ஜெ ஜெயலலிதா **அவர்கள், நவீன இயந்திரத்தின் மூலம் நாற்றுப் பயிர் நடவு செய்தலைப் பார்வையிடுகிறார்கள்.**

இதன் தொடர்ச்சியாக, 31.3.2004 அன்றைய நிலவரப்படியான திரண்ட வட்டியையும், அதே நாளைய நிலவரப்படி நிலுவையாக இருந்த அசல் தொகைக்கு, 30.6.2006 வரை சேர்ந்து வரும் வட்டியையும் தள்ளுபடி செய்து, 16.9.2005 அன்று நான் உத்தரவிட்டேன். இதன்படி, 645 கோடி ரூபாய்க்கான கடன் நிவாரணத் தொகுப்பு உதவியை எனது அரசு வழங்கியது.

இவ்வாறு, ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலாக இன்று வரை விவசாயிகளுக்குக் கடன்களைத் தள்ளி வைப்பதற்கும், தீர்வு செய்வதற்கும், வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவும்; 1,464 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகைகளை உங்களுக்கு எனது அரசு வழங்கியுள்ளது. இதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதத்தைக் கணிசமாகக் குறைத்து இன்று மிகக் குறைந்த அளவான 9 சதவிகித வட்டி விகிதத்திற்கு கூட்டுறவு வங்கிகளால் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

கடன் உதவி பெற்று வேளாண் தொழில் புரிகின்ற விவசாயிகளின் கடன் பளுவை வெகுவாகக் குறைத்திட இவ்வாறு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட அதே நேரத்தில், வேளாண் தொழில் சிறப்புடன் நடந்தேற அடிப்படையாக உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதத்தை உயர்த்தி வழங்கிடவும் நான் ஆணையிட்டேன்.

பல்வேறுபட்ட பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அவர்களது உழைப்புக்கு ஏற்ற ஆதாய விலைகளைக் கிடைக்கச் செய்திட முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டேன். எடுத்துக்காட்டாக, மிளகாய், கொப்பரைத் தேங்காய் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஆதாய விலைகள் கிடைத்திட சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டேன். அதே போல, தேயிலை விலை கடும் வீழ்ச்சி அடைந்து பெரும் பாதிப்புக்குள்ளான நீலகிரி மாவட்டச் சிறு தேயிலை விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட, 28 கோடி ரூபாய் செலவில் 'சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்' என்னும் புதிய திட்டம் எனது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தாங்கள் விளைவிக்கும் கரும்புக்கு ஆதாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளின் நீண்ட காலக் கனவை நனவாக்கும் வகையில், சர்க்கரை பிழி திறனைக் கணக்கில் கொள்ளாது, குறைந்தபட்ச விலையாக கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் வழங்கவும், சராசரி 9 சதவிகிதத்திற்கு மேல் பிழி

திறன் கொண்ட கரும்புக்கு ஊக்கத் தொகையும் வழங்கவும் வகை செய்து பரிந்துரை விலையை எனது அரசு அறிவித்தது.

ஆனால், மத்தியிலே ஆட்சி செய்யும் தேசியக் கட்சியின் தமிழக சட்டமன்றத் தலைவர், 'நான்கரை ஆண்டு காலமாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள் ?' என்று ஒரு குதர்க்கமான கேள்வியைச் சட்டமன்றத்திலே எழுப்புகிறார். சட்டமன்றத்திற்கே வராத வேறு ஒரு தலைவரோ, சரமாரி அறிக்கைகளை வெளியிட்டு அங்கலாய்த்துக் கொள்கிறார்.

இவற்றைப் பார்க்கும் போது எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

ஓர் ஊரில் மூங்கில் வளர்ப்பதற்காக மூங்கில் கன்று ஒன்றை நட்டார்கள். அதற்கு நீரூற்றி உரமிட்டுக் கவனமாக வளர்த்து வந்தார்கள்.

ஓர் ஆண்டு ஆயிற்று. இரண்டு ஆண்டுகள் ஆயின. மூன்று ஆண்டுகள் ஆயின. மூங்கில் தழைக்கக் காணோம். நான்கு ஆண்டுகளும் ஆயின. வளர்வதற்கான அடையாளம் கூட மூங்கிலிடத்தில் இல்லை.

ஐந்தாம் ஆண்டும் வந்தது; மூங்கில் வளரவில்லை. திடீரென ஒரு நாள் மூங்கிலில் ஒரு மாற்றம். அது கொஞ்சம் வளர்ந்திருந்தது. அன்றிலிருந்து ஆறு வாரத்தில் – ஆறே வாரத்தில் – அந்த மூங்கில் 90 அடி உயர்ந்து விட்டது. ஆறு வாரத்தில் 90 அடி வளர்ந்து விட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அது உண்மையா ? இல்லை!

ஆறு வாரத்திலா அது வளர்ச்சி அடைந்தது ? இல்லை! 5 ஆண்டுகளில் வளர்ந்தது! அதன் வளர்ச்சி வெளியே தெரியவில்லை. ஆனாலும் அது வளர்ந்து கொண்டுதான் இருந்தது. மூங்கில்களுக்கு நான்கு ஆண்டுகள் வரை பூமிக்கு அடியில் வேர் பாகத்தில் தான் வளர்ச்சி இருக்கும். அதன் பிறகுதான் அந்த மூங்கில் போத்து பூமிக்கு மேலே வளர்ச்சி காணத் தொடங்கும்.

அப்படி அது வேர்விட்டு வளர்ந்தது வெளியே தெரியவில்லை. அவ்வளவுதான். அதன் வெளி வளர்ச்சி இப்போதுதான் தெரிகிறது. அதனால் அதனை நான்காண்டுகள் வளர்த்தது வீண் என்று அறிவுள்ள எவரும் சொல்வாரா ? சொல்லமாட்டார்!

அப்படி நான்கு ஆண்டுகள் பொறுமையாக நீரூற்றி, உரமிட்டு, பாதுகாத்து வளர்த்ததால்தான் ஐந்தாம் ஆண்டில் அந்த மூங்கில் வளர்ந்தது. ஐந்தாம் ஆண்டில் ஆறு வாரங்களில் 90 அடி உயரத்திற்கு அந்த மூங்கிலால் வளர முடிந்தது.

கல்லும் முள்ளுமாகக் கிடந்த நிலத்தைப் பண்படுத்தி; நீர் ஆதாரத்துக்கு ஏற்பாடு செய்து, கொஞ்சம் கூடச் சோம்பல் இல்லாமல் உழைத்து; நீர் ஊற்றி; உரமிட்டதால்தான் ஐந்தாம் ஆண்டில் அது 90 அடி வளர்ந்தது.

அப்படித்தான் முன்னிருந்தோர் கரடு முரடாக விட்டுப் போயிருந்த நிதிநிலை என்ற நிலத்தை – பாழ்படுத்திவிட்டுப் போன நிதி நிலை நிலத்தை – 4 ஆண்டுகள் கடுமையாக உழைத்துப் பண்படுத்தினோம். பயிரிட்டோம். இன்றைக்கு ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்த பின் உழைப்பின் பயனைக் காண்கிறோம். அதனை மாநிலம் முழுமைக்கும் மகிழ்ச்சியோடு வழங்குகிறோம்.

'மூங்கிலே, மூங்கிலே! ஐந்தாம் ஆண்டிலே அபரிமிதமாக வளர்ந்த மூங்கிலே! இதுவரை 4½ ஆண்டு காலமாக என்ன செய்து கொண்டிருந்தாய் ?' என்று சிந்தனைத் திறன் உள்ளவர்கள் எவராவது கேட்பார்களா ?

அவர்களுக்கு மூங்கிலின் வளர்ச்சி அதிர்ச்சி அளிக்கிறது. அந்த அதிர்ச்சியால் அடி மனதில் அசூயை வளர்கிறது. அதனால், 'எப்படி இப்படி வளரலாம் ?' என்று எதிர்ப்புக் குரல் எழுப்புகிறார்கள்.

அவர்களது வயிற்றெரிச்சல் வார்த்தைகளாக வருகிறது. பொறாமைப் பெருமூச்சால் மூங்கிலைப் பொசுக்கி விடத் துடிக்கிறார்கள். அது முடியுமா ? முடியாது!

பொதுவாக தமிழ்நாட்டில் மணமக்களை வாழ்த்துகிறபோது, 'மூங்கில் போல், சுற்றம் முசியாமல் வாழியவே!' என வாழ்த்துவார்கள். அவ்வாறு, எனதருமை தமிழக மக்களுடன் நெருங்கி மக்களுக்காகச் செயல்படுகின்ற அரசாக விளங்கும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசை, மக்களிடம்





இருந்து எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது என்பதை அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு/குறு விவசாயிகளுக்கும் பயன் அளிக்கும் புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமான "தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை" இன்று நடைபெறும் இந்த இனிய விழாவில் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மன மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, தங்களது வாழ்வாதாரத்திற்கு வேளாண் தொழில் ஒன்றையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும், 51 இலட்சம் சிறு/குறு விவசாயிகளும், எண்ணிப் பார்க்கவும் இயலாத வகையில் அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன்பெறுவார்கள் என்பதை மிகுந்த மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கென ஆண்டொன்றுக்கு 250 கோடி ரூபாயை எனது அரசு செலவு செய்யும். இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்திட ரூ.10 கட்டணம் செலுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட போதும், அதனை உங்கள் சார்பாக எனது அரசே செலுத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இதற்காக ரூபாய் 13 கோடியே 70 இலட்சம் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாயத் தொழிலாளி ஆனாலும் சரி; அல்லது சிறு/குறு விவசாயி என்றாலும் சரி; அவர்களுக்குத் திருமணம் செய்து கொள்வதற்கு உதவி; கருவுற்ற தாய்க்குப் பிரசவச் செலவுக்கு உதவி; கருச்சிதைவு ஏற்படும் போது உதவி; பிள்ளைகள் பள்ளிக் கல்வி பயில உதவி; கல்லூரி சென்று அவர்கள் மேல்நிலைக் கல்வி பயில உதவி; 60 வயது அடைந்து மூப்பின் காரணமாக வேலை செய்ய இயலாமல் ஆதரவற்ற நிலையில் உள்ளோருக்கு ஓய்வூதியம் என அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவையான உதவிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். திட்ட உறுப்பினர் துரதிருஷ்டவசமாக விபத்திலே சிக்கி இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி; விபத்தில் உடல் உறுப்பு இழப்பு ஏற்பட்டால் இழப்பின் தன்மைக்கு ஏற்ப ஒரு இலட்சம் ரூபாய் வரை நிதி உதவி; இயற்கை மரணம் எய்தினால் அவரது குடும்பத்திற்கு 10.000 ரூபாய் இழப்பீடு; ஈமச் சடங்கு செலவிற்கு என 2.500 ரூபாய் என உதவிகள் வழங்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உழவுத் தொழில் மேன்மையுற வேண்டும் என்று சொன்னால், பாரம்பரிய வேளாண் முறைகளுடன் நவீன உத்திகளையும் புதிய வழிமுறைகளையும் நாம் கையாள வேண்டியது மிகவும் அவசியமாகும்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,
வேளாண்மைத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட கண்காட்சியினைப் பார்வையிடுகிறார்கள்.

குறைந்த நீரில் நிறைந்த மகசூல் காண வேண்டும்; வேளாண் உற்பத்திப் பொருள்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றப்பட வேண்டும்; அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வேளாண்சார் தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவற்றை எல்லாம் எனது அரசு திறமுடன் செயல்படுத்தி வருகிறது. எனினும், விவசாயிகள் மத்தியில் இவை குறித்து மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்; பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். இத்தகையப் பயிற்சிகள் மகளிருக்கு அளிக்கப்படும் போது, அதனால் விளையும் பயன்கள் பல மடங்காகி நாட்டுக்கு நல்ல பயனைத் தரும். இதன் அடிப்படையில், இந்த இனிய விழாவில் இரண்டு புதிய திட்டங்களைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**தமிழ்நாடு மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம்**

தமிழகத்தில் உள்ள மகளிர் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயிகள் ஆகியோருக்குப் பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத வேளாண் நடவடிக்கைகளில் பயிற்சி அளிக்க வகை செய்யும் "தமிழ்நாடு மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம்" என்னும் புதிய திட்டத்தை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் குறைந்தபட்சம் ஒரு மகளிர் குழு அமைக்கப்படும். இக்குழு உறுப்பினர்களுக்கு விதை உற்பத்தி; ஒப்பந்த விவசாயத்துடன் இணைந்த நவீன விவசாய முறைகள்; வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கப் பணிகள்; இடுபொருட்கள் வழங்குதல் மற்றும் அவை தொடர்பான மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும். மகளிர் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் வருமானம் பெருகிட இது உதவுவதுடன்; உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மேம்படவும் வழி வகுக்கும். இந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 5.60 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

அடுத்தபடியாக,

**தீவிர வேளாண் விரிவாக்கத் திட்டம்**

வேளாண் துறையில் மேலும் உயரிய வளர்ச்சி எய்திட ஏதுவாக 7.50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள "தீவிர வேளாண் விரிவாக்கத் திட்டம்" என்னும் திட்டத்தை இன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரத் தலைமை இடங்களிலும் மற்றும் அனைத்துக் கிராமங்களிலும் செயல்படுத்தப்படும். விவசாயப்






பெருமக்களுக்கு வேளாண் தொழில் குறித்த புதிய உத்திகள்; நீர் சேமிப்பு; வேளாண் இடுபொருட்கள்; கடன் வசதி; அரசுத் திட்டங்கள் ஆகியவை குறித்த தகவல்கள் அளிக்கப்பட்டு அவர்கள் பயிற்றுவிக்கப் படுவார்கள். இது தொடர்பாக தகவல் வாகனம் ஒன்று, ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அந்தந்தப் பகுதிக்கு உகந்த தொழில்நுட்பங்களுக்கான செயல் விளக்கத்தை அளிக்கும். மேலும், தொழில்நுட்ப வல்லுநர்கள் விவசாயிகளின் சந்தேகங்களுக்குப் பதில் அளிப்பார்கள். இத்தகவல் வாகனம் கருத்துக் காட்சி மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மூலம் வேளாண் தகவல்களை விவசாயிகளுக்கு அளிக்கும்.

ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற உழவர் பெருமக்கள், நெசவாளர், மீனவர் முதலான உழைப்பாளர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகள்; நகரப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு இணையாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, தங்களது விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புகளும் வசதிகளும் பெற வேண்டும் என்பதற்காக, எனது அரசு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட அளவில் நடத்தி வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு வேளாண்மைத் துறையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து, இன்று அதாவது, 5.10.2005 அன்று முதல் 6.10.2005 வரை நடத்தும் மாநில ஊரக விளையாட்டுப் போட்டிகளை இந்த இனிய நேரத்தில் துவக்கி வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். ஓட்டப் பந்தயம், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், தொடர் ஓட்டம் ஆகிய போட்டிகள் இங்கே நடத்தப்பட உள்ளன என்பதை அறிந்து நான் அகமகிழ்கிறேன். இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நான் தொடங்கி வைத்துள்ள உழவர் பாதுகாப்புத் திட்டம் ஒரு முழுமையான திட்டம். உழவர் வாழ்வுக்கு உறுதுணையான திட்டம்!

இது விவசாயிகளின் துயரைத் தற்காலிகமாகத் துடைக்கும் 'முதல் உதவித் திட்டம்' அல்ல! அவர்களது நலனை நிரந்தரமாகப் பாதுகாக்கும் 'முழு உதவித் திட்டம்'! இந்தியாவிலேயே முதன் முதலாக மேற்கொள்ளப்படும் முழுமையான உதவித் திட்டம்!



இந்தத் திட்டத்தை இன்று தொடங்கி வைத்து 120 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழான பல்வேறு உதவிகளை வழங்குவதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன். மேலும், உழவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குவதிலும்; மாநில அளவிலான உற்பத்தி விருது வழங்குவதிலும்; நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்த விழாவை நடக்கவிடாமல் செய்வதற்காக எத்தனையோ முயற்சிகள் நடைபெற்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டேனே சில பொறாமைக்காரர்கள், சில அசூயைக்காரர்கள், அவர்கள் வயிற்றெரிச்சலைத் தாங்க முடியாமல் இந்த விழாவையே நடத்தக்கூடாது என்று திட்டமிட்டு, நீதிமன்றத்திற்குக் கூடச் சென்றார்கள். எப்படியாவது இந்த விழாவைத் தடுத்துவிட வேண்டுமென்று என்னவெல்லாமோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால், தோல்வியையே கண்டார்கள். இன்றைக்கு சீரும், சிறப்புமாக, வெற்றிகரமாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் ஒன்றாகக் கூடி இருக்கிறார்கள். இப்படித் திரண்டு இருக்கிற விவசாயிகளின் சக்தி கடவுளின் சக்திக்கு சமமானதாகும். இந்தச் சக்தியை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும், தூள் தூளாக கண்ணுக்குத் தெரியாமல் அவர்கள் மறைந்து போய்விடுவார்கள், தவிடு பொடியாகி விடுவார்கள் என்பது உறுதி என்பதை இந்த விழா நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, உழவர் பெருமக்கள் ஒன்று திரண்டால் அந்தச் சக்திக்கு முன்னால் எந்தச் சக்தியும் நிற்க முடியாது என்பதைத் தெரிவித்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**5.10.2005 அன்று, சென்னை,
நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற
மாநில உழவர் மாநாட்டில்,
தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், தமிழக மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம், தீவிர வேளாண் விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தும், மாநில ஊரக விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கி வைத்தும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை**





# அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 14.10.2005

நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லுகின்ற தொழிலாளர்களும், பணியாளர்களும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் சிறப்பான வாழ்க்கைத் தரம் அமைத்துக் கொடுத்தால் தான், தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தி அவர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செயல்பட முடியும். இலாப நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஆவின் ஆகிய நிறுவனங்கள் வணிகப் பணிகளை மேற்கொள்கின்றன. அதேபோல, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது வணிகப் பணிகள் முழுவதையும் அரசுக்காகவே மேற்கொள்கின்றன. எனவே, இந்த நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்திடும் வகையில், அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்தி, அவர்களுக்கு நல்ல பல சலுகைகள் வழங்கிட வேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும்.

வரலாறு காணாத வகையில், டீசல் விலையைத் தொடர்ந்து மத்திய அரசு உயர்த்தியது முதலான பல்வேறு காரணங்களால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளபோதும், போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலனைக் காக்க வேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த 30.8.2005 அன்று, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை நான் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின், ஒரு சிறப்புமிக்க புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அனைத்துத் தொழிலாளர்களும் பயனடைந்தார்கள்.

அதுபோலவே, மின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களான நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலை மற்றும் சரக்கு இரயில் கட்டணம், சரக்குக் கப்பல் கட்டணம் ஆகிய செலவினங்கள் உயர்ந்துள்ள காரணத்தால், மின் வாரியத்திற்குப் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ள நிலையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களது ஊதிய ஒப்பந்தம் தொடர்பாக, 14.10.2005 அன்று, மின்வாரியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். அதன் பயனாக ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டு, தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நாளைய தினம், அதாவது 15.10.2005 அன்று கையொப்பமிடப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை இன்று நான் வெளியிட்டுள்ளேன்.

மத்திய அரசு, கடந்த 15 மாதங்களில் ஐந்து முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி விட்ட போதிலும், எனது அரசு மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவில்லை. மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, எண்ணெய்

ஆகியவற்றின் விலை, சரக்குக் கட்டணங்கள் மற்றும் மின்சாரக் கொள்முதல் ஆகிய செலவினங்கள் உயர்ந்துள்ள போதிலும், மின் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. இந்நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத் துறை நிறுவனங்களில் கூடுதல் செலவால் ஏற்படும் பெரும் நிதிச்சுமையை ஓரளவேனும் ஈடு செய்து, அவற்றை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றால், அதன் பணியாளர்கள் மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து பணியாற்றிட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின் வாரியம் போன்ற பொதுத் துறை நிறுவனங்களின் உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், அந்நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மன நிறைவான போனஸ் வழங்குவது என்று எனது அரசு தற்போது முடிவெடுத்துள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் போனஸ் உச்சவரம்புச் சட்டத்தின்படி, அரசுப் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் போனஸ் வழங்கிட வாய்ப்பில்லை. ஏனெனில், 3,500 ரூபாய் மாத ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு மட்டுமே போனஸ் வழங்க இயலும் என்று மத்திய அரசின் போனஸ் உச்சவரம்பு சட்டம் வரையறுத்துள்ளது. எனினும், மேலே குறிப்பிட்ட இந்நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இந்த உச்ச வரம்பைத் தளர்த்தி, கடந்த 2003–2004ஆம் நிதி ஆண்டிற்கு 8.33 சதவிகித போனசுடன் 1.67 சதவிகித கருணைத் தொகையும் சேர்த்து வழங்க நான் ஆணையிட்டவாறு, கடந்த ஆண்டு மொத்தம் 10 சதவிகிதம் போனஸ் வழங்கப்பட்டது.

இந்தப் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பண்டிகை நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட, கடந்த ஆண்டைவிட ஒரு கணிசமான தொகையைக் கூடுதலாகப் பெறும் வகையில், போனஸ் மற்றும் கருணைத் தொகையை இந்த ஆண்டு வழங்கிட நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன் அடிப்படையில், 2004–2005ஆம் நிதி ஆண்டிற்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், ஆவின், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை வழங்க நான் ஆணையிட்டு உள்ளேன். இதன் அடிப்படையில், மேற்சொன்ன அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் வழக்கமான முறையில் போனஸ் மற்றும் கருணைத் தொகை பெறும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள், இந்த ஆண்டு 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையைப் பெறுவார்கள்.

மொத்தம் 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படுவதால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 66.44 கோடி ரூபாயும், தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 44 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 6.87 கோடி ரூபாயும், ஆவின் நிறுவனத்திற்கு 1.537 கோடி ரூபாயும் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு 7.20 இலட்சம் ரூபாயும் செலவு ஏற்படும்.

இந்தியாவிலேயே முதன்மை நிலைக்குத் தமிழகத்தை அழைத்துச் செல்லும் எனது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர்களையும், பணியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில், இந்த போனஸ் மற்றும் கருணைத் தொகையை அறிவித்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தற்போது நான் அறிவித்துள்ள உயர்த்தப்பட்ட இந்த போனஸ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றில் பணியாற்றிடும் பணியாளர்களும், தொழிலாளர்களும் மென்மேலும் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் கடமையாற்ற வகை செய்யும் என்று நம்புகிறேன். ✶



# தமிழ்நாடு காவல் துறையின் செயல்பாடுகள் குறித்த சிறு புத்தகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.10.2005 அன்று, தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு காவல் துறை குறித்து, "Tamil Nadu Police - Role Model" என்ற தலைப்பில் டைம்ஸ் குரூப் நிறுவனம் தயாரித்துள்ள சிறு புத்தகத்தினை வெளியிட்டார்கள்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா மற்றும் எக்கனாமிக் டைம்ஸ் ஆங்கில நாளிதழ்களை வெளியிடுகின்ற டைம்ஸ் குரூப் நிறுவனம், தமிழ்நாடு காவல் துறையின் செயல்பாடுகள் குறித்து சிறப்பான தகவல்களுடன் சிறு புத்தகம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தச் சிறு புத்தகத்தில், தற்காலச் சூழ்நிலைக்கேற்ப நவீனப்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவிலேயே முதன் முதலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு, தற்போது தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமான பெண் கமாண்டோ படை, காவல் துறையினரின் கடுமையான பயிற்சி, காவல் துறையினர் திட்டமிட்டுச் செயல்பட்டு காட்டுக் கொள்ளையன் வீரப்பனை சுட்டுக் கொன்ற சம்பவம், குற்றங்களைத் தடுத்து, குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தர கையாளப்படும் நடைமுறைகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், டைம்ஸ் குரூப் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சிறு புத்தகத்தினை 13.10.2005 அன்று வெளியிட்டு, தமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்கள். இதன் முதல் பிரதியை டைம்ஸ் குரூப் நிறுவனத்தின் செயல் தலைவர் திரு.பாஸ்கர் தாஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது, டைம்ஸ் குரூப் நிறுவனத்தின் பொதுமேலாளர் திரு.நைனன்தரியன், முதுநிலை மேலாளர் திரு.எஸ்.மெய்யப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

✶ ✶ ✶

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த பெண்ணின் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிதியுதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருவாரூர் மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி மரணமடைந்த திருமதி. ஜெயலட்சுமி குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணையிட்டவாறு, 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அவரது கணவர் திரு. சத்திய நாராயணன் அவர்களிடம், 6.10.2005 அன்று தலைமைச்செயலகத்தில், நேரில் வழங்கினார்கள்.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், செருவாமணி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. சத்திய நாராயணன் என்பவரின் மனைவி, திருமதி. ஜெயா என்கிற ஜெயலட்சுமி, 11.10.2004 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இவரது குடும்பச் சூழ்நிலையைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இவரது குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்க உத்தரவிட்டிருந்தார்கள்.

சென்னை, நேரு விளையாட்டரங்கில் 5.10.2005 அன்று நடைபெற்ற உழவர் மாநாட்டில் பங்கேற்ற திரு. சத்திய நாராயணன், இந்த நிதியுதவியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நேரில் பெற வேண்டுமென்று தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். இதன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரு. சத்திய நாராயணன் அவர்களை 6.10.2005 அன்று தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட திரு. சத்திய நாராயணன் அவர்கள், தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



# மின் வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 14.10.2005



நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் அடித்தளமாக விளங்குகின்ற முக்கியத் துறைகளில் மின்சாரத் துறை மிகவும் குறிப்பிடத்தக்க துறையாகும். இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களை ஒப்புநோக்கும் போது தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும், நுகர்வோருக்கு மின் வசதி அளிப்பதிலும் இணையற்ற சேவை அளிக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். மின் வெட்டே இல்லாத மாநிலம்; காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்ற மாநிலம்; வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் மின்சாரம் தருகின்ற மாநிலம்; குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குகின்ற மாநிலம்; இத்தனைக்கும் மேலாக, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் அளிக்கின்ற மாநிலம் என்ற பெருமையை எனது ஆட்சிக் காலத்தில் தமிழகம் பெற்றுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகையப் பெருமையைத் தமிழகம் பெறுவதற்கு உறுதுணையாக உள்ள தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், இயன்ற அளவு அதிகமான ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில், மின் வாரியத் தொழிலாளர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம் தொடர்பாகவும், என் முன்னர் எடுத்து வைக்கப்பட்ட இதர கோரிக்கைகள் தொடர்பாகவும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் 14.10.2005 அன்று, நான் கலந்துரையாடினேன். அதன் பின்னர், அமைச்சர்களுடனும், அரசு மற்றும் மின் வாரிய அலுவலர்களுடனும் கலந்து ஆலோசனை செய்தேன்.

மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலை மற்றும் சரக்கு இரயில் கட்டணம், சரக்குக் கப்பல் கட்டணம் மற்றும் மின்சாரக் கொள்முதல் ஆகிய செலவினங்கள் உயர்ந்துள்ளன. அதை ஈடுகட்டும் வகையில் மின் கட்டணம் உயர்த்தப் படவில்லை. இதனால், மின் வாரியத்துக்குப் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ள போதும், தமிழகம் மென்மேலும் மேம்பாடு அடையும் வகையில், தடையற்ற மின்சாரத்தைத் தொய்வின்றி வழங்கிக் கடமையாற்றி வருகின்ற மின் வாரியத்தின் தொழிலாளர் களுக்கும், பணியாளர்களுக்கும் எவ்வளவு

அதிகமாக ஊதிய உயர்வு வழங்க முடியுமோ அதனை வழங்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. 1.12.1996 முதல் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட ஊதிய ஒப்பந்தம் 30.11.2000 அன்றுடன் முடிவடைந்த நிலையில், தற்போது இரண்டு ஆண்டுகளுக்குப்பின் ஏற்படுத்தப் படுகின்ற இந்தப் புதிய ஒப்பந்தத்திற்கு இடைப்பட்ட காலத்திற்கு ஒட்டுமொத்தத் தொகையாக ஒவ்வொரு தொழிலாளருக்கும் 2,400 ரூபாய் வழங்கப்படும். மின்வாரியத்திற்கு இதனால் இந்த ஆண்டு சுமார் 22.50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. 1.12.2002 நாளைய அடிப்படை ஊதியத்தில் (தனி ஊதியம் உட்பட) 6 சதவிகிதம் உயர்வு அளிக்கப்பட்டு, புதிய அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கப்படும். குறைந்தபட்ச ஊதியப் பயன் 600 ரூபாய் என்ற உயர் அளவாக நிர்ணயிக்கப்படும். இந்த ஊதிய உயர்வு மூலம் 1.12.2002 அன்றைய தேதியில் மின் வாரியத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் 600 ரூபாயும், அதிகபட்சம் 2,235 ரூபாயும் ஊதிய உயர்வு பெறுவர்.

3. தற்போதுள்ள ஊதிய விகிதங்கள் தொடர்ந்து அமலில் இருக்கும். எனினும், பணியாளர் நலன் கருதி, ஒவ்வொரு ஊதிய விகிதத்தின் அதிகபட்ச அளவு மேலும் 6 நிலைகள் நீட்டித்து நிர்ணயிக்கப்படும். (maximum limit of the existing scales of pay will be elongated by six stages).

4. வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, சிறப்பு ஊதியம் மற்றும் இதரப் படிகள் அனைத்தும் தற்போதுள்ள விகிதங்களின்படி தொடர்ந்து வழங்கப்படும். எனவே, தற்போது வழங்கப்படும் ஊதிய உயர்வின் அடிப்படையில் ஊதியத் தொகுதி மாறுதலுக்கு ஏற்ப கூடுதல் அளவிலான படிகள் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

5. இது தவிர, 1.12.2002 அன்று, 15 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் பணியாற்றியவர் களுக்கு, பணிக் காலப் பயன் ஒன்று வழங்கப் படும். இதன்படி, புதிய ஊதிய நிர்ணயம் செய்த பிறகு, மேலும் ஒரு காலமுறை ஊதிய உயர்வு வழங்கப்படும். இதனால், மின் வாரியத்துக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 10 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

6. இந்த ஊதிய உயர்வு 1.12.2002 முதல் நிர்ணயிக்கப்படுவதன் பயனாக வழங்கப்படும் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படும். இதில், 1.9.2003 முதல் மாதந்தோறும் 250 ரூபாய் என்ற அளவில் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட்டு வரும் தொகை சரிக் கட்டப்பட்டு, மீதமுள்ள தொகை வழங்கப்படும்.

7. பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லாத ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்குக் கால வரையறையுடன் கூடிய தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை உருவாக்கப்படும்.

8. இந்தப் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தத்துடன் புதிய வேலைப் பளு ஒப்பந்தமும் அமல் செய்யப்படும்.

9. இந்தப் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் 1.12.2002 முதல் 30.11.2007 வரை 5 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும்.

1.12.2002–இல் இருந்து நிலுவைத் தொகை முழுவதும் ரொக்கமாக வழங்கப்படுவதால், தமிழ்நாடு மின் வாரியத்துக்கு இந்த நிதி ஆண்டில் மொத்தம் சுமார் 419.35 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். தொடர்ந்து ஆண்டுதோறும் சுமார் 160.80 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

இன்றைய பேச்சுவார்த்தையின்போது, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்களாகப் பணியாற்றி வரும் பெண்கள்



மிகக் குறைவான தொகுப்பு ஊதியமே பெற்று வருவதாகவும், அதனை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் என்னிடம் கோரிக்கை வைத்தனர். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணியாற்றும் 3,316 பகுதிநேர பெண் துப்புரவுப் பணியாளர்கள் தற்போது மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் மட்டுமே தொகுப்பு ஊதியமாகப் பெற்று வருகிறார்கள். அடித்தளத்தில் உள்ள ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில், நான் ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் உதவியாளர்களின் தொகுப்பூதியத்தை உயர்த்தி, அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் மாதம் ஒன்றுக்கு 850 ரூபாய் என்ற உயர் அளவில் பெறும் வகையில், அவர்களது தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்கினேன். அதே அடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் 3,316 பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களின் ஊதியம், மாதம் ஒன்றுக்கு 850 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி வழங்கப்படும். இதனால் மின்சார வாரியத்திற்கு ஆண்டுதோறும் 2.40 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

தொடர்ந்து அதிகரித்து வரும் உற்பத்திச் செலவால் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ள போதிலும், மின் தொழிலாளர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப் படையில், இந்த அதிகபட்ச ஊதிய உயர்வினை அறிவித்துள்ளேன். இந்த ஊதிய உயர்வினால் ஏற்படும் செலவினத்தை மின் வாரியம் தனது திறமையான செயல்பாட்டினாலும், தொழிலாளர் களின் முழு ஒத்துழைப்பினாலும் நிச்சயம் ஈடுகட்டும் என்று நான் நம்புகிறேன்.

தொழிலாளர் வாழ்க்கை மேம்பாட்டை கருத்தில் கொண்டு, அவர்களது நலனுக்காகப் பாடுபடுகின்ற அரசு, எனது அரசு என்பதை, இந்த அறிவிப்புகள் மூலம் நான் உறுதிப் படுத்தியுள்ளேன். இதனை அனைத்து மின்சார வாரியத் தொழிலாளர்களும் மகிழ்ச்சியோடும், முழு மனதோடும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். நாளைய தினம் (15.10.2005) போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்று அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் புதிய ஊதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு மின்சார வாரியத் தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

## உழவு பற்றி முன்னோர்

உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்.
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே.
– ***குடபுலவியனார் (புறநானூறு)***

சீரைத் தேடின் ஏரைத் தேடு
– ***ஔவையார் (கொன்றை வேந்தன்)***

மேழி பிடிங்குங்கை; வேல்வேந்தர் நோக்குங்கை;
ஆழி தரித்தே மருளுங்கை – சூழ்வினையை
நீக்குங்கை; என்றும் நல்கும் கை; நீடுழி
காக்கும் கை, காராளர் கை.
– ***கம்பர்***

ஆற்றங்கரையில் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
ழுது உண்டு வேறோர் பணிக்கு.
***ஔவையார் (நல்வழி)***

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
600 008



# ஓய்வுபெற்ற மின்வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சிறப்புச் சலுகை

தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வுத் தொகுப்பு ஒன்றினை நான் 14.10.2005 அன்று அறிவித்தேன். இதனை ஏற்று, இரண்டு தொழிற்சங்கங்களைத் தவிர ஏனைய 9 தொழிற்சங்கங்கள் இந்த ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில், 15.10.2005 அன்று கையொப்பமிட்டுள்ளன.

1.12.2000 முதல் 30.11.2002 வரையிலான காலத்தில் பணியில் இருந்து ஓய்வுபெற்ற மின்வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள், தங்களுக்கு அதிக ஓய்வூதியப் பயன் வழங்கப்பட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனைக் கனிவுடன் பரிசீலித்து, 1.12.2000 முதல் 30.11.2002 வரையிலான காலத்தில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற மின் வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சிறப்புச் சலுகை ஒன்றை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1.2:2000 முதல் 30.11.2002 வரையிலான காலத்தில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற மின்வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களது ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும். இவ்வாறு உயர்த்தப்படும் ஓய்வூதியம், அதற்குரிய அகவிலைப்படியையும் சேர்த்து மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 300 ரூபாயாகவும், அதிகபட்சம் 1,000 ரூபாயாகவும் இருக்கும். 1.12.2000 முதல் 30.11.2002 வரையிலான காலத்தில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற 8,676 மின்வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் இதனால் பயன் அடைவார்கள். அவர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகையும் ரொக்கமாக வழங்கப்படும். இதுவன்றி, விடுப்பு ஒப்படைப்பு மற்றும் பணிக்கொடை ஆகிய வகைகளிலும் கணிசமான தொகையை அவர்கள் கூடுதலாகப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இந்த ஆண்டு ஏற்படக்கூடிய கூடுதல் செலவு 12 கோடி ரூபாயாகவும், ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் 6.50 கோடி ரூபாயாகவும் இருக்கும்.

* * *



# அணைகள் – கால்வாய்கள் – ஏரி – குளங்கள் ரூ.53 கோடியில் சீரமைப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.10.2005

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திடவும், அனைத்து ஏரிகளிலும் சிறந்த முறையில் நீரைத் தேக்கிடவும் ஏதுவாக, மாநிலத்தில் உள்ள ஏரிகளைத் தூர்வாரி, வரத்துக் கால்வாய்களை ஆழப்படுத்தி, ஏரிகளைச் சீரமைத்திட எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதே அடிப்படையில், புதிய அணைக் கட்டுகள் கட்டுதல், தடுப்பணைகள் கட்டுதல், பழைய அணைகளைப் புனரமைத்தல், ஏரி, குளங்களைப் புதிதாக உருவாக்குதல் ஆகிய பல்வேறு பணிகளை எனது அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.



இவ்வகையில், தமிழ்நாட்டில் வேலூர், தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் வகையில், மொத்தம் 44 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் 14 நீர்ப்பாசனத் திட்டங்களை மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த, 9.7.2005 அன்று நான் ஆணையிட்டேன்.

மேலும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 540 முறை சாரா சிறு பாசன ஏரிகளைத் (Non-System (Rainfed) Minor Irrigation Tanks) தூர்வாரி, புனரமைத்து, மேம்படுத்தும் பணிகளை 130.52 கோடி ரூபாய் மதிப்பில் மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்ற, 23.8.2005 அன்று நான் ஆணையிட்டேன்.

இவ்வாறு, தமிழகத்தில் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கவும், விவசாய நிலங்களுக்குப் பாசன வசதியை மேம்படுத்தவும், எனது அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தற்போது, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் கட்டப்பட்டுள்ள சோலையாறு அணையை, 6.48 கோடி ரூபாய் மதிப்பிலும் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகரில் உள்ள கீழ்பவானி அணையை 7.30 கோடி ரூபாய் மதிப்பிலும் புனரமைத்து, அவற்றின் வலிமையைப் பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ளவும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆயங்குடி பிரதான கால்வாய், சிறுமருதூர் பிரதான கால்வாய், கலக்கமங்கலம் பிரதான கால்வாய் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு பிரதான கால்வாய், கன்னடியன் பிரதான கால்வாய் ஆகிய ஐந்து பாசனக் கால்வாய்களையும், அவற்றின் துணைக் கால்வாய்கள் மற்றும் அதன் ஏரிகள் அனைத்தையும் 39.52 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைத்து, மேம்படுத்தவும் நான் ஆணையிட்டுள்ளேன். இப்பணிகள் அனைத்தும் மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மொத்தம் 53.30 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மொத்தம் 55,360 ஏக்கர் நிலங்கள் பயனடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பயன்பெறும் வகையில், நான் அறிவித்துள்ள இப்பணிகள் அனைத்தையும் சிறப்பான முறையில், விரைவில் செய்து முடித்திட வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நான் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

❖ ❖ ❖



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அமைதி விருது

திருநெல்வேலி சி.எஸ்.ஐ. பிஷப் மறைதிரு டாக்டர் எஸ். ஜெயபால் டேவிட் தலைமையில், அந்த அமைப்பின் நிருவாகிகள் தலைமைச்செயலகத்தில், 10.10.2005 அன்று காலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து அமைதி விருதை வழங்கினார்கள்.

இந்தியாவில் உள்ள சர்ச்சுகளின் தேசியக் குழுவின் தலைவராக இருப்பவர் டாக்டர் எஸ்.ஜெயபால் டேவிட். இவருடன், இக்குழுவின் துணைத் தலைவர் டாக்டர் பிரசன்னகுமாரி, டாக்டர் எம். அசாரியா, (இந்திய கிறித்துவர்கள் சர்வதேச காங்கிரசின் இந்தியப் பிரிவின் தலைவர்) சாரா சந்தா (இந்தியப் பிரிவின் செயலாளர், சென்னை), சுப்பாசிங் (இந்தியப் பிரிவின் துணைத் தலைவர், சிவகாசி), மறைதிரு டாக்டர் சாமுவேல் மாஷாக் (குருக்கல் தியோலாஜிக்கல் செமினாரி அமைப்பின் தகவல் தொடர்பு இயக்குநர், சென்னை), சோபியா செல்லதுரை (கிறிஸ்டியன் தியோலாஜிக்கல் கல்லூரி முதல்வர், சென்னை) உள்ளிட்ட நிருவாகிகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறினார்கள்.

பெருமைக்குரிய இந்த விருதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டார்கள்.

கிறித்தவர்கள் அமைப்பின் நிருவாகிகளுடன் டாக்டர் விஜய ஜி. பிரபாகர் (தலைவர், உலகத் தமிழ் இளைஞர் சம்மேளனம்), டாக்டர் மயில்வாகனன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

சிறுபான்மையினர் நலன்கள் பாதுகாப்பு, மனித உரிமைகள் மேம்பாடு, மனித நேய அடிப்படையில் மிகவும் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட, ஏழை மக்கள் வாழ்வு முன்னேற்றம் காண ஆக்கப்பூர்வமான முற்போக்குத் திட்டங்கள் வெற்றிகரமாக அமல், கடந்த ஆண்டு டிசம்பர் 26–ஆம் தேதி ஏற்பட்ட குலை நடுங்க வைத்த சுனாமி பேரழிவைச் சமாளிக்கப் போர்க்கால அடிப்படையில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள், மழைநீர் சேகரிப்புத் திட்டம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து அவர்களுக்குச் சொந்தத் தொழில் மூலம் வருமானத்துக்கு வழி, அவர்களுக்குக் கூடுதல் அதிகாரம், பள்ளிச் சிறுவர், சிறுமிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், விவசாயிகளுக்குப் புரட்சிகரமான சமூகப் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், மாநிலத்தில் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, 2005ஆம் ஆண்டுக்கான அமைதி விருது வழங்கப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு விதத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் ஆற்றல்மிகு ஒரு தலைவருக்கு ஆண்டுதோறும் இந்த அமைதி விருது வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில், இந்த ஆண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. 1999ஆம் ஆண்டு சிகாகோவை தலைமையிடமாகக் கொண்டு இந்திய கிறித்துவர்களின் சர்வதேச காங்கிரஸ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. □



# பொறியியல் மற்றும் மருத்துவம் பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தங்களது கல்விச் செலவிற்குப் போதிய நிதி வசதி இல்லாது தவித்த பொறியியல் கல்வி பயிலும் 73 மாணவ, மாணவியர் மற்றும் மருத்துவம் அதனைச் சார்ந்த கல்வி பயிலும் 27 மாணவ, மாணவியர் ஆக மொத்தம் 100 மாணவ, மாணவியருக்கு "முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து" தலா ரூபாய் 25,000 வீதம் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் நிதியுதவியினை, 19.10.2005 அன்று வழங்கினார்கள்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பயிலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தங்கள் கல்விச் செலவிற்கு நிதியுதவி செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இவர்களது கோரிக்கை மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதி வசதி இல்லாமல் தவித்த பொறியியல் கல்வி பயிலும் 73 மாணவ, மாணவிகள் மற்றும் மருத்துவம் அதனைச் சார்ந்த கல்வி பயிலும் 27 மாணவ, மாணவிகள் ஆக மொத்தம் 100 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய் 25 இலட்சம் வழங்க உத்தரவிட்டார்கள். இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.10.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாணவ, மாணவிகளுக்குத் தலா 25,000 ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களது குடும்பச் சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதி உதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, தங்களது உளப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். □

# மின்விபத்திலிருந்து தற்காத்துக்கொள்ள பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

பருவ காலங்களில் பலத்த மழை, பெரும் காற்று இடிகளாலும், மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து தரையில் விழுவதற்கும், மின்மாற்றிகளையும், கம்பிகளையும் தாங்கி நிற்கும் மின் கம்பங்களிலும், கேபிள்களிலும் மின் கசிவு ஏற்படவும், அதனால் மின் விபத்துகள் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் அதிகம் ஏற்படுவதோடு, பேரிழப்பும் உண்டாகிறது. எனவே பொது மக்கள் கீழ்க்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை கடை பிடிக்குமாறு அரசு தலைமை மின் ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பருவ மழைக் காலங்களில் மின் மாற்றி பொருத்தப்பட்ட மின் கம்பங்கள், கேபிள்கள், பியூஸ் பெட்டிகள் ஆகியவற்றின் அருகில் பொது மக்கள் எவரும் செல்லவோ, அவற்றைத் தொட்டுப் பார்க்கவோ வேண்டாம்.

2. கால்நடைகளை, மின் கம்பங்களில் பொது மக்கள் எவரும் கட்டாதீர்கள்.

3. பொதுச்சாலை மற்றும் நடைபாதைகளில் அறுந்து விழுந்துகிடக்கும் மேல்நிலைக் கம்பிகளை அகற்றவோ, தொடவோ எவரும் முயற்சிக்காதீர்கள். விவரங்களை அருகிலுள்ள தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்திற்கு உடன் தெரிவித்திடுங்கள்.

4. சாய்ந்து நிற்கும் மின் கம்பங்களின் அருகிலோ மிகத் தாழ்வாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மேல்நிலை மின் கம்பிகளின் அருகிலோ எவரும் செல்ல முயற்சிக்க வேண்டாம். அவற்றைத் தொட நேர்ந்தால், மின் விபத்திற்கு உள்ளாக நேரிடும். எனவே கவனம் தேவை.

5. மேல்நிலை மின் கம்பிகள் விழுந்து கிடக்கும் முறிந்த மரக்கிளைகளையோ, பொருட்களையோ அகற்ற முயலாதீர்; விபத்து நேரிடும், உயிரிழப்பு நிகழக்கூடும். விவரங்களை அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்கவும்.

6. பருவ மழைக்காலத்திற்கு முன்பாக, மேல்நிலை கம்பிகளின் மீது படர்ந்து உரசிக் கொண்டிருக்கும் உங்கள் வீட்டுத் தோட்ட மரக் கிளைகளை/தென்னை பட்டைகளை வெட்ட மின்வாரியத்திற்குத் தெரிவித்து, வெட்டச் செய்யுங்கள். அதன் மூலம் மின்கம்பங்கள் அறுந்து விழுவதைத் தடுக்கவும், மின் விபத்துகளைத் தடுக்கவும் அரசிற்கு உதவி செய்யுங்கள்.

7. மேல்நிலை மின் கம்பி அறுந்திருந்தாலோ, மிகத் தாழ்வாகத் தொங்கிக் கொண்டிருந்தாலோ, மின் கம்பம் பழுதுபட்டிருந்தாலோ தாங்கு கம்பி அறுந்திருந்தாலோ, விவரங்களை உடனே அருகிலுள்ள மின்வாரிய அலுவகத்திற்குத் தெரிவியுங்கள்.

8. பருவ மழை நேரங்களில் சாலையில் மின் கசிவு காரணமாக மின் அதிர்ச்சியை நீங்கள் உணர்ந்தால் மற்றவர்களை உடனே எச்சரியுங்கள். எவரையும் தொட அனுமதிக்காதீர்கள். உடனே அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்குத் தெரிவியுங்கள்.

9. வீட்டுத் தரையிலோ, சுவரிலோ நீங்கள் மின் அதிர்ச்சியை உணர்ந்தால், மின்னோட்டத்தைத் தடை செய்யுங்கள். உடனே லைசென்சு பெற்ற மின் ஒப்பந்தக்காரரை அணுகி உங்கள் வீட்டு ஒயரிங்கை சோதனை செய்து பழுதைச் சீர் செய்து கொள்ளவும்.

10. ஈ.எல்.சி.பி. (மின் கசிவு தடுப்பான்)–யைப் பொறுத்தி மின் கசிவினால் ஏற்படும் மின் விபத்தைத் தவிர்த்திடுவீர்.

11. மின் கம்பங்களில் கொடிக் கயிற்றைக் கட்டி துணிகளை உலர்த்த முயலாதீர்கள். □



# 11,800 தொழிலாளர்களுக்குக் கருணைத் தொகை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 20.10.2005

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின் வாரியம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், அந்நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மன நிறைவான போனஸ் வழங்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் ஆகும்.

இதன் அடிப்படையில், 2004–2005ஆம் நிதி ஆண்டிற்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், ஆவின், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை வழங்க 14.10.2005 அன்று நான் ஆணையிட்டேன். இதன் அடிப்படையில், மேற்சொன்ன அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் வழக்கமான முறையில் போனஸ் மற்றும் கருணைத் தொகை பெறும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள், இந்த ஆண்டு 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையைப் பெறுவார்கள். இதனால் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 44 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பகிர்மான வட்டங்களில் 5 ஆண்டுகள் பணிபுரிந்ததாக அடையாளம் காணப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் (Identified Contract Labourers) பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினப் பணியாளர்கள் ஆகியோருக்கு, சென்ற ஆண்டு 500 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் கருணைத் தொகை வழங்க வேண்டும் என ஒப்பந்தத் தொழிலாளர்கள், பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினப் பணியாளர்கள் ஆகியோரிடம் இருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. 5 ஆண்டுகள் பணி புரிந்ததாக அடையாளம் காணப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களும், பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினப் பணியாளர்களும் இந்த ஆண்டு தீபாவளியைக் குடும்பத்தினருடன் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அவர்களுக்கு 750 ரூபாயைக் கருணைத் தொகையாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் தமிழ்நாடு மின்வாரியத்தில் 5 ஆண்டுகள் பணிபுரிந்ததாக அடையாளம் காணப்பட்ட 8,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் 3,300 பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினத் தொழிலாளர்கள் ஆக மொத்தம் 11,800 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இதனால் கூடுதலாக 88.50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினப் பணியாளர்கள் மென்மேலும் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் பணியாற்றுவார்கள் என்று நம்புகிறேன். ★

# ரூ.53.38 கோடியில் மஞ்சள் மற்றும் நெல் வணிக வளாகங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், ஈரோடு நசியனூர்-வில்லரசம்பட்டி கிராமத்தில் 36.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், மதுரை மாட்டுத் தாவணி பகுதியில் 17.06 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நெல் வணிக வளாகத்தைத் திறந்துவைத்தார்கள்.



**மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல்**

தமிழகத்தின் ஈரோடு நகரம், இந்தியாவில் மிகப் பெரிய மஞ்சள் வணிக மையம் ஆகும். ஈரோட்டின் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்ற மஞ்சள் வணிகத்தை ஒழுங்குபடுத்தி, அதனை ஒரே இடத்தில் செயல்படுத்த ஏதுவாக மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படும் என்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி ஈரோடு நகரை ஒட்டியுள்ள நசியனூர் – வில்லரசம்பட்டி கிராமப் பகுதியில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 36.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கும் திட்டம், தமிழ்நாடு அரசு மற்றும் மஞ்சள் வணிகர்கள் இணைந்து செயல்படுத்தும் திட்டம் ஆகும். இவ்வணிக வளாகம் அமைவதற்கான இடத்தை ஈரோடு மாவட்ட மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கம் நன்கொடையாக வழங்குகிறது. இந்த இடத்தில் சாலைகள், ஏலக்கூடம், கிடங்குகள், தகவல் தொடர்பு மையம், தரக்கட்டுப்பாடு ஆய்வகம், ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலகம், விவசாயிகள் ஓய்வறை, எடைமேடை, கூட்ட அரங்கம், வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் 11.32 கோடி ரூபாய் செலவில் அரசால் ஏற்படுத்தித் தரப்படும். மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத்தினரால் ஈரோடு விற்பனைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள 17.55 ஏக்கர் நிலத்தில் இந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இப்பணிகள் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் செய்து முடிக்கப்படும்.

மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படும் 50 ஏக்கர் நிலத்தில், இந்த 17.55 ஏக்கர் நிலம் போக மீதமுள்ள 32.45 ஏக்கர் நிலத்தில் வணிகர்களுக்கான அலுவலகங்கள் மற்றும் 10,000 சதுர அடி பரப்புள்ள 67 கிடங்குகள், 5,000 சதுர அடி பரப்புள்ள 88 கிடங்குகள், 2,500 சதுர அடி பரப்புள்ள 31 கிடங்குகள், ஆகமொத்தம் 136 கிடங்குகள் ஆகியவை பொதுவான வடிவமைப்பில் 25 கோடி ரூபாய் மதிப்பில் மஞ்சள் வணிகர்களால் ஏற்படுத்தப்படும்.



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ரம்ஜான் வாழ்த்துச் செய்தி



'ஈத்' திருநாளை இன்புறக் கொண்டாடி மகிழும் எனது அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த 'ஈத்' பெருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் அருளைப் பெறுவதற்காக, 'ரமலான்' என்னும் புனித மாதத்தில் நோன்பிருந்து, உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்தி, இறையருளால் பெற்ற பொருளின் ஒரு பங்கை ஏழையர்க்கு ஈந்து, இறை நினைவுடன் இருப்பர் இஸ்லாமியப் பெருமக்கள்.

இந்த இனிய நாளில், இறையருளால் உலகம் எங்கும் அமைதி நிலைக்கவும், அன்பு தழைக்கவும், இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது உளமார்ந்த 'ஈத்' பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

ஈரோடு மஞ்சள் வணிக வளாகம் அமைவதன் மூலம், இப்பகுதிகளில் மஞ்சள் பயிர் செய்யும் 1 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள். மேலும், 2,000 சுமை தூக்கும் தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் இதன் மூலம் பயன்பெறுவர்.

**மதுரை மாட்டுத் தாவணி நெல் வணிக வளாகம் திறப்பு**

மதுரை ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் வருமானத்தைப் பெருக்கவும், மதுரை மாநகரின் மையப் பகுதியான நெல்பேட்டையில் அமைந்துள்ள நெல் மண்டிகள், வேளாண்மை இடுபொருள் கடைகள் ஆகியவை மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் உள்ளதால், இவற்றை புறநகர்ப் பகுதியில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி, விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை கிட்டங்கியில் சேமித்து வைக்கவும், இந்த விளைப்பொருட்களை வைத்து கடன் பெறவும், விளைப்பொருட்களின் அன்றாட விலை விவரங்களை அறியவும் 17.06 கோடி ரூபாய் செலவில், மதுரை மாட்டுத் தாவணி பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நெல் வணிக வளாகத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27-10-2005 அன்று திறந்துவைத்தார்கள்.

மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள இந்த நெல் வணிக வளாகத்தில், கிட்டங்கி வசதி, ஏலக்கொட்டகை, விலை விவரங்களை அறிய மின்னணு தகவல் பலகை, மின்னணு எடை மேடை, தொலைபேசி வசதி, தபால் நிலையம், சிற்றுண்டிச் சாலை, வங்கி வசதி, விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கான ஓய்வு அறை, வாகனங்களை நிறுத்த இடவசதி உட்பட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.சி.ராமசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டுரங்கன், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தலைவர் திரு.ஆர்.முருகையா பாண்டியன், வேளாண்மைத்துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் திரு.கே.கணேசன், மதுரை விற்பனைக் குழுத்தலைவர் திரு.வி.எஸ்.பூமிபாலன், ஈரோடு விற்பனைக் குழுத்தலைவர் திரு.வி.பி.பெரியசாமி, மதுரை இடுபொருள் வணிகர்கள் சங்கப் பிரதிநிதி திரு.டி.மகாலிங்கம், மதுரை மலர் வணிகர்கள் சங்கப் பிரதிநிதி திரு.எஸ். ராமச்சந்திரன், ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கச் செயலாளர்கள் திரு.வி.பி.அருணாசலம், ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்க கௌரவத் தலைவர் திரு.ஆர்.கே.விஸ்வநாதன், மதுரை நெல் வணிகர்கள் சங்கப் பிரதிநிதி திரு.வி.பெருமாள் மற்றும் மதுரை மலர் வணிகர்கள் சங்கப் பிரதிநிதி திரு.எஸ்.ராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். ❖

# சென்னையில் ரூ.525 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 25-10-2005

**நா**ட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி, நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில், தரமான அடிப்படை உள்கட்டமைப்பு வசதி, மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக தொழில் வளர்ச்சி மேம்படுவதையும், அதன் வாயிலாக வேலை வாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்படுவதையும், வேகப் படுத்துகின்ற உந்து சக்தியாக, தரமான சாலைக் கட்டமைப்பு வசதி திகழ்கிறது. எனவேதான், அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினை உருவாக்கிட, சிறப்பானத் திட்டங்களைத் தீட்டி, எனது அரசு முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

இதன் அடிப்படையில்தான், உலகத் திறமைகள் அனைத்தையும் ஈர்க்கின்ற வகையில், உலகத்தின் தலைசிறந்த மாநகரங்களில் ஒன்றாக சென்னைப் பெருநகரை உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன், 2003-2004ஆம் ஆண்டில் 18,000 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைப் பெருநகர் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Investment Plan for Chennai Metropolitan Area) ஒன்றைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். 10 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ள இந்த மாபெரும் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகரின் சாலைக் கட்டமைப்புகளை முழுமையாக மேம்படுத்த, பல்வேறு பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2003-2004ஆம் ஆண்டில் சென்னை மாநகர பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 55 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2004-2005ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர எல்லையில், 290 கோடி ரூபாய் மதிப்பில் 23 சாலைப் பணிகளை மேற்கொள்ளும் மாபெரும் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை யாவும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழகத்தின் நகர்ப்புற அமைப்புகளின் உள்கட்டமைப்பின் தரத்தினை உயர்த்துவதுடன், அத்திட்டங்களுக்கான பயிற்சி மற்றும் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தவும், சென்னை மாநகர எல்லைக்குள் சாலைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்தவும், உலக வங்கி நிதி உதவியுடன், 1,925 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III (Tamil Nadu Urban Development Project-III) எனும் திட்டத்தை 19-10-2005 அன்று, நான் தொடங்கி வைத்தேன். இத்திட்டத்தின் கீழ், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் போக்குவரத்தினைக் கருத்தில் கொண்டு, சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 574 கோடி ரூபாய் மதிப்பில், சாலை மேம்பாடு, மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் போன்ற 39 பணிகள் நெடுஞ்சாலைத்துறை மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளன.

இது தவிர, 2005-2006ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்கு (Chennai Metropolitan Area) உட்பட்ட பகுதிகளில் போக்குவரவு மற்றும் போக்குவரத்துத் திட்டங்களின் (Traffic and Transportation Scheme) கீழ் சாலைகளை



அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், ஆற்றுப் பாலங்கள், மேம்பாலம், வட்டத் திட்டுடன் கூடிய மேம்பாலங்கள் அமைத்தல் ஆகிய 97 சாலை மேம்பாட்டுப் பணிகளை, 525.05 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக மேற்கொள்ள நான் தற்போது நிருவாக ஒப்புதல் அளித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம், கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்படும்.

### சாலைகளை அகலப்படுத்தி, உறுதிப்படுத்தும் பணிகள்
(Widening and strengthening of roads)

மொத்தம் 395 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகளை அகலப்படுத்தி, உறுதிப் படுத்தும் 87 சாலை மேம்பாட்டுப் பணிகள், 318 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப் படும். முக்கியமாக, திருவள்ளூர் கரசங்கால் சாலை, மாதவரம் - செங்குன்றம் சாலை, மவுண்ட் - மடிப்பாக்கம் சாலை, செம்பியம் - செங்குன்றம் சாலை, வண்டலூர் - கேளம்பாக்கம் சாலை, லேட்டிஸ் பிரிட்ஜ் (தெற்கு கடற்கரை) சாலை, வண்டலூர் - வாலாஜாபாத் சாலை, கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூர் சாலை ஆகிய சாலைகள் அகலப்படுத்தி உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படும்.



### ஆற்றுப் பாலங்கள் (River Bridges)

1. சென்னை, அடையாறில், திரு.வி.க.பாலத்திற்கு இணையாக, கூடுதல் இரு வழித் தடப் பாலம் ஒன்று, 9 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.
2. எண்ணூர் விரைவுச் சாலையில், எண்ணூர் முகத்துவாரத்தின் மீது உயர் மட்ட பாலம் ஒன்று 20 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.
3. சர்தார் படேல் சாலையில், மத்திய கைலாஷ் சந்திப்பு அருகில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலம் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் அகலப்படுத்தப் படும்.
4. சென்னை, நெற்குன்றம் பகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே பெரிய மேற்கத்திய சாலையில் முகப்பேர் பகுதியுடன் இணைக்கும் சாலையில் 5 கோடி ரூபாய் மதிப்பில் உயர் மட்ட பாலம் ஒன்று அமைக்கப்படும்.

### சாலை மேம்பாலம் (Road over Bridge)

ஜி.என்.டி. சாலையில் வியாசர்பாடி கீழ்ப்பாலத்திற்குப் பதிலாக சாலை மேம்பாலம் ஒன்று 50 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

### வட்டத் திட்டுடன் கூடிய மேம்பாலங்கள் (Grade Separators)

1. அண்ணா நகர் இரண்டாவது நிழற்சாலை மற்றும் திருமங்கலம் - முகப்பேர் சாலை - உள்வட்டச் சாலை சந்திப்பில் 30 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும்;
2. ஜி.என்.டி. சாலையில் மூலக்கடை சந்திப்பில் 25 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும்;
3. போரூரில், கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூர் சாலை மற்றும் மவுண்ட் - பூந்தமல்லி சாலை சந்திப்பில் 15 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும்;
4. அண்ணா சாலையில், ஹால்டா (Halda Junction) பகுதியில் சர்தார் படேல் சாலை சந்திப்பில் 22 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும்;
5. வடபழனியில், என்.எஸ்.கே.சாலை மற்றும் உள் வட்ட சாலை (Inner Ring Road) சந்திப்பில் 30 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும்;

இப்பணிகள் அனைத்தையும் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்திட, அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

❖ ❖ ❖

# குடிசைப் பகுதியில் வசித்துவரும் 3,240 குடும்பங்களுக்குக் கிரையப் பத்திரம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, எம்.ஜி.ஆர். நகர் குடிசைப்பகுதியில் வசித்துவரும் 3,240 குடும்பங்களுக்கு, அவர்கள் குடியிருந்து வரும் மனைக்கு உரிய கிரையப் பத்திரங்களை வழங்கினார்கள்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், அடிப்படை வசதிகள் அற்ற குடிசைப் பகுதிகளை நல்ல உறைவிடங்களாக மேம்படுத்தி, அந்த மனைப்பகுதியை அவர்களுக்கே சொந்தமாக்கும் திட்டத்தின் கீழ், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சென்னை மாநகராட்சியின் 131ஆவது வட்டத்தில் அமைந்துள்ள கால்நடைத்துறை மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு உரிமையான எம்.ஜி.ஆர். நகர் குடிசைப்பகுதி நிலத்தை அத்துறைகளிடமிருந்து குடிசை மாற்று வாரியம் பெற்று சாலை வசதி, குடிநீர் வசதி, மின் விளக்குகள், மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த மனைப்பகுதியை இப்பகுதியில் வாழ்ந்து வரும் 3,240 குடும்பங்களுக்கும், அந்தக் குடும்பத்தின் கணவன், மனைவி இருவர் பெயரிலும் கூட்டுப் பட்டா வழங்கி அதற்கான கிரையப் பத்திரத்தை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.



இதன்படி, சென்னை எம்.ஜி.ஆர். நகர் குடிசைப்பகுதியில் உள்ள இந்த 3,240 குடும்பங்களுக்கும் கிரையப் பத்திரங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று வழங்கினார்கள். இதில் 18 ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்களுக்குரிய கிரையப் பத்திரங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து கிரையப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட இவர்கள் அனைவரும் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு.நா.பாலகங்கா, குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.அம்புஜ் சர்மா ஆகியோர் உடனிருந்தார்கள்.

☐ ☐ ☐





# கூட்டுறவு, பொதுத்துறைப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 26-10-2005

ஒரு நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணியாற்றினால்தான் அந்த நிறுவனம், மேம்பட்ட உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் எய்த முடியும். எனவேதான், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் பண்டிகைக் காலத்தை மன மகிழ்ச்சியுடன் தங்களது குடும்பத்தினருடன் கொண்டாடும் வகையிலும், அவர்களுக்குப் போனஸ் வழங்கப்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும்.

இதன் அடிப்படையில், லாப நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, வணிகப் பணிகளை மேற்கொள்கின்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின் வாரியம், ஆவின் மற்றும் தங்களது வணிகப் பணிகள் முழுவதையும் அரசுக்காவே மேற்கொள்கின்ற தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இந்த ஆண்டு 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை ஆகமொத்தம் 20 சதவிகித வழங்க 14-10-2005 அன்று நான் ஆணையிட்டேன்.

மேலும், விலை மற்றும் கட்டணம் அரசால் நிர்ணயிக்கப்படாமல், வணிக ரீதியாகச் செயல்படுகின்ற ஏனைய பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு மத்திய அரசின் போனஸ் உச்சவரம்புச் சட்டத்தின்படி 2004-2005ஆம் நிதி ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கிடவும் எனது அரசு 14-10-2005 அன்று ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையின்படி, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரியம், நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர்த்த ஏனைய அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 45 ஆயிரம் தொழிலாளர்களும், பணியாளர்களும் போனஸ் பெறத் தகுதி படைத்தவர்களாக உள்ளனர். ஆனால், இந்த பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 23,000 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மத்திய அரசின் போனஸ் சட்ட சம்பள உச்ச வரம்பான 3,500 ரூபாய் என்ற சம்பள அளவை

எட்டிவிட்ட காரணத்தால் போனஸ் பெற தகுதியற்றவர்கள் ஆகின்றனர்.

இந்தப் பொதுத்துறை நிறுவனங்களில் ரூ.5300–150–8300 என்ற அளவு வரை உள்ள ஊதிய விகிதத்தில் சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள், அதாவது 'சி' மற்றும் 'டி' பிரிவிற்கு நிகரான பணி நிலையில் உள்ளவர்கள், போனஸ் சட்டப்படி போனஸ் பெறத் தகுதியற்றவர்கள் எனினும், இந்தத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களது குடும்பத்துடன் பண்டிகை நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் இவர்களைப் பொறுத்த வரையில் போனஸ் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள 3,500 ரூபாய் என்ற சம்பள உச்சவரம்பைத் தளர்த்த தற்போது நான் ஆணையிட்டுள்ளேன்.

இதன் அடிப்படையில், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 'சி' மற்றும் 'டி' பிரிவு தொழிலாளர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பயன்பெறுகின்ற வகையில் மேற்குறித்த போனஸ் உச்சவரம்பைத் தளர்த்தி, 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் குறைந்தபட்சம் 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 1.67% கருணைத்தொகை வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இவ்வாறு வழங்கப்படும் போனஸ் வழக்கமான முறையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின்படி ஒதுக்கக்கூடிய உபரித் தொகை உள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் ஆகியவற்றில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இவ்வாறே உச்ச வரம்பு விலக்களிக்கப்பட்டு, 20% வரை போனஸ் வழங்கப்படும்.

இதனால் 38 அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சேர்ந்த 68,000 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அந்நிறுவனங்களுக்கு மொத்தம் சுமார் 9.17 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

நீலகிரி மாவட்டம், குன்னூரில் இயங்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் அரசு ரப்பர் கழகம் மற்றும் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், அங்கு பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொள்கின்ற கடினமான பணியினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் தொகை, 1.67% கருணைத் தொகை மற்றும் 10% கூடுதல் கருணைத் தொகை ஆகமொத்தம் 20% வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் போனஸ் வழக்கமான முறையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

1. போனஸ் சட்டத்தின் கீழ்வரும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு 8.33% போனஸ் மற்றும் 1.67% கருணைத் தொகை வழங்கப்படும்.
2. ஒதுக்கக்கூடிய உபரித்தொகை (allocable surplus) உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு, ஒதுக்கக்கூடிய உபரித் தொகையின் அடிப்படையில், 20 சதவிகிதம் வரை போனசாக வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் போனஸ் தொகை, வழக்கமான முறையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.
3. போனஸ் சட்டத்தின் கீழ் வராத கூட்டுறவு இணையங்கள் மற்றும் மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்குக் கருணைத்தொகையாக ரூ.1,500 வழங்கப்படும். இதேபோன்று போனஸ் சட்டத்தின் கீழ் வராத தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.1,200 கருணைத் தொகையாக வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, இவ்வாறு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படுவதால், 80,000 கூட்டுறவுப் பணியாளர்கள் பயனடைவர். இதற்கு ஏற்படும் செலவு ரூ.20 கோடி ஆகும்.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மனமகிழ்வு அடையும் வகையிலும், அவர்களது குடும்பங்கள் மனநிறைவு அடையும் வகையிலும் நான் வழங்கியுள்ள இந்தச் சலுகைகள், இந்நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் பணியாளர்கள் மேலும் ஊக்கமுடனும், உற்சாகத்துடனும் தங்கள் கடமையினை ஆற்றிட வகை செய்யும் என்று நம்புகிறேன்.

❖ ❖ ❖



# பணிப் பரிமாற்ற வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் (19.10.2005)**



மத்திய அரசு 2005ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் கீழ் வங்கிப் பணப் பரிமாற்ற வரியைப் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை நீங்கள் தெரிந்திருப்பீர்கள் எனக் கருதுகிறேன்.

கடந்த 1.6.2005 முதல் அமல்படுத்தப்பட்டு, வங்கிகளிலிருந்து எடுக்கப்படும் பணத்துக்கு 0.1 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டு வருகிறது.

2005–2006ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அதிகமான அளவு பணப் பரிமாற்றம் நடைபெறுவதால் கறுப்புப் பண நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கிற ஒரு கருத்தை வெளியிட்டு, அதன் காரணமாக வரி ஏய்ப்பைத் தடுக்கும் வகையில் ஒரு நாளைக்கு ரூ.10 ஆயிரத்துக்கு மேல் வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது 0.1 சதவிகிதம் வரி விதிக்கப்படுவதாக அறிவித்திருந்தார்.

மத்திய அரசு நிறுவனங்களும், மாநில அரசு நிறுவனங்களும் இந்தப் புதிய வரி விதிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டது ஏன் என்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இதனால், சேமிப்புக் கணக்கைத் தவிர மற்ற கணக்குகளின் கீழ் வங்கிகளிலிருந்து மாநில அரசு நிறுவனங்கள் பணம் எடுக்கும்பொழுது இந்த வரியைக் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்கான திட்டம் இது என்று புதிய வரியை அறிமுகப்படுத்தும் போது காரணமாக சொல்லப்பட்டது.

ஆனால், மாநில அரசின் பொதுக் கணக்கிலிருந்தோ, ஒருங்கிணைந்த நிதியிலிருந்தோ பணம் பெறுவது என்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மாநில அரசு சார்ந்த பொது நிறுவனங்களுக்கும் உள்ள ஒரு நிருவாக ரீதியிலான நடவடிக்கையாகும்.

அப்படி இருக்கையில், புதிய வரி விதிப்பின்கீழ், மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள் செலுத்தும் வரிக்கும், இந்தப் புதிய வரியை அறிமுகப் படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட காரணத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

மேலும், இதுபோன்ற வரியானது மாநில அரசின் நிதி நிருவாகத்திற்குச் சுமையையே ஏற்படுத்தும் பிரச்சினைக்குரிய ஒன்றாகும்.

மத்திய அரசு நிறுவனங்கள் இந்த வரியை செலுத்துவது என்பது ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு (நிதித் துறைக்கு) பணம் போய்ச் சேருவதாகவே உள்ளது.

வங்கிகளுக்கிடையே நடைபெறும் பணப் பரிமாற்றங்களுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து அண்மையில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே, 2005ஆம் ஆண்டு பணப் பரிமாற்ற நிதிச் சட்டத்திலிருந்து மாநில அரசு மற்றும் அதைச் சார்ந்த பொது நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வரி விலக்கு அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ✶

# திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை







மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், 2005ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய 3 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் 39 ஆயிரத்து 645 ரூபாயை, மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய தமது சம்பளத்தொகையான 39,645 ரூபாயை, நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கண்ணபுரம், அருள்மிகு சௌரிராஜப்பெருமாள் திருக்கோயிலுக்கு, 13,645 ரூபாய், மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு 13,000 ரூபாய், மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலுக்கு 13,000 ரூபாய் என இம்மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார்கள். இந்த நன்கொடைக்கான காசோலைகளை, அருள்மிகு சௌரிராஜப்பெருமாள் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. டி.ஜெயபால், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு.பா.பாஸ்கரன் மற்றும் அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலின் துணை ஆணையர்/செயல் அலுவலர் திருமதி பா.பாரதி ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27-10-2005 அன்று நேரில் வழங்கினார்கள். □



# அன்னதானத் திட்டம் மேலும் 9 திருக்கோயில்களுக்கு விரிவாக்கம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை



தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு, அத்திருக்கோயில்களிலேயே இலவச மதிய உணவு அளிக்கும் வகையில், அன்னதானத் திட்டத்தை கடந்த 23.3.2002 அன்று, சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நான் தொடங்கி வைத்தேன். தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோயில்களில் முதல் கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 63 திருக்கோயில்களுக்கும், செப்டம்பர் மாதத்தில் 18 திருக்கோயில்களுக்கும், 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 18 திருக்கோயில்களுக்கும், 2004ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 9 திருக்கோயில்களுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, தற்போது, மொத்தம் 171 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமின்றி, பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருகை தருகின்ற பக்தர்களின் ஏகோபித்த பாராட்டையும், வரவேற்பையும் பெற்றுள்ள இந்தத் திட்டத்தை, மேலும் 9 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்த நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி,

★ காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சி நகர் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில்,

★ காஞ்சிபுரம் மாவட்டம், திருவிடந்தை அருள்மிகு நித்ய கல்யாணசுவாமி திருக்கோயில்,



★ விழுப்புரம் மாவட்டம், பூவரசம்குப்பம் அருள்மிகு லக்ஷ்மி நரசிம்மசுவாமி திருக்கோயில்,

★ நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், காளிப்பட்டி அருள்மிகு கந்தசாமி திருக்கோயில்,

★ கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,

★ ஈரோடு மாவட்டம், ஈரோடு நகர் அருள்மிகு ஆருத்ரா கபாலீஸ்வரர் திருக்கோயில்,

★ தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயில்,

★ கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், அய்யர்மலை சிவாயம் அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில்,

★ தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், ஆழ்வார் திருநகரி அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில்,

ஆகிய 9 திருக்கோயில்களில் கூடுதலாக அன்னதானத் திட்டத்தை 6.11.2005 முதல் செயல் படுத்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

இதன் மூலம், அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோயில்களின் எண்ணிக்கை மொத்தம் 180 ஆக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

### இதயமே... இதயமே...

**கை**யளவு தான் இதயம்; ஆனால், அதில் கடல் போல் ஆசை. 'இரத்தக் குடுவை' என்று தமிழ்நாட்டு சித்தர்கள் இதயத்தை அழகாக விவரிக்கிறார்கள். இதயம் என்பது ஒரு 'பம்ப்பிங் ஸ்டேஷன்'. இதுதான் இரத்தத்தை எல்லா உறுப்புகளுக்கும் அனுப்புகிறது. 'ஒவ்வொரு முறை துடிக்கும்போதும், நூறு கியூபிக் சென்டிமீட்டர் ரத்தம், வெளியே அனுப்பப்படுகிறது. ஒரு நாளைக்கு, 10,567 குவாட்ஸ் இரத்தத்தை இது பாய்ச்சுகிறது. சராசரி மனித வாழ்வில் இது 264,175,000 குவார்ட்ஸ் ரத்தத்தை பாய்ச்சுகிறதாம்!

இதயத் துடிப்பு பற்றி பார்த்தால், இதன் வேலை வியக்கத்தக்கதாக இருக்கிறது. ஒவ்வொரு இதயத்துடிப்பும், ஒரு நொடியின் பத்தில் எட்டு பங்கு உள்ளதாம். ஒரு நாளைக்கு, நமது இதயம், ஒரு இலட்சம் தடவைகள் துடிக்கிறதாம்! இதோடு, அதே சமயத்தில் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரமும் ஓய்வும் எடுத்துக் கொள்கிறதாம்! இதயம் சுருங்கிச் சுருங்கி, விரிந்து விரிந்து பணியாற்றுகிறது. இதயம் சுருங்கும்போது இரத்தம் வெளியே பாய்ச்சப்படுகிறது. விரியும்போது புதிய இரத்தம், இதயத்திற்குள் நுழைகிறது. இதயத்தின் அடிப்பாகத்திலிருந்து தொடங்கி மேலே போகும் ஒரு அலையைப் போல சுருக்கம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் இரத்தத்தை இதயம் விநியோகம் செய்கிறது.

❖ ❖ ❖



# 100 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் திறந்து வைத்தார்கள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24-10-2005 அன்று சென்னை மாநகரில், மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, புளியந்தோப்பு, வேப்பேரி, சிந்தாதிரிப் பேட்டை, திருவொற்றியூர், எழும்பூர், தண்டையார்பேட்டை மற்றும் சைதாப் பேட்டை ஆகிய காவல் நிலையங்களுக்கு என கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங் களையும், பூங்கா நகர் ஐசக் தெருவில் கட்டப்பட்டுள்ள பெண் காவலர் ஓய்வு இல்லம், மண்ணடி ஜாபர் செராங் தெருவில் கட்டப்பட்டுள்ள ஆண் காவலர் ஓய்வு இல்லம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைச் சீருடன் பராமரித்து, மக்களுக்குப் பாதுகாப்பைச் சிறப்புடன் வழங்கி வரும் தமிழகக் காவல் துறையை இந்திய நாட்டுக்கே முன்னோடியாக அமையும் வகையில், நவீனப்படுத்தி வருகிறார்கள். இதில் ஓர் அங்கமாக, தமிழ்நாட்டில் பழைய கட்டடங்களில் இயங்கி வந்த 100 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21-1-2004 அன்று ஆணையிட்டிருந்தார்கள். இதில் சென்னை மாநகரில் மட்டும், சட்டம் ஒழுங்கு, குற்றப் பிரிவு, போக்குவரத்து, அனைத்து மகளிர் காவல் நிலையம் போன்ற 49 காவல் நிலையங்களுக்கு 14 இடங்களில் அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிட்டிருந்தார்கள்.

இவற்றில், மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, சிந்தாதிரிப்பேட்டை, திருவொற்றியூர் ஆகிய காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கு, குற்றப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியவை அமையும் வகையிலும், புளியந்தோப்பு, வேப்பேரி, எழும்பூர், தண்டையார்பேட்டை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் சட்டம் ஒழுங்கு, குற்றப் பிரிவு மற்றும் போக்குவரத்துப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமையும் வகையிலும், 3.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகருக்கு அலுவல் நிமித்தமாக வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருகின்ற பெண், ஆண் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்கும் இட வசதியின்றி சிரமப்படுவதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பெண் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு, பூங்கா நகர் ஐசக் தெருவில் ஓய்வு இல்லம் புதிதாகக் கட்டப்படும் என்றும், அதேபோல்,




ஆண் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு மண்ணடி ஜாபர் செராங் சாலையில் ஓய்வு இல்லம் புதிதாக கட்டப்படும் என்றும், 9–4–2003 அன்று, சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதங் களுக்குப் பதில் அளித்துப் பேசும்போது அறிவித்தார்கள்.

இதன்படி, சென்னை, பூங்கா நகர் ஐசக் தெருவில் 62.20 இலட்சம் ரூபாய் செலவில் பெண் காவல் அதிகாரிகளுக்கு 10 இரட்டைப் படுக்கை அறைகளும், 2 ஒரு படுக்கை அறைகளும் மற்றும் ஒவ்வொன்றிலும் 12 பெண் காவலர்கள் ஓய்வு எடுக்கக் கூடிய இரண்டு ஓய்வுக் கூடங்களும் (Dormitory), மண்ணடி ஜாபர் செராங் தெருவில் 67.30 இலட்சம் ரூபாய் செலவில் ஆண் அதிகாரிகளுக்கு 12 இரட்டைப் படுக்கை அறைகளும், ஒவ்வொன்றிலும் 12 காவலர்கள் ஓய்வு எடுக்கக்கூடிய இரண்டு ஓய்வுக் கூடங்களும் (Dormitory) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 5 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, சிந்தாதிரிப்பேட்டை, திருவொற்றியூர், புளியந்தோப்பு, வேப்பேரி, எழும்பூர், தண்டையார்பேட்டை மற்றும் சைதாப்பேட்டை ஆகிய காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்களையும், பூங்கா நகர் ஐசக் தெருவில் கட்டப்பட்டுள்ள பெண் காவலர் ஓய்வு இல்லம், மண்ணடி ஜாபர் செராங் தெருவில் கட்டப்பட்டுள்ள ஆண் காவலர் ஓய்வு இல்லம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 24–10–2005 அன்று திறந்துவைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24–10–2005 காலை 10.00 மணி அளவில் சென்னை மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார்கள். தொடர்ந்து ஆயிரம் விளக்கு, புளியந்தோப்பு ஆகிய காவல் நிலையங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களையும் அக்காவல் நிலையங்களுக்குச் சென்று திறந்துவைத்தார்கள். அடுத்து, வேப்பேரி காவல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேப்பேரி, சைதாப்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிப்பேட்டை, தண்டையார்பேட்டை மற்றும் திருவொற்றியூர் ஆகிய காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்களையும், மண்ணடி ஜாபர் செராங் தெருவில் கட்டப்பட்டுள்ள ஆண் காவலர்களுக்கான ஓய்வு இல்லத்தையும் திறந்துவைத்தார்கள். இதனையடுத்து பூங்கா நகரில் ஐசக் தெருவில் கட்டப்பட்டுள்ள பெண் காவலர்களுக்கான ஓய்வு இல்லத்திற்கு நேரில் சென்று அதனை திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்வுகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.என். நாராயணன்,இ.ஆ.ப., உள்துறை முதன்மைச் செயலாளர் திரு.பவன் ரெய்னா,இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ்.அலெக்ஸ் சாண்டர்,இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.ஆர்.நடராஜ்,இ.கா.ப., கூடுதல் ஆணையர் திரு.டி.கே.ராஜேந்திரன்,இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களும், காவல்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். □



# சென்னை உர ஆலைக்கு பாஸ்பரிக் அமிலம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்



மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
எழுதிய கடிதம் (14–10–2005)

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவியது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது. எனவே, இந்தப் பருவத்தில் விவசாயிகள் நல்ல முறையில் சாகுபடி செய்ய, நல்ல அறுவடை இருக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் இருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு விவசாயத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், பொருட்களையும் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யவும் அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

இப்போதுதான் வேளாண்மையின் ஆரம்ப கட்டமாகும். இந்த நிலையிலேயே பாஸ்பேட்டை அடிப்படையாகக் கொண்ட உரங்களான 17:17:17 மற்றும் 20:20:20 இரக உரங்களான டிஏபி மற்றும் உரக் கலவை உரங்கள் தட்டுப்பாடாக உள்ளது. மத்திய அரசின் உர அமைச்சகத்துக்குத் தமிழக அரசு அதிகாரிகள் உரத் தட்டுப்பாடு குறித்து பலமுறை எடுத்துக் கூறினார்கள். டிஏபி உரம் தாராளமாகத் தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியிருந்தும், மிகவும் பிரபலமான 17:17:17 என்ற இரக உரம் கிடைக்கவில்லை. இந்த இரக உரத்தையே எங்களது விவசாயிகள் பயன்படுத்துவதால் இந்த இரக உரம் கிடைக்காதது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.

17:17:17 இரக உரம் தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்திப் பெற்ற உரமாகும். இந்த உரத்தை முக்கியமாக சென்னை உர ஆலை நிறுவனம்தான் உற்பத்தி செய்கிறது.

சென்னை உர ஆலை பொதுத்துறை நிறுவனமாகும். சென்னை உர ஆலையில் உற்பத்தியாகும் உரத்தில் 35 சதவிகிதம் தமிழ்நாட்டிலேயே பயன்படுத்தப்படுகிறது. மத்திய அரசு கூட்டிய பல்வேறு கூட்டங்களிலும் தாராளமாக இந்த இரக உரத்தை விநியோகிப்போம் என்று திரும்பத் திரும்ப உறுதி அளித்தது. கொடுத்த வாக்குறுதிப்படி உரம் விநியோகம் செய்யப்படவில்லை. இக்கட்டான இதே நேரத்தில் சென்னை உர ஆலை குறிப்பிட்ட இந்த உரத்தை விநியோகிக்கவில்லை.

விவசாயிகள் கேட்கும் இந்த உரத் தட்டுப்பாட்டுக்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது, பாஸ்பரிக் அமிலம் கிடைக்கவில்லை, எனவேதான் விவசாயிகளுக்குத் தேவையான உரம் விநியோகம் செய்ய முடியவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது.

உர உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்கவில்லை என்றும் ஒதுக்கீடு முறை பற்றிய சென்னை உர ஆலை கூறுகிறது. விவசாயிகளுக்கு மிகவும் பிரபலமாகத் தெரிந்த உரம் தட்டுப்பாட்டில் உள்ளது. எனவே உரத் தட்டுப்பாட்டுக்கு என்ன காரணம் சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

17:17:17 உரத்துக்குப் பதிலாக அதே தன்மை உடைய வேறு உரம் வழங்க பல்வேறு முயற்சிகளை எடுத்தோம். ஆனால், சென்னை உர ஆலை உற்பத்தி செய்யும் பிரபலமான விஜய் 17:17:17 என்ற உரத்தையே விவசாயிகள் விரும்புகிறார்கள். இந்த உரம் கிடைக்காததால் விவசாயிகள் மிகவும் வேதனையுடன் இருக்கிறார்கள்.

பாஸ்பேட்டை அடிப்படையாகக் கொண்டு உர உற்பத்தி செய்பவர்கள் பாஸ்பரிக் அமிலம் இறக்குமதி செய்யப்படுவதை எதிர்பார்த்தே காத்திருக்கிறார்கள். ஏனெனில், உள்நாட்டில் பாஸ்பரிக் அமிலம் மிகக் குறைந்த அளவே விநியோகம் செய்யப்படுவதால் அவர்கள் இறக்குமதியை நம்பியே இருக்கிறார்கள். சென்னை உர ஆலைக்குத் தேவையான பாஸ்பரிக் அமிலத்தை இறக்குமதி செய்ய மத்திய உர மற்றும் இரசாயன அமைச்சகம் நடவடிக்கை எடுக்காதது ஏன்? எந்தத் தடைகள் இருந்தாலும் அதனை நிவர்த்தி செய்ய வேண்டும். நாங்களும் உள்ளூரில் உரம் விநியோகம் செய்ய முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஆனால், அதுவும் போதுமானதாக இல்லை.

செனகல் நாட்டில் உள்ள செனகல் கெமிக்கல் நிறுவனத்தில் மத்திய அரசின் 8 சதவிகித பங்கு உள்ளதாக நான் அறிகிறேன். இந்த நிறுவனம் இந்தியாவில் 6 இலட்சம் மெட்ரிக் டன் பாஸ்பரிக் அமிலம் விநியோகம் செய்கிறது. சென்னை உர ஆலைக்கு, பாஸ்பரிக் அமிலம் துளியும் கொடுக்காமல் முழுவதுமாக 'இப்கோ'வுக்குத்தான் விநியோகம் செய்கிறது. இந்த நிலையில், தங்களுக்கும் ஓரளவு பாஸ்பரிக் அமிலம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை சென்னை உர ஆலை கேட்டுக் கொண்டது. ஆனால், மத்திய அரசு எதுவும் செய்யவில்லை.

தமிழக விவசாயிகளின் உரத் தேவையைக் கருத்தில் கொண்டு இந்தப் பருவத்திற்கு (இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை) தேவையான உரம் கிடைக்க வேண்டும். தமிழகத்துக்குத் தேவையான 17:17:17 ரக உரம் உற்பத்தி செய்ய 1,10,000 மெட்ரிக் டன் பாஸ்பரிக் அமிலம் தேவை. எனவே, தாங்கள் தலையிட்டு, குறைந்தபட்சம் சென்னை உர ஆலைக்கு 30,000 மெட்ரிக் டன் பாஸ்பரிக் அமிலம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதுவும் குறிப்பிட்ட நேரத்தில் பாஸ்பரிக் அமிலம் கிடைத்தால்தான் உடனடியாக உர உற்பத்தி செய்ய முடியும். நெல் சாகுபடிக்குத் தமிழக விவசாயிகள் பிரசித்திப் பெற்ற 17:17:17 இரக உரத்தையே விரும்புகிறார்கள். எனவே, அந்த ரக உரம் தடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எனவே, தாங்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

□ □ □

## முதல் செய்தித்தாள்

*இன்றைய உலகில் செய்தித்தாள்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. முதலில் 1690–ஆம் ஆண்டு செப்டம்பர் 25–ஆம்தேதி அமெரிக்காவில் செய்தித்தாள் வெளியிடப்பட்டது.*

*அதன் பெயர், 'வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் நிகழ்ந்தவை (Public Occurrences both Foreign and Domestic) இதற்கு நான்கு பக்கம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. மூன்று பக்கம் செய்தி. ஒரு பக்கம் வெற்றிடமாகவே வந்தது. (வாசகர் விருப்பம் போல் எழுதிக்கொள்ள) உடனடியாக இது தடை செய்யப்பட்டது.*

*அடுத்து 1704ஆம் ஆண்டில் 'போஸ்டன் நியூஸ் லெட்டர்' என்ற பத்திரிகை வெளிவந்தது.*

*1830– ஆம் ஆண்டு முதல் செய்தித்தாள்கள் வளர்ந்தன; மலிவாக, தரமாக வெளிவர ஆரம்பித்தன.*

*தமிழ்நாட்டில் முதல் செய்தித்தாள், சென்னையில் இருந்து வெளியானது. அதன் பெயர் 'மெட்ராஸ் கூரியர்' என்பதாகும். இது 12.10.1784இல் வெளிவந்தது.*



# புதுக்கோட்டை மாவட்ட
# மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களுக்கு அரசின் உதவிகள்



தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தின் பெரும்பாலான மக்களின் ஜீவ ஊற்றுதான், அங்கு பரந்து கிடக்கும் கல்குவாரிகள். இம்மாவட்டத்தில், வசதி படைத்த தனியார் ஒப்பந்தக்காரர்கள் அரசுப் புறம்போக்கில் உள்ள கல்குவாரிகளைக் குத்தகைக்கு எடுத்துப் பெரும்பாலும் பெண்களைக் குறைந்த கூலிக்கு அமர்த்தி, கல் உடைக்கும் பணியில் ஈடுபடுத்தி வருகிறார்கள். நீண்டகாலமாகக் கல் உடைக்கும் இப்பெண்கள், குறைந்த கூலியுடன் ஒடுக்கப்பட்டு வந்தனர். கல் உடைக்கும் பணியில் உள்ள பெரும்பாலானவர்கள், இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த குவாரித் தொழிலாளிகள். இவர்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர். நீண்டகாலக் கடன் சுமையுடன், பிற வசதிகள் ஏதுமின்றி, பரிதாப நிலையில் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றி வந்த இக்குவாரிப் பெண் தொழிலாளிகள், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள்.

வசந்த காலம் பிறக்குமா? என ஏங்கியிருந்த மகளிர் குவாரித் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினார்கள். மாவட்ட நிருவாகம் எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின் மூலம் ஒரு திருப்புமுனையாகக் கல்குவாரி குத்தகை உரிமங்களை மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கியுள்ளது. கல் உடைக்கும் தொழில் உள்ள மகளிர் நேரடி உரிமம் பெற்றதன் மூலம், அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் வீசத் தொடங்கியது. இவர்கள் வாழ்க்கைத்தரம், உயர்ந்தது மட்டுமின்றித் தனியார் ஒப்பந்தக்காரர்களின் அடிமைப் பிடியிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்கள்.

50 மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களுக்கு இம்மாவட்டத்தில் கல் குவாரி குத்தகை உரிமம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிக்காக இம்மகளிர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையும், புதுக்கோட்டை மாவட்ட நிருவாகத்தையும் கண்களில் ஆனந்த கண்ணீர் மல்க நன்றியுடன் நினைவு கூர்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்புச் சலுகையாக குவாரி உரிமக் கட்டணம் 50 விழுக்காடு சலுகையும் வழங்கி, உரிமக் கட்டணத்தை 4 தவணைகளில் கட்டவும் உத்தரவு வழங்கியுள்ளார்கள். அன்னவாசல், குன்னன்டார்கோவில், விராலிமலை, திருமயம், புதுக்கோட்டை, பொன்னமராவதி மற்றும் அரிமழம் ஆகிய 7 வட்டாரங்களில் செயல்படும் இம்மகளிர் குவாரி சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் கல் குவாரிப் பொருட்களை விற்பனை செய்ய, முக்கியப் பங்கு வகிப்பது DRDA–ன் கீழ் செயல்படும் DSMS மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் ஆகும். இச்சங்கம், சென்ற மாதம் செப்டம்பர் 2005 முடிய மகளிர் குவாரி சுயஉதவிக் குழுக்களிடமிருந்து ரூ.49.05 இலட்சம் மதிப்புள்ள குவாரிப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இக்குழுக்கள் உற்பத்தி செய்யும் 40 எம்.எம். ஜல்லி, தகட்டுக்கல், கல்தூண்கள் ஆகியவைகளை DSMS வெளிமாவட்டங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. இக்குழுக்கள் தயார் செய்யும் கல் குவாரி ஜல்லிகளுக்கு, ஒரு நல்ல சந்தையை ஏற்படுத்தும் பொருட்டு Metal Compact Test திருச்சி REC பொறியியற் கல்லூரியில் ஆய்வு செய்யப்பட்டது.

வாரம் ஒரு முறை ரூ.350 கூலியாகப் பெற்று வந்த இந்தக் குவாரித் தொழில் செய்யும் பெண்கள், தங்களுக்கு கல் குவாரி குத்தகை உரிமம் கிடைத்த பிறகு, வாரம் ரூ.900 முதல் ரூ.1000 வரை வருவாய் ஈட்டுகின்றனர். குழுவில் உள்ள பெண் உறுப்பினரின் கணவரும் சேர்ந்து இப்பணியில் ஈடுபடும்போது ஒரு மாதத்திற்கு ரூ.6,000



வருவாய் ஈட்டுகிறார்கள். குவாரித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட்டதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மெல்ல உயர்த்தி வருகிறார்கள்.

மாவட்ட நிருவாகம், நலிந்து போன இம்மக்களுக்கு, தன் கட்டுப்பாட்டில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை மட்டுமல்லாது வருவாய், சுகாதாரம், சமூக நலம், அறிவொளித் திட்டம், மகளிர் திட்டம் ஆகிய துறைகள் மூலம் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. இதனால், இக்குழு உறுப்பினர்களுக்கு, தங்கள் கிராமங்களில் ஒரு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இக்குழு உறுப்பினர்களுக்காக, மாவட்ட நிருவாகம் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து கண்சிகிச்சை முகாமும், மாவட்ட காசநோய்த் தடுப்புக் கழகத்தின் மூலம் காசநோய் கண்டறியும் சிகிச்சை முகாமும் நடத்தியுள்ளது. 1500 குவாரி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டார்கள். இவர்களில் 70 பேர்களுக்கு கண்புரை நோய் சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். கண்பாதுகாப்பிற்காக DSMS, புதுவயலில் செயல்படும் குவாரி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குச் சோதனை அடிப்படையில் பெரிய கண்ணாடி (Goggles) வழங்கியுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையில் மற்றைய குவாரி குழு உறுப்பினர்களுக்கும் பெரிய கண்ணாடி (Goggles) வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கெனவே DSMSக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். இதற்கான செலவுத் தொகையை SGSY திட்ட நிதியிலிருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழங்கும்.

குவாரி சுயஉதவிக் குழுக்கள் தயார் செய்யும் 40 எம்.எம். ஜல்லி, 60 எம்.எம்.ஜல்லி ஆகியவைகளை ஏற்றுமதி செய்ய DSMS ஒரு டிப்பர் லாரியைப் பயன்படுத்தி வருகிறது. செப்டம்பர் 2005 முடிய இந்த டிப்பர் லாரி மூலம் ரூ.83.29 இலட்சம் மதிப்புள்ள குவாரிப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. குவாரி குத்தகை உரிமங்கள் பல காலமாக பாரம்பரியமாக உள்ளூர் பலமுள்ளவர்கள் பெற்றுவந்த சூழ்நிலையில், அந்த பலமுள்ளவர்கள் குவாரிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும், மற்றைய கூட்டமைப்பு வசதிகளையும் தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருந்தனர். இந்நிலையில் DSMS டிப்பர் லாரி குவாரிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இக்குழு உறுப்பினர்களுக்குக் கை கொடுக்கும் உதவிக்கரமாக அமைந்துள்ளது. குவாரி சுயஉதவிக்குழு தயார் செய்யும் குவாரிப் பொருட்களைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்யவும், வேலை தொடர்ந்து நடைபெறவும், மாவட்ட ஆட்சித் தலைவர் DSMSக்கு டிராக்டருடன் இணைக்கப் பட்டுள்ள பாறைகளில் துளையிடும் இயந்திரம் ஒன்று வழங்கி, சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது.

மழைக்காலங்களில் குவாரியில் தேங்கும் தண்ணீரை அகற்ற, 2 ஆயில் இன்ஜின்களும் மற்றும் கைக் குழந்தைகளைத் தங்க வைக்கவும், மதிய நேரங்களில் ஓய்வெடுக்கவும் ரூ.4.40 இலட்சம் செலவில் 22 ஓய்வுக் கூடங்கள் குவாரிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. குவாரி மகளிர் தொழிலாளர்கள் தங்களுக்குள்ளே மாறுபட்டச் சூழ்நிலையை உருவாக்கி தன்னம்பிக்கையுடன் உள்ளனர். குத்தகை உரிமம் பெற்று 5 ஆண்டுகள் முடிந்து 26 குவாரி சுய உதவிக்குழுக்கள் மீண்டும் குத்தகை உரிமத்தைப் புதுப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு செய்து வருகின்றனர்.

நோஞ்சான், சவலைக் குழந்தைகளுடன் வாழ்க்கையில் போராடி வந்த மகளிர் குவாரித் தொழிலாளர்கள், இன்று சுயஉதவிக் குழுக்கள் மூலம் குவாரி உரிமம் பெற்று தங்கள் குழந்தைகளுக்கு நல்ல மருத்துவ வசதி, கல்வி, 3 வேளை உணவு என்ற அடிப்படை வசதிகளுடன் தன்னம்பிக்கையுடன் அறைகூவல்விடும் மகளிர்களின் ஒலி மலையடிவாரங்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

– செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை

* * *





# நூறு சதவிகித விளைச்சலைக் கொடுக்கும் “தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டம்”

2003–2004 நிதி நிலை அறிக்கையில் தமிழக அரசால் குறிப்பிடப்பட்ட தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டமானது, 2004–05ஆம் ஆண்டு முதல், மூன்று வருட காலங்களுக்கு நிறைவேற்ற அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இதனை ஒரு செயலாக்கத் திட்டமாக (Turnkey Project) அறிவித்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

கடந்த முப்பது ஆண்டு காலமாக விவசாயத்தையும், விவசாயிகளையும் முன்னேற்றுவதற்கு ‘உற்பத்தியைப் பெருக்குவது’ மட்டுமே (Production Led Marketing) கோட்பாடு என இலக்கு வைத்து, பல்கலைக்கழகமும், விரிவாக்கத் துறையும் இணைந்து செயல்பட்டு வந்தன. தற்போது உலகமயமாக்கலால் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையானது விவசாயத்தையும், விவசாயிகளையும் கடந்து ‘சந்தைக்கேற்ப உற்பத்தி முறையை’, கோட்பாடாக வைத்து (Market Led Production) வேளாண் முறையினை மாற்றியமைத்துச் செயல்பட வேண்டிய தருணத்தைக் கொணர்ந்துள்ளது. பொதுவாக இந்த முந்தைய வேளாண் முறையைச் சீர்படுத்தி சந்தைக்கேற்ப உள்ளூர் சந்தைக்கு என சாகுபடி முறை, உள்நாட்டில், பிற மாநிலங்களில் விற்பதற்கான சாகுபடி முறை, பதப்படுத்தாத ஏற்றுமதிக்கான சாகுபடி முறை, பதப்படுத்திய ஏற்றுமதிக்கான சாகுபடி முறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



உலகமயமாக்கப்பட்ட சந்தைச் சூழலில் தோட்டக்கலை விளைபொருட்கள் சரியாக விற்பனையாக வேண்டுமெனில், பெரிய அளவில் உற்பத்தி (Quantity) இருக்க வேண்டும். உலகத் தரத்திற்கேற்ப வடிவம், வண்ணம், அளவு (Quality) கொண்டிருக்க வேண்டும். சீரான எடையுள்ள பொருட்களாக இருக்க வேண்டும். உரிய நேரத்தில் குறிப்பிட்ட தேதியில் பொருள் சந்தையினை அடைய வேண்டும் (Timely delivery). பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமே மேற்கூறப்பட்ட தகுதிகளைச் சரிவரப் பெற்றுள்ளன. தனி விவசாயிக்கு இத்தகுதிகள் இல்லாததால், உலகச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை இழக்கிறார். தமிழ்நாடு துல்லிய

பண்ணையத் திட்டம் விவசாயிகளுக்கு இத்தகுதிகளைக் கொண்டு வருவதற்கான ஒரு புதிய திட்டமாகும்.



### சாகுபடியாளர் அமைப்பு

தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ்வரும் விவசாயிகள் ஒன்று சேர்ந்து உற்பத்தியாளர் சங்கத்தினைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். இச்சங்கத்தின் குறிக்கோள் இடுப்பொருட்களைத் தயாரிப்பாளர்களிடமிருந்து நேரடியாக வாங்குதல், வாங்குவோரிடம் நேரிடையாகப் பேசியும், சந்தைக்கு நேரில் சென்றும் விற்பனை விலையை நிர்ணயிக்கும் வலிமையினைப் பெறுவது, வேண்டிய உயர்தொழில்நுட்பங்களைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து பெறுவது ஆகியனவாகும்.

### செயல்பாட்டு அமைப்பு

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், இத்திட்டத்தின் திட்ட இயக்குநராக (Project Director) இருப்பார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் நிறுவனமாக (Project Implementing Agency) செயல்படும். தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்ந்த அலுவலர்கள் ஐவர் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும், திட்ட இயக்குநருக்கும் இணைப்பாகச் செயல்படுவர். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர், இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவர். இதன் செயல்பாடு குறித்து, திட்ட இயக்குநருக்கும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### திட்டத்தின் உட்கட்ட அமைப்பு

இத்திட்டமானது, மூன்று ஆண்டுகளில் மொத்தம் 400 எக்டேர் பரப்பில் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாம் ஆண்டில் 100 எக்டேரும் (2004–2005), இரண்டாம் ஆண்டில் 200 எக்டேரும் (2005–2006), மூன்றாம் ஆண்டில் 100 எக்டேரும் ஆக செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். முதலாமாண்டு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இரண்டாம் ஆண்டு பயனாளிகளுக்கு 90 சதவிகித மானியமும், மூன்றாம் ஆண்டு பயனாளிகளுக்கு 80 சதவிகித மானியமும் சாகுபடிச் செலவிற்கும், சொட்டு நீர் மற்றும் திரவ உர பாசன கட்டமைப்பிற்கும் வழங்கப்படும்.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (PIA)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கீழ்க்கண்டவாறு அமைப்புக்களை ஏற்படுத்தி இத்திட்டத்தினைச் செயல்படுத்துவர்.

### தொழில்நுட்பக் குழு (Technical Committee)

இக்குழுவில் பதினெட்டு விஞ்ஞானிகள் உள்ளனர். ஒவ்வொரு துறையின் தலைவர்களும், நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்களும் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்துச் செயல் திட்டமாக மாற்றித் தருவதே இக்குழுவின் தலையாயப் பணியாகும். மண், நீர், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றில் உள்ள உயர் தொழில் நுட்பங்கள் சீர்செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளி விவசாயிகளின் வயலின் மண் மற்றும் நீரின் தன்மைக்கேற்ப செயல்திட்டத்தினை உருவாக்குவது இக்குழுதான்.

### இடுபொருட்கள் வாங்குதல் குழு

இக்குழுவில் பதினெட்டு விஞ்ஞானிகள் உள்ளனர். பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் மட்டுமே இக்குழுவின் உறுப்பினர்கள். சொட்டு நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் அனைத்து இடுபொருட்கள் வாங்குவதற்கான கோப்புகளைப் பரிசீலித்து அனுமதி வழங்குவதற்காக இக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### செயற்குழு

இத்திட்டத்தின் அன்றாட அலுவல்களை மேற்கொள்ள கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் இக்குழு செயல்படுகின்றது.



1. முதல்வர், தோட்டக்கலைக் கல்லூரி, முதன்மையர்
2. முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி, உறுப்பினர்
3. இயக்குநர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை), உறுப்பினர்
4. இயக்குநர் (ஊரக மேம்பாட்டு மையம்), உறுப்பினர்
5. இயக்குநர் (விரிவாக்கம்), உறுப்பினர்

### அமலாக்கக் குழு

மேற்கண்ட குழுக்களைத் தவிர, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தினை அமல்படுத்த திட்ட அலுவலருடன் பதினெட்டு விஞ்ஞானிகள் (முதன்மை அறிவியலார்) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### தனிச்சிறப்புகள்

இத்திட்டமானது, கீழ்க்கண்ட வகையில் பிற மாநிலத் திட்டங்களிலிருந்து வேறுபடுகின்றது.

1. வயல்கள் ஒன்றிணைக்கப்படாமல், தொகுதியாகப் பராமரிக்கப்படுகின்றது. (உதாரணம் – கர்த்தார்ப்பட்டி அகரம் தொகுதி : எட்டு விவசாயிகள், வெள்ளிச்சந்தை : ஆறு விவசாயிகள்).

2. எக்டேர் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் மட்டுமே செலவினமாக உள்ளது. இது பிற மாநிலத் திட்டங்களைக் காட்டிலும் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே.

3. 35HP பண்ணை இயந்திரங்களே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. பிற மாநிலத் திட்டங்களில் 80HP, 120HP இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

4. விற்பனை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, பயனாளி விவசாயிகளின் கூட்டமைப்பினைப் பெரிதும் வலுப்படுத்துகிறது. பிற மாநிலத் திட்டங்களில் விவசாயிகளின் பங்கேற்பு இல்லை.

5. இது ஒரு முழுமையான “விவசாயிகள் பங்கேற்புப் பண்ணையத் திட்டம்” ஆகும்.



### முதலாண்டுப் பயிர்கள்

முதலாம் ஆண்டில் கீழ்க்கண்ட காய்கறிப் பயிர்களில் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, விஞ்ஞானிகள் விவசாயிகளின் வயலில் சாகுபடியை முன்னின்று மேற்கொள்வர். சந்தையில் அதிக விற்பனை வாய்ப்புள்ள காய்கறிகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

தக்காளி, மிளகாய், வெண்டை, மழலை மக்காச்சோளம், கெர்கினஸ் (ஊறுகாய் வெள்ளரி) முட்டைக்கோசு, பூகோசு, குடை மிளகாய், வெள்ளை வெங்காயம் மற்றும் பஜ்ஜி மிளகாய் ஆகியன முதலாண்டில் முதல் பருவத்திற்கான காய்கறிகளாகும். இப்பயிர் அறுவடையானதும், வயலில் பதிக்கப்பட்ட சொட்டு நீர் மற்றும் திரவ உர நீர்ப்பாசனத்தைக் கொண்டு, அடுத்த ஐந்து பயிர்களை விவசாயிகள் தங்கள் சொந்தச் செலவில் சாகுபடி செய்யவேண்டும். அதற்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்நுட்ப உதவிகளை மட்டும் வழங்கும்.

### முதல் ஆண்டுக்கான திட்டம் 2004–2005

### கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி, தொரப்பள்ளி ஆகிய கிராமங்களில் எக்டேருக்கு ஒன்று வீதம் 50 பயனாளி விவசாயிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். பூகோசு, முட்டைகோசு மற்றும் வீரிய ஒட்டு தக்காளி இப்பகுதியில் நடவு செய்யப்பட்டு வருகின்றன.

### பயனாளிகள் தேர்வு :

மாவட்ட ஆட்சியர் பயனாளிகள் பட்டியலைத் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் துணையுடனும், அதற்காக அமைக்கப்பட்ட மாவட்ட அதிகாரிகள் குழுவின் துணையுடனும் தேர்வு செய்கிறார்.

ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக ஒரு எக்டேர் பரப்பு எனவும், குறுவிவசாயிகள் சிலர் ஒன்று சேர்ந்து ஒரு எக்டேர் அளவிலும் பயன்பெறத் தகுதி பெறுகிறார்கள்.

**விவசாயிகள் தகுதி நிர்ணயம்**

1. விவசாயிகளின் கிணற்றில் பயிரைச் சாகுபடி செய்யத் தேவையான குறைந்தபட்ச பாசன நீர் இருக்க வேண்டும்.

2. மின் மோட்டாரின் நீர் வெளியேற்றம் திறன் 1.5 கிலோ அழுத்தம் கொண்டதாகவும், மணிக்கு 11,500 லிட்டர் நீர் வெளியேற்றம் சக்தி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

**உயர் தொழில்நுட்பங்கள்**

1. **உளிக்கலப்பை** (Chisel plough): இக்கலப்பை மண்ணை வகிர்ந்து (45–60 செ.மீ. ஆழம்) வேருக்கு தேவையான அளவு காற்றோட்டத்தையும், வடிகால் வசதியையும் ஏற்படுத்துகிறது.
2. **சமுதாய நாற்றங்கால் :** விவசாயிகளுக்கு சமுதாய நாற்றங்கால் பாலித்தீன் குழித்தட்டுகளில் (Portrays) தனித்தனி நாற்றாக வளர்க்கும் விதம் பயிற்சி தரப்பட்டுச் சீரான நாற்றுக்கள் நிழல்வலைக் கூடங்களில் வளர்க்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.
3. ஒரு எக்டேரில் நடவுக்கு வேண்டிய 100 சத நாற்றுக்களும் வாளிப்பாகவும், முழுமையான வேர்களுடனும் தயாரிக்கப்படுகின்றன.
4. உரிய பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் உரிய தருணத்தில் எடுக்கப்படுகின்றன.
5. திரவ உரங்கள் சொட்டுநீர் அமைப்பின் மூலம் பயிரின் பருவத்திற்கேற்ப வழங்கப்படுவதால் அபரிமிதமான வளர்ச்சியும், சீரான காய் பிடிப்பும் ஏதுவாகின்றது.

நூறு சதவிகிதம் செடிகள் வாளிப்பாக நடவுக்குப் பின் வளர்வதும் நூறு சதவிகிதம் செடிகள் விளைச்சலைக் கொடுக்கக் கூடியதாகவும் பராமரிக்கப்படுவதால், மகசூல் இழப்பு ஏற்படுவதில்லை.

பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கிராமத்திலேயே தங்கி விவசாயிகளுடன் உடனிருந்து பணியாற்றுவதால் விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் முழு நம்பிக்கை வந்துள்ளன.

**சந்தை வாய்ப்புகள்**

1. சந்தை நிலவரம் குறித்த தகவல்கள் உடனடியாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.
2. விவசாயிகள் குழுவினைக் கோயம்பேடு, கொச்சின், கோவை, சஃபல் (பெங்களூர்) ஆகிய சந்தைகளுக்கு நேரிடையாக அழைத்துச் சென்று சந்தையைப் பற்றிய நேரடி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
3. கருத்தரங்குகள் நடத்தி விவசாயிகளுக்கும் பொருட்களை வாங்கும் நிறுவனத்திற்கும் இடையே தகவல் பரிமாற்றம் செய்தல்.
4. பயனாளி விவசாயிகளை உயர் தொழில்நுட்ப முறையில் காய்கறிச் சாகுபடி செய்யப்படும் இடங்களுக்கு நேரிடையாக அழைத்துச் செல்லுதல்.

மேற்கண்ட செயல்பாடுகள் அனைத்தும் விவசாயிகளுக்குத் தர மேம்பாட்டின் வலிமையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**மாநில மாதிரி திட்டம்**

தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டமானது, மாநிலத்திற்கே ஒரு முன்மாதிரித் திட்டம் ஆகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டாலும், மாநில அளவில் விவசாயிகள் நேரில் வந்து பார்வையிட்டு உரிய பயிற்சியைப் பெற்று தானே செய்யத் தூண்டுவதற்கான திட்டமாக இது அமையும்.

**துல்லிய தொழில்நுட்பங்கள்**

தொலையுணர்வு கருவிகளைக் கொண்டு மண்வளம், நீர்வளம், பயிர்வளம், தழை, மணி, சாம்பல் சத்து அளவுகளைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் மண், நீர் மற்றும் பயிர் மேலாண்மை மேற்கொள்ளப்படுவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

**பதிவேடுகள்**

விவசாயிகள் வயலில் மேற்கொள்ளும் பணிகளையும், இடுபொருட்களையும் பதிவு செய்ய ஒவ்வொரு விவசாயிக்கும் பயிற்சி தரப்படுகின்றன. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் நடைபெற்ற பணிகளையும், இடுபொருட்களையும் பதிவு செய்து விவசாயியும், விஞ்ஞானியும் கையொப்பமிடுகின்றனர். பண்ணையின் வரவு செலவினைக் கண்காணிக்க விவசாயிகளுக்கு இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

இத்திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.*

❖ ❖ ❖



# திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் இயக்கும் மினி பேருந்து



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிர் வாழ்வில் வளம் கொழிக்க வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவித்து அவர்களின் உயர்வுக்குப் பாடுபட்டு வருகிறார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் பல இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்வில் ஒளிவீசத் தொடங்கியுள்ளது. இதனால் கிராமங்கள் வளர்ச்சி அடைவதோடு, சமுதாயமும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 10,557 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இதில், 1 இலட்சத்து 81 ஆயிரம் மகளிர் உறுப்பினராக உள்ளனர். இதுவரை ரூ.70 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியமாக மட்டும் ரூ.7 கோடியே 34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில், ரூ.31 கோடி வரை சேமிப்பு வைத்துள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் தாலுகாவில் உள்ள ஊரல்வாய்மொழி கிராமப் பெண்களினால் ஒரு வெற்றிக்கதை உலா வருகிறது.

**சாதனை படைக்கும் "சாமந்திப் பூ" மகளிர் சுயஉதவிக் குழு**

மகளிர் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கொண்டு வரப்பட்ட சீரியத் திட்டம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டமாகும். இந்த சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினராகும் பெண்கள் தங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், தங்களைச் சார்ந்த சமுதாய முன்னேற்றத்திற்காகவும், புதிய தொழில்கள் மற்றும் பல்வேறு சமூகச் சேவைகளைச் செய்து வருகின்றனர்.

அந்த வகையில், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சி, ஊரல்வாய்மொழி கிராம மகளிர் சுயஉதவிக் குழுவினர் ஒரு சாதனை நிகழ்த்தி வருகின்றனர். அந்தச் சாதனைக் குழுவின் பெயர் "சாமந்திப் பூ" மகளிர் சுய உதவிக்குழு என்பதாகும். 20 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சுயஉதவிக் குழு தொடங்கி 2 ஆண்டுகளே ஆகின்றன.

இந்தக்குழு சேமிப்பு மூலமாகவும், வங்கிக் கடன் மூலமாகவும் சிறு சிறு தொழில்கள் செய்து வந்ததோடு மட்டுமல்லாமல், இந்தச் சமுதாயத்திற்கு நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற தீராத தாகம், தொடக்கம் முதலே இருந்து வந்தது.

இந்தச் சூழ்நிலையில், கடந்த ஜுன் மாதம் வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தைத் திறந்து வைக்க திருநெல்வேலிக்கு வருகை தந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மினி பேருந்து இயக்க அனுமதியும், அதற்கான கடனுதவித் தொகை ரூ.8 இலட்சமும் வழங்கினார்கள். இந்தக் கடன் தொகையில் ரூ.1.25 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

# உலக சிக்கன நாள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் வாழ்த்துச் செய்தி



ஆண்டுதோறும் அக்டோபர் 30ஆம் நாள் உலக சிக்கன நாளாகக் கொண்டாடப்படுகிறது. சேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த நாள் தமிழகத்தில் கொண்டாடப்படுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

“சிறு துளி பெரு வெள்ளம்” என்ற பழமொழி, சிக்கனம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. எனவே, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைகளுக்காகச் சேமிப்பது அவசியம். மக்களின் சேமிப்பு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் உதவுவதால், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.

எனவே, இந்த உலக சிக்கன நாளில் தமிழக மக்கள் அனைவரும் தங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் வளம் சேர்க்கும் வகையில், அருகில் உள்ள அஞ்சலகத்தில் ஒரு அஞ்சலக சேமிப்புக் கணக்கைத் துவக்கி, அதில் தங்கள் சேமிப்பை சேர்த்து வைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ✶

---

அதன் பயனாக, மிகவும் வறண்ட பூமியான தங்கள் சுற்றுவட்டார கிராம ஏழை மக்கள் தொழில் செய்வதற்காக வெளியூர்களுக்குச் செல்லவும், பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் காலந்தவறாமல் பள்ளிக்குச் செல்வதற்காகவும் மினி பேருந்துகளை இயக்க முடிவுச் செய்து, தற்பொழுது ஊரல்வாய்மொழி – சங்கனேரி, கூடங்குளம், பரமேசுவரம் வழியாக ராதாபுரம் வரை பல்வேறு கிராமங்களுக்கு மினிபேருந்து இயக்கப்படுகிறது. பிறரிடம் வேலைக்குச் சென்று வந்த இந்த மகளிர் சுயஉதவிக் குழுவினர் இன்று 4 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றனர்.

ஊறுகாய், வத்தல், வடகம், முறுக்கு, சீடை என திண்பண்டங்களைச் செய்து சந்தைப்படுத்தி வந்த மகளிர் சுயஉதவிக் குழுவினர், இன்று பேருந்துப் போக்குவரத்தை நடத்தும் அளவுக்கு உயர்ந்து சாதனைப் படைக்கும் “சாமந்திப்பூ” மகளிர் குழு, திருநெல்வேலி மாவட்டத்தில் மற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கிறது.

**இணையதளம் தொடக்கம்**

திருநெல்வேலியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியை அடுத்துள்ள பத்தமடை, பாய் உற்பத்திக்கு, பெயர் பெற்ற ஊராகும். இங்கு, சுய உதவிக் குழு பெண்கள் வேலைப்பாடுள்ள பாய் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். களிமண்ணில் உருவாகும் டெரகோட்டா எனப்படும் சுடுமண் பொம்மைகளை காருகுறிச்சி மகளிர் குழுவினர் தயாரிக்கின்றனர். இதே போல பொம்மைகள், கைப்பைகள், அழகு சாதனப்பொருட்களையும் உற்பத்தி செய்கின்றனர். இவற்றை உலகஅளவில் சந்தைப் படுவத்துதற்காக இணையதளம் ஒன்று “பொன் பரணி” என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்தொகை, அவர்களது தயாரிப்புகள், பணிகள், சிறப்பாகச் செயல்படும் மகளிர் குழுக்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை இந்த இணைய தளத்தில் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஒவ்வொரு குடும்பத்தையும், சுய உதவிக் குழு திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அவர்களை முன்னேற்ற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய எண்ணத்தை செயல்படுத்துகின்ற வகையில், திருநெல்வேலி மாவட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள்,மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அதுல்ஆனந்த் இ.ஆ.ப., அவர்களின் வழி காட்டுதலில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

✶ ✶ ✶






TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
ANNEXE EXTENSION
FOUNDATION STONE
LAID BY
PURATCHI THALAIVI
SELVI J JAYALALITHAA
HON'BLE CHIEF MINISTER OF TAMIL NADU
ON THE OCCASION OF
PLATINUM JUBILEE CELEBRATIONS, 2005
13.10.2005
CHENNAI
Thiru R. PERUMALSAMY
Tmt. K.M. RAMATHAL
Thiru A. NAVANEETHA KRISHNAN
Tmt. B. NEELAMBIKAI
Tmt. N.G. KALAISELVI
Prof. R. SUBRAMANIAN
Thiru P. THEERTHARAPPAN
Thiru R. SENGUTTUVAN
Tmt. C.D. THILAGAVATHI
Thiru R. NARAYANASAMY,
MEMBERS
Tmt. YASMIN AHMED, I.A.S., (Retd.),
CHAIRPERSON









# தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசுக்கு மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தமிழக அரசு மேற்கொண்ட மீட்பு, வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மறுவாழ்வுப் பணிகள், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்கள் குறித்து மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களிடம் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டது. அப்போது மேதகு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும் உடன் இருந்தார்.

கடந்த 29ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் டெல்லியில் இருந்து மேதகு குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள் தொலைபேசி மூலம் வெள்ளச் சேதங்களைக் கேட்டறிந்தார். அப்போது, தான், 1 ஆம் தேதியன்று வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட, கடலூர் மாவட்டம் உட்பட சில பகுதிகளைப் பார்வையிடப் போவதாகவும் கூறியிருந்தார். அப்போது தமிழக வெள்ளச் சேதம், பயிர்களுக்கு ஏற்பட்ட இழப்பு, வெள்ள நிவாரணப் பணிகள் பற்றி நேரில் அறிக்கை தருவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்திருந்தார்.

மேலும், தமிழக அரசு வெள்ள நிலைமையைச் சமாளிக்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் வேண்டும் என்றும் மேதகு குடியரசுத் தலைவரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கேட்டுக் கொண்டார்கள். இப்படிப்பட்ட மிகவும் வேதனையான நிலைமையில் தமிழகத்துக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்று அப்போது முதலமைச்சர் அவர்களிடம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கூறினார்.

நேற்று மேதகு குடியரசுத் தலைவர் தமிழ்நாட்டில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட திருச்சி, தஞ்சாவூர், நாகை, கடலூர் மாவட்டங்களில் உள்ள பகுதிகளை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் மேதகு குடியரசுத் தலைவருடன், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப.அண்ணாவி மற்றும் உயர் அதிகாரிகள்



சென்றார்கள். அப்போது, தமிழக அரசு மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து மேதகு குடியரசுத் தலைவரிடம் விளக்கப்பட்டது.

2.12.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேதகு குடியரசுத் தலைவரிடம் மனு ஒன்றை அளித்தார்கள். தமிழ்நாட்டில் ஒரே மாதத்தில் மூன்று முறை வெள்ளம் ஏற்பட்டது. இந்நிலையில், தமிழக அரசு மேற்கொண்ட நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் பற்றி மேதகு குடியரசுத் தலைவரிடம் அளித்த மனுவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விரிவாக எடுத்துக் கூறினார்கள். இதற்கு முன் தொடர்ந்து வெள்ளம் ஏற்பட்டு இதுபோன்ற பேரழிவு ஏற்பட்டதில்லை என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மனுவில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் வெள்ளம் ஏற்பட்டு பெருத்த சேதம் ஏற்பட்டது. அப்போது, சென்னை மற்றும் காவிரிப் பாசனப் பகுதி மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது.

வெள்ளத்தில் ஸ்ரீரங்கம் நகரத்தை காப்பாற்ற எடுக்கப்பட்ட பகீரத முயற்சிகளை மேதகு குடியரசுத் தலைவர், வெகுவாகப் பாராட்டினார். சென்னை நகரிலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வடிகால் வசதிகள் மிகச் சிறப்பாக செய்யப்பட்டிருந்ததால் வெள்ளநீர் வேகமாக வடிந்துவிட்டது என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டினார்.

கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை நகரில் மிக வேகமாக எடுக்கப் பட்ட நிவாரண நடவடிக்கைகளையும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

அக்டோபரில் சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்ட மழை வெள்ளம் வடிவதற்குள்ளாகவே, நவம்பர் மாதம் ஆரம்பத்திலேயே அடுத்த மழை வெள்ளம் ஏற்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு நிருவாகம் மிகவேகமாக சமாளித்து, இரண்டாவதாக வந்த வெள்ள சவாலையும் சந்தித்து மிகத் திறமையாக மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

நவம்பர் மாதம் 4–ஆவது வாரத்தில் மீண்டும் மூன்றாவது முறையாக மழை வெள்ளம் ஏற்பட்டு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. மேட்டூர் அணை ஏற்கெனவே நிரம்பிவிட்டது. இந்த நிலையில் கடும் மழையும் பெய்தது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக இருந்தது. காவிரியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக ஸ்ரீரங்கம் நகரத்திற்கு வெள்ள ஆபத்து ஏற்பட்டது. இதனையும் அரசு நிருவாகம் திறமையாக செயல்பட்டு, ஸ்ரீரங்கம் நகரை, காப்பாற்றியதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, மேதகு குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள் தனது மனந்திறந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.

வெள்ளச் சேதப் பகுதிகளை நான் ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டேன். அப்போது பயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதையும், கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டிருப்பதையும் நேரில் கண்டேன். இவ்வளவு பெரிய வெள்ளத்தை சமாளிப்பது சிரமம் என்பதை நான் உணர்ந்தேன் என்று, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கூறினார்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்துக்கு 13,685 கோடி ரூபாய் நிவாரண உதவி வேண்டும். 2 இலட்சத்து 58 ஆயிரம் டன் அரிசியும், 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் போன்றவைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று மேதகு குடியரசுத் தலைவரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழக அரசுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் உறுதி கூறினார்.

தமிழகத்தில் உள்ள நதிகளுக்கு இடையே தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்ளும் வகையில் காவிரி–வைகை ஆறுகள் இணைப்பு குறித்து ஆரம்ப நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ளதற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், பாராட்டுத் தெரிவித்தார்.



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
கார்த்திகை – மார்கழி
மலர்: 37 இதழ்: 6
டிசம்பர் 2005
விலை ரூ.10

**இந்த இதழில்...**


★ தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தலைமையிலான அரசுக்கு **மேதகு இந்திய குடியரசுத் தலைவர்** அவர்கள் பாராட்டு ........ 2

★ தமிழக வெள்ள நிவாரணப் பணிகளுக்காக முதல் கட்டமாக, ரூ.3,000 கோடி வழங்க **மாண்புமிகு இந்தியப் பிரதமர்** அவர்களுக்கு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் கடிதம் (26.11.2005) ........ 5

★ சிறப்பு நிவாரண உதவியாக மத்திய அரசு, தமிழகத்திற்கு ரூ.13,685 கோடி வழங்க வேண்டும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் அறிக்கை (30.11.2005) ........ 7

★ தமிழகத்தில் போர்க்கால அடிப்படையில், மேற்கொள்ளப்படவேண்டிய மழை வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ஆய்வு ........ 10

★ மழைவெள்ள நிலைமையை எனது அரசு திறம்பட சமாளித்தது **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் அறிக்கை (4.12.2005) ........ 14

★ விவசாயப் பெருமக்கள் கவலைப்பட வேண்டாம் **(தஞ்சாவூர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)** ........ 17

★ போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம் **(நாகப்பட்டினம் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)** ........ 19

★ மக்களுக்குத் தேவையான உதவிகளை தமிழக அரசு செய்யும் **(மதுரை மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)** ........ 22

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்த** 717 கோடி ரூபாய் மதிப்பிலான "புது வாழ்வு" என்னும் புதிய திட்டம் ........ 25

★ விருதுநகர் மாவட்டத்தில் பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் உண்டு உறைவிடப் பள்ளிகள் ........ 32

★ உலமாக்கள் ஓய்வூதியத்தை 50 சதவிகிதமாக உயர்த்தி **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு** .. 37

★ திண்டுக்கல் மாவட்டம் – நமது கிராமம் திட்டப் பணிகளுக்கு ரூ.4.12 கோடி நிதி ஒதுக்கீடு ........ 49

★ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ.53 இலட்சத்தில் புதிய ஏரி அமைக்கும் பணி ........ 51

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்** உலக எய்ட்ஸ் தினச் செய்தி ........ 57

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 3,177 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு** ........ 58

★ மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதுதான் இந்த அரசின் கடமை **(கரூர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)** ........ 63

★ வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும் **(திண்டுக்கல் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)** ........ 65

★ காஞ்சிபுரம் மாவட்ட மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஒருசில மணி நேரங்களில் நிறைவேற்றிய **மாண்புமிகு முதலமைச்சர்** – பொதுமக்கள் நன்றி ........ 68

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் தொடங்கி வைத்த 3.72 கோடி ரூபாய் மதிப்பிலான சர்வதேச தரத்துடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ........ 72

★ **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் உத்தரவுப்படி பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.70 கோடி அளவுக்கு வட்டி தள்ளுபடி ........ 79


**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் பக்க அட்டை : **மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு.**

இரண்டாம் பக்க அட்டை : **"புது வாழ்வு" என்னும் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

நான்காம் பக்க அட்டை : **வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிடும் காட்சி.**

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



இந்தத் திட்டமானது மாநிலத்தில் உள்ள மற்ற நதிகளை இணைப்பதற்கு ஒரு முன்மாதிரியாக விளங்கும் என்றும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கூறி உள்ளார். வீராணம் ஏரியின் கரையை உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முயற்சிக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இந்த முயற்சியானது சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மிகுந்த பயனுள்ளதாக இருந்தது என்றும், அதனால்தான் வீராணம் ஏரியை காப்பாற்ற முடிந்தது என்றும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கூறினார்.

மேலும், வெள்ளத்தை தடுப்பதற்கு தேவையான தீர்வுகளை இதே மாதிரியான முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., காவல் துறை தலைவர் திரு. ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாகத்துறை ஆணையர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், கூடுதல் காவல் துறை தலைவர் (புலனாய்வு), வருவாய் துறை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், நிதித்துறை செயலாளர், பொதுப்பணித் துறை செயலாளர், நெடுஞ்சாலைத்துறை செயலாளர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை செயலாளர், காவிரி தொழில் நுட்பக் குழுத் தலைவர் திரு. ஏ. மோகன கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். ✶

**ஜெராக்ஸ்** முன்பெல்லாம் ஆவணங்களை நகலெடுக்க வேண்டுமானால், அதாவது இன்னொரு பிரதி தேவைப்பட்டால் அந்த ஆவணத்தை அப்படியே இன்னொரு முறை வேறொரு தாளில் எழுதுவார்கள். பின்னர் கார்பன் தாள் கண்டுபிடிக்கப்பட்டு ஒருமுறை எழுதும்போதே இன்னொரு நகல் கிடைத்து வந்தது. இதன்பின் வந்த மாற்றம்தான் ஜெராக்ஸ் (Xerox) ஆகும். ஒரே ஒரு முதல் பிரதியை வைத்து எத்தனை நகல்கள் வேண்டுமானாலும் ஜெராக்ஸ் கருவி மூலம் இன்று பெறப்படுகிறது. இந்த ஜெராக்ஸ் என்னும் நகலெடுக்கும் கருவியைக் கண்டறிந்தவர், செஸ்டன் கால்சன் என்ற அமெரிக்கர். 1937இல் ஜெராக்ஸ் கருவியைக் கண்டறிந்த இவர் 1938இல் முதல் நகலை எடுத்துக் காட்டினார். இக்கருவிக்கு, எலக்ட்ரோ போட்டோகிராபி என்று முதலில் பெயரிடப்பட்டது. இக்கருவி 1949இல்தான் சந்தையில் விற்பனைக்கு வந்தது.



# தமிழக வெள்ள நிவாரணப் பணிகளுக்காக முதல் கட்டமாக, ரூ. 3,000 கோடி வழங்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் (26.11.2005)



தமிழ்நாட்டில் 21.11.2005 முதல் பெய்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் விளைந்துள்ள வரலாறு காணாத சேதம் குறித்து மதிப்பிட, இன்னொரு மத்தியக் குழுவை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்வதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

கடந்த 3.11.2005 அன்று, தங்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தது தங்களுக்கு நினைவிருக்கும். அந்தக் கடிதத்தில், தமிழ்நாட்டில் மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட சேத விவரங்களை நேரில் பார்த்து மதிப்பீடு செய்ய மத்தியக் குழு ஒன்றை அனுப்பி வைக்கும்படி கோரியிருந்தேன்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்று நீங்கள் அனுப்பிவைத்த மத்தியக் குழுவினர், 17.11.2005 முதல் 20.11.2005 வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து சேத விவரங்களை மதிப்பீடு செய்தார்கள். அது குறித்த அறிக்கை விரைவில் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

அக்டோபர் மாதத்தின் இறுதியிலும், நவம்பர் மாதத்தின் மத்தியிலும் பெருமழை வெள்ளம் காரணமாக விளைந்துள்ள சேதங்களிலிருந்து நாம் விடுபடுவதற்கு முன்னரே, இப்போது மறுபடியும் கனமழை பொழிந்து, மாபெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைத் தாங்களும் அறிவீர்கள். நினைவுதெரிந்த நாள் முதலாய் இதுபோன்றதொரு மழை வெள்ளம் தமிழகத்தில் ஏற்பட்டதேயில்லை என்று கூறலாம்.

மழை வெள்ளத்தால் தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கின்றன.

இந்த மாவட்டங்களில், 21.11.2005 முதல் 24.11.2005 வரை சராசரியாக 263 மி.மீ. அளவுக்கு மழை பொழிந்துள்ளது. கடைசியாகப் பொழிந்த இந்த கனமழை காரணமாக இந்த 15 மாவட்டங்களில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களான கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி ஆகிய மாவட்டங்கள், இந்த மழை வெள்ளத்தால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் ஒரு சில மாவட்டங்கள், கடந்த சுனாமிப் பேரழிவினால் மோசமாக பாதிக்கப்பட்டன என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவிரி டெல்டா விவசாயிகள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக விவசாயம் செய்வதற்குரிய இயல்பான பருவநிலை இல்லாமல் போய்விட்டிருக்கிறது.

தமிழ்நாடு முன்னதாக இரண்டாண்டுகள் தொடர்ந்து கடும் வறட்சியை சந்தித்தது.

இந்த வாரம் பெய்துள்ள கனமழை காவிரியாற்றில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக, கொள்ளிடம் ஆற்றில் 25.11.2005 அன்று, 3.35 இலட்சம் கன அடி தண்ணீர் பாய்ந்திருக்கிறது. 1939ஆம் ஆண்டுக்குப் பின் கொள்ளிடம் ஆற்றில் பாய்ந்துள்ள மிக அதிக அளவு தண்ணீர் அளவாகும் இது.

இந்த இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சமாளிக்க மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அத்துடன், இராணுவம், விமானப்படை, கடற்படை, கடலோரக் காவல்படை ஆகியவற்றின் உதவியையும் மீட்புப் பணிக்காகவும், நிவாரண நடவடிக்கைகளுக்காவும், நாங்கள் கோரியுள்ளோம். கடந்த இரண்டு நாட்களில் ஏராளமான உயிர்களை இந்தப் பெருமழை பலிவாங்கியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் மழை வெள்ளத்தால் இரண்டு பேருந்துகள் 150 பயணிகளுடன் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இந்த இரு சம்பவங்களில் மட்டும் 76 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

தாழ்வான பகுதிகளில் வசித்துவந்த 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வரலாறு காணாத இந்த மழை வெள்ளத்தின் காரணமாக, தமிழகத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் சொல்ல முடியாத அளவுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி 20 ஆயிரம் கி.மீ. தூரத்திலான சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்தமுறை பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு இந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாமே நிறைவடைந்துவிட்டன.

மாநிலமெங்கும் உள்ள நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் 3,000 குளங்கள், 1,500 நதிப்படுகைகள் மற்றும் வாய்க்கால்கள், இந்த மழை வெள்ளத்தின் காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளன. பாலங்களும் மதகுகளும் மிகக் கடுமையான அளவுக்கு பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் போக்குவரத்து அடியோடு சீர்குலைந்து உள்ளது. மாநிலத்தின் பல பகுதிகளில் இரயில் தண்டவாளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் விவசாய உற்பத்திக்குப் பெரும் ஆதாரமாக விளங்கும் சம்பா பயிரின் அறுவடை டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில்தான் நடைபெறும். இப்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தினால் மதிப்பீடே செய்ய முடியாத அளவுக்கு நெற்பயிர்கள் அழிந்து போயிருக்கின்றன. நெற்பயிருக்கு எந்த அளவிற்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை வெள்ளநீர் முழுமையாக வடிந்த பின்னர்தான் சரியாகக் கணக்கெடுத்துச் சொல்ல முடியும்.

ஆனாலும், தற்போது எடுக்கப்பட்டுள்ள கணக்கின்படி 3.5 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் நாசமாயிருக்கின்றன.

இந்த மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பு மிகமிக கவலையைத் தருவதாகும். தமிழகத்தின் பல பகுதிகளால் இந்த மழை வெள்ளத்தைத் தாங்க இயலவில்லை. பல பகுதிகள் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. பாதிப்புக்குள்ளான சில பகுதிகளில் இன்று (26.11.2005) இயல்புநிலை ஓரளவுக்குத் திரும்பியிருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் சில பகுதிகளுக்கு நானே நேரில் சென்று பார்வையிட்டேன். நடைபெற்று வரும் மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் ஆய்வு செய்தேன்.

பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களையும் அடுத்த இரு நாட்களில் நான் பார்வையிட உள்ளேன். என்னுடைய உத்தரவுக்கிணங்க, அரசு இயந்திரம் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டு, நிலைமையைச் சமாளிக்க மின்னல் வேகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கடிதத்தில் பயிர்களுக்கும், உள்கட்டமைப்புக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பற்றி நான் குறிப்பிட்டிருப்பவை எல்லாமே ஆரம்பகட்ட மதிப்பீடுகளில் கிடைத்த தகவல்கள் தான் என்பதைத் தங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மீட்புப் பணிகளும், நிவாரணப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மழை இன்னும் பொழிந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே, ஏற்பட்டிருக்கும் சேதம் பற்றிய முழு விவரங்களும் இயல்புநிலை திரும்பிய பிறகு நடத்தப்படும் கணக்கெடுப்பின்போதுதான் தெரியவரும்.

எனவே, இந்த நிலைமையில், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் மாபெரும் இழப்புகளை ஆய்வு செய்து, எந்த அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட உடனடியாக மத்தியக் குழுவை அனுப்பிவைக்குமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மத்தியக் குழு இங்கு வருகை தரும்போது அனைத்து விவரங்களும் கொண்ட மனு அவர்களிடம் அளிக்கப்படும்.

தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் சேத விவரங்களை மத்தியக் குழு முழுமையாக மதிப்பீடு செய்ய இருக்கிறது என்றாலும், மீட்புப் பணிகளை நடத்தவும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உடனடியாக தேசியப் பேரிடர் நிதியிலிருந்து முதல்கட்டமாக 3 ஆயிரம் கோடி ரூபாயை தமிழகத்திற்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இது குறித்து தங்களிடமிருந்து சாதகமான பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன். ❖



# சிறப்பு நிவாரண உதவியாக மத்திய அரசு, தமிழகத்திற்கு ரூ.13,685 கோடி வழங்க வேண்டும்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 30.11.2005



தமிழகத்தின் வெள்ள நிலைமை குறித்து அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் நாள்தோறும் ஆய்வுசெய்து வருகிறேன். என்னுடைய உத்தரவின்பேரில் மொத்த அரசு இயந்திரமும், போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர், திருச்சி, தஞ்சை, நாகை, மதுரை, திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு நானே நேரில் சென்று பார்வையிட்டதோடு, மீட்பு நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து முகாமில் உள்ள மக்களிடமும் நேரடியாகப் பேசினேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கவலைக்கிடமான நிலையைக் கண்டு வேதனை அடைந்தேன். அவர்களுக்கு ஆதரவு தந்து உதவி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அவர்களிடம் உறுதியளித்திருக்கிறேன்.

கடுமையான சேதாரங்களின் அடிப்படையில் நான் நேரடியாகப் பார்த்தவரை, 26.11.2005 அன்று, ரூ.3,000 கோடி முன்பணமாக வழங்க வேண்டும் என்றும், வெள்ளச் சேதத்தை மதிப்பிட மத்தியக் குழுவை அனுப்ப வேண்டும் என்றும் பிரதமருக்கு கடிதம் எழுதினேன். 27.11.2005 அன்று, பிரதமர் என்னிடம் தொலைபேசியில் பேசியபோது இதனையே வலியுறுத்தினேன். எனது வேண்டுகோளுக்கிணங்க, வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய மத்திய அரசு குழுவினை அனுப்பி வைத்தது. வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்தியக் குழு 29.11.2005 அன்றும் 30.11.2005 அன்றும் பார்வையிட்டு வந்துள்ளனர். இன்றைய தினம் தமிழ்நாட்டில் நிவாரணம் மற்றும் சீரமைப்பு– மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ள, தமிழகத்துக்கு தேவைப்படும் நிதியுதவிக்கான விரிவான அறிக்கையை தயார் செய்துள்ளேன்.

இந்நிலையில், மத்திய ஆய்வுக் குழுவின் உறுப்பினர்கள் தலைமைச்செயலகத்தில் 30.11.2005 அன்று என்னைச் சந்தித்தபோது தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட சேதத்தின் கடுமையையும் அதன் பாதிப்பையும் எடுத்துக் கூறினேன். கடுமையான வெள்ளத்தால் ஒரே மாதத்தில் 3 முறை தொடர்ச்சியாக தமிழகம் தாக்கப்பட்டது போன்று, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வகையான பாதிப்பு ஏற்பட்டதில்லை.

இந்த தொடர் தாக்குதல் மிகக் கடுமையானவை. மாபெரும் சேதத்தை ஏற்படுத்தக் கூடியது. இந்த நெருக்கடியான நேரத்தில் தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய முழு உதவியின் அவசியத்தை அவர்களிடம் நான் வலியுறுத்தினேன்.

ரூ.13,685 கோடி ரூபாய் சிறப்பு நிவாரண உதவி, மேலும், 2.58 இலட்சம் டன் அரிசி, 43,200 கி.லிட்டர் மண்ணெண்ணெய் அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். ஏற்கெனவே இருமுறை கடுமையான மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டபோது ரூ.1,742 கோடி நிதியுதவி கேட்டு, மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தேன்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள இந்த வெள்ளப் பாதிப்பின் காரணமாக, கூடுதலாக ரூ.11,943 கோடி நிதியுதவி தேவை என்று இந்த அறிக்கையில் தெளிவாக்கி உள்ளேன். ஆக, இந்த வகையில் தேவையான மொத்த நிதி ரூ.13,685 கோடி ஆகும். மேலும், கூடுதலாக 2.58 இலட்சம் டன் அரிசியும், 43,200 கி.லிட்டர் மண்ணெண்ணெயும் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகள் இந்த ஆண்டு அதிகமான விளைச்சலை எதிர்பார்த்து இருந்த நிலையில் வெள்ளம் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்திவிட்டது.

முந்தைய ஆண்டுகளில் தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சமீபத்திய வடகிழக்கு பருவமழை காரணமாக 3 முறை கன மழையாலும் – பெருவெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டார்கள். அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை சந்திக்க வசதியாக இந்த சிறப்பு நிதியுதவி அவசியம் தேவை.

உதவிகளை வழங்குவதில் உள்ள அளவுகளை மத்திய அரசு விவசாயிகளின் நலனுக்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். சேதமடைந்த மற்ற பயிர்களை மீண்டும் புதியதாக பயிரிட ஒரு ஏக்கருக்கு ரூ.8,000 அல்லது ஒரு எக்டேருக்கு ரூ.20,000 வழங்க வேண்டும் என்றும் மனுவில் விளக்கியுள்ளேன்.

இதைப்போல, விவசாயிகள் தங்கள் விவசாயப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிவாரணம் பற்றி எனது திட்டத்தைத் தெரிவித்திருக்கிறேன். பம்ப்செட்டுகள் பாதிக்கப்பட்டும், மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும் உள்ளவற்றை சரிசெய்ய முழு உதவி தேவை என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

விவசாயிகள் கண்ணியமான வாழ்க்கையை மேற்கொள்ள அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டி, அவர்களது கடன் சுமைகள் குறித்து நான் ஆய்வு செய்தேன். விவசாயிகளின் கடனைப் பற்றிய முறையான அணுகுமுறை இல்லாமல் இவற்றை நிறைவேற்ற முடியாது. தொடர்ந்த வறட்சியாலும், கடுமையான வெள்ளத்தாலும் இந்த கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், விவசாயிகள் செலுத்த வேண்டிய அசலும் வட்டியும் சேர்த்து கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய ரூ.4,626.65 கோடியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தத் தொகையை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, மத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கவேண்டும். இதேபோன்று, மற்றைய வங்கிகளில் விவசாயிகள் திரும்ப செலுத்த வேண்டிய கடன்தொகைக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வீடுகளைப் பற்றிய தெளிவான தகவல் மத்தியக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இடம்பெற்றிருக்கிறது. வீடுகளை இழந்தவர்களுக்கு பலமான வீடுகளை கட்டித் தருவதற்குண்டான திட்டத்தின் தேவையையும் வலியுறுத்தியுள்ளேன். இதுதவிர, அதற்கு முன்பாக தற்காலிக வீடுகளும் கட்டித் தரப்படவேண்டும். இந்த வீடு வழங்கும் திட்டத்திற்காக ரூ.2,558.24 கோடி தேவைப்படுகிறது.

உள்கட்டமைப்பு வசதிகளுக்கு பெரிதும் பாதிப்பு நேர்ந்திருக்கிறது. அவற்றை சாதாரணமாக சீரமைப்பு செய்வதே பெரிய பணியாக உள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், சிறுகுளங்கள், ஊருணிகள், மின்விநியோகம், சுகாதார வசதி, குடிநீர் வழங்கல், சமுதாய சொத்துக்களை சரிசெய்யவும் தேவையான முழுஉதவி அவசியம் குறித்தும், அதன் பெரும் பணிகள் பற்றியும் மத்தியக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

சாலைகள் என்றால், நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் இவற்றை மீண்டும் போடவும், ஏராளமான பாலங்கள் மறுகட்டுமானம் செய்யவும் தேவைப்படும் உதவி பற்றியும் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். 32 ஆயிரம் கி.மீ. சாலைகள் மீண்டும் போடப்பட வேண்டியுள்ளது. இதற்காக ரூ. 2,523 கோடி செலவாகும். இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை அடிப்படையில் முழு உதவி அளிக்கப்பட வேண்டும்.

கொள்ளிடம் ஆற்றில் அதிகப்படியான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் அதன் கரைகளில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன.





ஸ்ரீரங்கம் நகருக்கு, கடுமையான வெள்ள அபாயம் உள்ளது.

வீராணம் ஏரி வெள்ளத்தால் அதன் கரைகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி உள்ளன.

வெள்ளாறு, வடவாறு பாசன அணைகள் மூழ்கியுள்ளன. அவற்றின் கரைகளும் உடைந்துள்ளன.

காவிரி, வெண்ணாறு ஆகியவற்றின் கரைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன சீரமைப்புப் பணிகளில் இவையனைத்தும் சேர்க்கப்பட வேண்டும்.

பொதுப்பணித்துறையாலும், ஊராட்சி ஒன்றியங் களாலும் பராமரிக்கப்படும் ஆயிரக்கணக்கான குளங்கள், ஊருணிகள் அனைத்தும் கடும் சேதத்துக்கு ஆளாகியுள்ளன. இவைகளும் சீரமைக்கப்பட வேண்டும். எனவே, நீர்ப்பாசன சீரமைப்புக்காக ரூ. 773.99 கோடி நிதியுதவி தேவை என்றும், ஊருணிகள், குளங்கள் சீரமைப்புக்கு ரூ. 60 கோடி தேவை என்றும் அறிக்கையின் மூலமாக கேட்டுள்ளேன்.

விவசாயப் பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். அதற்காக ரூ. 77.33 கோடி தேவைப்படுவதுடன் 2.58 இலட்சம் டன் அரிசியும் சம்பளமாக வழங்குவதற்கு தேவையென்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன்.

தமிழக அரசு நிவாரண மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசின் உதவிகள் பற்றி விரிவாகவும், முழுவதுமாகவும், தெளிவாகவும் கோரிக்கை மனுவில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பேரழிவு, வரலாறு காணாத ஒன்று. ஒரே மாதத்தில் 3 முறை ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தின் பாதிப்புகளை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதற்கான நிவாரணம் வழங்க, வழக்கமான நடைமுறைகள் பொருந்தாது. வழக்கமான நடைமுறைகளை கணக்கில் கொள்ளாமல் சிறப்பு அடிப்படையில் தமிழக விவசாயிகள் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள சிறப்பு நிதியுதவி தேவை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்குவதற்குத்தான் இந்த உதவி.

மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லத் தேவைப்படும் விவரங்களை அரும்பாடுபட்டு சேர்த்துள்ளேன். எனவே, நான் கோரிய முழு நிவாரண உதவியையும் மத்திய அரசு வழங்கும் என்று நம்புகிறேன்.

* * *

# தமிழகத்தில் போர்க்கால அடிப்படையில், மேற்கொள்ளப்படவேண்டிய மழை வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.11.2005 அன்று மாலை, தலைமைச் செயலகத்தில், தமிழக அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் தமிழகத்தின் வெள்ள நிலைமை குறித்து ஆய்வினை மேற்கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் பெய்துவரும் கனமழையால் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு 12 மாவட்டங்களில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங் களிலும், மாவட்ட நிருவாகம், வருவாய்த் துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளின் முழு ஒத்துழைப்போடு, போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டறிந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, விமானப்படையினரும், கடலோரக் காவல் படையினரும், கப்பற்படையினரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் இருந்து மக்களை, பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணியும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டத்தில், வீராணம் ஏரி, 24.11.2005 அன்று முழுமையாக நிரம்பிவிட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி நேற்று முதலே பொதுப்பணித்துறை அதிகாரிகள் வீராணம் ஏரியை தீவிரமாகக் கண்காணித்து வருவதுடன் நீர் வெளியேற்றத்தை முறைப்படுத்தியும் வருகின்றனர். ஏரியிலிருந்து உபரிநீரை பல்வேறு வாய்க்கால்கள் மூலம் அதிகாரிகள் வெளியேற்றி வருகின்றனர். இந்த நடவடிக்கை காரணமாக வீராணம் ஏரிக்கு ஏற்படவிருந்த பேராபத்து தவிர்க்கப்பட்டது.



மிக அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக வீராணம் விருந்தினர் இல்லத்திற்கும், சிதம்பரத்திற்கும் இடையிலான சாலை முழுமையாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகள் அனைத்திலும் போதிய அளவில் அரிசியை இருப்பில் வைத்திருக்க மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. இந்த ஹெலிகாப்டர்களின் மூலம் வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் சிக்கியிருக்கும் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

புவனகிரிக்கும், கீரப்பாளையத் திற்கும் இடையிலான பாலத்தின் மீதும், மயிலாடுதுறைக்கும், சிதம்பரத்திற்கும் இடையிலான பாலத்தின் மீதும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் சிதம்பரம் நகரம் இரு பக்கங்களிலிருந்தும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிதம்பரத்தில் போக்குவரத்தையும் சீரமைக்குமாறு நெடுஞ்சாலைத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சேத்தியாத்தோப்பு சந்திப்பு பகுதியில் 24.11.2005 அன்று வெள்ளத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த 500 பயணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி படகுகள் மூலம் மீட்கப் பட்டனர். மேலும், வெள்ளத்தில் சிக்கியிருந்த 75 பயணிகளும் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர்.

கடலூர் மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள் வதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வேண்டுகோளின்படி, கடலோரக் காவல்படையின் கப்பல் ஒன்று ஹெலிகாப்டருடன் வந்துள்ளது.

வெள்ளம் சூழ்ந்துள்ள பரங்கிப் பேட்டை, புவனகிரி பகுதிகளில் இந்த ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு வருகின்றன.

அத்துடன் சூலூர் விமானப்படை தளத்திலிருந்து வரவழைக்கப்பட்ட ஹெலிகாப்டர் மூலம் வெள்ளம் சூழ்ந்துள்ள சேத்தியாத்தோப்பிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு வருகின்றன.

ஹெலிகாப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

வெள்ளம் சூழ்ந்துள்ள மற்ற கிராமங்களிலும் உணவுப் பொட்டலங்கள் போடுவதற்காக, மேலும் இரண்டு ஹெலிகாப்டர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தவித்துவரும் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்க மிக அதிக அளவில் படகுகளைப் பயன்படுத்துமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

இந்தப் படகுகளில் பெட்ரோமாக்ஸ் விளக்கும், முதலுதவிக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் கடலூர் மாவட்டத்தில் மீட்புப் பணிகளிலும், வெள்ள நிவாரணப் பணிகளிலும் ஈடுபட இராணுவத்தின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த 24 மணி நேரத்தில் திருச்சியில் மழை அளவு வெகுவாகக் குறைந்துள்ளது.

25.11.2005 அன்று, சிந்தாமணி பேருந்து நிலையம் அருகே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம்– காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் கோரையாற்றில் பாய்ந்துவரும் நீர் காவிரியில் பாயமுடியாததே ஆகும். இதனால், தில்லைநகர் பகுதியில் வெள்ளம் புகுந்துவிட்டது.

ஆனாலும் மாவட்ட நிருவாகம் விரைவாகச் செயல்பட்டு பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றியும், நிவாரணப் பணிகளை மேற்கொண்டும் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படாமல் தடுத்து உள்ளது. இங்கிருந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அதேபோன்று வெள்ளம் சூழ்ந்துள்ள ஸ்ரீரங்கத்தைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் பகுதிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட நிருவாகம் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதுடன், தேவையான ஆட்களை தயார்நிலையில் வைத்திருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளில் இராணுவமும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நேற்று இரவிலிருந்து கணிசமாக மழை குறைந்துள்ளது. வேளாங்கண்ணி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டத்தின் தாழ்வான பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரிசெய்ய மாவட்ட நிருவாகம் முழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொள்ளிடத்தில் பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தின் அளவை மாவட்ட நிருவாகம் உன்னிப்பாக கவனித்து வருகிறது. கொள்ளிடத்தில் நேற்று 3.35 இலட்சம் கனஅடி வெள்ள நீர்வரத்து இருந்தது.

கடந்த 65 ஆண்டுகளில் கொள்ளிடத்தில் இந்த அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். இதனால் கொள்ளிடக் கரையோர கிராமங்கள் குறிப்பாக நாதல்படுகை, முதலமைமேடுத்திட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். மாவட்ட நிருவாகம் வெள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

காவிரியாற்றின் கரைகளில் ஏற்பட்ட உடைப்புகளை சரிசெய்து இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான பணிகளை தஞ்சை, திருவாரூர் மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் நரியாற்றிலும், தென்பெண்ணையாற்றிலும் சில இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன. அதிகாரிகள் இந்த உடைப்புகளைச் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மருதையாறு, வெள்ளாறு, சின்னாறு, கோனேரி ஆகிய ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் பல கிராமங்கள் வெள்ளத்தில் சிக்கியிருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக பெரம்பலூர்–துறையூர் தடத்தில் போக்குவரத்து சரிசெய்யப்பட்டது. அதேபோன்று பெரம்பலூர்–ஆத்தூர் தடத்திலும், சென்னை–திருச்சி நெடுஞ்சாலையிலும் போக்குவரத்தை சரிசெய்ய விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இரயில் தண்டவாளங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 30 கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. 6,532 பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்காக 22 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு அனைவருக்கும் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தேவகோட்டை தாலுகாவில் உடையார்பாளையம் என்னுமிடத்தில் வெள்ளத்தில் சிக்கித் தவித்த 60 பேர், கடலோரக் காவல்படையின் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர். இங்கு 26.11.2005க்குள் நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களில் பெய்த கனமழை காரணமாக 72 ஏரிகளிலும், 12 கண்மாய்களிலும் உடைப்புகள் ஏற்பட்டன. இவற்றில் பெரும்பாலான உடைப்புகள் தற்காலிகமாக சரிசெய்யப்பட்டு விட்டன.

திண்டுக்கல் மாவட்டத்திலும், கண்மாய்களிலும் ஏரிகளிலும் ஏற்பட்ட உடைப்புகளை சரிசெய்ய மாவட்ட நிருவாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அழிந்துபோன சாலைகளையெல்லாம் சீரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காகவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடவும், சேத விவரங்களை மதிப்பீடு செய்யவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார்கள்.

அதன்படி, 26.11.2005 அன்று, கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்புட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிடுகிறார்.

அன்றைய சுற்றுப்பயணத்தில் மருவாய், வடலூர், குறிஞ்சிப்பாடி கிராமங்களையும், கடலூர் நகரத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிடுகிறார்.

27.11.2005 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் வெள்ளச்சேத விவரங்களை மதிப்பீடு செய்வதுடன் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளையும் பார்வையிடுகிறார்கள்.

28.11.2005 அன்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெள்ள நிலைமை பற்றி ஆய்வுசெய்த கூட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன், தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. பவன் ரெய்னா, இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாகத் துறை ஆணையர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., காவல்துறை தலைவர் திரு. ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர், பொதுத்துறை செயலாளர், நிதித்துறை செயலாளர், வேளாண்மைத் துறை செயலாளர், பொதுப்பணித் துறை செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செயலாளர், தமிழ்நாடு மின் வாரியத் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையர், மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், கூடுதல் காவல்துறைத் தலைவர் (புலனாய்வு), காவல்துறை துணைத் தலைவர் (புலனாய்வு), ஆலோசகர் (திட்டங்கள்), பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை ஆகியோர் கலந்து கொண்டனர்.

**– 25.11.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிலைமை குறித்து ஆய்வினை மேற்கொண்டார்கள்.**



# மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கோரி கடிதம்

**(30.11.2005)**



இந்த ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் வரலாறு காணாத பெரும் மழை பெய்து மிகக் குறுகிய காலத்திற்குள் மூன்று முறை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் பாதிப்பு ஏற்பட்டதை தாங்கள் அறிவீர்கள்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு என்பது மிகக் கடுமையானதாகவும், இதற்கு முன் கண்டிராத வகையிலும் இருந்தது. எனது அரசானது, முழு வீச்சில் வெள்ள நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பம் தீர பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகத்தில் வெள்ளத்தால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு வழங்க, உடனடியாக கூடுதல் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க மாதம் ஒரு இலட்சம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது என்பது தங்களுக்குத் தெரியும். ஆனாலும், மத்திய அரசானது, தமிழகத்துக்கு மாதம் 59,839 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயையே ஒதுக்கீடு செய்து வருகிறது.

தமிழகத்தில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்காக, மத்திய அரசானது தமிழகத்துக்கு வழங்கும் மண்ணெண்ணெய்யின் அளவை அதிகப்படுத்த வேண்டும் என கடந்த 16.9.2004 அன்று தங்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன். அதற்கான நகலையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனது அந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசிடமிருந்து இதுவரை எந்தப் பதிலும் இல்லை.

கிராமப்புறங்களில் சமையலுக்கும், விளக்கு எரிக்கவும் மண்ணெண்ணெய் முக்கியத் தேவையாக உள்ளது. தொடர்ந்து தமிழ்நாட்டில் பெய்த மழையின் காரணமாக, காய்ந்த விறகு, எரு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு உள்ளது.

அண்மைக் காலமாக, சமையல் எரிவாயு கிடைக்காததும் கவலை கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனவே, இன்றைய சூழ்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வழங்குவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு, தலா 3 லிட்டர் மண்ணெண்ணெய் வீதம் வழங்க, 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. எனவே, தமிழகத்துக்கு டிசம்பர் மாதத்திற்கான ஒதுக்கீட்டை விட கூடுதலாக இந்த 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயையும் சேர்த்து ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்த மண்ணெண்ணெயை எடுத்துக் கொள்ள 31.1.2006 வரை அனுமதியும் அளிக்க வேண்டும். தாங்கள் உடனடியாகத் தலையிட்டு இதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

□ □ □

# மழை வெள்ள நிலைமையை எனது அரசு திறம்பட சமாளித்தது

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

## செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 4.12.2005



**த**மிழகத்தின் வரலாறு இதுவரை கண்டிராத வகையில் அண்மையில் பெய்த கனமழை, ஒப்பு நோக்க முடியாத ஒரு மாபெரும் இழப்பிற்கு தமிழகத்தை ஆட்படுத்திவிட்டது. நடப்புப் பருவ மழைக் காலத்தில், 23.10.2005 முதல் 30.10.2005, 6.11.2005 முதல் 8.11.2005 மற்றும் 21.11.2005 முதல் 24.11.2005 என குறுகிய கால அளவில், மூன்று முறை, அடுத்தடுத்து தொடர்ந்து பெய்த கனமழையால் தமிழகத்தில் உள்ள 22 மாவட்டங்கள் தண்ணீரில் தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டது.

மக்கள் நலனை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற எனது அரசு, மக்களை இந்தப் பாதிப்பில் இருந்து மீட்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டது. 24.10.2005 அன்று முதல் வெள்ள நிலைமை குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்தும், நாள்தோறும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, ஆய்வுகள் நடத்தி, வெள்ள நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கவும், அவர்களைக் காப்பாற்றவும் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து செயல்பட, கடலோரக் காவல் படை, கப்பல் படை, விமானப் படை, இராணுவம் ஆகியவற்றின் உதவியை எனது அரசு பெற்றது.

27.10.2005 மற்றும் 28.10.2005 ஆகிய இரண்டு நாட்களில் சென்னை நகரில் மொத்தம் 45.7 செ.மீ. அளவு மழை பெய்தது. இதில், 24 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்த மழையின் அளவு 40 செ.மீ. ஆகும். இவ்வாறு, மிக கனத்த மழைபெய்து சென்னையில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நேரத்தில், 27.10.2005 அன்றே, கொட்டும் மழையிலும் வெள்ளப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர், தங்கும் இடவசதி ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தர உடனடி முக்கியத்துவம் அளித்து நடவடிக்கை மேற்கொள்ள அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டேன். இந்த நடவடிக்கைகளின் பயனாக சென்னை மாநகரத்தின் இயல்பு நிலை மிகத் துரிதமாகத் திரும்பிட ஏதுவானது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், இயல்பான வாழ்க்கை நிலைக்குத் திரும்பிட ஏதுவாக, உடனடியாக வெள்ள நிவாரணத் தொகுப்புதவி ஒன்றை வழங்கினேன். சென்னை நகரின் கட்டட அமைப்புகளைக் கருத்தில் கொண்டு, அதற்கென சிறப்பு நிவாரணத் தொகுப்புதவி ஒன்றையும் அறிவித்தேன்.

மழை வெள்ளத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்த நேரத்தில், மீண்டும் நவம்பர் மாதம் 6ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் பெருமழை பெய்யத் தொடங்கி, தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் பெரும் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியது. இயற்கையின் இந்த கடுமையான தாக்குதலை, என்னுடைய அரசு தனது முனைப்பான நடவடிக்கைகளால் திறம்பட சமாளித்தது. வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் அமைச்சர்கள் மற்றும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உடனடியாக அனுப்பி வைத்து, வெள்ள நிவாரணப் பணிகளை நேரடியாக மேற்பார்வையிட்டு, மக்களை பாதிப்பில் இருந்து மீட்க நடவடிக்கை மேற்கொண்டேன். மிக அதிக அளவு பாதிப்புக்குள்ளான 7 மாவட்டங்களுக்கு நானே நேரில் சென்று வெள்ளச் சேதங்களை பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரண உதவிகள் வழங்கி, வெள்ளத்தால் ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.



65 ஆண்டுகளுக்கு பிறகு, காவிரி ஆற்றில் மிகப் பெரிய அளவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நிலையில், எனது அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக ஸ்ரீரங்கம் காப்பாற்றப்பட்டதோடு, காவிரிக் கரையோர கிராமங்களில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்கள் காப்பாற்றப்பட்டனர். மாநிலத்தில் உள்ள அனைத்து ஆறுகளிலும் வெகுவான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஏரிகள் எல்லாம் நிரம்பி வழிந்தன என்றபோதிலும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், அந்த மழை வெள்ளத்தை எனது அரசு திறம்பட சமாளித்தது. என்னுடைய தலைமையிலான தமிழக அரசு மேற்கொண்ட வெள்ளத் தடுப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள், அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றதோடு, மழை வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு அறிக்கை அளிக்க, மைய அரசால் அனுப்பி வைக்கப்பட்ட மத்தியக் குழுவின் பாராட்டையும் பெற்றது என்பதை எல்லோரும் அறிவர்.

மழை வெள்ள நிலைமையை எனது அரசு மிகவும் திறம்பட கையாண்டு அனைத்து தரப்பினரின் பாராட்டையும் பெற்ற காரணத்தால், இதில் எந்தக் குறையும் கூற முடியாத சில எதிர்க்கட்சியினர், அதிலும் குறிப்பாக, மத்திய அரசுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக தன்னை எண்ணிக் கொண்டிருக்கும் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, கடந்த ஆண்டு சுனாமிக்காக மத்திய அரசும், மக்களும் பல கோடி ரூபாய் நிதி அளித்ததாகவும், அந்த நிதி முறையாக பயன்படுத்தப்படாததால் தான் நிரந்தர வீடு கட்டித் தருவதாக அளித்த வாக்குறுதி நிறைவேற்றப் படவில்லை என்றும்; ஒரு வீடு கூட கட்டப்படவில்லை என்றும்; சுனாமிக்கு மத்திய அரசு அளித்த பணம் என்னவாயிற்று என்பதற்கும் விடை தேவை என்றும் கூறியுள்ளார். மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம், சுனாமி நிவாரண நிதியாக தமிழ்நாட்டுக்கு 5,000 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அடிக்கடி கூறி வருகிறார்.

தமிழக கடற்கரையோரப் பகுதிகளை சின்னா பின்னமாக்கிய சுனாமி ஆழிப் பேரலையால் ஏற்பட்ட சேதங்களை சீர்செய்ய, தமிழக அரசுக்கு 4,800 கோடி ரூபாய் நிதி உதவி வழங்க வேண்டும் என்று மைய அரசை எனது அரசு கேட்டுக் கொண்டது. மேலும், சுனாமி ஆபத்தில் இருந்து தமிழகத்தை நிரந்தரமாகப் பாதுகாத்திட, கடற்கரையோரம் அலை தடுப்பு அமைப்புகளை உருவாக்க 5,000 கோடி ரூபாய் வழங்க மைய அரசை நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், மைய அரசு சுனாமி நிவாரண நிதியாக வழங்கியது 679.61 கோடி ரூபாய் மட்டுமே. சுனாமி நிவாரணத்திற்காக தமிழக அரசு இதுவரை வழங்கியுள்ள தொகை 875.62 கோடி ரூபாய் ஆகும். அதாவது, மைய அரசு தமிழகத்திற்கு வழங்கிய தொகையை விட, 196.01 கோடி ரூபாய் அதிகமாக தமிழக அரசு தனது நிதியில் இருந்து சுனாமி நிவாரணப் பணிகளுக்காக வழங்கியுள்ளது என்பதுதான் உண்மை.

சுனாமியால் பாதிப்புக்குள்ளான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை சீர்செய்வதற்காக, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கான உலக நிதியம் ஆகிய பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து தமிழக அரசு 2,617.88 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது. இதில், உலக வங்கி 1,903.50 கோடி ரூபாய், ஆசிய வளர்ச்சி வங்கி 646.88 கோடி ரூபாய் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கான உலக நிதியம் 67.50 கோடி ரூபாய் என்ற அளவுக்கு கடன் வழங்கியுள்ளன. இதில் ஆசிய வளர்ச்சி வங்கி, தான் வழங்குகின்ற நிதியில் 342.90 கோடி ரூபாயை மானியமாக வழங்குகிறது. ஆக, பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து தமிழக அரசு 2,274.98 கோடி ரூபாய், அதாவது 2,275 கோடி ரூபாய் அளவுக்கு கடன் பெற்றுள்ளது. இந்தக் கடன் தொகையை தமிழக அரசுதான் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தத் தொகையில், மத்திய அரசின் உதவியோ, மானியமோ ஒரு ரூபாய் கூட இல்லை என்பதுதான் கசப்பான உண்மை. ஆனால், தமிழக அரசு பெற்றுள்ள கடன் தொகையைக் கூட, மைய அரசு வழங்கும் உதவித் தொகையைப் போல ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த திரு. சிதம்பரம் அவர்களும், திரு. கருணாநிதி அவர்களும் முற்பட்டிருக்கின்றனர். பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்து தமிழக அரசு கடனாகப் பெற்ற பணத்தை, ஏதோ தாங்கள் அங்கம் வகிக்கும் மத்திய அரசுதான் கொடுத்தது போல இவர்கள் தம்பட்டம் அடித்துக் கொள்வது மிகவும் விநோதமாக இருப்பது மட்டுமல்ல; மத்திய அரசு கொடுக்காத பணத்திற்கு பெருமை தேடிக்கொள்ள நினைக்கும் இவர்களது முயற்சி பெரும் நகைப்புக்கு உரியதும் ஆகும்.

மைய அரசின் நிதித் துறையை தன் கைவசம் வைத்திருக்கும் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கு, மைய அரசு தமிழ்நாடு அரசுக்கு சுனாமி நிவாரணத் தொகையாக எவ்வளவு வழங்கியது என்பது தெரியாதா? பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து தமிழக அரசு பெற்ற கடன் தொகை, தமிழக அரசால் அவர்களுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகைதான் என்பதும், இதில் மைய அரசின் பங்கு என்பது கிஞ்சித்தும் இல்லை என்பதும் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்குத் தெரியாதா? வேண்டுமென்றே எனது தலைமையிலான அரசுக்கு மக்களிடம் உள்ள நற்பெயரை கெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இதுபோன்ற உண்மைக்கு மாறான தகவல்களை, உள்நோக்கத்துடன் திரு. ப. சிதம்பரம் அளித்து வருகிறார். இவ்வாண்டு மத்திய நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசும்போது சுனாமி நிவாரணத்திற்காக 10,216 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்த மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம், தமிழகத்திற்கு ஏன் 679.61 கோடி ரூபாயை மட்டுமே வழங்கியுள்ளார் என்பதை விளக்குவாரா?

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவருக்கு கூட இதுவரை வீடு கட்டித் தரப்படவில்லை என்று ஓர் அபாண்டமான குற்றச்சாட்டை திரு. கருணாநிதி கூறியிருக்கிறார். காழ்ப்புணர்ச்சி கண்ணை மறைக்க, அழுக்காறு அறிவுக்குத் திரையிட, களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் திரு. கருணாநிதி இந்தக் குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார். சுனாமியின் பாதிப்பால் தங்களது வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தரப்படும் வரையில், உடனடித் தேவையாக 32,378 தற்காலிக வீடுகள் 32 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்பட்டன. சுனாமியால் முழுமையாக வீடு இழந்து பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்ட அதற்கென தனியே நிலம் வேண்டும். இதற்கென சிறப்பு நடவடிக்கைகள் மூலம், 26 கோடி ரூபாய் செலவில் 1,210 ஏக்கர் நிலம் தமிழக அரசால் கையகப்படுத்தப் பட்டு நிரந்தர வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசும், தமிழக அரசின் ஊக்குவிப்புடன் தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து மொத்தம் 45,892 நிரந்தர வீடுகளைக் கட்டி வருகின்றன. சென்னையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு வரும் 1,392 வீடுகளும் இதில் அடங்கும். இதுவரை, 969 நிரந்தர வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 44,923 நிரந்தர வீடுகள் கட்டும் பணி மிக விரைவாக நடைபெற்று வருகிறது. மேலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட 3,957 வீடுகள் பழுது நீக்கி செப்பனிடப் பட்டுள்ளதுடன், 3,454 வீடுகளில் செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.



மைய அரசின் உள்துறை, 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வீடு கட்ட உதவித் தொகையாக 650 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒரு ஆணை வெளியிட்டது. இதில், குறிப்பிடப்பட்ட 650 கோடி ரூபாயில் ஒரு சல்லிக் காசு கூட இதுவரை மத்திய அரசால் வழங்கப்படவில்லை. உள்துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, நிதித் துறையால் இந்தத் தொகை விடுவிக்கப்படாமல் தடைக்கல்லாய் இருப்பது யார்? மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தான் இதனை தடுத்து நிறுத்தி விட்டாரா?

சுனாமியால் தங்களது வாழ்வாதாரங்களை இழந்த மீனவர்கள், கட்டுமரம், படகுகள் முதலியவற்றை புதிதாக வாங்குவதற்கும், பழுதுபார்ப்பதற்கும் 441.08 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்ற மைய அரசின் அறிவிப்பும் நாளது வரை வெற்று அறிவிப்பாகவே உள்ளது. இந்தத் தொகையில் இதுவரை, ஒரு ரூபாய் கூட தமிழக அரசுக்கோ, வாழ்வாதாரங்களை இழந்த மீனவர்களுக்கோ மைய அரசால் வழங்கப்படவில்லை. ஆனால் தமிழக அரசால் இதுவரை, 29,879 பழுதடைந்த படகுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. 17,255 புதிய படகுகள் வழங்கப்பட்டுள்ளன. 38,178 மீனவர்களுக்கு புதிய மீன் பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2,776 மோட்டார் இயந்திரங்கள் பழுதுபார்க்கப் பட்டுள்ளன. இதுதவிர, அரசு சாரா மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக 5,110 மீனவர்களுக்கு புதிய கட்டுமரம் மற்றும் படகுகள் வழங்கப்பட்டதுடன், பழுதடைந்த படகுகள் சீரமைத்துத் தரப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசு வழங்கி வரும் ஆக்கமும், ஊக்கமும், தொண்டு நிறுவனங்கள் மிகுந்த உற்சாகத்துடன் சுனாமி நிவாரணப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வழிவகுத்துள்ளது. இதனை தொண்டு நிறுவனங்களே பாராட்டும் போது, தொண்டு நிறுவனங்களை தமிழக அரசு உதாசீனப் படுத்தியதாக திரு. கருணாநிதி கூறுவது கேலிக் கூத்தாக உள்ளது.

தமிழக மக்களின் நலனுக்கு எதிராக செயல்பட்டு, அடுத்தவர் இழப்பில் ஆதாயம் தேட முயலுகின்ற, ஆதரவற்றோரின் அழுகுரலை தனது நலத்திற்கு அடித்தளம் ஆக்கிக்கொள்ள முனைகின்ற சுயநல அரசியல்வாதிகளை தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள். உண்மையிலேயே இவர்களுக்கு தமிழக மக்களின் பால் பரிவோ, அக்கறையோ இருக்குமேயானால், தமிழக வெள்ள நிவாரணப் பணிகளுக்கு எனது அரசு கோரியுள்ள தொகையை முழுமையாக பெற்றுத் தர தங்களது பதவியையும், செல்வாக்கையும் பயன்படுத்தட்டும். அதனை விட்டுவிட்டு, குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக தமிழக அரசின் மீது புழுதி வாரி தூற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ❐





# விவசாயப் பெருமக்கள் கவலைப்பட வேண்டாம்!

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை (27.11.2005)

**வ**ணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன் பிறப்புக்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழக வரலாற்றில் இதுவரை நாம் காணாத அளவிற்கு மழைபெய்து கடுமையான வெள்ளப் பெருக்கு எடுத்து, இதனால் பெருமளவில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழக மெங்கும் பல்வேறு மாவட்டங்களில் இதே நிலைதான். இந்த நிலையில், இந்த நேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது. மக்களுக்கு என்னென்ன உதவிகள் கிடைக்க வேண்டுமோ, அவற்றை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான் எங்கள் கடமை என்ற உணர்வோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம். நீங்கள்



எதற்காகவும் கவலைப்பட வேண்டாம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவிலேயே இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு உங்களுக்குச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முழுமையாக வீடு சேதம் அடைந்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்கப் பணம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு புடவை, ஒரு வேட்டி ஆகிய உதவிகளை வழங்கி வருகிறோம். சிலர் பட்டா வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை மனுக்களைப் பரிசீலித்து உரியவர்களுக்கு பட்டா வழங்க உள்ளோம். சிலர் வீடு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். இங்கே 1 இலட்சத்து 41 ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெற்பயிர் இடப்பட்டு, இதில் கிட்டத்தட்ட 71 ஆயிரம் எக்டேர் தண்ணீரில் மூழ்கி இந்தப் பயிர்கள் எல்லாம் சேதம் அடைந்துவிட்டன என்பதை இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். மிகவும் வருத்தமாக இருக்கிறது. இது பேரிழப்பு, இருந்தாலும் விவசாயிகள், விவசாயப் பெருமக்கள் இதற்காக வருத்தப்பட வேண்டாம். கவலைப்படவேண்டாம். கூடிய விரைவிலேயே 1 ஏக்கருக்கு எவ்வளவு நஷ்டஈடு வழங்குவது என்பதை முடிவு செய்து, அதனை அறிவித்து விரைவிலேயே உங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே சுனாமியால் தமிழகம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்த நிவாரணப் பணிகளுக்காக தமிழகத்தில், தமிழக அரசிடம் இருந்த நிதியெல்லாம் தீர்ந்து போய்விட்டது. ஆகவே, இப்போது மத்திய அரசின் உதவியைக் கேட்டிருக்கிறோம். முன்பணமாக 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இதுவரை மத்திய அரசு இன்னும் எந்த உதவியையும் அறிவிக்கவில்லை. விரைவிலேயே அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அதற்காக நான் காத்திருக்கவில்லை. மாநில அரசின் சக்திக்கு உட்பட்டு நிவாரணப் பணிகளை, மீட்புப் பணிகளை, புனரமைப்புப் பணிகளை முழு வீச்சில் போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறோம். சாலைகளைச் சரிசெய்து வருகிறோம். பாலங்களைக் கட்டி வருகிறோம். மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறோம். ஆகவே, மீண்டும் ஒருமுறை நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம். ✶



# போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ள நிவாரண உதவிகளை வழங்கி
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை
(27.11.2005)



**எ**ன்னை வாழவைக்கும் புரட்சித்தலைவரின் இரத்தத்தின் இரத்தமான எனதருமை அன்பு உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத அளவிற்கு இந்த மாவட்டம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டுதான் சுனாமிப் பேரலையால் இந்த மாவட்டம் பெரும் சேதத்திற்கு உள்ளாகி, பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. இப்போது மீண்டும் மீண்டும் மழைபெய்து கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதனால் மக்கள் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் அரசு செய்து வருகிறது. நேற்றைய தினம் மட்டும் 1,87,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் உங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு நான் இங்கே வந்திருக்கிறேன். எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்குத் தேவையான உதவிகளை செய்யத்தான் இந்த அரசு இருக்கிறது. உங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதுதான் இந்த அரசின் கடமை என்ற உணர்வோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

முழுமையாக நீரில் சேதமானவர்களுக்கு இன்றைய தினம் இரண்டாயிரம் ரூபாய், பத்து கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகிய உதவிகள் வழங்கப்படும். ஏற்கெனவே சுனாமிப் பேரலையால் வீடு இழந்தவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. விரைவிலேயே அந்த வீடுகள் உரியவர்களுக்கு வழங்கப்படும். இந்த மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் மீனவத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இன்னும் நிறைய மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். வரலாறு காணாத அளவிற்கு பயிர்ச்சேதம் அடைந்துள்ளது. 1,32,000 எக்டேர் நெற்பயிர் நடப்பட்டு உள்ளது. அவற்றில், 82,000 எக்டேர் முழுமையாக பயிர்ச்சேதம் அடைந்திருக்கிறது. இந்த மழை வெள்ளத்தால் 27,000 எக்டேர் நிலத்தில் பகுதி சேதமடைந்துள்ளது. விரைவிலேயே 1 எக்டேருக்கு எவ்வளவு நஷ்டஈடு வழங்குவது என்பதை முடிவு செய்து நிவாரண உதவி, நஷ்டஈடு விவசாயிகளுக்கு வழங்கப்படும். எதற்கும் கவலைப்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்தில் பெருமளவிற்கு சாலைகள், பாலங்கள், தரைப்பாலங்கள் சேதமடைந்திருக்கின்றன. வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. ஆகவே,



பட்டீர்கள். அதிலிருந்து நீங்கள் மீண்டு வருகின்ற நேரத்தில் இப்பொழுது மழைவெள்ளம் ஏற்பட்டு அதனால் நீங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றீர்கள். நீங்கள் சோதனை மேல் சோதனையைத் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் மனஉறுதியை முதலில் நான் பாராட்ட விரும்புகின்றேன். உங்கள் கஷ்டங்கள் எல்லாம் விரைவிலேயே ஒரு முடிவுக்கு வரும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இங்குள்ள எல்லாவற்றையும் புனரமைத்துத் தர வேண்டியது இந்த அரசின் கடமை என்பதனை நாங்கள் உணர்கிறோம். மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. மத்திய அரசு அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. முன் பணமாக 3 ஆயிரம் கோடி ரூபாய் தேவை எனக் கேட்டிருக்கிறோம்.



இதுவரை மத்திய அரசு எந்த நிதி உதவியையும் மாநில அரசுக்கு வழங்கவில்லை. ஆனால், அதற்காகக் காத்திருக்காமல் இந்த மாநில அரசு சக்திக்குட்பட்ட அளவில் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். ஆகவே, மீண்டும் ஒருமுறை நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அக்கரைப்பேட்டை, கல்லார் இணைப்புப் பாலத்தினைப் பார்வையிட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**எ**ன்னை வாழவைக்கும் புரட்சித் தலைவரின் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே! முதற்கண் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நீங்கள் அனைவரும் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்

நிலைமையைப் பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இப்பொழுதுதான் விளக்கிக் கூறினார்கள். ஒரு தரைப்பாலம் இங்கே கட்டப்பட்டு வருகிறது. ஒரு வார காலத்திற்கு அந்த தரைப்பாலம் வழியாகப் போக்குவரத்து சென்று வர முடியும். ஆகவே, படகுகள் மூலமாகச் செல்ல வேண்டிய இந்த சிரமமான நிலைமை உங்களுக்கு ஒரு ஆறு நாட்களுக்கு மேல் நீடிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எனவே, தரைப்பாலம் கட்டி முடிக்கப்படும் வரை சற்று பொறுமையாக இருக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரு நிரந்தரப் பாலம் இங்கே கட்டுவதற்கு ரூ.90 இலட்சம் ரூபாயை வழங்க உத்தரவிட்டிருக்கிறேன். ஐந்து மாதக் காலத்திற்குள் இந்த நிரந்தரப் பாலம் கட்டி முடிக்கப்படும். மேலும் உங்களுக்கு என்னென்ன உதவிகள் தேவையோ, அந்த உதவிகளெல்லாம்



செய்வதற்காக இந்த அரசு இருக்கிறது. அதற்காகத் தான் இந்த அரசு இருக்கிறது. மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதுதான் எங்கள் கடமை என்ற உணர்வோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ஆகவே, உங்களுக்கு எதைப் பற்றியும் கவலை வேண்டாம். உங்களுக்கு வளமான எதிர்காலம் அமையத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். உடனடித் தேவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

உங்கள் அனைவருக்கும் ரூ.2,000 ரொக்கப் பணம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 புடவை, 1 வேட்டி ஆகிய நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

மாவட்ட ஆட்சித்தலைவரிடம் சொல்லி இருக்கிறேன். விரைவிலேயே இந்த உதவிகள் உங்களுக்கு வழங்கப்படும். நாளைக்குள் இந்த உதவிகள் உங்களுக்குக் கிடைக்கும். ஆகவே, மீண்டும் சொல்கிறேன். நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. விரைவிலேயே நீங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். உங்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலம் அமைய எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க, புரட்சி தலைவர் நாமம் வாழ்க!

* * *

## துணி துவைக்கும் இயந்திரம்



**இ**ன்றைய நாகரிக உலகில், துணி துவைக்கும் இயந்திரத்தை (Washing Machine) பெரும்பாலோர் பயன்படுத்துகின்றனர். இதனைக் கண்டுபிடித்தவர், பிஷர் என்னும் அமெரிக்க நாட்டவர் ஆவார். 1901 ஆம் ஆண்டில் இதனை அவர் கண்டுபிடித்தார்.

தானாகத் துணி துவைக்கும் இயந்திரத்தை (Automatic) அமெரிக்க நாட்டின் ஹெர்லிமெஷின் நிறுவனம் 1907 ஆம் ஆண்டு உருவாக்கியது. இன்று இந்த இயந்திரம் மின்னணுத் தொழில்நுட்பத்தில் நவீனமுறையில் துணி உலர்த்தும் வசதியோடு உருவாக்கப்பட்டுள்ளது.

## கண்ணாடி



**க**ண்ணாடிப் பொருட்கள் இன்று பல பயன்களைத் தருகின்றனவல்லவா? கண்ணாடியைக் கண்டுபிடித்த நாடு சீனா. மெசபடோமியா, எகிப்து போன்ற நாடுகளிலும் கண்ணாடி தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

ரோம் நாட்டில் கண்ணாடிப் பாத்திரங்கள் செய்யும் முறை இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் கண்ணாடிப் பொருட்களின் பயன்பாடு அதிகமானது.

கண்ணாடித் தயாரிப்பின் வளர்ச்சி பலவித அறிவியல் ஆய்வுகளுக்கு வெகுவாக உதவியுள்ளது.

கண்ணாடித் தயாரிப்புத் துறையில் ஜெர்மன் நாட்டவர்களான ஷரப் மற்றும் ஆபி என்ற இருவர் செய்த பணி மகத்தானதாகும்.

# தேவையான உதவிகளை தமிழக அரசு செய்யும்

மதுரை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை – 28.11.2005



**வ**ணக்கத்திற்குரிய என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்கள், இதயதெய்வம் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புக்களே, முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத வகையில் தமிழகத்தில் அதிகமாக மழைபெய்து கடுமையாக இந்த மாநிலம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. மிகப் பெரிய அளவில் வெள்ளப்பெருக்கால் சேதம் ஏற்பட்டு இருக்கிறது. உயிர் இழப்பும், பயிர் இழ்ப்பும் ஏற்பட்டு இருக்கிறது. பல பேர் வீடுகளை இழந்து இருக்கிறார்கள். பலபேர் இருக்க இடம் இல்லாமல் இத்தகைய நிவாரண மையங்களுக்கு அழைத்து வரப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உணவும், முதலுதவிகளையும் இந்த அரசு வழங்கி வருகிறது. இன்றைய தினம் உங்களையெல்லாம் சந்தித்து தமிழக அரசு வழங்கும் வெள்ள நிவாரண உதவிகளை உங்களுக்கு வழங்குவதற்காக நான் இங்கே வந்து இருக்கிறேன். எதற்கும் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காக தமிழக அரசு இருக்கிறது. அதற்காகத்தான் அரசு இருக்கிறது. உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதுதான், எங்கள் கடமை என்ற உணர்வோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இன்றைய தினம் இதுவரை வரலாற்றில் காணாத அளவுக்கு, தமிழகத்தில் வெள்ளச் சேதத்தால் கட்டமைப்பு வசதிகள் எல்லாம் அழிந்து போயிருக்கின்றன. சாலைகள், பாலங்கள், இவைகள் எல்லாம் சேதப்படுத்தப்பட்டுள்ளன. பெரும் அளவில் ஏரிகள், குளங்கள், நீர்த் தேக்கங்கள், அணைகள் இவற்றில் எல்லாம் உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. இவற்றை எல்லாம் சீர்செய்து ஆக வேண்டும். நிறைய பாலங்கள் வெள்ளத்திலேயே அடித்துக் கொண்டு போய்விட்டன. இந்தப் பாலங்களை யெல்லாம் மீண்டும் கட்டவேண்டி உள்ளது. பலபேருக்கு வீடுகள் போய்விட்டன. அவர்களுக்கெல்லாம் புதிய





குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் ஏராளமான பணம் தேவைப்படும். அதற்காகத்தான் மத்திய அரசிடம் முன்பணமாக ரூபாய் 3 ஆயிரம் கோடி வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். ஒட்டுமொத்தமாக எந்த அளவிற்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை இன்னும் கணக்கிட முடியவில்லை. பல இடங்களில் இன்னும் வெள்ளம் வடியவில்லை.

வெள்ளம் வடிந்த பின்னர்தான் மதிப்பீடு செய்ய முடியும். மீண்டும் ஒரு மத்தியக் குழுவை அனுப்புமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் கேட்டு இருந்தேன். பிரதமர் அவர்களும் ஒரு குழுவை அனுப்பி அவர்கள் இன்று தமிழகம் வந்து சேர்கிறார்கள். நாளை முதல் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுகிறார்கள். நேற்றைய தினம் தஞ்சை, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தேன். திருச்சிக்கு சென்றிருந்தேன். அங்கெல்லாம் பெரும் அளவில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. இலட்சக்கணக்கான எக்டேர் நிலத்தில் நெற்பயிர் முழுவதுமாக அழிந்து விட்டது. ஆகவே, இந்த விவசாயிகளுக்கெல்லாம் எந்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு அவர்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டி உள்ளது. கடந்த 30ஆம் தேதியன்று ஒரு உதவித் தொகுப்பை நான் அறிவித்து இருந்தேன். முழுவதுமாக வீடு சேதமடைந்தவர்களுக்கு ரூ.2000 ரொக்கப்பணம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 புடவை, 1 வேட்டி ஆகியவை வழங்கப்படும் என்று அறிவித்து இருந்தேன். வீடு ஒரு பகுதி பாதிக்கப்பட்டு இருந்தால், சேதமடைந்திருந்தால் அத்தகையவர்களுக்கு ரூ.1000 ரொக்கப்பணமும், 10 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணையும், 1 புடவையும், வேட்டியும் வழங்கப்படும் என்று அறிவித்து இருந்தேன். அதன்படி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரியவர்களுக்கு இந்த உதவிகளை எல்லாம் வழங்கி வருகிறார்கள்.

ஆனால், இன்னும் நிறைய பேர் தங்கள் வீடுகள் சேதம் அடையவில்லை என்றாலும் கூட நாங்களும் இந்த மழை வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். எங்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். கடந்த 2 நாட்களாக தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் செய்து வருகிறேன். மூன்றாவது நாளாக இன்றும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்கிறேன். இங்கே வந்து உங்களையெல்லாம் சந்தித்துக் கொண்டு இருக்கிறேன். நான் சென்ற இடங்களில் எல்லாம்



ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தேன். அப்போது, பலர் தங்கள் வீடுகளை இழந்துவிடவில்லை என்றாலும் கூட பல வழிகளில் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருப்பதால் தங்களுக்கும் நிவாரண உதவிகள் கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையை என்னிடம் வைத்தார்கள். ஆகவே, அந்தக் கோரிக்கையை ஏற்று இன்று ஒரு புதிய அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன். ஒரு கிராமமோ அல்லது ஒரு ஊரோ முழுவதுமாக வெள்ள நீரால் சூழப்பட்டு இருந்தால், அந்த ஊரில் அல்லது அந்த கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கும், ஒரு கிராமத்திலோ ஊரிலோ வெள்ளம் ஏற்பட்டதால் மக்களை அங்கிருந்து வெளியேற்றி அப்புறப்படுத்தி வேறு இடத்தில் தங்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தால் அத்தகைய மக்களுக்கும், சில ஊர்களிலும் கிராமங்களிலும் நிவாரண மையங்கள் திறக்கப்பட்டு அங்கே அந்த மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு இருந்தால், அந்த மக்களுக்கும், மேலும் கிராமமோ, ஊரோ அங்கே முழுவதுமாக ஒரு நாள் முழுவதும் தண்ணீர் தேங்கி நின்று இருந்தால் சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருந்தால் அந்த ஊர் அல்லது அந்த கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கும் உதவிகள் வழங்கலாம் என்று முடிவு செய்து இருக்கிறேன். இதன்படி, அத்தகைய மக்களுக்கு தலா ரூ.1000 ரொக்கப்பணம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி, 1 சேலை ஆகியவை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நிறைய பேர் தங்கள் பயிர்கள் எல்லாம் அழிந்து விட்டதால் நஷ்டஈடு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். வெள்ள நீர் முழுவதுமாக வடிந்த பின்னர் எந்த அளவிற்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மதிப்பிட்டு அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பலர் தங்களுக்கு வீடுகள் வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். எதற்காகவும் நீங்கள் வருத்தப்படவேண்டாம். இப்பொழுது ஏற்பட்டு இருப்பது ஒரு தற்காலிகமான துயரம்; அவ்வளவுதான். விரைவிலேயே நீங்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு என்னென்ன உதவிகள் தேவையோ அந்த உதவிகளை எல்லாம் நிச்சயமாக என் தலைமையிலான அரசு செய்யும் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் தமிழக அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய உங்கள் அனைவருக்கும், எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம். ★



## 717 கோடி ரூபாய் மதிப்பில்

# “புதுவாழ்வு”

## என்னும் புதிய திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.11.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தின் கிராமப்புற ஏழை, எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், உலக வங்கி உதவியுடன், 717 கோடி ரூபாய் மதிப்பில் தமிழக அரசு செயல்படுத்த உள்ள “புது வாழ்வு” என்னும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வறுமையை நீக்கி, அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில், மக்களே இயக்கி, செயல்படுத்தும் புதிய வளர்ச்சி அணுகுமுறையை (COMMUNITY DRIVEN DEVELOPMENT APPROACH) அடிப்படையாகக் கொண்டு, கிராமப்புற ஏழை, எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில்களுக்கும், முதலீடுகளுக்கும் உதவுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, ‘புது வாழ்வு’ என்னும் ஒரு புதிய திட்டத்தை, உலக வங்கி நிதி உதவியோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்துகிறது. இந்தப் புதிய அணுகுமுறையின்படி, மக்கள் தங்களின் தேவையை முன்னிலைப்படுத்தி திட்டமிட்டுச் செயல்படவும், திட்டத்தின் செயல்பாடுகளைத் தாங்களே கண்காணித்து, முன்னேற்றப் பாதையில் செல்லவும் ஏதுவாகும்.

மொத்தம் 717 கோடி ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்திற்கு 541 கோடி ரூபாய் உலக வங்கி கடன் உதவி வழங்குகிறது. 122 கோடி ரூபாய் தமிழக அரசின் பங்களிப்பாகவும், 54 கோடி ரூபாய் மக்கள் பங்களிப்பாகவும் இருக்கும்.



**புதுவாழ்வுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

* கிராமப்புற மக்களின் வறுமையைக் குறைத்திடும் நோக்கத்துடன், அவர்கள் தங்களது திறன்களை வலுப்படுத்தி இன்றியமையாத் தேவைகளைத் திட்டமிட்டு, வரிசைப்படுத்தி, மேலாண்மை செய்திடவும், அதற்குரிய முதலீடுகளையும், வளங்களையும் பெற்றிடவும், இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும். இதற்கென கிராம வறுமைக் குறைப்பு நிதியாக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

* சுயஉதவிக் குழுக்கள் மற்றும் தொழிற் குழுக்கள் வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட ஏதுவாக தொடர்ந்து தொழில்நுட்ப உதவிகளும், அதற்குத் தேவையான நிதியும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இவ்வகையில், ஏழை எளியோரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக 299 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

* சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் மற்றும் தொழிற் குழுக் கூட்டமைப்புகளின் நிலைத்த வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

* ஊனமுற்றோர் மற்றும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், முதியோர், ஆதரவற்றோர், பழங்குடியினர் ஆகிய நலிவுற்ற மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும், புனர் வாழ்விற்காகவும் 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

* ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும், பொருளாதார முன்னேற்றத் திற்கும் வழி அமைத்துச் சிறப்புடன் செயல்படும் ஊராட்சிகளை ஊக்குவிக்கும் வகையில்,ஊக்க நிதியாக 53.60 கோடி ரூபாய் வழங்கப்படும்.

717 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள “புதுவாழ்வு” என்னும் இந்தப் புதிய திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.11.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டம், தமிழகத்தின் 15 மாவட்டங்களில் உள்ள 70 ஊராட்சி ஒன்றியங்களில் 6 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இதன் மூலம், இந்த ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 2,300 ஊராட்சிகளில் உள்ள சுமார் 3.5 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்கள் பயன் அடையும்.

**புதுவாழ்வு ஒருங்கிணைப்பு அணி**

இந்த ஊராட்சிகள் ஒவ்வொன்றிலும் ‘புது வாழ்வு’த் திட்டத்தைச் சிறப்புடன் செயல்படுத்துவதற்கென



ஊராட்சி அளவில் கிராம வறுமைக் குறைப்புச் சங்கம் (VILLAGE POVERTY REDUCTION COMMITTEE) ஒன்று தொடங்கப்படும். இந்தச் சங்கம், அந்த ஊராட்சியில் உள்ள ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உரியத் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் பொறுப்பானதாக இருக்கும்.

இவ்வாறு அமைக்கப்படும் கிராம வறுமைக் குறைப்புச் சங்கங்களுக்கும் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் – தொழிற் குழுக்கள் ஆகியவற்றுக்கும் உரிய பயிற்சிகள் அளிக்கவும் மற்றும் தேவையான உதவிகள் வழங்கவும் பகுதி அளவில் ‘புது வாழ்வு ஒருங்கிணைப்பு அணி’ (PROJECT FACILITATION TEAM) ஒன்று அமைக்கப்படும். இந்தப் புது வாழ்வு ஒருங்கிணைப்பு அணி 10–லிருந்து 15 ஊராட்சிகளை உள்ளடக்கிச் செயல்படும். மாவட்ட அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு ‘மாவட்டப் புது வாழ்வுச் சங்கம்’ (DISTRICT PUDHUVAZHVU SOCIETY) என்னும் அமைப்பு நிறுவப்படும். “தமிழ்நாடு புது வாழ்வுச் சங்கம்” (TAMIL NADU PUDHUVAZHVU SOCIETY) என்னும் அமைப்பு மாநில அளவில் இத்திட்டத்தை மேலாண்மை செய்து நிருவகிக்கும்.

**15 மாவட்டங்கள்**

இத்திட்டம், முதல் கட்டமாக, தேனி, கோயம்புத்தூர், நாமக்கல், சேலம், வேலூர், திருவண்ணாமலை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும், இரண்டாவது கட்டமாக கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருநெல்வேலி, திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்களுக்குப் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும், அவர்கள் ஏற்கெனவே ஈடுபட்டுள்ள தொழில்களில் வருமானத்தை அதிகரிக்கவும், உரிய தொழில்நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருமானத்தைப் பெருக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட, ‘புது வாழ்வு’த் திட்டத்தை 15.11.2005 அன்று தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொடர்ந்து இதே நிகழ்ச்சியில் இத்திட்டத்திற்கான இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்கள். இந்த இணையதளத்தின் முகவரி www.pudhuvazhvu.org ஆகும்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ‘புதுவாழ்வு’த் திட்ட விளக்க சிறுபுத்தகத்தை வெளியிட்டார்கள். இதன் முதல் பிரதியை அமெரிக்க நாட்டில் வாஷிங்டனில் உள்ள உலக வங்கியின் பிரிவு இயக்குநரான கான்ஸ்டன்ஸ் பெர்னார்டு (Ms.Constance Bernard, Sector Director, World Bank, Washington D.C.) அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அடுத்து, இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முன்னோடி ஊராட்சிகளான கோயம்புத்தூர் மாவட்டம், ஒடந்துறை ஊராட்சி வறுமைக் குறைப்புச் சங்கம் மற்றும் ஒடந்துறை பழங்குடியினர் வறுமைக் குறைப்புச் சங்கம், வேலூர் மாவட்டம், இடையன்சாத்து ஊராட்சி வறுமைக் குறைப்புச் சங்கம், தேனி மாவட்டம், ஜி. உசிலம்பட்டி ஊராட்சி வறுமைக் குறைப்புச் சங்கம், விழுப்புரம் மாவட்டம், கடம்பூர் ஊராட்சி வறுமைக் குறைப்புச் சங்கம், கடலூர் மாவட்டம், எம். கொளக்குடி ஊராட்சி வறுமைக் குறைப்புச் சங்கம் ஆகிய சங்கங்களுக்கு, அந்தச் சங்கங்களின் தலைவர்களான முறையே திரு.ஆர். சண்முகம், திருமதி. பி. நஞ்சம்மாள், திருமதி. என். ராணிமணி, திரு.எஸ்.அழகர்சாமி, திருமதி. இ. உஷாராணி, திருமதி. பி. கலையரசி ஆகியோரிடம் திட்டத்திற்கான முதல் தவணை வறுமைக் குறைப்பு நிதியாக மொத்தம் 19 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன்,இ.ஆ.ப., சமூக நலத்துறைச் செயலாளர் திரு.எல்.என்.விஜய ராகவன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கே.ஞானதேசிகன்,இ.ஆ.ப., புதுவாழ்வுத் திட்ட இயக்குநர் திரு.நா.முருகானந்தம்,இ.ஆ.ப., உலக வங்கியின் இயக்குநர் திருமதி. கான்ஸ்டன்ஸ் பெர்னார்டு, புதுவாழ்வுத் திட்டத்திற்கான உலக வங்கியின் தலைவர் திருமதி. மீனா முன்ஷி ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

# ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக் கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி உத்தரவு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 16–11–2005

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள், மக்கள் இறை நம்பிக்கையுடன் கூடி வழிபடும் மையங்கள் என்பதோடு மட்டுமல்லாமல், நமது தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டையும் உலகுக்கு எடுத்துக் கூறுகின்ற உன்னதத் திருத்தலங்களாகவும் விளங்குகின்றன. பக்தர்களுக்கு மன அமைதியையும், மகிழ்ச்சியையும் தருகின்ற நமது திருக்கோயில்கள், இந்து சமயப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலைச் சிகரங்கள் – தமிழர்களின் கலை வளர்ச்சியை வெளிப்படுத்தும் பண்பாட்டுச் சின்னங்கள் என்றால் மிகையாகாது.

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடிப் பரவப் பெற்ற இந்தப் புகழ்மிகு புனிதத் திருத்தலங்களில், ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர் ஆகியோர் இறைவனைப் போற்றித் திருப்பாடல்களை தினமும் பாடி, தெய்வீகத் தொண்டாற்றி வருகின்றனர். அதேபோல், திருக்கோயில்களில் இறைவனைத் துதித்து, அர்ச்சனை முதலான தெய்வீகப் பணிகளை ஆற்றுகின்ற அர்ச்சகர்களும், வேதபாராயணர்களும், கிராமப் புறங்களில் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு சிறு திருக்கோயில் பூசாரிகளும், இறைவன் திருத்தொண்டில் தங்களை ஈடுபடுத்திப் பணியாற்றி வருகின்றனர். இப்பணிகளுக்கு அத்திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற இசைக் கலைஞர்கள் உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு திருக்கோயில் பூசாரிகள் ஆகியோர் தற்போது ஓய்வூதியமாக மாதம்தோறும் 500 ரூபாய் பெற்று வருகின்றனர்.

பல்வேறு இறைவன் திருப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றி வருகின்ற இவர்கள், அப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் மனநிறைவுடன் வாழ்ந்திட ஏதுவாக இவர்கள் தற்போது பெற்று வரும் ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்கிட நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு திருக்கோயில் பூசாரிகள் ஆகியோர் பெற்று வரும் ஓய்வூதியத் தொகையைக் கணிசமாக உயர்த்தி, இனி இவர்களுக்கு மாதம்தோறும் 750 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கிட நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது உடனடியாக அமல்படுத்தப்படும்.

இதன் மூலம், இவ்வகையில், மொத்தம் 3,247 பேர் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 2.92 கோடி ரூபாய் ஆக இருக்கும்.

❖ ❖ ❖



அரசு விதிமுறைகளைத் தளர்த்தி

# உடல் ஊனமுற்றோருக்கு அரசுப்பணி

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை



ஊனமுற்றோரின்பால் தனி அக்கறை கொண்டு, அவர்களது வாழ்க்கை மேம்பட வேண்டும் என்ற உளமார்ந்த விருப்பத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எண்ணற்ற உதவிகளையும், ஏராளமானச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9–3–2005 அன்று தலைமைச் செயலகத்தில், பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் ஆகியோரது குறைகளை நேரில் கேட்டறிந்ததன் அடிப்படையில், 16–3–2005 அன்று, தமிழக சட்டமன்றப் பேரவையில் உடல் ஊனமுற்றோருக்கென பல்வேறுச் சலுகைகளை அறிவித்தார்கள்.

அதில் ஒரு அம்சமாக, ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், நுழைவு நிலைப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்தி, 150 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியிடங்களைப் பார்வையற்றோர் உள்ளிட்ட ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்பிட முடிவு செய்துள்ளதாகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், வரவேற்பாளர், தொலைபேசி இயக்குபவர், நூலக உதவியாளர், இசை ஆசிரியர், சுருக்கெழுத்தர், தையல் பயிற்றுநர், தொழில்ஆசிரியர், மின் தூக்கி இயக்குபவர், புத்தகம் கட்டுபவர், பொருத்துநர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் பயனீட்டுக் கணக்கீட்டாளர் ஆகிய பதவிகள் தொடர்பான இந்த 150 பணியிடங்கள் உடல் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்பப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த அறிவிப்பின் அடிப்படையில், 'சி' மற்றும் 'டி' பிரிவில் 12 வகையான மேற்படிப் பதவிகளில் 150 பணியிடங்களைத் தகுதி வாய்ந்த ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்பிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 22(aa)ன்படி, நேரடி நியமனம் மூலம் பணி அமர்த்தப்படும்போது, மொத்தப் பணி நியமனங்களில் பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் கை, கால், உடல் ஊனமுற்றோருக்குத் தனித்தனியே ஒரு சதவீதம் மட்டுமே ஒதுக்கீடு செய்ய இயலும். எனவே, இளநிலை உதவியாளர்களுக்கான 50 பணியிடங்களில் தகுதி வாய்ந்த கை, கால், உடல் ஊனமுற்றோரைக் கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்

தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிடவும், 'சி' மற்றும் 'டி' பிரிவுகளில் மேலும் 100 பணியிடங்களில் பார்வையற்ற மற்றும் காது கேளாத உடல் ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்பிடவும் ஏதுவாக, இந்த விதியினைத் தளர்த்தி ஆணை வழங்குமாறு கோரப்பட்டது.

எனவே, கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் துறை, ஊரக வளர்ச்சித்துறை, கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழிலாளர் ஆணையரகம் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை ஆகிய 5 துறைகளில் 50 இளநிலை உதவியாளர் பணியிடங்களைக் கை, கால், உடல் ஊனமுற்றோரை (orthopeadically handicapped persons) மட்டுமே கொண்டு சிறப்பினமாக நிரப்பத்தக்க வகையில் (special recruitment), தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளைத் தளர்த்தும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, இவ்விதியை அவ்வாறே தளர்த்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதேபோல, கருவூலம் மற்றும் கணக்கு இயக்குநரகம், அச்சு மற்றும் எழுதுபொருள் இயக்குநரகம், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், சமூக நல இயக்குநரகம், வருவாய்த்துறை, விவசாயத் தொழில்நுட்பத்துறை ஆகிய துறைகளில் 50 பணியிடங்களைப் பார்வையற்றோரை மட்டுமே கொண்டு நிரப்பிடவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 50 பணியிடங்களைக் காது கேளாதவரை மட்டுமே கொண்டு நிரப்பிடவும், சிறப்பினமாக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 22(aa)–ஐ தளர்த்தி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவ்வாறு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 22(aa)–ஐ தளர்த்தி ஆணையிட்டதன் பயனாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழக சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறே, 150 'சி' மற்றும் 'டி' பணியிடங்களும், மேலே குறிப்பிட்ட வகை ஊனமுற்றோரைக் கொண்டு மட்டுமே நிரப்பப்படும். இதன்படி, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 50 இளநிலை உதவியாளர் பணியிடங்களில், கை, கால், உடல் ஊனமுற்றோர் நியமிக்கப்படுவார்கள். மேலும், 39 புத்தகம் கட்டுனர், 2 இசை ஆசிரியர், 4 தொலைபேசி இயக்குபவர், 5 பொருத்துநர் ஆக 50 பணியிடங்களில் பார்வையற்ற உடல் ஊனமுற்றோரும், 50 மின் மதிப்பீட்டாளர் பணியிடங்களில் காது கேளாத உடல் ஊனமுற்றோரும் அரசு வேலைவாய்ப்பகங்கள் மூலமாக நியமிக்கப்படுவார்கள். இவ்வகையில் 150 தகுதி வாய்ந்த உடல் ஊனமுற்றோரைக் கொண்டு இப்பணியிடங்கள் யாவும் விரைவில் நிரப்பப்படும். □

மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் டிசம்பர் – 10



## மூதறிஞர் இராஜாஜி பொன் மொழிகள்

- நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.
- எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.
- தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.
- பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.
- வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!
- ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ்செல்வம்.
- கோபம் கூடாது; அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.
- ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.
- நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்க வேண்டும்.



# ஒரே பிரசவத்தில் மூன்று பெண் குழந்தைகளைப் பெற்ற தம்பதியருக்கு நிதி உதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒரே பிரசவத்தில் மூன்று பெண் குழந்தைகளைப் பெற்ற கடலூர் மாவட்டம், சொரக்கல்பட்டு, அந்தோணியார் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. கிறிஸ்துவதி – பால் சாமுவேல் சௌந்திரபாண்டியன் தம்பதியினருக்கு, அந்தப் பெண் குழந்தைகளின் நலன் கருதி ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கிடவும், அத்தொகையை குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை குழந்தைகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தரவிட்டு, இதற்கான ஆணைகளை அந்தக் குழந்தைகளின் தாய் தந்தையரிடம், 17–11–2005 அன்று தலைமைச் செயலகத்தில், நேரில் வழங்கினார்கள்.

கடலூர் மாவட்டம், சொரக்கல்பட்டு, அந்தோணியார் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. கிறிஸ்துவதி என்பவர், ஒரே பிரசவத்தில் 3 பெண் குழந்தைகளைப் பெற்றதாகவும், தானும் தனது கணவரும் தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குழந்தைகளுக்குப் போதிய ஊட்டச்சத்து கொடுக்க இயலாத நிலையில், அக்குழந்தைகளைக் காப்பாற்றுவதில் மிகவும் சிரமப்படுவதாகவும் தெரிவித்து, வறுமையான சூழ்நிலையில் உள்ள தங்களுக்கு, குழந்தைகளை நன்கு வளர்க்க உதவி புரிந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்தக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காக ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 3 பெண் குழந்தைகளுக்கும் மொத்தம் 3 இலட்சம் ரூபாய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கிட ஆணையிட்டார்கள். மேலும், இவ்வாறு வழங்கப்படும் நிதியை அந்தந்த குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யவும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை குழந்தைகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தரவிட்டார்கள்.



இதன்படி, 17–11–2005 அன்று தலைமைச்செயலகத்தில், திருமதி. கிறிஸ்துவதி – பால் சாமுவேல் சௌந்திரபாண்டியன் தம்பதியரிடம் 3 இலட்சம் ரூபாய் நிதி உதவிக்கான ஆணைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

இதன் மூலம், மூன்று பெண் குழந்தைகளை ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்த கடலூர் மாவட்டம், சொரக்கல்பட்டு, அந்தோணியார் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. கிறிஸ்துவதி – பால் சாமுவேல் சௌந்திரபாண்டியன் குடும்பத்திற்கு, மாதந்தோறும் 1,750 ரூபாய் நிதி உதவியாக கிடைக்கும். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, இந்தக் குழந்தைகள் 18 வயது நிறைவடையும்போது, உயர்கல்வி பயிலவோ அல்லது சொந்தத் தொழில் தொடங்கவோ பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த வைப்பீட்டுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஆணைகளைப் பெற்றுக்கொண்ட குழந்தைகளின் பெற்றோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர். ★

## விருதுநகர் மாவட்டத்தில்

# பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் உண்டு உறைவிடப் பள்ளிகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் பெண் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். இதன் அடிப்படையில், விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ. முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரையின்படி, விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பெண் குழந்தைகளின் எழுத்தறிவு விகிதம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டு, இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆனைக்குளம், அ.முக்குளம், நரிக்குடி ஆகிய மூன்று இடங்களில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

குடும்ப வறுமையின் காரணமாகத் தொடர்ந்து படிக்க இயலாமல் பாதியில் படிப்பினை நிறுத்திவிட்டு, பள்ளிக்குச் செல்லாமல் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் இப்பள்ளிகளில் சேர்ந்து படித்து வருகின்றனர். ஆனைக் குளத்தில் 50 பெண் குழந்தைகளும், அ.முக்குளத்தில் 50 பெண் குழந்தைகளும், நரிக்குடியில் 52 பெண் குழந்தைகளும் படித்து வருகின்றனர்.

இங்கு பயிலும் குழந்தைகளுக்குத் தரமான உணவு, இலவசச் சீருடை, நோட்டு, புத்தகங்கள் மற்றும் தங்குவதற்கு பாய், தலையணை, படுக்கை விரிப்பு போன்ற வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இக்குழந்தைகளுக்குப் பாடங்கள் கற்பித்திட திறமை வாய்ந்த ஆசிரியர்களும், தொழிற்கல்வி கற்றிட தொழிற்கல்வி பகுதிநேர ஆசிரியரும், விளையாட்டுக்கள் கற்றுக்கொடுப்பதற்காக உடற்கல்வி ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுப் பணியாற்றி வருகின்றனர். குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி இரவு காவலர் ஒருவரும், ஆசிரியர் ஒருவரும் இரவு நேரங்களில் இப்பள்ளியிலே தங்கி வருகின்றனர். இங்கு பயிலும் குழந்தைகளுக்குக் கல்வியுடன், தையல் பயிற்சி, பூ வேலைப்பாடு போன்ற தொழிற்பயிற்சிகளும் கற்றுத் தரப்படுகின்றன.

இங்கு பயிலும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் மருத்துவப் பரிசோதனை செய்து, அவர்களின் உடல் ஆரோக்கியம் கண்டறியப்பட்டு வருகின்றன. இந்த உறைவிடப் பள்ளிகளை ஓடம் மற்றும் முத்துராமசாமி ஆண்டாள் டிரஸ்ட் ஆகிய தொண்டு நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. இப்பள்ளிகள் செயல்பாட்டிற்காக நடப்பாண்டு ரூ.124.374 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள், நரிக்குடியில் செயல்படும் உண்டு உறைவிடப் பள்ளியினை நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பள்ளியினை சிறப்பான முறையில் நடத்திட தக்க அறிவுரைகளை வழங்கினார்கள். மேலும், மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி, அனைவருக்கும் கல்வித்திட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள், இப்பள்ளிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறதா என மாதம் ஒருமுறை பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட இந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் குடும்ப வறுமை காரணமாகப் படிப்பை பாதியில் நிறுத்திய சிறுமிகள், தற்போது சீருடை அணிந்து கல்வி கற்று வருவது குழந்தைகள் மத்தியிலும், குழந்தைகளின் பெற்றோர்கள் மத்தியிலும் புத்துணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி யுள்ளது.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
விருதுநகர்.



# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்துக்கு புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்




**செ**ன்னையில் அகில இந்திய மாநிலத் தேர்தல் ஆணையர்கள் மாநாட்டைத் துவக்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பஞ்சாயத்து ராஜ் முறையைச் செயல்படுத்துவதில் தமிழகம் மிகவும் பாரம்பரியமிக்கது.

10–ஆவது நூற்றாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் உள்ள வைகுந்த பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டே இதற்குச் சான்றாகும். அந்தக் கல்வெட்டில் அப்போதே கிராம ஆட்சி முறை பற்றி பொறிக்கப்பட்டுள்ளது. பழங்காலத்திலேயே கிராமங்கள் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அந்தந்த வட்டங்களில் வசிப்பவர்கள் 'குட ஓலை' முறை மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்தலை நடத்த அப்போது நல்ல விதிமுறைகள் எல்லாம் வகுக்கப் பட்டிருந்தன. தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தது.

1958ஆம் ஆண்டு சென்னை பஞ்சாயத்துச் சட்டப்படி கிராம மற்றும் பிளாக் அளவில் இரட்டை அடுக்கு பஞ்சாயத்து முறையைக் கொண்டு வந்ததில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்தது. சென்னை மாநகராட்சி 1688ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது நாட்டிலேயே மிகப் பழமையான மாநகராட்சியாகும். எனவே, இன்று சென்னையில் இந்த 4ஆவது மாநில தேர்தல் ஆணையர்கள் மாநாடு நடப்பது பொருத்தமானதாகும்.

பல்வந்த ராய் மேத்தா கமிட்டி சிபாரிசின் அடிப்படையில் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டன. இதற்காகவே 1958ஆம் ஆண்டு சென்னை பஞ்சாயத்துச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் கிராம பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன் என இரட்டை அடுக்கு நிருவாக முறை கொண்டு வரப்பட்டது.

அவசர நிலை காலத்துக்குப் பின் அசோக் மேத்தா கமிட்டி சில சிபாரிசுகள் செய்திருந்தது. ஆனால், அந்தக் கமிட்டி அளித்த சிபாரிசில் மத்திய அரசு போதிய கவனம் செலுத்தவில்லை.

எனவே, உள்ளாட்சி அமைப்புகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. முறையாகத் தேர்தல் நடத்தப்படவில்லை.

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப் படவில்லை. உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்கள்

போதுமான அளவு பகிர்ந்து அளிக்கப்படவில்லை. பின்னர், இவையெல்லாம் சரி செய்ய 73 மற்றும் 74–ஆவது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதன் அடிப்படையில், நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோது 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958–க்குப் பதிலாக தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1994 என கொண்டு வந்தேன்.

அரசியல் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்துகளுக்கு மற்றும் நகராட்சிகளுக்கு உரிய நேரத்தில் தேர்தலை நடத்தினோம். எனது அரசு மூன்றாவது மாநில நிதி ஆணையம் ஒன்றை அமைத்தது. உள்ளாட்சிகள் எப்படி நிதி திரட்டுவது, அதிகாரப் பகிர்வு, மாநில அரசுக்கும், உள்ளாட்சிகளுக்கும் இடையே நிதிப் பகிர்வு செய்து கொள்வது பற்றியெல்லாம் இந்த ஆணையம் அறிக்கை தயாரிக்கும்.

இந்த அறிக்கை அடுத்த ஆண்டு (2006) மே மாதம் 31–ஆம் தேதிக்குள் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2004ஆம் ஆண்டு நான் 'நமது கிராமம்' என்ற புதுமையான ஒரு திட்டத்தைத் துவக்கி வைத்தேன். அடிமட்டத்தில் இருந்து நிருவாகம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த இது கொண்டுவரப்பட்டது.

இந்த 'நமது கிராமம்' இயக்கத்தில் சமுதாய முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நான் 'சுய உதவிக் குழு' இயக்கத்தை ஏற்படுத்தினேன். இதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் கிடைத்தது. இவர்கள் கிராம சபைகளில் தீவிரமாகப் பங்கேற்கிறார்கள். இது புதிய புரட்சியாகும். உள்ளாட்சி அமைப்புகளிலும் பயமின்றி அவர்கள் நுழைய இது வழிவகுத்தது.

உள்ளாட்சிகளுக்கு நியாயமாகவும், அமைதியாகவும் தேர்தல் நடத்துவது என்பது கடினமானதாகும். கிராமப்புற மேம்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ளதால் அவர்களை உள்ளாட்சி நிருவாகத்தில் பங்கெடுக்க வைப்பதும் நமது நோக்கமாக உள்ளது. இந்த மாற்றம் அடித்தளத்திலிருந்து அமைய வேண்டும். அதுமட்டுமின்றி சரியானவர்கள், எந்தவித பயமோ – எந்தவித தூண்டுதலோ இல்லாமல் உள்ளாட்சி நிருவாகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவும் வேண்டும். எனது முழு கவனமும் கிராமப்புற நிருவாகத்தில் சரியான நடைமுறைகளைச் செயல்படுத்துவதிலேயே உள்ளது.

நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவி ஏற்றபின் 2001–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மாநிலத் தேர்தல் ஆணையம் நியாயமாகவும், அமைதியாகவும், வெற்றிகரமாகவும் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்தது. இதற்காக மாநிலத் தேர்தல் ஆணையத்தைப் பாராட்டுகிறேன்.

கிராமப்புற மக்கள் 73 சதவிகிதம் பேரும், நகர்ப்புற மக்கள் 54 சதவிகிதம் பேரும் வாக்களித்தனர். 1,31,681 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் உள்ள 1,31,681 இடங்களில் பெண்களுக்கு 44,272 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதாவது, இது 33.62 சதவிகிதமாகும். 26,030 இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 932 இடங்கள் மலைவாழ் மக்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. நாட்டில் மொத்தம் 30 இலட்சம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க, பஞ்சாயத்து ராஜ் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்த மாநிலத் தேர்தல் ஆணையர்களுக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு பெரிய தேர்தலைச் சிறப்பாக நடத்தியது மாபெரும் சாதனையாகும்.

நாடு முழுவதும் 4,120 சட்டமன்றத் தொகுதி களுக்கும், 543 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தி முடிப்பதைவிட நீங்கள் நடத்திய தேர்தல் பெரும் சாதனையாகும்.

மாநிலத் தேர்தல் ஆணையமும், இந்தியத் தேர்தல் ஆணையமும் இணைந்து செயல்பட வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த இரண்டு அமைப்புகளும் இணைந்து செயல்படுவது அவசியமானதாகும். அனைத்து மட்டத்திலும் நியாயமாகவும், அமைதியாகவும் தேர்தல் நடைபெறவும் இது வழிவகுக்கும்.

உங்கள் முன் உள்ள நிகழ்ச்சி நிரலைப் பார்த்தேன். வாக்காளர் பட்டியலைத் தயார் செய்யும்போது அது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியலுடன் இணைந்து போவதாக இருக்க வேண்டும்.

தேர்தலை நடத்தும் செலவு, ரிசர்வ் இடங்கள், சுழற்சி முறையில் வருவது போன்றவை குறித்து முன்பு நடந்த மாநாடுகளில் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடவை சென்னையில் நடக்கும் இந்த மாநாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெற அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல முடிவை எடுப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாநிலத் தேர்தல் ஆணையமும், இந்தியத் தேர்தல் ஆணையமும் இணைந்து மாநாடு நடத்த வேண்டும். அப்போதுதான் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். நேர்மையாகவும், அமைதியாகவும் தேர்தல் நடைபெற திறமையும், அறிவும் தேவை. எனவேதான் எனது அரசு மாநிலத் தேர்தல் ஆணையர்களுக்கு வயது வரம்பை நீக்கிச் சட்டதிருத்தம் கொண்டு வந்தது. இதன்



மூலம் தேர்தல் ஆணையர் தனக்குள்ள அனுபவம், திறமையை வைத்து உள்ளாட்சித் தேர்தல்களைச் சிறப்பாக நடத்த முடியும்.

நியாயமாகவும் சுதந்திரமாகவும் தேர்தலை நடத்துவதற்கு மாநிலத் தேர்தல் ஆணையம் அதிகாரம் பெற்ற சட்டரீதியான அமைப்பு என்பதால் அதன் முக்கியத்துவம் கருதி மாநிலத் தேர்தல் ஆணையருக்கு உயர்நீதிமன்ற நீதிபதிக்குச் சமமான அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாகத் தேர்தல்கள் ஐந்து வருடத்திற்கு ஒரு முறைதான் நடத்தப்படுகின்றது. எனவே, தேர்தல் நடத்துவதில் பெறும் அனுபவ அறிவும் திறமையும் தொடர்ச்சியாகப் பயனைத் தர வேண்டும். பல மாநிலங்களுக்கு இத்தகைய அனுபவம் கிடைத்திருக்கும் என நான் நம்புகிறேன்.

மாநிலத் தேர்தல் ஆணையம் பணியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஊழியர்களுக்குப் பணி விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பணி விதிமுறைகள் வெளியிட்டபின் மாநிலத் தேர்தல் ஆணைய ஊழியர்களின் பணிகள் முறைபடுத்தப்படும். பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து இவர்கள் இங்கு பணி அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் விருப்ப அடிப்படையில் இங்கு நிரந்தரமாக்கப்படுவார்கள்.

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்துக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட நிலம் வேண்டும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் கேட்டது. இந்த முக்கிய மகிழ்ச்சிகரமான மாநாட்டில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்துக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட கோயம்பேட்டில் இடம் அளிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிதி உதவியையும் அரசு அளிக்கும்.

2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு தேர்தல் செலவு கணக்கைக் காட்டாதவர்கள் மீது தமிழக தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. இப்படி நடவடிக்கை எடுத்தது, இந்தியாவிலேயே தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்தான். கிராமப் பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரை 6,268 வேட்பாளர்கள் தேர்தல் செலவுக் கணக்கைக் காட்டவில்லை. அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று நகராட்சிகளில் போட்டியிட்டவர்களில் 3,884 பேர் தேர்தல் கணக்கைக் காட்டவில்லை. அவர்களும் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

வாக்காளர்களுக்கு உள்ளாட்சி தேர்தல் குறித்த முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் மாணவர்கள் குறிப்பாக, கல்லூரி மாணவர்கள் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்ச்சி பிரச்சாரங்களை நடத்தியது, நாட்டிலேயே முதல் முதலாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்தான்.

மாவட்ட தேர்தல் அதிகாரி, மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து 'சிடி' ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றியத் தகவல்களை வாக்காளர்கள் தெரிந்து கொள்ளும் முறையைப் பெரும்பாலான மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்துக்கள், கல்வித் தகுதி பற்றி எல்லாம் வாக்காளர்கள் தெரிந்து கொள்ள முடியும். வேட்பாளர்கள் பற்றிய முழு விவரங்களையும் வாக்காளர்கள் தெரிந்து கொள்ளும் முறை 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடக்கும் உள்ளாட்சித் தேர்தலின்போது அமல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இளம் தலைவர்கள் அனுபவம் பெறவும் மக்களுக்குச் சேவை செய்யவும் வாய்ப்பை வழங்கி, அவர்களை அரசியல்வாதிகளாக உருவாக்கும் வேலையைச் செய்வதில், உள்ளாட்சி அமைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்த நிலையில் சரியான நடைமுறைகளைக் கொண்டு வருவது அவசியமானதாகும். நியாயமாக, சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவது உங்களது கைவசம் உள்ளது. ஜனநாயகத்தின் வேர்களைப் பாதுகாக்கும் பணியில் உள்ள தேர்தல் ஆணையர்களுக்குத் தெளிவான முறையில் தேர்தலை நடத்துகின்ற பொறுப்பு பெரிய சவாலாக உள்ளது.

பரந்த அறிவையும், சிறப்பான நிருவாக அனுபவத்தையும் பெற்றுள்ள தேர்தல் ஆணையர்கள் மிகவும் உயர்ந்த மரியாதைக்கு உரியவர்கள். அரசியல் சட்ட அலுவல்களைச் சிறப்பாக நீங்கள் செயல்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்த மாநாடு வெற்றிபெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் கிடைக்கும் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதால் கிடைக்கும் பயன் உள்ள அர்த்தமுள்ள ஆக்கப்பூர்வமான நல்ல முடிவுகளால் எதிர்காலத்துக்குத் தேவையான நடவடிக்கை எடுக்க இயலும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

---

*(8–11–2005 அன்று,*
*சென்னை தலைமைச் செயலகத்தில்,*
*4ஆவது அகில இந்திய மாநிலத் தேர்தல் ஆணையர்கள்*
*மாநாட்டைத் துவக்கிவைத்து*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* **ஜெ ஜெயலலிதா** *அவர்கள், ஆற்றிய*
*ஆங்கில உரையின் தமிழாக்கம்)*

# சர்வதேச விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் தேர்வு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9–11–2005 அன்று, தலைமைச் செயலகத்தில், சர்வதேச விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டதற்குரிய ஆணைகளை நேரில் வழங்கி வாழ்த்தினார்கள்.



தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று விருதுகளைத் தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த திட்டம் 1991–1996ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2001ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறுச் சாதனைகளை சர்வதேச அளவில் நிகழ்த்துவதற்காக, திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.



மேலும், தற்போது எஸ்.ராதிகா, ஏ.ஜெஸ்ஸி, பி.லக்ஷ்மி (தடகளம்), ஆர்.விஜய் ஆனந்த் (பேட்மிண்டன்), ஏ.சிவபாலன், என்.செந்தில்குமார் (ஹாக்கி), சிருஷ்டி (ரோலர் ஸ்கேட்டிங்), ஆர்.பிரித்விராஜ் தொண்டைமான், ஆர்.வெங்கட்ராம் (துப்பாக்கி சுடுதல்), கே.திவாகர், என்.வெங்கடேஸ்வரன், யு.அதிதி மாளவிகா (நீச்சல்), பி.அபராஜிதா, ஏ.அனகா (ஸ்குவாஷ்), என்.விஜய் சுந்தர் பிரசாந்த், நித்யேஷ் நட்ராஜ், என்.ஸ்ரீராம் பாலாஜி (டென்னிஸ்) மற்றும் கே.ஷாமினி, ஜி.சத்தியன், கே.ஐஸ்வர்யா (டேபிள் டென்னிஸ்) ஆகிய 20 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்த 20 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய ஆணைகளை, 9–11–2005 அன்று நேரில் வழங்கினார்கள். அப்போது, எதிர்காலத்தில் பங்குபெற உள்ள பன்னாட்டுப் போட்டிகள் அனைத்திலும் மகத்தான வெற்றி பெற்று, நாட்டுக்குப் புகழ் சேர்க்க வேண்டும் என்று தனது வாழ்த்துகளை அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். ★



# உலமாக்கள் ஓய்வூதியம் 50 சதவிகிதம் உயர்வு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**



**மா**நில வக்ஃபு வாரியத் தலைவர்கள் மற்றும் தலைமை நிருவாக அதிகாரிகளின் மாநாட்டை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மாநில வக்ஃபு வாரியங்களை வலுப்படுத்துவது, செயல் பாடுகளில் முன்னேற்றம் காணுதல், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு வாரியச் சொத்துக்களை மீட்டுக் கையகப் படுத்துவதில், வக்ஃபு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவது உட்பட பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறித்து இந்த தேசிய மாநாடு விவாதிக்க இருக்கிறது.

1995–ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தை அமல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கு முற்போக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். தமிழக வக்ஃபு வாரியம் எடுத்துள்ள முயற்சிகள் அனைத்தும் இந்த மாநாட்டில் விளக்கப்படும் என்று நம்புகிறேன். இது மற்ற வக்ஃபு வாரியங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். வக்ஃபு அமைப்புகளும், வக்ஃபு வாரியங்களின் செயல்பாடுகளும் இந்திய மதச்சார்பின்மையின் சிறந்த வெளிப்பாடு ஆகும். ஏனெனில், அவை உதவி தேவைப்படும் முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காக தர்ம காரியங்கள் செய்யப் பாடுபடுகிறது.

### சிறுபான்மை மக்களுக்கு உதவி

கடவுளின் பெயரால் சொத்துக்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் இருந்து வரும் இலாபம் மனிதகுலத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது நபிகள் நாயகத்தின் புனிதமொழி ஆகும். அதாவது தருமம் என்பதின்

உண்மை அளவுகோல் குரானில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது.

*நீங்கள் விரும்புகிறவற்றிலிருந்து (கடவுளுக்காக) நீங்கள் செலவு செய்கிறவரை நீங்கள் நன்மையைப் பெற்றுக் கொள்ளவே மாட்டீர்கள். எந்தப் பொருளை (அவ்வாறு) நீங்கள் செலவு செய்தாலும் நிச்சயமாக கடவுள் அதனை முற்றும் அறிந்தவராக இருக்கிறார்.*

*(3:92)*

அதற்கு ஏற்ப வக்ஃபு உருவாக்கப்பட்டது. இஸ்லாத்தின் மையக் கருப்பொருளே சமத்துவம்தான். மதகாரியங்களுக்காகத் தங்களது சொத்துக்களை அளிப்பதன் மூலம் இறையருள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் மட்டுமல்லாமல் ஏழைகளுக்கு தர்ம காரியங்களைச் செய்வதற்காக இந்த முறை உருவாக்கப்பட்டது. சிறுபான்மை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதை நமது அரசியல் சட்டச் சிற்பிகள் உணர்ந்திருந்தனர்.

1995ஆம் ஆண்டு வக்ஃபு சட்டமானது சில அதிகாரங்களை, இந்த வாரியத்துக்கு வழங்குகிறது. இந்தச் சட்டத்தின் மூலம் மாநில அரசு வக்ஃபு வாரியங்களின் செயல்பாடுகளைக் கவனிப்பதற்கு அதிகாரம் வழங்குகிறது.

சிறுபான்மையினரின் நலனுக்காக நடவடிக்கை எடுக்கவும் – வக்ஃபு வாரியத்தை முறையாக நிருவாகம் செய்ய சிறந்த நிருவாகக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அரசியல் சட்டத்தின் குறிக்கோளின்படி சிறுபான்மையினரின் நலனுக்காக இந்த முக்கியமானப் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. வக்ஃபு வாரியமானது வக்ஃபு நிறுவனங்களை மட்டும் நிருவாகம் செய்யும் என்ற கருத்து உலவுகிறது.

முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காக நடவடிக்கை எடுக்கவும் – அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சமுதாயத்தினை உறுப்பினர்களாகக் கொண்டு ஜமாத் என்ற அமைப்பு வக்ஃபு வாரியத்தால் நிருவாகம் செய்யப்படுகிறது. இதனால் வக்ஃபு வாரியத்தின் முக்கியமான செயல்பாடு முஸ்லிம் சமுதாயத்தின் நலனுக்காக இருந்து வருகிறது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு வாரியச் சொத்துக்களை மீட்பது குறித்து, இந்த மாநாட்டில் விவாதிக்க இருப்பதாக தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவி மூலம் அறிந்தேன். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்டு எடுப்பதன் மூலம் வக்ஃபு வாரியத்திற்கு வருவாய் பெருகும். பொருளாதார ரீதியாக அதன் செயல்பாடுகளும் அதிகரிக்க முடியும்.

## மாநில அரசு உதவி

வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டபோது சொத்துக்கள் பற்றிய அனைத்து உரிமைகளும் வக்ஃபு வாரிய நிறுவனருக்கோ அல்லது இறைவனுக்கோ வரையறுக்கப்பட்டுள்ளது. வக்ஃபு வாரியம் உருவாக்க குறிப்பிட்ட சொத்து தேவை என்பது குறிப்பிடப்படவில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பல ஆண்டுகளாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பெரும்பான்மையான சொத்துக்கள் ஆக்கிரமிப்பு மற்றும் பலவகைகளில் இழக்கப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் முஸ்லிம் சமுதாயத்தினருக்கு இது வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சொத்துக்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது வக்ஃபு வாரியத்திற்கு மாநில அரசு உதவ வேண்டுமென்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு வாரிய சொத்துக்கள் கணக்கெடுக்கப்






பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள வக்ஃபு வாரியச் சொத்துக்களை மீட்க எனது அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும். தேவையான ஆதரவும் அளிக்கப்படும். இதன் மூலம் வக்ஃபு வாரியங்களின் தர்ம காரியங்கள் சிறப்பாக நடைபெற இஸ்லாமிய சமுதாயத்திற்காக மாநில அரசு உதவி செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மை மக்கள் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை எனது அரசு அமல்படுத்தியுள்ளது.

மசூதிகள் மற்றும் தர்க்காக்களை புதுப்பிக்க எனது அரசு 2 கோடியே 10 இலட்சம் ரூபாயை வக்ஃபு வாரியம் மூலம் ஒதுக்கியுள்ளது. மயானங்களைச் சுற்றி காம்பவுண்டு சுவர் மற்றும் முள்வேலி அமைக்க அரசு உதவி செய்யும்.

## வக்ஃபு வாரியத்திற்குக் கட்டடம்

தமிழக வக்ஃபு வாரியத்தின் செயல்பாடுகள் நல்ல முறையில் அமைய தமிழ்நாடு வக்ஃபு வாரியத்துக்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழக வக்ஃபு வாரியத் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் கணினிமயமாக்குதல், இயந்திரமயமாக்கல், தானியங்கிக் கருவிகள் அமைக்க 18 கோடியே 50 இலட்சம் ரூபாயை நான் வழங்கியுள்ளேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஓய்வு பெற்ற உலமாக்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. மாதம் 500 ரூபாய் வீதம் 1,804 ஓய்வு பெற்ற உலமாக்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதற்காக ஆண்டுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு ஆகிறது. இந்த ஓய்வூதியத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தனர். தேசிய – மாநில வக்ஃபு வாரிய மாநாட்டில் உலமாக்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியத்தை 750 ரூபாயாக உயர்த்தி அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இதற்கு

அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவாகும்.

**முஸ்லிம் இளைஞர்கள் – பெண்களுக்கு உதவி**

விவாகரத்து ஆன முஸ்லிம் பெண்கள் செலவுக்கு உதவுவதற்காக தமிழக வக்ஃபு வாரியத்துக்கு, எனது அரசு 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

முஸ்லிம் இளைஞர்களும், பெண்களும் சுய தொழில் செய்ய எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ், 1000 முஸ்லிம் இளைஞர்களுக்கு வேலை சார்ந்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் சுயதொழில் தொடங்க 25,000 ரூபாய் கடன் வழங்கப்படும். கோவை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங்களில் முஸ்லிம் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களுக்காகத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் இதன் மூலம் 121 முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வழங்க ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நான் 1992–ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். இது தமிழ்நாட்டில் ஒரு அமைதிப் புரட்சியாகும். இந்தத் திட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான பெண்கள் வாழ்வில் வளம் பெற்றார்கள். தற்போது தமிழ்நாட்டில் 2 இலட்சத்து 60 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இதில் 43 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சுய உதவிக் குழுவினர் 810 கோடியே 51 இலட்சம் ரூபாய் சேமிப்பு வைத்திருக்கிறார்கள். இந்த சுயஉதவிக் குழு முஸ்லிம் பெண்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியது. மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 45,979 முஸ்லிம் பெண்கள் உள்ளனர். இந்த சுய உதவிக் குழுக்களில் மற்ற பிரிவினரும் இருப்பதால் சமூக அமைதிக்கு வழிவகுக்கும்.

ஏழை, எளிய முஸ்லிம் பெண்கள் வாழ்வில் முன்னேற அவர்களுக்கு நிதி நிறுவனங்கள் மூலம் சிறு கடன்கள் வழங்கப்பட்டது. இதனால் இந்தத் திட்டத்தில் உள்ள பெண்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்குச் சிறப்பான கல்வி பெறுவதற்கு வழிவகைகளை உருவாக்கியிருக்கிறது. சிசுக் கொலையைத் தடுத்திருக்கிறது.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1998–ஆம் ஆண்டு கோவையில் வெடிகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்தன. அப்போது கோவை நகரப் பொருளாதாரமே நிலை குலைந்தது. பாதுகாப்பு இல்லாத உணர்வு ஏற்பட்டது. பொருளாதார மறுவாழ்வு ஏற்படவும் முஸ்லிம் பெண்கள், இளைஞர்கள் சுயதொழில் செய்யவும், கோவை நகரம் மற்றும் கோவை மாவட்டம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்தேன். எனது அரசு எடுத்த நடவடிக்கை மூலம் நிலைமை சீரானது.

**சுயதொழில் செய்ய கடன் உதவி**

கோவை மாவட்டத்தில் முழுக்க முழுக்க முஸ்லிம் பெண்களைக் கொண்ட 322 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. முஸ்லிம் பெண்களும் இடம் பெற்ற 140 பொதுவான சுயஉதவிக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்த சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் செய்ய 37 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. அவர்களது திறமையை வெளிக்கொண்டு வர பெயிண்டிங், எம்ப்ராய்டரி, மெழுகுவர்த்தி செய்தல், அகர்பத்தி தயாரிப்பு, காலணிகள் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.



கோவை நகரில் கோட்டைமேடு மற்றும் அல் அமீன் காலனியில் உள்ள 450 முஸ்லிம் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 13 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. சுயதொழில் செய்ய கூட்டுறவு வங்கிகள் மூலம் முஸ்லிம் இளைஞர்களுக்கு கடன் வழங்கப்பட்டது. 135 முஸ்லிம் இளைஞர்களுக்கு ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்பட்டது.

சிறுபான்மை மக்களுக்கு உதவுவதிலும் மத்திய அரசிடம் இருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்று தருவதிலும் எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**ஹஜ் பயணிகளுக்கு உதவ நடவடிக்கை**

ஹஜ் பயணம் செல்ல தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான பேர் ஆர்வத்துடன் முன்வந்தனர். அதாவது 3,900 விண்ணப்பங்கள் வந்தன. ஆனால், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 3,004 பேர் செல்ல அனுமதி அளித்தது. எனவே, விண்ணப்பம் செய்த மற்றவர்கள் ஏமாற்றம் அடைவார்கள் என்பதற்காக அனைவருக்கும் ஹஜ் பயணம் செல்ல நடவடிக்கை எடுத்தேன். மத்திய வெளி விவகார அமைச்சருக்கு இது சம்பந்தமாக நான் கடிதம் எழுதினேன். தமிழ்நாட்டில் இருந்து ஹஜ் பயணம் செல்ல விண்ணப்பித்த அனைவருக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நான் கடிதம் எழுதினேன். இதனை ஏற்று 2006–ஆம் ஆண்டு ஹஜ் பயணம் செய்ய விண்ணப்பித்த 3,900 ஹஜ் பயணிகளுக்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியது.

முஸ்லிம் சமூகத்தின் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் முன்னேற்றமானது கல்வியின் மூலம் மட்டுமே அடைய முடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

**“சிறுபான்மை மக்களுக்கு உதவுவதிலும் மத்திய அரசிடம் இருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்று தருவதிலும் எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.”**

கல்வி, எழுத்தறிவு ஆகியவற்றை வழங்குவதில் குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு வழங்குவதில் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் தனது நடவடிக்கைகளை அதிகப்படுத்த வேண்டும். பெண்கள் முன்னேற்றத்துக்கு இது முக்கியமாகும்.

பெண்கள் முன்னேற்றத்தில் எனது அரசு காட்டி வரும் உறுதிப்பாட்டை விளக்குவதில் நான் பெருமைப்படுகிறேன். 2002–ஆம் ஆண்டு தமிழக வக்ஃபு வாரியம் மறுசீரமைக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் தலைவராக ஜனாபா பதர் சையது என்ற பெண் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**சமுதாய நல்லிணக்கம்**

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் பெண்கள், குழந்தைகளுக்கு தமிழ்நாடு வக்ஃபு வாரியம் சிறந்த சேவைகளைச் செய்து வருகிறது என்பதை



நான், பெருமையுடன் குறிப்பிடுகிறேன். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் பொருளாதார நிலை திருப்திகரமாக உள்ளது. அதன் வருமானம் ரூ.1.60 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. ஆக்கிரமிப்புகள் மூலம் ஏற்பட்ட பல்வேறு சட்டச் சிக்கல்களில் இருந்து தனது சொத்துக்களை வக்ஃபு வாரியம் பாதுகாத்துக் கொள்ளும். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் ஏற்பாட்டின்படி மாநிலத்தில் உள்ள 12 தர்க்காக்களில் அன்னதானத் திட்டமும், ஏழைகளுக்கு இலவச உணவு திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் நான் துவக்கி வைத்த கோவில் அன்னதானத் திட்டத்திற்குப் பரவலாகப் பாராட்டு கிடைத்தது போன்று இத்திட்டமும் பிரபலமடைந்தது. அதே வழியில் தர்க்காக்களிலும் அன்னதானம், இலவச உணவு திட்டம் அமல் படுத்தப்பட்டு வருகிறது. மதமாச்சர்யம் இல்லாமல் சமுதாய நல்லிணக்கத்திற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கடந்த ஆண்டு டிசம்பர் 26–ஆம் தேதி தமிழகக் கடலோரப் பகுதிகளை சுனாமி உலுக்கியது. பேரழிவு ஏற்பட்ட அதே நேரத்தில் மாநிலத்தில் உள்ள ஏராளமான தர்க்காக்கள் சுனாமி நிவாரண – மீட்பு நடவடிக்கைகளை மின்னல் வேகத்தில் எடுத்து உதவியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்காக என்னுடைய பாராட்டுகளையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் ஆகிய இடங்களில் உள்ள பல்வேறு தர்க்காக்களும், நாகூர் மற்றும் செங்கல்பட்டில் உள்ள பல்வேறு தர்க்காக்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டன.

### சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக் கானவர்களுக்கு புகலிடம் அளித்துள்ளன.





உணவு அளித்து உயிர்காத்தன. மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்டு மனிதநேயத்தோடு தர்க்காக்கள் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. மேலும் சுனாமி பாதித்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் பொருளாதார மறுவாழ்வுக்கும் உதவி அளிப்பதில் தர்க்காக்கள் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. மதச் சார்பின்மையை நாம் ஊக்குவித்து வருகிறோம். அதைக் காப்பாற்றி வருகிறோம் என்பதற்கு இதுவும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். எனது அரசின் நடவடிக்கையால் சிறுபான்மையினர் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். பத்திரமாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டு டிசம்பர் 15–ஆம் தேதி என்னுடைய அரசு, மாநில சிறுபான்மையினர் ஆணையத்தை திருத்தி அமைத்தது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் இந்த சிறுபான்மையினர் ஆணையம் நேரில் செல்கிறது. சிறுபான்மைச் சமூகம் மற்றும் நிறுவனங்களிடமிருந்து மனுக்களைப் பெற்று வருகிறது. அவர்களின் கோரிக்கைகளைத் தனிப்பட்ட முறையில் கேட்டு வருகிறது. அவர்கள் எழுப்பி வரும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அரசின் அறிக்கைகளைப் பெற்று வருகிறது. அவர்களது நல்வாழ்வுக்கான திட்டங்களை வெற்றிகரமாக அமல்படுத்துவதில் ஆக்கப்பூர்வமான யோசனைகளை அரசுக்கு அளித்து வருகிறது. உரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

பொது வாழ்க்கையிலும், பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் இஸ்லாமிய சமுதாயம் தங்களை வித்தியாசப் படுத்தி தங்களது சிறப்பை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறது. மிகச்சிறந்த நீதிபதிகள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் ஆகியோரை உருவாக்கியிருக்கிறது. இவர்கள் தமிழ்நாட்டிற்கு பெரும்புகழையும், பாராட்டையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு உதவுவதிலும், நலிந்த பிரிவினரின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் அறக் கட்டளைகள் மூலம் இஸ்லாமிய சமுதாயம் ஆற்றி வரும் பணிகள் அளப்பரியது.

இந்த தேசிய மாநாட்டில் விவாதிக்கப்படும் விஷயங்கள் மூலம் வக்ஃபு வாரியம் இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இன்னும் சிறப்பான

முறையில் செயல்பட வேண்டும். உரிய சட்டத் திருத்தங்களை வகுப்பதன் மூலமும் காலவரையிலான செயல் திட்டத்தை வகுப்பதன் மூலமும் இன்னும் சிறப்பாகச் செயல்பட வழிகாண வேண்டும்.

இஸ்லாமியச் சமூகத்தில் ஏழைப் பிரிவினருக்கான உதவித் திட்டத்தை, குறிப்பாக மகளிருக்கான திட்டத்தை அமல் படுத்துவதிலும், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை மீண்டும் கைப்பற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**மதநல்லிணக்கத்தின் சின்னம்**

நில இயலில், இனத்தில், கலாச்சாரத்தில், மதத்தில் பன்முகங்களைக் கொண்ட தொன்மையான நாகரிகம் தான் இந்தியா. நம் நாட்டின் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொள்ளும்போது உயிர்த்துடிப்பான மத நல்லிணக்கத்தின் மூலமே நம் நாட்டின் ஒற்றுமையைப் பேண முடியும். நமது சமுதாயத்தில் உள்ள பல்வேறு சமூகங்களின் பலதரப்பட்ட கலாச்சார, மதக் கோட்பாடுகளின் கலவைதான் இந்தியாவின் மதச்சார்பின்மை. நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள பல்வேறு மதங்கள் ஒன்றாக வாழ்வதுதான் `சர்வ தர்மா சம்பவா` என்கிற தத்துவமாகும்.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு தனி இடத்திற்கான உரிமையுண்டு. எந்த ஒரு மதமும், மற்றொரு மதத்தின் இடத்தில் ஊடுருவ முடியாது. அவ்வாறு ஊடுருவவும் கூடாது. பெரும்பான்மை சமூகத்தால் அனுபவிக்கப்படும் அனைத்து உரிமைகளையும் சிறுபான்மை சமூகமும் அதே அளவு அனுபவிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கடமையை மதச்சார்பற்ற நமது அரசியலமைப்பு நமக்கு வழங்கியுள்ளது. இந்திய சமுதாயத்தின் பன்முகங்களின் சாராம்சத்தைப் புரிந்துக் கொண்டு மதங்களுக்குச் சுதந்திரம் வழங்குவதோடு மட்டுமல்லாமல் சட்டத்தை நிலைநிறுத்துகின்ற, அறிவியல் தொழில் நுட்பத்தை வளர்க்கின்ற, ஏழைகளின் மேம்பாட்டிற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய பெண்களுக்கு உண்மையான சமூக உரிமை வழங்கக்கூடிய ஒரு நவீன இந்தியச் சமுதாயத்தை உருவாக்குவதில் அரசு முக்கியப் பங்காற்ற வேண்டும் என நான் கருதுகிறேன்.

**“பெண்கள் முன்னேற்றத்தில் எனது அரசு காட்டி வரும் உறுதிப்பாட்டை விளக்குவதில் நான் பெருமைப்படுகிறேன். 2002–ஆம் ஆண்டு தமிழக வக்ஃபு வாரியம் மறுசீரமைக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் தலைவராக ஜனாபா பதர் சையது என்ற பெண் நியமிக்கப்பட்டிருக்கிறார்.”**

மத, கலாச்சார, மொழி ரீதியான ஒற்றுமைக்கு அடையாளமாக தமிழ்நாட்டில் வசிக்கின்ற சிறுபான்மையினர் மத்தியில் உள்ள பாதுகாப்பு உணர்வை வலுவூட்டி தமிழ்நாடு ஒரு அமைதியான, சாந்தமான, முற்போக்கான மாநிலம் என்பதை நிலைநிறுத்தி அனைவருக்கும் இடம் வழங்கக்கூடிய முற்போக்கான, நவீன தமிழ்நாட்டை மதநல்லிணக்கத்தின் சின்னமாக உருவாக்குவதே எனது இலட்சியமாகும். தேசிய மாநாடு வெற்றி பெற என்னுடைய இதயங்கனிந்த வாழ்த்துகள்.

**– சென்னை கலைவாணர் அரங்கத்தில், 15.11.2005 அன்று நடைபெற்ற, அகில இந்திய வக்ஃபு வாரியத் தலைவர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**



# ஜப்பானியர்களுக்காக சென்னையில் தனி நகரியம் அமைப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



**ஜ**ப்பான் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான ஃபுகியோகா நகரில் இருந்து இந்தியாவில் முன்னேறிய மாநிலமான தமிழ்நாட்டுக்கு நீங்கள் வருகை தந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவும், ஜப்பானும் பொதுவான பல்வேறு விஷயங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிறோம். இது வெற்றியடைய வேண்டும் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து அமைந்த உறவாகும்.

ஜப்பான் நாட்டுப் பிரதமர் ஜூனிசிரோ கோய்சுமி கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவுக்கு வருகை தந்த போது, புதிய ஆசியாவின் சகாப்தத்தில் இந்தியா – ஜப்பான் கூட்டுறவு, இந்திய – ஜப்பான் உலகளாவிய கூட்டுறவு போன்ற கருத்துகளின் அடிப்படையில் கூட்டறிக்கை ஒன்று இருநாடுகளுக்கிடையே கையெழுத்தானது. நம்முடைய கூட்டு முயற்சியானது நீண்டகால அடிப்படையில் அரசியல் – பொருளாதாரம் மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகளில் மேலும் மேலும் வெற்றிகளைக் குவிக்கும் வகையில் ஓர் உறவுப் பாலமாக அமைந்துள்ளது.

ஜப்பானில் இருந்து வலிமை வாய்ந்த இந்தக் குழுவினர் வந்திருப்பது இரு நாடுகளுக்கும் நீண்ட காலப் பயனுள்ள பயணத்தின் முதல் படி ஆகும். பலம் வாய்ந்த ஜப்பான் நாட்டின் நலன் மீது இந்தியா அக்கறை கொண்டுள்ளது. அதேபோல இந்திய நாட்டின் நலனில் ஜப்பான் அக்கறை கொண்டுள்ளது.

இந்திய–ஜப்பானின் உலகளாவிய ஒத்துழைப்பு, நல்லெண்ண நடவடிக்கைகள் மற்றும் கூட்டுறவு இவற்றில் முக்கியமாக எட்டுப் பகுதிகள் அடங்கியுள்ளன.

1. உயர்ந்த மற்றும் தரமான இருதரப்புப் பேச்சுவார்த்தை அமைப்பு.
2. பரவலானப் பொருளாதார ஒத்துழைப்பு.
3. கூட்டுப் பாதுகாப்பு
4. அறிவியல் தொழில்நுட்பக் கூட்டுமுயற்சிகள்
5. பண்பாடு மற்றும் கல்வித்துறையில் பரஸ்பர உறவு முயற்சிகள்
6. புதிய ஆசிய சகாப்தத்தை உருவாக்குவதில் ஒத்துழைப்பு
7. ஐ.நா.சபை மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு.

8. உலகளாவிய வாய்ப்பு மற்றும் சவால்களை எதிர்கொள்வதில் ஒத்துழைப்பு, இவை அனைத்திலும் இந்திய–ஜப்பான் அரசுகளின் ஒத்துழைப்பு பூரணமாக அமைந்துள்ளது.

முதலீடுகளிலும், தொழில் நடவடிக்கைகளிலும் இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த – செயல்படுத்த இந்திய – ஜப்பான் கூட்டு ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு நல்கி மாற்றங்களை ஏற்படுத்தவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிக வெளிநாட்டு முதலீடுகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

நம் இரு நாடுகளுக்கிடையே உள்ள இந்தக் கூட்டுறவு மேம்படுவதற்காக நான் தனிக்கவனம் செலுத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதித்துறையில் மூத்த செயலாளர்கள் இந்தத் தூதுக்குழுவில் இணைக்கப்பட்டார்கள். அவர்கள், ஜப்பான் நாட்டின் பல்வேறு நகரங்களில் ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்வாறாக அவர்கள் ஒஸாகா, ஹிரோஷிமா, குயோடோ, கோப், ஃபுகியோகா, நகோயா, யோகோஹாமா மற்றும் டோக்கியோ போன்ற நகரங்களில் ஆய்வு செய்தார்கள்.

விவாதம் – கருத்தரங்குகள் நடத்தி தமிழக நிலை பற்றி எடுத்துரைத்தார்கள். இந்த ஆய்வுகளிலும் கருத்தரங்குகளிலும் வர்த்தக அமைப்புகள், அரசு அதிகாரிகள், தொழில் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

அவர்களின் பயணம் இனிதாக நிறைவேறி யிருக்கிறது என்பது உங்களின் வருகையில் இருந்தே தெரிய வருகிறது. இதற்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, ஃபுகியோகா நகர மேயர் தலைமையிலான குழுவினர் இங்கு வருகை தந்திருப்பது சிறப்பு. இந்தச் சந்திப்பும் முயற்சிகளும் நல்ல தொடக்கமாகும். இது மேலும் தொடரும்.

சமீப காலத்தில் தமிழ்நாட்டிற்கு அந்நிய முதலீடு பெருமளவில் வந்து குவிந்துள்ளது. சட்டம்–ஒழுங்கு திருப்தியாக உள்ளது. அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் உள்ளன. திறமையான நிபுணர்கள் உள்ளனர். தொழிலாளர்களும் தேவையான அளவுக்கு இருக்கிறார்கள். தொழிலாளர் உறவும் நன்றாக உள்ளது. எனவே, அந்நியத் தொழில் முதலீடு அதிகமாக வருகிறது. அந்நியத் தொழில் முதலீடு செய்ய அனைத்து வசதிகளும் இங்கு இருப்பதால் சர்வதேச நிறுவனங்கள் இங்கு தொழில் முதலீடு செய்ய வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இந்தியாவில் முதன்மையான இடத்தை எனது தலைமையில் உள்ள தமிழ்நாடு பெற்று சிறப்புடன் திகழ்கிறது. அனைத்து வசதிகளையும் நான் ஏற்படுத்தி உள்ளேன்.

தகவல் தொழில்நுட்பத் துறையிலும் தமிழகம் பிரமிக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது. மிகப்பெரிய மற்றும் அதிநவீனத் தொழில்நுட்பம் கொண்ட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்திருப்பதில் இருந்து இதன் மதிப்பு தெரிய வரும்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 1க்கு ஜப்பான் வங்கி 643 கோடி ரூபாய் ஏற்கெனவே உதவி வழங்கியது. அந்தத் திட்டம் வெற்றிகரமாக முடிந்தது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 2க்கு 2005–2006 முதல் 2012–2013ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட இருக்கிறது. இதற்கு ஜப்பான் வங்கி 567 கோடியே 42 இலட்சம் ரூபாய் உதவி செய்யவிருக்கிறது. இதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டினர் இங்கு தொழில் முதலீடு செய்ய அனைத்து வசதிகள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை ஏற்படுத்தித் தரப்படும். வீட்டுவசதி, கலாச்சார மேம்பாடு, கல்வி, பொழுதுபோக்கு அவர்களுக்குத் தேவையான உணவு வகைகள் கூடிய அனைத்து வசதிகளும் ஜப்பானில் இருப்பது போன்ற ஒரு சூழ்நிலை இங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதேபோன்று ஒரு நகரியம் அமைக்க வேண்டும் என்று ஜப்பான் நாட்டின் தொழில் அதிபர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமாக நான் பேசியிருக்கிறேன். முதலீட்டாளர்கள் விரும்பும் வசதி தரப்படும். சென்னை நகரில் ஒரு குட்டி ஜப்பான் உருவாக்கப்படும். அவர்கள் தங்கள் தாய்நாட்டிலிருந்து வெளியே வந்து விட்டோமே என்று வருந்த வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்குப் பார்த்துக் கொள்ளப்படும்.

இங்கு உள்ள டைடல் தொழில்நுட்பப் பூங்கா, ஐ.ஐ.டி. ஆகியவற்றைப் பார்க்கும்போது உங்களது கேள்விகளுக்கு விடை கிடைக்கும். இங்கு என்னென்ன வசதிகள், திறமைகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியவரும்.

இந்தப் பயணம் மாபெரும் வெற்றி மற்றும் நீடித்த உறவுக்கும் வழிவகுத்துள்ளது என்று உறுதியாக நம்புகிறேன். இந்த நட்பும் – உறவும் மேலும் மேம்பட வேண்டும்; மேம்படும் என்று நம்புகிறேன்.

*– ஜப்பான் நாட்டைச் சேர்ந்த*
*பொருளாதாரத் தூதுக் குழுவின் தலைவரும்*
*ஃபுகியோகா நகர மேயருமான*
*ஹிரோடரோ யாமஸாகி தலைமையிலான*
*பொருளாதாரக் குழுவினரிடம்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* **ஜெ ஜெயலலிதா** *அவர்கள் ஆற்றிய*
*ஆங்கில உரையின் தமிழாக்கம். (7.11.2005)*



# 25 இலட்சம் ரூபாய் மதிப்பில்
# உமறுப்புலவர் மணிமண்டபம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

**ம**க்களால் பெரிதும் நேசிக்கப்படும் தியாக சீலர்கள், நாட்டுக்கு நல்வழி காட்டும் தலைவர்கள், தமிழ்த் தொண்டே உயிர் என வாழ்ந்த சான்றோர்கள் ஆகியோரது பெருமைகள் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினரும், எதிர்காலச் சந்ததியினரும், அவர்களது அருமை, பெருமைகளை உணர்ந்து, ஒரு லட்சியத்துடன் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, நாடு முன்னேறப் பாடுபடவேண்டும் என்பது எனது விருப்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டே, அரும்பெரும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அவர்களது பிறந்த நாளில் மலர் மாலைகள் அணிவித்தல், அவர்களது நினைவாக விழாக்கள் நடத்துதல், நினைவு நாட்களில் மலர் அஞ்சலி செலுத்துதல் போன்ற நிகழ்ச்சிகளை எனது அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதன் அடிப்படையில்தான், தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் அறிவித்தபடி, நலிந்த மக்களின் தனிப்பெரும் தலைவரான திரு.ரெட்டைமலை சீனிவாசன், அரசியலும், ஆன்மீகமும் தனது இரு கண்கள் என வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், வீரபாண்டிய கட்டபொம்மனின் போர்ப்படைத் தளபதி திரு.வெள்ளையத்தேவன், தீரம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர் திரு.சுந்தரலிங்கனார், மொழிஞாயிறு திரு.தேவநேயப் பாவாணர் ஆகியோரது புகழைப் போற்றும் வகையில் நினைவு மண்டபங்களை அமைத்திட இவ்வாண்டு ஜூன் மாதத்தில் நான் ஆணையிட்டேன். மேலும், தினத்தந்தி நாளிதழ் மூலமாக தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, தமிழ்த் தொண்டாற்றிய முன்னாள் அமைச்சரும், பேரவைத் தலைவருமான திரு.சி.பா.ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லம் நினைவிடம் ஆக்கப்படும் என்றும், இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன். இதற்கான பணிகள் யாவும் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள உமறுப்புலவர் வாழ்ந்த நினைவிடம் திரு.பிச்சைக்கோனார் என்பவரால் கி.பி. 1920ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பின்னர், இஸ்லாமிய மக்களிடம் இந்த நினைவிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், தற்போது, அமுதகவி அரசு உமறுப்புலவர் சங்கம் என்ற அமைப்பால் நிருவாகிக்கப்பட்டு வருகிறது என்றும், இதனை அரசே ஏற்று, நல்லமுறையில் சீரமைப்புச் செய்து, மணிமண்டபம் அமைத்திட வேண்டும் என்றும், தமிழ் ஆர்வலர்களும், இஸ்லாமியப் பெருமக்களும் என்னிடத்தில் கோரிக்கை விடுத்தனர்.

அரேபியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறிய சந்ததிகளின் வழியில், அத்தர் முதலான நறுமணப் பொருள் வாணிபம் செய்த செய்கு முகம்மது அலியார் என்பவரது மகனாக, 1642ஆம் ஆண்டு பிறந்த உமறுப்புலவர், எட்டயபுர அரசவைக் கவிஞராக இருந்த கடிகைமுத்துப் புலவரின் மாணவர் ஆவார். இளமையிலேயே சிறந்த புலமை பெற்றவராக விளங்கிய உமறுப்புலவர் தனது 16ஆவது வயதிலேயே எட்டயபுர அரசவைக் கவிஞராக விளங்கிய பெருமை பெற்றவர். முகம்மது நபி (சல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரது பிறப்பு, இளமை, திருமணம், ஆற்றல், வெற்றி ஆகியவற்றை விளக்கமாக எடுத்துக்கூறும் ‘சீறாப்புராணம்’ என்னும் சிறப்புமிகு காவியத்தைப் படைத்த அமுதகவி உமறுப்புலவர் ஆவார். மக்கள் மனதில் இடம் பிடித்த உமறுப்புலவர் அவர்கள், சீறாப்புராணம் மட்டுமன்றி, நொண்டி நாடகம், முதுமொழி மாலை, சீதக்காதிக்கோவை, சீதக்காதி திருமண வாழ்த்து முதலிய நூல்களைப் படைத்துத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர் ஆவார். இந்தப் புகழுக்கும், பெருமைக்கும் ஏற்ற வகையில் இவரது மணிமண்டபம் அமைந்திட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும்.

எனவே, எட்டயபுரத்தில் உமறுப்புலவர் வாழ்ந்த நினைவிடத்தை நிர்வகித்து வரும் அமுதகவி அரசு உமறுப்புலவர் சங்கம் என்ற அமைப்பிடம் இருந்து அரசு இதனைப் பெற்று, அதுமட்டுமின்றி அதனைச் சார்ந்த காலி இடத்தையும் கையகப்படுத்தி, அந்த இடத்தில் புதிய எழிலோடும், பொலிவோடும், 25 இலட்சம் ரூபாய் மதிப்பில், உமறுப்புலவர் மணிமண்டபத்தை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமியக் கலை வண்ணமும், இயற்கை எழில் வண்ணமும் இணைந்த அமைப்பாக உமறுப்புலவர் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின்
அறிக்கை 10–11–2005



# பொறியியல், மருத்துவம் பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதி உதவி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் நேரில் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தங்களது கல்விச் செலவிற்குப் போதிய நிதி வசதி இல்லாது தவித்த பொறியியல் கல்வி பயிலும் 81 மாணவ, மாணவியர் மற்றும் மருத்துவம் அதனைச் சார்ந்த கல்வி பயிலும் 19 மாணவ, மாணவியர் ஆக மொத்தம் 100 மாணவ, மாணவியருக்கு "முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து'' தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் நிதி உதவியினை 9–11–2005 அன்று வழங்கினார்கள்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பயிலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தங்கள் கல்விச் செலவிற்கு நிதிஉதவி செய்யுமாறு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இவர்களது கோரிக்கை மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த 100 மாணவ, மாணவியருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் நிதி உதவியை 19–10–2005 அன்று வழங்கினார்கள்.

தற்போது, பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பயிலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மேலும் பல மாணவ, மாணவியர் தங்களது கல்விச் செலவுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கை மனுக்களை மிகுந்த பரிவு கொண்டு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொருளாதார வசதி இன்றி சிரமப்படும் இவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் என்ற பெருநோக்குடன், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பயிலும் மேலும் 100 மாணவ, மாணவியருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிதி உதவி அளிக்க ஆணையிட்டார்கள்.

இதன்படி, பொறியியல் கல்வி பயிலும் 81 மாணவ, மாணவியர் மற்றும் மருத்துவம் அதனைச் சார்ந்த கல்வி பயிலும் 19 மாணவ, மாணவியர் ஆகமொத்தம் 100 மாணவ, மாணவியருக்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 25 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டார்கள். இதில், 9–11–2005 அன்று தலைமைச் செயலகத்தில், 30 மாணவ, மாணவியருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவியர் அனைவரும் தங்களது குடும்பச் சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதிஉதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

□ □ □



திண்டுக்கல் மாவட்டம்

# நமது கிராமம் திட்டப் பணிகளுக்கு ரூ.4.12 கோடி நிதி ஒதுக்கீடு



**தி**ண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 306 ஊராட்சிகளிலும் நமது கிராமம் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடும் வகையில் பல்வேறு விளக்கக் கூட்டங்களும், கருத்துப் பட்டறைகளும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடத்தப்படுகின்றன. நமது கிராமத் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திய ஊராட்சித் தலைவர்களுக்கு ஊக்கத் தொகை, பரிசு மற்றும் கேடயமும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், நமது கிராமத் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடும் வகையில் 306 கிராம ஊராட்சிகளுக்கும், 24 சிறப்பு கிராம ஊராட்சிகளுக்கும் தலா ரூ.1.25 இலட்சம் வீதம் ரூ.412.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சித் தலைவர்கள், கிராம மக்களின் பங்களிப்புடன் கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்திடவும், வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள இந்நிலையில், மழைநீரை முழுமையாகத் தேக்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பதோடு மழைநீரை வீணாக்காத வண்ணம் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடவும், குடிநீர் ஆதாரத்தைப் பாதுகாப்பதோடு குடிநீரை வீணாக்காத வகையில் குடிநீர்க் குழாய்களில் உள்ள கசிவு மற்றும் அடைப்புகளைச் சரி செய்து கொள்ளவும், ஊராட்சிகளுக்குத் தேவையான மின்சாரத்தை சிக்கனமாகவும், தேவைக்கேற்றபடியும் ஊராட்சித் தலைவர்கள் பயன்படுத்திட, நடவடிக்கையை மேற்கொள்ளவும் ஊராட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் பருவமழைக்கேற்ப அதிகமான மரக்கன்றுகளை மாவட்ட வன அலுவலருடன் தொடர்பு கொண்டு கிராமத்திற்குத் தேவையான, தகுதியான மரக்கன்றுகளை நட்டிடவும், பள்ளிக்குச் செல்லும் வயதுடைய குழந்தைகளையும், இடைநின்ற குழந்தைகளையும் கண்டறிந்து பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவும், குழந்தைத் தொழிலாளர் முறையை திண்டுக்கல் மாவட்டத்தில் முற்றிலுமாக அகற்றிடும் வகையில், ஊராட்சித் தலைவர்கள் போர்க்கால அடிப்படையில் செயல்படவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முழுச் சுகாதார விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்திடவும், கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற சலுகைகளையும், வளர்இளம் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற ஊட்டச்சத்து மாத்திரைகளையும் முறையாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும், மகளிர் சுயஉதவிக் குழுக்களை முறையாகப் பதிவு செய்து பொருளாதார மேம்பாடு அடைய பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியவர், கணவனால் கைவிடப்பட்டவர், விதவைகள் ஆகியோர் அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதோடு, வறுமையில் உள்ளவர்களுக்கு உணவு, உடை, இருப்பிட வசதி போன்ற வசதிகள் கிடைக்கவும், வரதட்சணை, தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி கிராம மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் ஊராட்சித் தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கிராம மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சித் தலைவர்கள் முழுவேகத்துடன் போர்க்கால அடிப்படையில் செயல்படவேண்டும் என "நமது கிராமம்'' திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு நடப்பு ஆண்டுப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

## ரூ.10.90 கோடி மதிப்பில் புதிய கட்டடங்கள்

**பொ**துப்பணித்துறை கட்டடம் மற்றும் பராமரிப்புக் கோட்டத்தின் சார்பில் 2004–2005ஆம் ஆண்டில் திண்டுக்கல் தலைமை அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கம் கட்டும் பணிக்காக ரூ.15.25 இலட்சம் மதிப்பிலும், கொடைக்கானல் அரசு மருத்துவமனையின் தெற்குப் பகுதியில் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணிக்காக ரூ.6 இலட்சம் மதிப்பிலும், வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.2 இலட்சம் மதிப்பிலும், பிணவறைக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.1.50 இலட்சம் மதிப்பிலும், கொண்டநாயக்கன்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டும் பணிக்காக ரூ.12.50 இலட்சம் மதிப்பிலும், கம்பிளியம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ரூ.2 இலட்சம் மதிப்பிலும், நரிக்கல்பட்டி கால்நடைச் சந்தையில் கால்நடை முதலுதவி மையம் அமைக்கும் பணிக்காக ரூ.1.75 இலட்சம் மதிப்பிலும், நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.3 இலட்சம் மதிப்பிலும் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் கே. இராமநாதபுரம், வேம்பார்பட்டி, நெய்க்காரப்பட்டி, மட்டப்பாறை, நத்தம், பழனி போன்ற இடங்களில் சுற்றியுள்ள மாணவ, மாணவியர்கள் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் ரூ.189 இலட்சம் மதிப்பில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்ட சிறைச்சாலை அமைக்கும் பணிக்காக ரூ.214 இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டப்பட்டுப் பணி நிறைவடைந்துள்ளது. அரசுப் பெண்கள் தொழிற்பயிற்சி மையத்தில் அலுவலகம் மற்றும் ஆய்வகத்துடன் கூடிய பெண்கள் தொழிற்பயிற்சி வகுப்பறை கட்டும் பணிக்காக ரூ.61 இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

கே.புதுப்பட்டி, கோசுக்குறிச்சி, கோனூர், சாணார்பட்டி, தொப்பம்பட்டி, பி.சத்திரப்பட்டி, லந்தக்கோட்டை, திருமலைராயபுரம், என்.பஞ்சம்பட்டி, திண்டுக்கல், காசிபாளையம், ஒட்டன்சத்திரம், மார்க்கம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி போன்ற கிராமங்களில் நபார்டு வங்கி உதவியுடன் வகுப்பறைக் கட்டடம், ஆய்வகம், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிக்காக ரூ.590.22 இலட்சம் மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்

## காகிதம்

**அ**றிவியல், வரலாறு, கலை, இலக்கியம் ஆகியவற்றைப் பதிவு செய்யும் காகிதம், ஒரு மாபெரும் அறிவியல் விளைவு ஆகும். ஓலையில் எழுதும் முறை இந்திய முறை. பாபிலோனில் சுட்ட செங்கல் ஏட்டில் எழுதும் முறை இருந்தது. சீனர்களே முதன்முதலில் காகிதத்தை உலகிற்குத் தந்தவர்கள்.

சாய்லுன் என்ற சீன அறிஞர் கி.பி.105ஆம் ஆண்டில் தற்போது நாம் பயன்படுத்தும் காகிதத்தைக் கண்டு பிடித்தார். நவீன காகிதம் தயாரிக்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ராபர்ட். இந்த எந்திரம் 1798ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டது. இன்று விதவிதமான – அழகான வண்ணமிகு காகிதங்கள் தயாரிக்கப் படுகின்றன.



மரக்கூழில் இருந்து காகிதம் தயாரிப்பதை 'தஹல்' என்ற ஜெர்மானியர் 1884ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

## பேனா



**ஓ**லைச்சுவடியில் எழுதிட இரும்பு உலோக எழுத்தாணி இந்தியர்களால் முதலில் உருவாக்கப்பட்டது.

கோரைப்புல்லில் மை ஊற்றி எழுதும் முறையை கிரேக்கர்கள் கண்டுபிடித்தனர். 1884ஆம் ஆண்டில் அமெரிக்காவில், முதன்முதலாக, ஃபவுண்டன் பேனா எனப்படும், மை ஊற்றி எழுதும் பேனாவை வாட்டர்மென் என்பவர் கண்டுபிடித்தார். ஜான் ஜே. லூடு என்பவரால் 1888ஆம் ஆண்டு பால்பாயிண்ட் பேனா கண்டுபிடிக்கப்பட்டது. அது இன்று பலவித ஜெல், மைக்ரோடிப் என விதவிதமாக இலகுவாக எழுதப்படும் வகையில் தயாரிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் மையைத் தொட்டு எழுதும் பேனாதான் உலகில் புழக்கத்தில் இருந்தது.

அதன்பிறகு, மையை நிரப்பி எழுதும் பேனா உருவாக்கப்பட்டது. தங்கு தடை இல்லாது எழுதும் மைக்ரோட்யூப் பேனா இன்று அறிவியலின் புதிய வரவு. எவ்வளவு இருந்தாலும் மை ஊற்றி எழுதும் ஃபவுண்டன் பேனாவிற்கு இருக்கும் மரியாதை தனிச் சிறப்பானதுதான்.



### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்

# ரூ. 53 இலட்சத்தில் புதிய ஏரி அமைக்கும் பணி

**த**ண்ணீரின்றி உலகில் உயிரினம் வாழ முடியாது. மழையின்றேல் தண்ணீர் கிடையாது. உயிரினம் வாழ மழை மிக முக்கியம். மழை எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அந்த மழை நீரைச் சேமிப்பதும் மிக முக்கியமானது.

இதனை நன்குணர்ந்த நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மழை நீர் சேகரிப்பு என்கிற சிறந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இதன் தொடர்ச்சியாகக் கிராமப்புறங்களில் மழை நீரைச் சேகரிக்க, ஏரி, குளங்களை நல்ல முறையில் பராமரித்து, நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் வகையில், வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ், ரூ. 105 கோடி மதிப்பீட்டில், 1,750 ஏரிகள் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, கிராமங்களின் முன்னேற்றம் அவசியம். கிராமங்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படை விவசாயமாகும்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை".

என உழவின் சிறப்புப் பற்றி வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

இத்தகைய உழவுத் தொழில் சிறப்பாகச் செய்யப்பட்டால்தான் கிராம மக்கள் நல்ல முறையில் வாழ முடியும். நாட்டின் பொருளாதாரம் சிறந்து விளங்கும். விவசாயத்திற்கு அடிப்படைத் தேவை நீர் வளம். அண்மைக் காலமாக இயற்கை மாற்றத்தால் நிலத்தடி நீர் வளம் குறைந்து விட்டது. அதன் காரணமாக நில வளமும் குறைந்து விட்டது.

நிலத்தடி நீர் பெருக, மழைக் காலத்தில் பொழியும் மழை நீரைச் சேமிக்க வேண்டும். நகர்ப்புறங்களில் நிலத்தடி நீர் நிலையை உயர்த்த மழை நீர் சேகரிப்பு செயல்படுவதைப் போல, கிராமங்களில், கிராம மக்களின் உயிர் நாடியான ஏரி, குளங்களைத் தூர்வாரி, தூய்மைப்படுத்தி நிரந்தரப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

ஏரிகளில் நீர் நிறைந்திருந்தால் கிராமங்களில் விவசாயம் செழிக்கும். விவசாயம் செழித்தோங்கினால் மக்களின் வாழ்க்கை செம்மையுறும். இதனடிப்படையில், தமிழகத்தில் கிராமப்புறங்களில் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 246 ஊருணிகள் ரூ.7.38 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும், புதிய ஏரிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய செயல்பாட்டின் பேரில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், தோளூர்பட்டி கிராமத்தில், ரூ. 53 இலட்சம் செலவில், புதிய ஏரி அமைக்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. நந்த கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் தொடங்கி வைத்தார்.



தோளூர்பட்டி கிராமத்தில் தலைமலை அடிவாரத்தில் ஆரம்பமாகி சுமார் 5 கி.மீ. தூரத்தில் திருச்சி – சேலம் சாலையில் மேல்புரத்தில், மலைஅடிவாரத்தில் கிடைக்கின்ற 16.64 மில்லியன் கன அடி நீரைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய ஏரி அமைய உள்ளது.

மழைக் காலங்களில் தலைமலை வாரியில் வருகின்ற நீரை இந்த ஏரி அமைப்பதன் மூலம் தோளூர்பட்டி மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவு உணவு உற்பத்தி செய்யலாம். இதன் மூலம் இப்பகுதி மக்களின் வாழ்க்கைதரம் உயரும். இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரூ.53 இலட்சம் செலவில் இத்திட்டப் பணியினை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

புதிய ஏரி அமைக்கும் பணியினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் பேசியதாவது:

“1985ஆம் ஆண்டு முதல் இப்பகுதி மக்களின் கனவுத் திட்டமான தோளூர்பட்டியில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இன்று நனவாகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டபோது பொது மக்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், ரூபாய் 53 இலட்சம் செலவில் புதிதாக ஏரியை அமைத்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இன்று பணி தொடங்கப்படுகிறது.

நடப்பு 2005–2006ஆம் ஆண்டில், மாநில ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் 28 முன்னாள் ஜமீன் ஏரிகளில் ரூபாய் 68 இலட்சம் செலவில், தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில், ஏழை, எளிய மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களின் அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்படுகின்றன.

சிமெண்ட் சாலைகள், முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், தனி நபர் கழிப்பறை, சுற்றுச்சூழலை மேம்படுத்த மரக் கன்றுகள், குடிநீர்த் தொட்டிகள், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், தெருவிளக்கு வசதி, இணைப்புச் சாலை வசதி என பல்வேறு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இந்த ஏரி ரூ.17 இலட்சத்து 97 ஆயிரம் செலவில் 1,350 மீட்டர் நீளத்திற்கு கரையும், ரூபாய் 15 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் 34 மீட்டர் நீளத்திற்கு உபரி நீர் கலிங்கும், ரூபாய் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் செலவில் 1,520 மீட்டர் நீள பாசன மதகுகளும், ரூபாய் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் செலவில் 1,520 மீட்டர் நீள பாசன வாய்க்கால்களும் அமைக்கப்படவுள்ளன. ரூபாய் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் செலவில் வாய்க்கால்களில் 4 குழாய் பாலங்களும், ரூபாய் 5 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் 3,310 மீட்டர் நீளத்திற்கு வரத்து வாரியும் அமைக்கப்படவுள்ளன. ரூபாய் 9 இலட்சத்து 71 ஆயிரம் செலவில் நில ஆர்ஜிதம் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி, ஏரி, குளங்கள் தூர் வாரி பாசன வசதி மேம்பாடு, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் போன்ற பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறார்கள்” இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுப் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. நந்த கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், “இந்த தோளூர்பட்டி புதிய ஏரி அமைக்கும் பணியில் 23.78 ஏக்கர் பட்டா தரிசு நிலங்களும், 14.02 ஏக்கர் புறம்போக்கு தரிசு நிலங்களும் நில ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளன. ஏரியில் 6 அடி உயரத்திற்கு 5.37 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி இங்குள்ள 128.90 ஏக்கர் தரிசு நிலங்களில் மானாவாரி பயிர் செய்ய பாசன வசதி செய்யப்படும்” என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. என். நெடுமாறன், பொதுப்பணித்துறை அரியாறு கோட்ட செயற் பொறியாளர் திரு. ஆர். சண்முக சுந்தரம், உதவி செயற் பொறியாளர் திரு. சி. கண்ணப்பன், ஒன்றியக் குழுத் தலைவர் திரு. டி. ரவிச்சந்திரன், கோட்டாட்சியர் திருமதி. மு. செந்தாமரை, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. தங்கவேலு, தொட்டியம் சிறப்பு ஊராட்சித் தலைவர் திரு. சந்திரன், தோளூர்பட்டி ஊராட்சித் தலைவர் திரு. என். ஆறுமுகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி**

❖ ❖ ❖



# வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பம்

முனைவர் சிவ. சசிரேகா

**வே**ளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கிராமியத் தொழில்கள், சிறுபாசனம், பட்டுப்பூச்சி வளர்ப்பு, சமுதாயக் காடுகள், பால் பண்ணை அபிவிருத்தி, சுய வேலைவாய்ப்பு, அடிப்படை வசதி முன்னேற்றம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே கிராமப்புற வளர்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் வேளாண்மை முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. இன்று பெருகிவரும் மக்கள் தொகை, குறைந்துவரும் நிலப்பரப்பு ஆகிய சூழ்நிலைகளிலும் நம்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம் விவசாயிகள் புதிய வித்துக்களையும், புதிய புதிய அறிவியல் தொழில்நுட்பங்களையும் தமது விவசாயத்தில் கடைப்பிடிப்பதுதான். அவ்வகையில், வேளாண்மையில் புதுமையைக் கையாண்டு கிராமப்புற வளர்ச்சியைக் காண உதவும் உயிரித் தொழில்நுட்பம் (Bio-Technology), துல்லியமான விவசாயம் (Precision Farming), சூரிய ஒளி மின் வேலி (Solar Electric Fence) ஆகியவை பற்றி ஆராயலாம்.

**உயிரித் தொழில்நுட்பம்**

உயிரித் தொழில்நுட்பம் என்ற சொல் 1920–இல் ஐக்கியநாட்டின் “லீட்ஸ்” நகரமன்றத்தால் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. மூலக்கூறு உயிரியல் துறையில் தொழில்நுட்பத்தினை உட்புகுத்தியதன் விளைவாகத் தோன்றியது உயிரித் தொழில்நுட்பம் ஆகும். 21ஆம் நூற்றாண்டில் வேளாண்மையில் உயிரியல் தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்காற்றப் போகின்றது. 20 ஆம் நூற்றாண்டில் பசுமைப் புரட்சிக்குக் குறுகிய காலப்பயிர் இரகங்களும், இரசாயனப் பூச்சிக்கொல்லி மருந்துகளும், உரங்களுமே காரணமாக அமைந்தன. ஆனால் காலப்போக்கில் இவை அனைத்தும் தவறான வழிமுறை என்றறிந்து, விவசாயிகள் பழைய இயற்கை வேளாண்மைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தொழில்நுட்பம் என்பது சமூக, பொருளாதார, சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். இச்சூழ்நிலையில் இயற்கையோடு இணைந்த உயிரித் தொழில்நுட்பம் வரவேற்பைப் பெறுகின்றது.

எந்தவொரு உயிரினத்திலும் அதனுடைய மரபுக்கூறாகிய மரபணுவியல் மாற்றம் அமைத்து, அதன் விளைவாகப் புதிய ஆற்றலை அந்த உயிரினத்திற்கு ஊட்டி, மிகுதிப்படுத்திப் பயனடைவதை உயிரித் தொழில்நுட்பம் எனலாம். ‘வேறு எதை வேண்டுமானாலும் தாமதிக்கலாம்; ஆனால் உணவு உற்பத்தியைத் தாமதிக்க முடியாது’ என்ற பண்டித நேருவின் கூற்றுக்கிணங்க, இப்போதுள்ள உணவு உற்பத்தியை மூன்று அல்லது நான்கு மடங்கு உடனடியாக உயர்த்த, வேளாண்மை உயிரித் தொழில்நுட்பத்தில் ஆற்றல் மிக்க உயிர்த் திசுக்களை உள்ளடக்கிய தாவரங்களைக் கொண்டு பாலினக் கலப்பற்ற இனப்பெருக்கம் செய்தால் உயிரணு மற்றும் மரபணுப் பொறியியல் போன்ற சில சிக்கலான ஆனால், மிகுந்த பயன் தரவல்ல முறைகளின் மூலம் நம் இலக்கை அடைய முடியும் என உயிரியல் அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

**திசு வளர்ப்பு**

சோதனைக் குழாய்களில் ஊட்டச்சத்து நிறைந்த வளர் கரைசல் ஊடகத்தில் தண்டு, இலை, மகரந்தம் போன்றவற்றைச் சீரான தட்பவெப்ப நிலையில்

வளர்க்கும்போது, எந்தவித மாறுபாடும் இல்லாமல் மூலத் தாவரத்தின் அனைத்துப் பண்புகளையும் தம்முள் அடக்கியவாறு முழுமையான செடிகளாக வளர்க்கின்றன. இவை நோய்களை எதிர்க்கும் திறன் பெற்று, பாதகமான சூழ்நிலையிலும் வளரும் வல்லமையும் பெற்றிருக்கும்.



**மரபணுப் பொறியியல்**

மரபணுப் பொறியியல்(Genetic Engineering) என்பது, எல்லையற்ற ஆற்றல் பெற்றதும், பயன்மிக்கதுமான உயிரித் தொழில்நுட்ப முறைகளில் ஒன்றாகும். ஓர் உயிரினத்தின் மரபணுக்களைப் பிரித்தெடுத்து, மற்றோர் மரபணுக்குள் புகுத்துவதை மரபணுப் பொறியியல் என்கிறோம். ஒரு பயிரில் அதன் குணங்களைத் தீர்மானிப்பது அந்தப் பயிரில் உள்ள 'ஜீன்ஸ்' என்னும் மரபணுக்களே. சான்றாக, தக்காளிப் பழம் சிவப்பு நிறமாக இருக்க வேண்டுமென்றால் அதைத் தீர்மானிப்பதும், செயல்படுத்துவதும் மரபணுதான். இதைப் போலவே புரதம் மிகுந்த தானியத்தைத் தருதல், நல்ல உயர் விளைச்சல் தருதல், பூச்சித் தாக்குதலை எதிர்த்துப் போராடுதல், வறட்சியைத் தாங்கி வளருதல் என்று, இப்படிப் பல்வேறு குணங்களுக்கும் மரபணுக்களே காரணம்.

ஒரு பயிரில் ஓர் இரகம் உயர் விளைச்சலைத் தரலாம்; ஆனால், அது நோயினால் தாக்கப்படுவதாக இருக்கும். அதே பயிரில் இன்னோர் இரகம் குறைந்த விளைச்சலைத் தரலாம்; ஆனால், நோயினால் அது தாக்கப்படாமல் இருக்கும். இந்த இரண்டையும் இனச்சேர்க்கை மூலம் கலந்து அவற்றிலிருந்து பெறப்படுகின்ற செடிகளைத் தனித்தனியாக ஆராய்ந்து உயர் விளைச்சலையும், நோய் எதிர்ப்புத் திறனையும் கொண்ட இரகத்தைக் கண்டுபிடிப்பார்கள். இதற்குப் பல ஆண்டுகள் ஆகும். புதிய இரகங்களை உண்டாக்க இந்த இனச்சேர்க்கை முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முறையினால் பயிரின் வளர்காலம் அளவைப் பொறுத்து ஒரு புதிய இரகம் உண்டாக்க அதற்கான காலம் பிடிக்கும். மேலும், விளைச்சலைத் தருகின்ற மரபணுக்கள், பூச்சி மற்றும் நோயை எதிர்க்கும் மரபணுக்கள் தவிர வேறு மரபணுக்களும் இந்தப் புதிய சந்ததியில் கலந்துவிட வாய்ப்பு உண்டு. அவை நன்மையும் பயக்கலாம்; தீமையும் உண்டாக்கலாம். ஆனால் மரபணுவைப் பிரித்தெடுத்துப் பயிர்களுக்கு ஊட்டுகின்ற உயிரியல் தொழில்நுட்பம் நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கின்றது. இதைத்தான் மரபணுப் பொறியியல் என்கின்றோம். இதனால், நோய் அல்லது பூச்சி எதிர்க்கும் சக்தி தாவரத்தில் மட்டுமல்லாது வேறெந்த உயிரினிடத்தில் இருந்தாலும் அந்த மரபணுவைப் பிரித்தெடுத்துப் பயனுக்குக் கொண்டுவர வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையிலேயே உயிரி பூச்சிக்கொல்லி தயாரிக்கப்படுகின்றது.

உயிரி பூச்சிக்கொல்லி என்பது முள்ளை முள்ளால் எடுப்பதுபோல் ஒரு கிருமியை இன்னொரு கிருமியால் கொன்று அழிப்பதாகும். அதாவது, செடிகளைத் தாக்கும் பூச்சிகளை பாக்டீரியா அல்லது வைரஸ் கொண்டு அழிப்பதாகும். சான்றாக, பயிர்களைத் தாக்குகின்ற பூச்சிகளை அழிக்கக்கூடிய விஷ புரதத்தினை உற்பத்தி செய்கின்ற மரபணு உடைய 'பேசில்லஸ் துரிஞ்சியன்ஸ்' எனப்படும் பாக்டீரியாவிலிருந்து அந்த மரபணுவைப் பிரித்தெடுத்து, புகையிலை மற்றும் சோயாச் செடிகளில் புகுத்திப் பயிர்ப் பாதுகாப்பு செய்யப்படுகின்றது. அதுபோல, 'டிரைகோடெர்மா' பூஞ்சாணமே ஒரு பூஞ்சாணக் கொல்லியாகவும் செயலாற்றுகின்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புக்கான மரபணுக்களைப் புகுத்தும் பணி நெல்லில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பருத்தி மற்றும் தக்காளி போன்ற பயிர் வகைகளில் வேற்று மரபணுக்களைப் புகுத்தும் பணியும் துவங்கப்பட்டுள்ளது. எந்தவொரு கருவியையும், புதிய கண்டுபிடிப்பையும் பயன்படுத்தும் முன்னர் நன்மைதான் தருமா, தீமை ஏதும்



பயக்காதா என்று தீர்மானிப்பது அவசியமாகின்றது. அதைப் போலவே மரபணு மாற்றுவிக்கப்பட்ட பயிரை விளைவிப்பதால் ஏற்படும் நன்மை, தீமைகளை ஆராய்ந்துதான் விவசாயிகளுக்குப் பயிர் இரகங்களை வழங்க வேண்டும். இதற்காக மைய அரசு , சோதனைக் கூடத்திலும் சரி; வயல்வெளிகளிலும் சரி; நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இவற்றையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்துதான் ஒரு பயிரினம் வெளிக் கொண்டு வரப்படும். எனவே, மரபணுப் பொறியியலினால் விவசாயத்தில் ஏதாவது ஆபத்துவருமோ என்று அஞ்சிடத் தேவையில்லை.

**20–ஆம் நூற்றாண்டில் உயிரித் தொழில்நுட்பம்**

தமது வளர்ச்சிக்குத் தேவையான தழைச் சத்தினைத் தாமே நிலத்தில் நிறுத்தி வைக்கும் திறன் பெற்ற தாவரங்கள்; இயற்கையாகவே பல வண்ணங்களுடன் கூடிய பருத்திச் செடிகள்; எப்பொழுதும் புத்தம் புதியனவாகத் தோற்றமளிக்கும் மலர்கள்; நீண்டகாலம் சேமித்தாலும் அழுகாத காய்கனி வகைகள்; கூடுதலான ஊட்டச்சத்தும், சுவை தரக் கூடியதும், பன்மடங்கு விளைச்சலைத் தரக்கூடியதுமான நெல், கோதுமை, மக்காச்சோளம் போன்ற உணவுப் பயிர் வகைகள்; காலம், நிலம், மற்றும் தன்மைக்கேற்ற தாவரங்கள்; பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட உயிரினங்கள் எனும் இவை எல்லாம் நாம் கேட்டிராத புதுமைகள். இன்னும் இவை போன்ற விந்தைகள் பலவும் தாவர உலகில் ஏற்பட உயிரித் தொழில்நுட்பமே காரணமாகும். இதன் மூலம் பகுத்தறிவுக்கு ஒத்துவராத பல மூடநம்பிக்கைகளை ஒதுக்கி, பல காட்டுத் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் உள்ள பல :உன்னதமான பண்புகளை (மரபணுக்கள் மூலம்) வேளாண்மையில் உயிரித் தொழில்நுட்பத்தின் மூலம் உட்புகுத்தி, விவசாயிகள் பயனடைந்து முன்னேறிக் கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதுணையாக வேண்டும்.

**துல்லியமான விவசாயம்**

உலக நாடுகளில் அதிக விளைச்சல் பெற, 'துல்லியமான விவசாயம்' என்னும் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாகப் பணப்பயிர்களான முந்திரி, காபி, தேயிலை, ரப்பர் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் இந்த முறை விவசாயம் பெருமளவில் செயல்படுத்தப்படுகின்றது. இதனால் குறைந்த அளவு வேளாண் இடுபொருட்களைக் கொண்டு அதிக அளவு மகசூல் பெற முடியும்.

விவசாய நிலங்களில் பெரும்பகுதியைக் கணக்கில் எடுத்து, அவற்றின் மண்ணின் தன்மை, நீர்வளம், மழையளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டமிட்டுச் செய்யப்படும் விவசாயமே துல்லியமான விவசாயம் எனப்படும். இந்த முறை விவசாயத்தில் முதலில் ஓர் இடத்தைத் தெரிவு செய்துகொண்டு செயற்கைக்கோள் வாயிலாக மண்ணின் தன்மை, நிலத்தடி நீர், வானிலை என அனைத்துத் தகவல்களும் பெறப்பட்டுத் திட்டமிடப்படும். இவ்வாறு திட்டமிடும்பொழுது சந்தை நிலவரங்களையும் ஆய்வு செய்த பின்னர் துல்லியமான விவசாயம் செய்யப்படும். வளங்குன்றிய நிலப்பரப்பில் அதற்கேற்ற பயிர்களும், வளமான பகுதிகளில் அதற்குத் தகுந்த பயிர்களும் பயிரிடப்படும். இதன் மூலமாக, விவசாயிகள் தொலைநோக்கில் செயல்பட்டு அதிக இலாபம் பெறலாம்.

மேலை நாடுகளில் அதிக அளவு நிலப்பரப்பில், அதிக அளவு முதலீட்டில் விவசாயம் செய்யப்படுவதால், இந்தப் புதிய விவசாய முறை வெற்றிகரமாகத் தோட்டப் பயிர் விவசாயத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், இந்தியாவில் தனிநபர் நிலப்பரப்பும், முதலீடும் குறைவு. எனவே, கூட்டுறவு முறையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் துணையுடன் விவசாயிகள் ஒற்றுமையுணர்வுடன் செயல்பட்டால் கிராமங்கள் நிறைந்த இந்தியாவிலும் துல்லியமான விவசாயம் சாத்தியம்தான்; கிராமப்புற வளர்ச்சியும் கைகூடும்.

துல்லியமான விவசாயத்தினால் பெரும் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுவதால் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பங்குபெற்று, குறைந்த அளவில் கட்டணம் செலுத்தி,காப்பீடு பெற்றுப் பயனடையலாம். துல்லியமான விவசாயத்தில் குறைந்த அளவு வேளாண் இடுபொருட்களைப் பயன்படுத்தி அதிக லாபம் பெறும் வகையில் சொட்டு நீர்ப்பாசனம், மழைநீர் சேகரிப்பு போன்ற நவீன வேளாண்மை முறைகள் பயன்படுத்தப்படும். கூட்டுறவு முறையில் செயல்படுத்தப் படுவதால் தேசிய வங்கிகளில் எளிதில் கடன்பெற வாய்ப்பு உள்ளது. செயற்கைக்கோள் பயன்படுத்தப்

படுவதால் மத்திய அரசின் சலுகைகள் மற்றும் ஆலோசனைகளும் இலவசமாகக் கிடைக்கும். இங்ஙனம் நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் தமிழக விவசாயிகளும் ஒற்றுமை உணர்வுடன் செயல்பட்டு, துல்லியமான விவசாயத்தில் ஈடுபட்டு வளம் பெறலாம்.

**சூரியஒளி மின்வேலி**

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் வனவிலங்குகளின் தொல்லை அதிகமாக இருப்பதால் விவசாயிகள் நட்டம் அடைவதுடன், தரமான வேளாண்பொருட்கள் சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க மின் வேலி அமைத்தால் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனைத் தவிர்க்க மேலைநாடுகளில், குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும். "சூரிய ஒளி மின் வேலியை" அமைத்து விவசாயிகள் இலாபம் பெறுவதுடன், தண்டனையிலிருந்தும் தப்பலாம்.

சூரியஒளி மின்வேலி அமைக்க இந்தியத் தரக்கட்டுப்பாடு நிறுவனமும், தமிழ்நாடு முதன்மை மின் ஆய்வாளரும் பல தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர். இந்தப் புதிய முறை மின் வேலியை அமைக்க, சூரியஒளி மின்கலத்தை (Solar Battery) அவர்களிடம் விவசாயிகள் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர், தமது ஊரில் உள்ள வேலி அமைக்கும் நிறுவனங்கள் அல்லது நபர்கள் மூலமாக வேலி அமைத்து, சூரிய ஒளி மின்கலம் மூலமாக மின்சாரத்தைச் செலுத்தலாம். இதன் மூலமாகத் தோட்டக்கலைப் பயிர்களை அழிக்க வரும் வன விலங்குகளிடமிருந்து பயிரைப் பாதுகாக்கலாம். வன விலங்குகள் உயிர்ச் சேதம் ஏற்படுவதும் தவிர்க்கப்படும். வனவிலங்குகளின் பாதுகாப்புச் சட்டம் சூரியஒளி மூலமாக அமைக்கும் மின் வேலிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதனால், பெரும் விபத்து ஏற்பட்டால், விவசாயிகள் தண்டனையிலிருந்து தப்ப முடியும்.

சூரியஒளி மின்வேலியால் மின்சாரக் கட்டணத்தை வெகுவாகக் குறைக்க முடிகின்றது. இறால் பண்ணை, மீன் பண்ணை, கோழிப் பண்ணை ஆகியவற்றிலும் இவ்வேலியைப் பயன்படுத்தலாம். மனிதர்களால் ஏற்படும் திருட்டைத் தடுக்க அறிவிப்பு மணி (அலாரம்) பொருத்தும் வசதியும் உள்ளது. தற்பொழுது தமிழக அரசு செயல்படுத்தி வரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்படி சாகுபடி செய்யப்படும் பல நூறு ஏக்கர் பழத்தோட்டங்களைச் சூரியஒளி மின்வேலி அமைத்து எளிதாகப் பாதுகாக்கலாம். இங்ஙனமான பயன்தரக் கூடிய, அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய முறை சூரிய ஒளி மின் வேலியானது சுகுணா கோழிப்பண்ணை, பாரி அக்ரோ இண்டஸ்டீரிஸ் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்ந்த தோட்டக் கலைப் பண்ணைகளில் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். எனவே, விவசாயிகளும் சூரிய ஒளி மின் வேலி அமைத்து, தமது வேளாண் நிலங்களை விலங்குகள் மற்றும் மனிதர்களிடமிருந்து பாதுகாத்து, வளம் பெறலாம்.

**முடிவுகள்**

வேளாண்மையில் உயர் விளைச்சல், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு வழிவகுப்பதன் மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கு உயிரித் தொழில்நுட்பம் துணை நிற்கின்றது. இவ்வகையில், திசு வளர்ப்பு, மரபணுப் பொறியியல் ஆகியவை விவசாயிகளுக்குப் பயனளிக்க கூடியனவாக உள்ளன.

விவசாயிகள் தொலைநோக்கில் செயல்பட்டு அதிக இலாபம் பெற்று முன்னேற, அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் செய்யப்படும் துல்லியமான விவசாயம் கைகொடுக்கக்கூடியதாக உள்ளது.

சூரியஒளி மின்வேலி அமைப்பதன் மூலம் விவசாயிகள் தமது வேளாண் நிலங்களை விலங்குகள் மற்றும் மனிதர்களிடமிருந்து பாதுகாத்து, இலாபம் பெற்று, முன்னேற அறிவியல் தொழில் நுட்பம் வழிவகுக்கின்றது.

–"**கிராமப்புற வளர்ச்சியும் அறிவியல் தொழில்நுட்பமும்** '' என்ற நூலிலிருந்து...

– வெளியீடு
அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம்

* * *





# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உலக எய்ட்ஸ் தினச் செய்தி



ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் நாள் 'உலக எய்ட்ஸ் தினமாக' அனுசரிக்கப்படுகிறது. இந்நாள், மானுடம் எப்போதும் சந்தித்திராத, ஒரு கொடிய நோயை உலக மக்களுக்கு நினைவூட்டுகிற தினமாகும். தடுப்பு நடவடிக்கைகள், சமுதாயக் கல்வி மற்றும் சமூக ஆதரவு போன்ற நடவடிக்கைகளினால் தான், உலக அளவில் இந்நோய் ஏற்படுத்தி வருகிற ஆழ்ந்த தாக்கத்தைச் சமாளிக்க முடியும்.

"எய்ட்ஸை தடுத்து நிறுத்திடுக – வாக்குறுதியைக் காப்பாற்றுக" என்பது இந்த ஆண்டின் உலக எய்ட்ஸ் தினத்தின் மையக் கருத்து ஆகும். எய்ட்ஸ் நோயைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் இந்நோய்க்கு எளிதில் இலக்காகக் கூடிய மகளிர் மற்றும் சிறாருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் என்னுடைய அரசு பல உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எய்ட்ஸ் நோய் கண்டுள்ள அன்னையருக்கு, எச்.ஐ.வி. இல்லாக் குழந்தைகள் பிறப்பதை உறுதிப்படுத்த, மாவட்ட மற்றும் வட்ட அளவுகளிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் 275 ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. கருவுற்ற மகளிருக்கு இவ்வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

உலக எய்ட்ஸ் தினத்தை ஒட்டி, எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயைத் தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், இந்நோய் கண்டுள்ளவர்களைப் பரிவுடன் கவனித்துக் கொள்வதிலும், தமிழகத்தை எய்ட்ஸ் நோய் இல்லா மாநிலமாக மாற்றிடுவதிலும், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள்!
எச்.ஐ.வி. பரவலைத் தடுத்திடுங்கள்!
வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள்!

* * *

## அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ்

# 3,177 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 9.11.2005



**பள்ளிக் கல்விக்கு என்னுடைய அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து, சிறப்புடன் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.**

பள்ளி மாணவ, மாணவியர் இடைநிற்றலைத் தவிர்க்கும் வகையில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளாக தொடக்கப் பள்ளி வசதியும், மூன்று கிலோ மீட்டர் தொலைக்குள்ளாக நடுநிலைப்பள்ளி வசதியும் அமைந்திருப்பதை எனது அரசு உறுதி செய்துள்ளது. இதன்படி, என்னுடைய ஆணையின் பேரில் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 1,274 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டதுடன், 2,790 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவியர், இடைநிலைக் கல்வியையும், மேல்நிலைக் கல்வியையும் தடையின்றிப் பெற்றிட வேண்டும் என்பதற்காக, எனது ஆணையின்படி, இதுவரை 395 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் பயிலுகின்ற மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்கும் வகையில் எனது அரசு பொறுப்பேற்ற 2001–ஆம் ஆண்டு முதல், இதுவரை மொத்தம் 46,494 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதுவன்றி, நடப்பு ஆண்டில், அதாவது, 2005–2006இல் மேலும் 11,938 ஆசிரியர் பணியிடங்களை புதிதாக நிரப்பிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.



1999–2000ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்கப்பட்ட 860 தொடக்கப் பள்ளிகளிலும் மற்றும் 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan) என்ற திட்டத்தின் கீழ், 2003–2004 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட 356 தொடக்கப்பள்ளிகளிலும், ஆக மொத்தம் 1,216 தொடக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர் பணியிடங்களை உருவாக்கி, தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் எந்த ஒரு தொடக்கப் பள்ளியும் தலைமையாசிரியர் இன்றி இயங்கவில்லை என்ற சிறப்பான நிலையை எனது அரசு ஏற்படுத்தி உள்ளது.

பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்யும் 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan) என்ற திட்டத்தினை முறையாகச் செயல்படுத்துவதில், மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் மாதிரி மாநிலமாகத் தமிழகம் திகழுகிறது. இதனை மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே எடுத்துக்கூறி, பாராட்டி உள்ளார்.

தமிழகத்தில் தற்போது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 385 வட்டார வள மையங்களும் (Block Resource Centres) மற்றும் 4,088 தொகுப்பு வள மையங்களும் (Cluster Resource Centres) ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம், தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வகுப்புகளில், 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளினை அடைய 3,295 வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்கள் (Block Resource Teacher Educators) ஏற்கெனவே பணியாற்றி வருகின்றனர்.

இத்திட்டத்தை மேலும் சிறப்புடன் செயல்படுத்தும் வகையிலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள நடுநிலை வகுப்புகளில், அதாவது 6,7,8 வகுப்புகளில் (Upper Primary Classes) பயின்று வரும் மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும், அவ்வகுப்புகளுக்குக் கூடுதலாக 3,010 வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர் (Block Resource Teacher Educator) பணியிடங்கள் மற்றும் 167 ஆசிரியர் பணியிடங்கள், ஆக மொத்தம் 3,177 ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

*டிசம்பர் – 11 மகாகவி பாரதியார் பிறந்த நாள்*

## புதுமைப் பெண்



நிமிர்ந்த நன்னடை நேர்கொண்டபார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்.
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!

**– மகாகவி சுப்ரமணிய பாரதியார்**

## புதிய ஆத்திச்சூடி

அச்சம் தவிர்.
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி.
ஈகை திறன்.
உடலினை உறுதி செய்.
ஊண்மிக விரும்பு.
எண்ணுவது உயர்வு.
ஏறுபோல் நட.
ஐம்பொறி ஆட்சிகொள்.
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஔடதம் குறை.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் அனைவருக்கும் பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 1.12.2005

அண்மையில் பெய்த கனமழையால் தமிழகம் வரலாறு காணாத பேரிழப்பைச் சந்தித்துள்ளது. நடப்பு பருவ மழைக் காலத்தில், ஒரு மாத காலத்திற்குள் மிகக் குறுகிய கால அள்வில் மூன்று கட்டங்களில் பெய்த கனமழையால் தமிழகத்தின் 22 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

கனமழையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நான் நேரடியாகச் சென்று, வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினேன். மேலும், எனது உத்தரவின்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவி ஒன்றை தமிழக அரசு வழங்கி வருகிறது.

இவ்வாறு கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ, மாணவியரது பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும், மேலும் பல இடங்களில் அவை மழை நீரில் நனைந்து பயன்படுத்த இயலாத நிலைக்கு ஆளாகியுள்ளன என்றும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு நெருங்கி வரும் இந்த நேரத்தில் மாணவ, மாணவியர் தங்களது கல்வியை எவ்வித தடங்கலோ, தடையோ இன்றித் தொடரும் வகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் அனைவருக்கும் அவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். இதன்படி, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இந்தப் பள்ளிகளில் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகள் ஆகியவற்றில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் அனைவருக்கும் பாட நூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை இலவசமாக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் வாயிலாக உடனடியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.




வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 3.60 இலட்சம் மாணவ, மாணவியர் இதன் மூலம் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவு ஆகும்.

✶



# 39 தமிழ் இளைஞர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் எழுதிய கடிதம் (22.11.2005)

ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள "ஹாஸ்பிடாலடி கேட்டரிங் & சர்வீஸ்" என்ற நிறுவனத்தில் 39 தமிழ் இளைஞர்கள் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். 2003ஆம் ஆண்டிலிருந்து இவர்களுக்கு சட்டப்பூர்வமான விசா, பணிபுரிவதற்கான கார்டு, மருத்துவ அட்டை போன்றவை வழங்கப்படவில்லை. அவர்களுக்குச் சம்பளம் மற்றும் எந்தப் படியும் வழங்கப்படவில்லை என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த இளைஞர்கள் ஏற்கெனவே அபுதாபியிலுள்ள ஃபோர் கேட்டரிங் & கேட்டரிங் சர்வீஸ் என்கிற நிறுவனத்தில் வேலை செய்து வந்தவர்கள். அந்த நிறுவனம் திவாலானதால் அதில் பணிபுரிந்த இந்த ஊழியர்கள் அல்ஐனில் உள்ள ஹாஸ்பிடாலிடி கேட்டரிங் & சர்வீஸஸ் என்கிற நிறுவனத்திற்கு பணிக்காக அனுப்பப்பட்டதாக எனது கவனத்திற்கு வந்துள்ளது.

பலமுறை கேட்டுக் கொண்டபோதிலும் இவர்களுக்கு வேலைக்கான விசா மாற்றித் தரப்படவில்லை. மேலும், அவர்களுக்குப் பணியாளர் அட்டை, மருத்துவ அட்டை, சம்பளம் போன்றவை வழங்கப்படவில்லை.

அவசரத் தேவைகளுக்காக இந்தியா திரும்பவும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ் இளைஞர்கள், இந்தியா திரும்ப வழியில்லாத அளவுக்கு அவர்களது பாஸ்போர்ட்களும் முடக்கப்பட்டுள்ளன.

மேலும், குறித்த காலத்துக்கு மேல் தங்கியதற்கான அபராதத்தைக் கட்ட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். நாடு திரும்புவதற்கான டிக்கெட் வாங்கக் கூட பணமில்லாமல் திண்டாடுகிறார்கள்.

தங்களுக்கு ஏற்பட்ட இந்த நிலை குறித்து ஐக்கிய அரபு எமிரேட்சிலுள்ள இந்தியத் தூதரகத்தில் தெரிவித்தும் எந்தப் பயனும் இல்லை. அங்குள்ள பத்திரிகைகளில் தமிழ் இளைஞர்களின் இந்தப் பரிதாப நிலை குறித்து செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தப் பரிதாபகரமான சூழ்நிலை எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



**இந்த 39 தமிழ் இளைஞர்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது ஒரு கவலை தரக்கூடிய விஷயம் என்பதைத் தாங்களும் ஒப்புக் கொள்வீர்கள்.**

**எனவே, இது குறித்து தாங்கள் ஐக்கிய அரபு எமிரேட்சிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பித்து, அந்த நாட்டு அரசுடன் தொடர்பு கொண்டு, 39 தமிழ் இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை ரத்து செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுடன் இந்தியத் தூதரக அதிகாரிகள் தொடர்பு கொண்டு, தமிழ் இளைஞர்கள் பணி செய்யும் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் சம்பள பாக்கியைப் பெற்றுத் தருவதுடன், பாஸ்போர்ட்டையும் உரிய ஆவணங்களையும் வாங்கிக் கொடுத்து அவர்கள் இந்தியாவுக்குத் திரும்ப வழிவகை செய்ய வேண்டும்.

கடுமையான இன்னலுக்கு ஆளாகிற 39 தமிழ் இளைஞர்களின் இந்தப் பிரச்சினையை மிக அவசரமானதாகக் கருதி அங்குள்ள இந்தியத் தூதரகம் மூலம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசுடன் தொடர்பு கொண்டு உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களது சாதகமான உடனடி பதிலையும் நான் எதிர்பார்க்கிறேன்.

✶



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 7.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்து அனுசரிக்கப்படும் கொடி நாளையொட்டி தனது பங்களிப்பாக 10,500 ரூபாயைக் கொடி நாள் நிதியாக வழங்கினார்கள்.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொடி நாள் வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7ஆம் நாள், படை வீரர் கொடி நாளாக அனுசரிக்கப்படுகிறது. நமது தேசத்தின் எல்லைப் பகுதிகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பதில் முப்படை வீரர்கள் ஆற்றும் அளப்பரிய சேவையை நினைவு கூர்ந்திட, இந்நாள் நமக்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. முப்படையினர் போர்க் காலங்களில் நமது தேசத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமன்றி, இயற்கைப் பேரிடர்களின் போதும், கடுமையான தட்பவெப்ப நிலைகளிலும், இடர்பாடுகள் மிகுந்த எல்லைப் பகுதிகளிலும் மகத்தான சேவை ஆற்றுகிறார்கள்.

நாட்டின் சேவையில் தங்களது இன்னுயிரை அர்ப்பணிக்கிற படை வீரர்களின் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் அளிக்க வேண்டியது நமது சமூகப் பொறுப்பாகும். மருத்துவ உதவி, வேலைவாய்ப்பு, சுயவேலை வாய்ப்புக்கான பயிற்சி மற்றும் செயல் ஊக்கம், குழந்தைகளின் கல்வி முதலான நடவடிக்கைகளின் மூலம் முன்னாள் படை வீரர்களின் நலனில் அக்கறை செலுத்துவதில் தமிழ்நாடு முன்னணி வகிக்கிறது.

படை வீரர் கொடி நாளினை முன்னிட்டு, முப்படையில் தற்போது பணியாற்றி வருபவர்களுக்கும், பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, கொடி நாள் நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென அனைத்து மக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்



# மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதுதான் இந்த அரசின் கடமை

கரூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை (28.11.2005)



வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே! என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத வகையில் மழை வெள்ளத்தால் தமிழகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மிக அதிக அளவில் உயிர்ச்சேதமும், பயிர்ச்சேதமும், உயிரிழப்பும், பயிரிழப்பும் ஏற்பட்டு இருக்கிறது. சாலைகள், பாலங்கள் எல்லாமே பாதிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் சேதமடைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் சரிசெய்ய வேண்டும். முதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்க வேண்டும். அதைத்தான் இன்று இந்த அரசு செய்து கொண்டு இருக்கிறது. கடந்த 30ஆம் தேதி அன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டேன். முழுவதுமாக வீடு சேதம் அடைந்த மக்களுக்கு 2,000 ரூபாய் ரொக்கம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு புடவை ஆகிய உதவிகள் வழங்கப்படும் என்று அறிவித்தேன். வீடு பகுதி சேதம் அடைந்து இருந்தால் அவர்களுக்கு 1,000 ரூபாய் ரொக்கமும், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு புடவையும் வழங்கப்படும் என்று அறிவித்து இருந்தேன். கடந்த மூன்று நாட்களாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறேன். பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்களை நான் சந்தித்தேன். மூன்றாவது நாளாக இன்று சுற்றுப்பயணம் மேற்கொண்டு உங்களை எல்லாம் நான் சந்திக்க வந்திருக்கிறேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். எங்களுக்கு வீடு சேதம் அடையவில்லை. ஆனால், நாங்களும் இந்த மழை வெள்ளம் காரணமாக மிக கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். ஆகவே, எங்களுக்கும் இந்த நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென்று நான் சென்ற இடமெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, அதைப் பரிசீலித்து அந்தக் கோரிக்கையை ஏற்று இன்று ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறேன்.

அதன்படி ஒரு கிராமம் அல்லது ஒரு ஊர் முழுவதுமாக வெள்ளத்தால் சூழப்பட்டு இருந்தால் அங்கு வசிக்கும் அந்த மக்களுக்கும், ஒரு கிராமம் அல்லது ஊரிலிருந்து மழை வெள்ளம் காரணமாக மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு இருந்தால் அந்த மக்களுக்கும், மேலும் எந்தந்த கிராமங்களிலும், எந்தந்த ஊர்களிலும் நிவாரண உதவி மையங்கள் திறக்கப்பட்டு அங்கெல்லாம் மக்களுக்கு உணவுப்

பொட்டலங்கள் வழங்கப்பட்டதோ அந்த மக்களுக்கெல்லாம், மேலும், தண்ணீர் தேங்கி இருந்த குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு அதாவது பல காலனிகளில் குடியிருப்புகளில் பல நாட்களில் 5 அடி உயரத்திற்கு, இடுப்பளவிற்கு மழை வெள்ளம் அப்படியே தேங்கி இருந்தது. அப்படிப்பட்ட மழை வெள்ளத்தால் ஒரு நாளாவது வெள்ளம் தேங்கியிருந்த குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கும் சேர்த்து இந்த



மக்கள் அனைவருக்கும் 1000 ரூபாய் ரொக்கப்பணம், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு புடவை ஆகிய உதவிகள் வழங்கப்படும் என்பதை, நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று முதல் இந்த உதவிகளை எல்லாம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தனலவர்கள் வழங்க ஆரம்பிப்பார்கள். இதனால், மேலும் தமிழக அரசுக்கு 250 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகமெங்கும் பாலங்கள் உடைந்து போயிருக்கின்றன. அடித்துக் கொண்டு செல்லப்பட்டு இருக்கின்றன. எண்ணற்ற சாலைகள் சேதமடைந்து இருக்கின்றன. எண்ணற்ற வீடுகள் இடிந்து போய் இருக்கின்றன. எத்தனையோ ஏரிகள், குளங்கள், அணைக்கட்டுகள் இங்கெல்லாம் உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. இவற்றையெல்லாம் சீரமைக்க வேண்டும்; புனரமைக்க வேண்டும். இதற்கு ஏராளமான நிதி தேவைப்படும். எனவேதான் மத்திய அரசிடமிருந்து முன்பணமாக ரூ.3,000 கோடி வேண்டுமென்று கேட்டிருந்தேன். இன்றைய தினம் மத்திய அரசு ரூ.500 கோடி ரூபாய் முன் பணமாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. ஆனால், இது எதற்கும் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் கவலைகொள்ள வேண்டாம். எதற்காகவும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். எதிர்காலம் என்னவாகுமோ என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காகத் தான் இந்த அரசு இருக்கிறது. மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதுதான் இந்த அரசின் கடமை என்ற உணர்வோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ஆகவே, இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு தற்காலிகமான துயரம்தான். மிக விரைவிலேயே இயல்பு நிலைக்கு நீங்கள் திரும்ப உங்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் தமிழக அரசு செய்யும்; என் தலைமையிலான அரசு செய்யும் என்ற உத்தரவாதத்தை




உங்களுக்கு அளித்து, விரைவிலேயே உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு அண்ணா நாமம் வாழ்க! புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! என்று, கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

❖ ❖ ❖



# வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும்

**திண்டுக்கல் மாவட்டத்தில், 28.11.2005 அன்று, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்திற்கு 28.11.2005 அன்று வருகைபுரிந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, நிவாரண உதவிகளை வழங்கினார். அப்போது, அண்மையில் பெய்த மழையின் காரணமாக பெருக்கெடுத்து ஓடிய காட்டாற்று வெள்ளத்தோடு ராஜாகுளம் கண்மாய் உடைப்பெடுத்து குஜிலியம்பாறை செல்லும் குறுக்குச் சாலை வழியாக 15 அடிக்கு மேல் தண்ணீர் சென்ற பகுதிகளையும், நந்தவனப்பட்டியில் உள்ள 20 வீடுகள் 3 மீட்டர் அளவில் மூழ்கியதால், 6 நபர்கள் வெள்ளத்தால் சிக்கிக் கொண்டு தீயணைப்புத் துறையின் மூலம் மீட்கப்பட்ட விவரங்கள் பற்றியும், வெள்ளப் பெருக்கின் காரணமாக இப்பகுதிக்குச் செல்லும் மக்களுக்கு, வெள்ள அபாயம் பற்றி தெரிவிக்கின்ற வகையில் காவல் துறையின் மூலம் இப்பகுதிகளுக்குச் செல்லாத வகையில் அறிவுறுத்தப்பட்டது பற்றியும், சாமியார்குளம், ஓடையூர் குளம் நிரம்பியதோடு அப்பகுதியில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளமும் இணைந்து கொண்டு புங்கன் ஓடை வழியாக 10 அடி உயரத்தில் வெள்ளம் சீறிப் பாய்ந்ததனால் புங்கன் ஓடை வழியாக வந்த வெள்ளம் நெடுஞ்சாலையில் ஏற்படுத்திய சேதத்தையும், புங்கன்ஓடையில் பெருக்கெடுத்த வெள்ளம் அறிஞர் அண்ணாநகர் வழியாக நெடுஞ்சாலையைக் கடந்து வந்ததால், சாலையில் அரிப்பு ஏற்பட்டதோடு அறிஞர் அண்ணா நகரில் உள்ள 39 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டதால், 115 நபர்கள் பெரும் துயரத்திற்குள்ளாகி பாதிக்கப்பட்ட மக்களை பெர்னா கல்யாண மண்டபத்தில் தங்க வைத்து உணவு வழங்கப்பட்டதையும், சீலப்பாடி கிராமம், பெரியார் நகரில் ரெங்கநாதபுரம் குளம், பாலகிருஷ்ணாபுரம் குளம், அனுமந்தநகர் குளம் ஆகிய குளங்கள் உடைப்பெடுத்ததால்

இப்பகுதியில் உள்ள 150 வீடுகள் தண்ணீரால் சூழப்பட்டதால் 50 வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்த பகுதிகளையும், பாதிக்கப் பட்ட மக்களை முருகன் கோவில் மண்டபத்தில் தங்க வைத்து உணவு வழங்கியதையும், நேருஜி நகர் பெரியார் காலனியில் ஆட்டோ நிறுத்தம் அருகில் திருச்சி மெயின் ரோட்டில் நான்கடி உயரத்திற்கு மேல் வெள்ளம் ஓடியதால் திருச்சி செல்லும் சாலையின் இருபுறமும் அரிப்பு ஏற்பட்ட பகுதிகளையும், இராணிமங்கம்மாள் காலனி பகுதியில் மருதாணி குளம் நிரம்பி வழிந்ததால் சாலையின் இருபுறமும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், நான்கடி உயரத்திற்கு மேல் தண்ணீர் வரத்து இருந்து சாலையில் அரிப்பு ஏற்பட்டு பெரும் சேதம் அடைந்து, இப்பகுதி மக்களுக்குக் காவல் துறையின் மூலம் வெள்ள அபாயம் பற்றி எடுத்துரைக்கப்பட்டு போதுமான காவலர்கள் இப்பணியில் ஈடுபட்டு இருந்ததையும், வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 36 கிராமங்களில் உள்ள பொது மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கும் வகையில் 36 மையங்கள் மூலம் உணவு வழங்கப்பட்டு, தேவையான அளவில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு செய்யப்பட்டிருந்ததையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட 252 நபர்களுக்கு, தலா 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், இலவச வேட்டி, சேலை மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு வெள்ள நிவாரண உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:** வரலாறு காணாத அளவில் மழை பெய்து கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப, என்னென்ன உதவிகள் தேவையோ அதை இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது. உங்களுக்கு உதவி செய்வதுதான் எங்களின் கடமை. இதற்காகத்தான் உங்களை சந்திக்க வந்துள்ளேன். இதுவரை சில உதவிகளை, பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஏற்கெனவே நான் அறிவித்துள்ளேன். முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,000மும், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை, பகுதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1,000மும், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 3 நாட்களாக மழையால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து, பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை சந்தித்து ஆறுதல் கூறி வருகின்றேன். இந்தச் சுற்றுப் பயணத்தின் போது பல மக்கள் தாங்கள் வீடுகளை இழக்காவிட்டாலும் மழைவெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று வீடுகள் சேதமடையாவிட்டாலும் முழுவதுமாக மழை வெள்ளத்தால் சூழப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கும் மழை வெள்ளத்தின் காரணமாக அப்புறப்படுத்தப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்ட மக்களுக்கும் எந்தெந்த கிராமங்களில் உதவி மையங்களில் உணவு வழங்கப்பட்டதோ, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் ஒரு நாளாவது மழை வெள்ளத்தால் தண்ணீர் தேங்கிக் கிடந்த குடியிருப்புப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் ரூ. 1,000மும், 10 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். வெள்ளத்தால் 22 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் இந்த உதவிகள் வழங்கப்படும்.



வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயப் பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு நடந்து கொண்டுள்ளது. இழப்பினால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும். எதிர்காலம் குறித்து யாரும் அச்சப்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசு உங்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளது. எதிர்காலம் குறித்து யாரும் கவலைப்பட வேண்டாம். இந்தத் துயரம் தற்காலிகமானது. வளமான எதிர்காலம் அமைய என்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு செய்யும். இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.



மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கியதையும், அரசின் சார்பில் வழங்கப்பட்ட வெள்ள நிவாரண உதவிகள் பற்றியும் அமைக்கப்பட்டிருந்த புகைப்படத் தொகுப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.



திண்டுக்கல் மாவட்டத்தில் 932 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 2,524 வீடுகள் பகுதி அளவு பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் ஆணைக்கேற்ப நிவாரண தொகையும், 10 கிலோ அரிசி, இலவச வேட்டி, சேலை மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 30,417 கிலோ அரிசி, 3,306 லிட்டர் மண்ணெண்ணெய், 4,980 வேட்டி, சேலைகளும் வழங்கப்படுவதோடு, முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு, தலா ரூ.2,000 மற்றும் ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.31.75 இலட்சம் மதிப்பில் நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2,569.15.0 எக்டேர் அளவிலான நெற்பயிர் சாகுபடி முழுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. 2,013.85.0 எக்டேர் அளவிலான நெற்பயிர் சாகுபடி, 50 சதவிகிதத்திற்கு மேலும், 100 சதவிகிதத்திற்குள்ளும் பாதிக்கப்பட்டுள்ளது. 404.30.0 எக்டேர் அளவிலான நெற்பயிர் சாகுபடி, 50 சதவிகிதத்திற்கு குறைவாக பாதிக்கப்பட்டுள்ளன. நெற்பயிர் தவிர, ஏனைய பயிர் வகைகள் 4,213.60.0 எக்டேர் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. 10 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 210 கால்நடைகள் இறந்து போயுள்ளன. 473 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. 98 இடங்களில் ஆற்றங்கரை மற்றும் கால்வாய்கள் உடைப்பெடுத்துள்ளன. 14.800 கி.மீ. நெடுஞ்சாலைகளிலும், 28.080 கி.மீ. நகராட்சி சாலைப் பகுதிகளிலும், 786.81 கி.மீ. ஊராட்சி சாலைகளிலும், 50.430 கி.மீ.சிறப்பு ஊராட்சி சாலைகளிலும் சேதம் ஏற்பட்டுள்ளன. நெடுஞ்சாலையில் உள்ள பாலங்கள், சிறு பாலங்கள் 42ம் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலையில் உள்ள பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் 293ம் சேதமடைந்ததோடு 149 அரசு கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்.

## காஞ்சிபுரம் மாவட்ட மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை

### ஒருசில மணிநேரங்களில் நிறைவேற்றிய

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு

### பொதுமக்கள் நன்றி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.12.2005 அன்று, காஞ்சிபுரம் மாவட்டத்தில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள வெட்டுவாங்கேணி பகுதியில் வெள்ள பாதிப்பு பகுதிகளை, 6.12.2005 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறிய நேரத்தில் வெட்டுவாங்கேணி 2-வது அவென்யூவைச் சேர்ந்த மக்கள், வெள்ளம் சூழ்ந்த தங்களது பகுதியில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர். அப்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் சுகாதார பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள தாம் ஆணையிட்டுள்ளதாகத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அப்பகுதி மக்களின் கோரிக்கையின்படி பாதிக்கப்பட்டுள்ள இந்தப் பகுதியிலும்







உடனடியாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்ததுடன், இக்கோரிக்கையின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணைப்படி, அப்பகுதியில் உள்ள புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் மருத்துவக் குழுவினர் உடனடியாக நேரில் சென்று ஆய்வு செய்து தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கும் பணியை மேற்கொண்டனர். மேலும் அந்தப் பகுதியில் குடி தண்ணீரில் குளோரின் கலந்தும், இதர நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெட்டுவாங்கேணி இரண்டாவது அவென்யூ பகுதிகளில் பெய்த கன மழையால் தண்ணீர் தேங்கி இருந்ததைக் கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்ததால், குடிநீர் விநியோகத்தில் சற்று தேக்கம் ஏற்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட இப்பகுதிக்கு வந்த நேரத்தில் தங்கள் பகுதிக்கு உடனடியாக குடிநீர் வழங்கிட ஏற்பாடு செய்யுமாறு, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று, உடனடியாக குடிநீர் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்கள். இதன்படி, தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வசதியாக மேடான பகுதியில் ஒரு தற்காலிக பொதுக் குழாய் உடனடியாக அமைக்கப் பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், தண்ணீர் வடியத் தொடங்கியதும் மின்விநியோகம் உடனே வழங்கப்பட்டு, மின் மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு குழாய் மூலமாக நேற்று மதியம் முதல் குடிநீர் விநியோகம் செய்யும் பணி தொடங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரை கிராமத்தைச் சேர்ந்த பாரதியார் நகரைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு உடனடியாக வெள்ள நிவாரண உதவிகள் வழங்கும் பணிகளை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் வெள்ள நிவாரண உதவிகளை வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்கள். இதன்படி, அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை அறியப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கும் பணி உடனடியாகத் தொடங்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் இன்னும் இரு நாட்களில் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுவிடும்.

கோரிக்கை விடுக்கப்பட்ட ஒரு சில மணி நேரங்களிலேயே தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றி பேருதவி செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அப்பகுதி மக்கள் தங்களது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உளப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக ஊனமுற்றோர் நலனுக்கு தமிழகத்திற்கு 15 தேசிய விருதுகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடல் ஊனமுற்றோரின்பால் தனி அக்கறை கொண்டு, அவர்கள் சமூக, பொருளாதார நிலையில் உயர்ந்திட மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் விளைவாக, 2004–2005ஆம் ஆண்டிற்கான 15 தேசிய விருதுகளை தமிழ்நாடு பெற்று, ஊனமுற்றோருக்கு உறுதுணையாக இருப்பதில் முதன்மையான மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

மத்திய அரசின், சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஊனமுற்றோரையும், ஊனமுற்றோருக்கு உதவி புரிபவர்களையும் ஊக்குவிக்க, தேசிய அளவிலான விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. 2004–2005ஆம் ஆண்டுக்கான தேசிய அளவில் அறிவிக்கப்பட்ட 50 விருதுகளில், சிறந்த பணியாளர் பிரிவில் 4 விருதுகள், சிறந்த நிறுவனம் (Best Institution) பிரிவில் 3 விருதுகள், சிறந்த தொழில் நிறுவனம் (Best Employer) பிரிவில் 1, சிறந்த பணியமர்த்தும் அலுவலர் பிரிவில் 1, சிறந்த தொழில்நுட்பம் பிரிவில் 2, சிறந்த ஆக்கப்பூர்வ குழந்தை பிரிவில் 2, சிறந்த ஆக்கப்பூர்வ நபர் பிரிவில் 1, சிறந்த வழிகாட்டி பிரிவில் 1 என மொத்தம் 15 விருதுகளை தமிழ்நாடு பெற்று சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடல் ஊனமுற்றோர் நலனில் தனி அக்கறை கொண்டு அரசின் செயல்திட்டங்களில் ஊனமுற்றோர் நலனுக்கு முன்னுரிமை அளித்து வருகிறார்கள். ஊனமுற்றோர் நலனுக்கான அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த 1992–1993ஆம் ஆண்டில் இதற்கென்று ஒரு தனித் துறையை உருவாக்கினார்கள். இதன்கீழ், மாவட்டங்கள்தோறும் அனைத்து வசதிகளும் கொண்ட அலுவலகங்களும், உள்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டு உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதில் தமிழக அரசு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு உதவித்தொகை, ஊனமுற்ற வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித்தொகை, ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை வழங்கல் முதலான பல முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குவதிலும் தமிழக அரசு முன்னோடியாக திகழ்கிறது. அதுமட்டுமின்றி, தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இயங்கும் உள்ளூர் குழுக்கள் மனவளர்ச்சி குன்றியோருக்கு பாதுகாவலர் நியமனத்தைச் சிறப்பாக செய்து வருவது மிகவும் பாராட்டைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு வழங்கி வரும் ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும், தமிழ்நாட்டில் தனியார் சேவை நிறுவனங்கள் சிறப்புடன் செயல்பட்டு, உடல் ஊனமுற்றோருக்கு சிறப்புக் கல்வி மற்றும் சிறப்புப் பயிற்சி ஆகியவற்றை அளித்து வருவதுடன், ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உதவுகின்ற மையங்கள் மூலமாகவும் அரும்பணி ஆற்றி வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உளப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 2003–2004ஆம் ஆண்டில் தமிழகம் 14 தேசிய விருதுகளைப் பெற்று பெருமை படைத்தது. இதனைத்



தொடர்ந்து தற்போது 2004–2005ஆம் ஆண்டிற்கான தேசிய விருதுகளில் 15 விருதுகளை தமிழ்நாடு பெற்று மிகப் பெரும் சாதனை படைத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 1995ஆம் ஆண்டில் இவ்வாறே ஊனமுற்றோர் நலனுக்கான 14 தேசிய விருதுகளை தமிழ்நாடு பெற்றது. அதன்பின், 2003–2004 மற்றும் 2004–2005 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிக எண்ணிக்கையில் விருதுகள் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் அனைத்தும் 3.12.2005 அன்று புதுடில்லியில் நடைபெறும் உலக ஊனமுற்றோர் தின விழாவில் மேதகு இந்திய குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களால் வழங்கப்பட்டது.

2004–2005ஆம் ஆண்டில் தமிழகத்தில் இருந்து தேசிய விருதுகள் பெற்றோர் பட்டியல் வருமாறு:–

1) திரு. எஸ். சுரேஷ் குமார், பேராசிரியர் மற்றும் தலைவர், ஆங்கிலதுறை, பயோனியர் குமாரசாமி கல்லூரி, நாகர்கோவில் – சிறந்த பணியாளர் (பார்வையற்றவர்), 2) திரு. பி. விஜயகுமார், 214, வழக்குரைஞர் அறை, உயர்நீதிமன்றம், சென்னை – சிறந்த பணியாளர் (பார்வையற்றவர்), 3) திருமதி. கே. புஷ்பலதா, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, தி.நகர் கிளை, சென்னை 600 017 – சிறந்த பணியாளர் (காது கேளாதவர்), 4) திரு. சி. லோகநாதன், புனித டாமியன் தொழுநோய் சங்கம், கருணைநகர், கே.சேவூர் அஞ்சல், காட்பாடி வழி, வேலூர் மாவட்டம் – சிறந்த பணியாளர் (தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்), 5) M/s. லேசர் சாப்ட் இன்போ சிஸ்டம்ஸ், வளசரவாக்கம், சென்னை – சிறந்த தொழில் நிறுவனம், 6) திரு. சி.ஏ.ஆர். ஸ்ரீதரன், பணியமர்த்தும் அலுவலர், ஊனமுற்றோருக்கான சிறப்பு ஆணையர் அலுவலகம், சென்னை – 6 – சிறந்த பணியமர்த்தும் அலுவலர், 7) வித்யா சாகர், எண்.1, ரஞ்சித் சாலை, கோட்டூர்புரம், சென்னை–85 – சிறந்த நிறுவனம், 8) எக்காம்வெல் முடநீக்கியல் மையம், தாரமங்கலம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் – சிறந்த நிறுவனம், 9) ஹெலன் கெல்லர் ஊனமுற்றோருக்கான சேவை சங்கம், விழியகம், விஸ்வநாதபுரம், மதுரை – சிறந்த நிறுவனம், 10) பேராசிரியர் மயில்வாகனன் நடராஜன், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை–600 003 – சிறந்த தொழில்நுட்பம், 11) டாக்டர் டி. ராபின்சன், கணிதத் துறை, சென்னை கிறித்துவ கல்லூரி, சென்னை–600 059 – சிறந்த தொழில்நுட்பம், 12) செல்வன். லலித்குமார், எண்.2, ஸ்டேட் பாங்க் காலனி, எல்லையம்மன் காலனி, சிதம்பரம் – சிறந்த ஆக்கப்பூர்வ குழந்தை (ஆண்), 13) செல்வி பி. கவிதா, ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆப் தமிழ்நாடு, தரமணி, சென்னை – சிறந்த ஆக்கப்பூர்வ குழந்தை (பெண்), 14) செல்வி என். விதார்த்தி, 16/2, திரு.வி.க. 3வது தெரு, மயிலாப்பூர், சென்னை–4 – சிறந்த ஆக்கப்பூர்வ நபர் (பெண்), 15) திருமதி. காயத்ரி சங்கரன், ஏ/ஜி 4, மகாவீர் அபார்ட்மெண்ட், 4, கிழக்கு கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை – சிறந்த வழிகாட்டி. ❒

## இந்திய விண்வெளிச் சாதனைகள்

| | | |
|---|---|---|
| 1962 | – | தும்பா ராக்கெட் ஏவுதளம் அமைப்பு |
| 1963 நவம்பர் 21 | – | முதல் ராக்கெட் சோதனை |
| 1967 | – | சாட்டிலைட் தொலைத் தொடர்பு மையம் அமைப்பு, அகமதாபாத் |
| 1969 | – | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் |
| 1975 | – | முதல் செயற்கைக்கோள் ஆர்யபட்டா |
| 1979 ஜூலை 7 | – | பாஸ்கரா – 1 |
| 1980 | – | ரோகிணி – செயற்கைக்கோள் |
| 1981 | – | ஆப்பிள் பாஸ்கரா – 2. ரோகிணி – 2 |
| 1982 | – | இன்சாட் 1 A |
| 1983 | – | இன்சாட் 1 B |
| 1984 ஏப்ரல் 3 | – | ராகேஷ்சர்மா விண்வெளிப் பயணம் |
| 1989 | – | இன்சாட் 2 – இ |
| 1990 | – | இன்சாட் 1 D |
| 1992 | – | ஏ.எஸ்.எல்.வி.. இன்சாட் 2 D |
| 1993 | – | இன்சாட் 2 B |
| 1994 | – | ஐ.ஆர்.எஸ். பி–2, எ.எஸ். எல்.யூ.பி – 4 |
| 1995 | – | இன்சாட் 2 சி |
| 1996 | – | பி.எஸ்.எல்வி.பி–4, ஐ.ஆர்ஸ் 1 – பி, இன்சாட் 2 – பி |



# 3.72 கோடி ரூபாய் மதிப்பிலான சர்வதேச தரத்துடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.12.2005 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கில், 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை புல் ஹாக்கி மைதானம் (Re-laid Synthetic Hockey Surface) மற்றும் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள மின்னொளி அமைப்புகள், சென்னை பெரியமேடு ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு தரம் வாய்ந்த ரோலர் ஸ்கேட்டிங் (Speed Roller Skating Rink) மற்றும் ஸ்கேட்டிங் ஹாக்கி ரிங் (Skating Hockey Rink) என மொத்தம் 3.72 கோடி ரூபாய் மதிப்பிலான சர்வதேச தரத்துடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விளையாட்டுத் துறை மீது தனி அக்கறை கொண்டு, விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் தேசிய அளவில் முதலிடம் பெற்றிடவும், பன்னாட்டு அளவில் சாதனை படைத்திடவும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு, பன்னாட்டுத் தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து உருவாக்கி வருகிறார்கள். சென்னை பெரியமேட்டில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் நேரு உள்விளையாட்டு அரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம், எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம், வேளச்சேரியில் உள்ள நீச்சல் குள வளாகம் ஆகியவற்றில் சர்வதேச தரம் வாய்ந்த நவீன அரங்கங்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், தமது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 1991–1996ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டவை ஆகும்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவ்வாறு உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு அரங்கங்களையும், பன்னாட்டுத் தரத்துடன் கூடிய கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கியதன் விளைவாக, தமிழகத்தில் ஜவஹர்லால் நேரு சர்வதேச அழைப்பு கால்பந்துப் போட்டிகள், சர்வதேச அழைப்பு தடகளப் போட்டிகள், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள்–1995, குபீர் சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டிகள்–1996, ஏ.டி.பி. கோல்டு பிளேக்/டாட்டா ஓப்பன்/ சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள், உலக கையுந்து பந்து போட்டிகள், இந்திய பாகிஸ்தான் மற்றும் இந்திய ஜெர்மனி ஹாக்கி டெஸ்ட் போட்டிகள், உலக தகுதிச் சுற்றுக்கான கையுந்து பந்து போட்டிகள் ஆகிய சர்வதேச போட்டிகள் இந்த விளையாட்டு அரங்குகளில் நடத்தப்பட்டன. இதனால், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்ற உந்துதல் தமிழகத்தின் இளைஞர்களிடையே உருவானதுடன் தமிழ் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உலகளவில் நடைபெறும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும் வழிவகை ஏற்பட்டது.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று விருதுகளைத் தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த திட்டம் 1991–1996ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2001ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றதும், சர்வதேச விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டம் என்னும் இத்திட்டம், முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கிலும், சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்திலும் மொத்தம் 3.72 கோடி ரூபாய் மதிப்பில் சர்வதேசத் தரத்துடன் கூடிய பல்வேறு மேம்படுத்தப்பட்ட விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

### சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கில் செயற்கை இழை புல்தரையினைப் புதுப்பித்தல்:

சென்னை எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம் 1995ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் உருவாக்கப் பட்டது ஆகும். அப்போது, இந்த அரங்கில் நிறுவப்பட்ட செயற்கை இழை புல்தரை மைதானம்தான் இதுவரை தொடர்ந்து பயன்படுத்தப் பட்டு வந்தது. சாம்பியன் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டிகள்–2005, தற்போது சென்னையில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டிகளை சென்னையில் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டவுடன், 1995ஆம் ஆண்டு நிறுவப்பட்ட செயற்கை இழை புல்தரையினை உடனடியாக உலகத்தரத்துடன் மாற்றி அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இந்த ஆணையின்படி, சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கில், ஜெர்மனியில் இருந்து 1.5 கோடி ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட பாலிடான் மெகா டர்ஃப் (imported polytan mega turf synthetic surface) என்னும் செயற்கை இழை புல் ஹாக்கி மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

### போட்டிகளை இரவில் நடத்திடவும், வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதிக்காகவும் மின்னொளி அமைப்புகள்

சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கில் நடைபெறும் ஹாக்கி விளையாட்டுப் போட்டிகளை இரவில் நடத்திட ஏதுவாகவும், சாம்பியன் ஹாக்கி சுழற்கோப்பைக்கான சர்வதேச ஹாக்கி போட்டிகள் போன்ற உலகத்தரம் வாய்ந்த போட்டிகளை வண்ணத் தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பு செய்வதற்கு வசதியாகவும் மின்னொளி அமைப்புகளை ஏற்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டவாறு, 1,200 ஒளித்திறன் கொண்ட மின்னொளி அமைப்புகள் (flood lights with 1200 lux illumination) 2 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5 ஆண்டுகள் பணி முடித்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை வழங்க ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5 ஆண்டுகள் பணி முடித்த மேலும் 7,500 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு தலா 750 ரூபாய் கருணைத் தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5 ஆண்டுகள் பணிபுரிந்ததாக அடையாளம் காணப்பட்ட 8,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் 3,300 பகுதி நேர மற்றும் சில்லரைச் செலவினத் தொழிலாளர்கள் ஆக மொத்தம் 11,800 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர்கள் அனைவருக்கும் தலா 750 ரூபாய் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.10.2005 அன்று ஆணையிட்டார்கள். இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 88.50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

1.4.1997 அன்று மற்றும் அதற்குப் பின்னர் 5 ஆண்டுகள் பணி முடித்த, அடையாளம் காணப்பட்ட மேலும் 7,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் தீபாவளியை முன்னிட்டு வழங்கப்பட்ட கருணைத் தொகை தங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும், இத்தொகையை தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களது கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களின் பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 1.4.1997 அன்று மற்றும் அதற்குப் பின்னர் 5 ஆண்டுகள் பணி முடித்த, அடையாளம் காணப்பட்ட மேலும் 7,500 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் தலா 750 ரூபாய் கருணைத் தொகையை உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 56.25 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். ✶

### சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் உலகத் தரம் வாய்ந்த ரோலர் ஸ்கேட்டிங் மற்றும் ரோலர் ஹாக்கி ரிங்

ஸ்கேட்டிங் விளையாட்டு என்பது பன்னாட்டு அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டு ஆகும். இந்த விளையாட்டு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கடந்த ஆண்டு சேர்க்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த, ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தரும் நோக்கத்துடன், அவர்களது நெடுநாள் கோரிக்கையை ஏற்று, உலகத் தரம் வாய்ந்த ரோலர் ஸ்கேட்டிங் ரிங் (Speed Roller Skating Rink) மற்றும் ஸ்கேட்டிங் ஹாக்கி ரிங் (Skating Hockey Rink) ஆகியவற்றை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் ரோலர் ஸ்கேட்டிங் ரிங் மற்றும் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஸ்கேட்டிங் ஹாக்கி ரிங் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள, இந்த புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை புல் ஹாக்கி மைதானம், மின்னொளி அமைப்புகள், ரோலர் ஸ்கேட்டிங் ரிங் மற்றும் ஸ்கேட்டிங் ஹாக்கி ரிங் ஆகிய விளையாட்டு மேம்பாட்டுக் கட்டமைப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.12.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை செயலாளர் திருமதி சூசன்மாத்யூ, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்–செயலர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ✶



# ரூ.130.33 கோடியில் மாவட்ட மற்றும் கரும்பு சாலைகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறை 61,289 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை பராமரித்து வருகிறது. பாதுகாப்பான, வேகமான வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் விதத்தில் சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்த எனது தலைமையிலான தமிழக அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும், நபார்டு வங்கி நிதி உதவி, உலக வங்கி நிதிஉதவி ஆகியவற்றின் மூலமாகவும் வாய்ப்புள்ள அனைத்து வகையிலும் செம்மையான திட்டங்களைத் தீட்டி, சாலைகள் மேம்பாட்டுப் பணிகளை எனது அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.



தமிழ்நாட்டில் உள்ள சாலைகளை அகலப்படுத்தி, மேம்படுத்தி, மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பினை மேலும் வலுவுள்ளதாக்கும் நோக்கத்துடன் மாநில நெடுஞ்சாலைகள் (State Highways) மாவட்ட பெரிய சாலைகள் (Major District Roads), மாவட்ட இதர சாலைகள் (Other District Roads) ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் 1,050 கோடி ரூபாய் மதிப்பில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Comprehensive Road Infrastructure Development Programme) என்னும் புதிய திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக, 200 கோடி ரூபாய் மதிப்பில் 1227.42 கிலோ மீட்டர் நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளவும், 30 கோடி ரூபாய் மதிப்பில் 52 பழுதடைந்த பாலங்களை திரும்பக் கட்டவும் நான் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளேன். தொடர்ந்து, அடுத்த கட்டமாக, 820 கோடி ரூபாய் மதிப்பில் 6,693 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்த 10.7.2005 அன்று நான் ஆணையிட்டேன்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – 2005 (Tamil Nadu Urban Local Bodies Road Development Project - 2005)–ன் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை 400.81 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த 23.7.2005 அன்று நான் ஆணையிட்டேன். ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் பயன் அடையும் வகையில், ஊராட்சி ஒன்றியங்கள் (Panchayat Unions), சிறப்பு சிற்றூராட்சிகள் (Special Village Panchayats), ஊராட்சிகள் (Village Panchayats) ஆகியவற்றில், 7,848 கிலோ மீட்டர் நீளமுள்ள மொத்தம் 5,859 சாலைகளை 500 கோடி ரூபாய் மதிப்பில் உடனடியாக செப்பனிட்டு, மேம்படுத்த 5.8.2005 அன்று நான் ஆணையிட்டேன்.

உலகத் திறமைகள் அனைத்தையும் ஈர்க்கின்ற வகையில், உலகத்தின் தலை சிறந்த மாநகரங்களில் ஒன்றாக சென்னைப் பெருநகரை உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன், 2005–2006ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்கு (Chennai Metropolitan Area) உட்பட்ட பகுதிகளில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து திட்டங்களின் (Traffic and Transportation Scheme) கீழ், சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், ஆற்றுப் பாலங்கள்,



மேம்பாலம், வட்டத் திட்டுடன் கூடிய மேம்பாலங்கள் அமைத்தல் ஆகிய 97 சாலை மேம்பாட்டுப் பணிகளை 525.05 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள நான் 25.10.2005 அன்று ஆணையிட்டேன். மேலும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III (Tamil Nadu Urban Development Project - III) எனும் திட்டத்தின் கீழ் சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 574 கோடி ரூபாய் மதிப்பில், சாலை மேம்பாடு, மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் போன்ற 39 பணிகள் நெடுஞ்சாலைத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளன.

தொடர்ந்து தமிழ்நாட்டில் பெரிய மாவட்ட சாலைகள் (Major District Roads), இதர மாவட்ட சாலைகள் (Other District Roads), கரும்பு சாலைகள் (Roads connecting Sugarcane growing areas), ஆகியவற்றை 130.33 கோடி ரூபாய் மதிப்பில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, கன்னியாகுமரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் இரண்டு பாலங்கள் கட்டவும், சென்னையைத் தவிர தமிழ்நாட்டில் உள்ள ஏனைய 29 மாவட்டங்களில் 339 பெரிய மாவட்ட சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகளை மொத்தம் 1,189 கிலோ மீட்டர் நீளத்திற்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் 109.76 கோடி ரூபாய் மதிப்பில் அகலப் படுத்தவும் (Widening), மேம்படுத்தவும் (Strengthening) நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், கோவை, கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, வேலூர், விழுப்புரம், மதுரை, புதுக்கோட்டை ஆகிய 16 மாவட்டங்களில் 171 கிலோ மீட்டர் நீளமுள்ள 56 கரும்பு சாலைகளை நபார்டு வங்கி நிதி உதவியுடன், 20.57 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தவும், அகலப்படுத்தவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தப் பணிகள் அனைத்தையும் விரைவாகவும், சிறப்பாகவும் செய்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு நான் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்**
**அறிக்கை – 8.12.2005**

## நோய் பரப்பும் பாக்டீரியா

***பா**க்டீரியாக்கள் பற்றி பல ஆய்வுகள் செய்தவர் ராபர்ட்கோக் (1843 – 1910). இவர் ஜெர்மனி நாட்டவர். ஆந்த்ராக்ஸ் நோய் பாக்டீரியாவை, 1876ஆம் ஆண்டில் இவர் கண்டறிந்தார்.*

*பாக்டீரியாக்களை, மைக்ராஸ்கோப் வழியே சரியாகப் பார்த்து ஆய்வு செய்ய வசதியாக, பாக்டீரியாக்களுக்கு வண்ணமூட்டும் முறையையும் இவர் கண்டுபிடித்தார்.*

*நோய்களை ஏற்படுத்தும் சுமார் பதினோரு வகை பாக்டீரியாக்களை இவர் அறிந்து சொன்னார்.*

*1995ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற இவர், டி.பி., காலரா கிருமிகள் பற்றிய உண்மைகளை உலகுக்குத் தந்தவர் ஆவார்.*





# யானைக்கால் நோயும் சிகிச்சை முறைகளும்

**லி**ம்பேட்டிக் பைலேரியா நோய், யானைக்கால் நோய் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. லிம்பேட்டிக் பைலேரியா நோய், நூல் போன்ற புழுக்களால் ஏற்படுகிறது. வளர்ந்த ஆண் மற்றும் பெண் புழுக்கள் மனித நிணநீர் முடிச்சுகளில் காணப்படுகிறது. இவை, பல மைக்ரோ பைலேரியா என அழைக்கப்படும் குட்டிப் புழுக்களை வெளியிடுகிறது. இந்த மைக்ரோ பைலேரியா புழுக்கள், மனிதனின் வெளிப்புற இரத்த ஓட்டங்களில் காணப்படுகிறது. இப்புழுக்கள், கொசுக்கள் மூலம் உறிஞ்சப்பட்டு மனிதர்களுக்குப் பரப்பப்படுகிறது. மைக்ரோபைலேரியா தொற்று உள்ளவர்களுக்கு ஆரம்ப காலங்களில் எந்தவிதமான நோய் அறிகுறிகளும் தெரிவது இல்லை. ஆனால், இவர்கள் சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இந்நோயைப் பரப்பி வருகின்றனர். இந்நோய், பொதுவாக, இளம் வயதில் ஆரம்பமாகிறது. பல ஆண்டுகள் நோயின் அறிகுறிகள் வெளியே தெரிவது இல்லை என்றாலும், நிணநீர் மண்டலம் பாதிப்படைகிறது. நிணநீர் மண்டலம் பாதிப்படைந்த நபர்களுக்கு நோய் முற்றிய பின்னர், கால்கள், நிணநீர் குழாய்கள், நிணநீர் முடிச்சுகள் மற்றும் விரைகளில் வீக்கம் ஏற்படுகிறது. நோய்த் தாக்கம் உள்ளவர்களுக்கு அவ்வப்போது நிணநீர் முடிச்சு வீக்கம் ஏற்பட்டு தீவிரப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனால், அவர்களுக்கு நோய் அறிகுறிகளான காய்ச்சல், வலி மற்றும் நோய் பாதித்த உறுப்பில் தோல் சிவந்து காணப்படும். இத்தாக்குதல் மீண்டும் மீண்டும் ஏற்படும்போது வீக்கமானது அதிகரித்துக்கொண்டே செல்வதால் யானைக்கால் போன்று தோன்றுகிறது.

### ஒட்டுமொத்தச் சிகிச்சை

★ யானைக்கால் நோய் பாதிப்பு உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இரத்தத்தில் மைக்ரோ பைலேரியா புழுக்கள் இருக்கும் வாய்ப்பு உள்ளது.

★ ஆரம்ப நிலையில் நோய்க்கான அறிகுறிகள் தெரிவது இல்லை என்பதால் நோயாளி கண்டறியப்படுவது இல்லை.

★ டி.இ.சி. மாத்திரைகள் உட்கொள்ளும்போது இரத்தத்திலுள்ள மைக்ரோபைலேரியா கிருமிகள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன. மேலும், இந்த மைக்ரோபைலேரியா கிருமி கொசுக்கடியின் மூலம் சமுதாயத்தில் மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்கப்படுகிறது.

★ எனவே, இந்நோய்த் தாக்கம் உள்ள பகுதியில் வசிப்பவர்களில் கர்ப்பிணி தாய்மார்கள், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் பிற நோயினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நபர்களைத் தவிர அனைவரும் டி.இ.சி. மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

இந்நோய்க்கான ஒட்டுமொத்தச் சிகிச்சைக்கான திட்டம், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, பெரம்பலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மாத்திரைகளின் அளவு

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வயதுக்கேற்ற மாத்திரைகளின் அளவு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| வயது (வருடங்களில்) | டி.இ.சி. அளவு | டி.இ.சி. 100 மி.கி | ஆல்பண்டசோல் 400 மி.கி |
|---|---|---|---|
| < 2 | இல்லை | இல்லை | இல்லை |
| 2 – 5 | 100 (மி.கி) | 1 மாத்திரை | 1 மாத்திரை |
| 6 – 15 | 200 (மி.கி) | 2 மாத்திரை | 1 மாத்திரை |
| 16–க்கு மேல் | 300 (மி.கி) | 3 மாத்திரை | 1 மாத்திரை |

★ மாத்திரைகளை 2 வயதிற்குட்பட்டவர்களுக்கு கொடுத்தல் கூடாது.

★ முதியவர்களுக்கு கொடுத்தல் கூடாது.

★ கர்ப்பிணிப் பெண்களுக்கு கொடுத்தல் கூடாது.

★ பிற நோயால் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கொடுத்தல் கூடாது.

### டி.இ.சி. மாத்திரைகளை உட்கொள்ள வேண்டிய வழிமுறைகள்

★ வருடம் ஒருமுறை தேசிய யானைக்கால் தினத்தன்று டி.இ.சி. மாத்திரைகளை ஒரே தடவை உட்கொள்ள வேண்டும்.

★ ஒரே நாளில் டி.இ.சி. மாத்திரைகளை அனைவரும் உட்கொள்வதால் மைக்ரோபைலேரியா அழிக்கப் பட்டு அப்பகுதியில் இந்நோய் பரவுவதும் தடுக்கப் படுகிறது.

★ 21.1.2006 அன்று, தேசிய யானைக்கால் தடுப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.

★ 21.1.2006 அன்று, டி.இ.சி. மாத்திரைகளை உட்கொள்ளாதவர்களுக்கு 22.1.2006 மற்றும்

23.01.2006 அன்று, டி.இ.சி. மாத்திரைகள் கொடுக்கப்பட வேண்டும்.

★ மாத்திரைகளை வெறும் வயிற்றில் உட்கொள்ளக் கூடாது. அவ்வாறு உட்கொண்டால் அது வயிற்றில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். மாத்திரைகளை உணவு உட்கொண்ட பின் உட்கொள்ள வேண்டும்.

★ டி.இ.சி. மாத்திரைகள் மிகவும் பாதுகாப்பானவையாகும். பக்க விளைவுகள் ஏற்படாது. இவை, இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

★ டி.இ.சி. மாத்திரையை உட்கொள்வோரின் இரத்தத்தில் மைக்ரோ பைலேரியா கிருமிகள் இருந்தால், அந்தக் கிருமிகள் அழிக்கப்படும் போது, உடல்வலி, தலைவலி, காய்ச்சல், தோலில் அரிப்பு, வாந்தி ஆகிய சிறு உபாதைகள் அந்த நபருக்குத் தோன்றும்.

★ இந்த சிறு உபாதைகள் ஏற்பட்டால் அருகிலுள்ள சுகாதார மையங்களை நாடி சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

★ பொதுச் சுகாதாரத்துறை, கல்வித்துறை, ஊட்டச் சத்து பணியாளர்கள், சுயஉதவிக் குழுக்கள் தன்னார்வலர்கள் ஆகியோர் வீடு தோறும் சென்று இம்மாத்திரைகளை வழங்குவார்கள்.





**யானைக்கால் நோய் கண்டவர்களுக்கு பராமரிப்பு பற்றிய குறிப்புகள்**

வீக்கமடைந்த உறுப்புகளை தினமும் சோப்பு மற்றும் தண்ணீரால் கழுவி சுத்தமாக வைத்திருப்பதாலும், சிறு உடற்பயிற்சிகள் செய்வதாலும், அடிக்கடி ஏற்படும் அடினோலிம்பான்ஜைட்டிஸ் எனப்படும் தீவிரப் பாதிப்பைத் தடுக்கலாம். இதைப் போன்ற தீவிரப் பாதிப்பு ஏற்படும்போது அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சிகிச்சைக்காக அணுகவேண்டும்.

நோய் பாதித்த பகுதிகளை சோப்புத் தண்ணீரில் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதை விளக்கிக்கூற வேண்டும் (வீக்கமடைந்த கால்கள்). இவ்வாறு, நோய் பாதித்த உறுப்புகளை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் அடிக்கடி தீவிரப் பாதிப்புகள் மற்றும் காய்ச்சல், வலியிலிருந்து நிவாரணம் பெறலாம்.

**கொசுக்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான குறிப்புகள்**

யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்கள் வீட்டைச் சுற்றியுள்ள அசுத்தமான கழிவுநீர்களில் முட்டையிட்டு வளர்கின்றன. எனவே, வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதால், கொசு உற்பத்தியைத் தடுக்கலாம் என்பதை எடுத்து உரைக்க வேண்டும். கொசுப்புழுவினை உண்ணும் மீன்களை (கப்பீஸ்) கிணறு மற்றும் நீர் நிலைகளில் விடுவதன் பயன் மற்றும் தொடர்ந்து மருந்து தோய்த்த கொசு வலைகளைத் தூங்கும்போது உபயோகிப்பதன் பயன் ஆகியவற்றை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

**யானைக்கால் நோயைத் தடுக்கும் முறைகள்**

1. வருடம் ஒருமுறை நடைபெறும் ஒட்டுமொத்த சிகிச்சையின்போது ஒரே தவணையில் டி.இ.சி. மாத்திரைகளைத் தொடர்ந்து ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேலும், தகுதிவாய்ந்த மக்கள் உட்கொள்ளும்போது நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.



Washing

2. நீண்ட கால நோய்ப் பாதிப்பு மற்றும் அடிக்கடி ஏற்படும் தீவிரப் பாதிப்பு போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களைப் போக்கிட, வீட்டில் இருந்தபடியே வீக்கக் கட்டுப்பாடு முறை செய்வது மிகவும் எளிதானதும் மற்றும் உபயோகமானதும் ஆகும்.



Drying

3. டி.இ.சி. உட்கொள்ள தகுதி வாய்ந்த மக்கள் அனைவரும், வருடம் ஒரு முறை 5 முதல் 7 வருடங்கள் வரை மாத்திரைகளை உட்கொள்ளும்போது வருங்கால சந்ததியினர் யானைக்கால் நோயிலிருந்து முற்றிலும் விடுபடுகின்றனர்.

□ □ □



# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.70 கோடி அளவுக்கு வட்டி தள்ளுபடி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியில் அரசின் புதிய அறிவிப்புகளால் பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெறுவதுடன், விவசாயிகள் கூடுதல் பயனடைந்துள்ளனர். விவசாயிகள் நலனுக்கான திட்டங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடனுக்கான வட்டி தள்ளுபடி, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், கரும்புக்கு கூடுதல் விலையெனப் பயன்பெற்று வருகின்றார்கள். இவற்றில் விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ள கூட்டுறவு வங்கிகளில் கடனுக்கான வட்டி தள்ளுபடி திட்டத்தில், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் 1,74,854 நபர்கள் ரூ.70 கோடி வட்டி தள்ளுபடி பெற்று பயனடைய உள்ளார்கள். கூட்டுறவு வங்கிகள் மிகவும் நலிவடைந்த நிலையிலும் விவசாயிகள் நலனுக்காக தமிழக முதலமைச்சர் அவர்கள், வட்டி தள்ளுபடி திட்டத்தை அறிவித்து அதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது, விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.



கூட்டுறவு கடன் வட்டி தள்ளுபடி திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள 113 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உறுப்பினர்கள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள், வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இதன்படி, 2001ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தினால் 17,600 விவசாயிகள் ரூ.4 கோடியே 47 இலட்சத்து 13 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெற்றுள்ளார்கள். 2002ஆம் ஆண்டு காரி பருவத்தில் குறுகிய கால பயிர்க்கடன், மத்திய காலக்கடன் மாற்றுக் கடனாக மாற்றம் செய்யப்பட்டு வட்டி தள்ளுபடி திட்டத்தில் 816 விவசாயிகள் ரூபாய் ஒரு கோடியே 17 இலட்சத்து 39 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெற்றுள்ளார்கள். 2003–2004ஆம் ஆண்டில் குறுகியகால பயிர்க்கடன், மத்திய கால கடன் மாற்றுக் கடனாக மாற்றம் செய்யப்பட்டதில் 6,702 விவசாயிகள் ரூபாய் ஒரு கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெற்றுள்ளார்கள். மேலும், 2002–2003ஆம் ஆண்டுகளில் இயற்கை பாதிப்பு மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தில் 1,21,864 விவசாயிகள் ரூ.5 கோடியே 8 இலட்சம் நிவாரணம் பெற்றுள்ளார்கள்.

2005ஆம் ஆண்டில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு ஒரே தவணையில் கடனை திருப்பிச் செலுத்தும் திட்டத்தில் 502 விவசாயிகள் ரூபாய் ஒரு கோடியே 10 இலட்சத்து 88 ஆயிரமும், கூட்டுறவு நகர வங்கிகளுக்கான வட்டி குறைப்பு திட்டத்தில் 174 விவசாயிகள் ரூ. 4 இலட்சமும் தள்ளுபடி பெற்றுள்ளார்கள். 2005–2006ஆம் ஆண்டில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கான வட்டி தள்ளுபடி திட்டத்தில் 2,213 நபர்கள் ரூ.5 கோடியே 74 இலட்சத்து 61 ஆயிரம் தள்ளுபடி பெற்றுள்ளனர்.

மேலும், 2005–2006ஆம் ஆண்டில் மாவட்டத்திலுள்ள 113 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கான பயிர்க்கடன் வட்டி தள்ளுபடி திட்டத்தில் 21,772 விவசாயிகள் ரூ.27 கோடியே 45 இலட்சத்து 32 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெறவுள்ளார்கள். இத்திட்டத்தில், இதுவரை 192 விவசாயிகள் பயிர்க் கடனை திரும்ப செலுத்தி ரூ.10 இலட்சத்து 39 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெற்றுள்ளார்கள். கூட்டுறவு சங்க கடனுக்கான வட்டி தள்ளுபடி திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை 1,48,003 விவசாயிகள் ரூ.13 கோடியே 2 இலட்சத்து 22 ஆயிரம் வட்டி தள்ளுபடி பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை, 7.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஸ்டெர்லிங் இன்ஃபோடெக் குழுமத் தலைவர் திரு. சி. சிவசங்கரன் அவர்கள் நேரில் சந்தித்து, வெள்ள நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவிடும் வகையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இதுதவிர, பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ.5 கோடியே 36 இலட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 56 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் ரூ.2 கோடியே 58 இலட்சத்து 31 ஆயிரம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. 2 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் ரூ.20 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. மாவட்ட மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலை ரூ.31 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.63 இலட்சத்து 24 ஆயிரம் மதிப்பிலும் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை மேம்படுத்த ரூபாய் ஒரு கோடியே 54 இலட்சத்து 63 ஆயிரம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

2 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் விவசாயிகளின் விளைபொருட்கள் நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும், தானிய ஈட்டுக்கடன், நகைக்கடன், வேளாண் கருவிகள், இடுபொருட்கள் ஆகியன 11,600 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் 811 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 28 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. இவற்றில் 71,420 ஆண்களும், 43,046 பெண்களும் உறுப்பினர்களாக உள்ளனர். தினசரி ஒரு இலட்சத்து 66 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு வங்கிகள் மூலம் 254 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 60 ஆயிரம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சிறுவணிகக் கடனாக 466 மகளிருக்கு ரூ.9 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூரில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் 76 மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த 1,047 மகளிருக்கு ரூ.60 இலட்சத்து 54 ஆயிரம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியில் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கும், மகளிருக்கும் எளிய முறையில் கடனுதவிகள் வழங்கி தொழில் தொடங்கவும், விவசாய மேம்பாட்டிற்கு உதவியாக இருப்பதுடன், மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் முதலிடம் வகிப்பது பெருமைக்குரியதாக அனைவராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.





தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG(CCR)836/03-05, WPP-518







